
# மார்க்ஸ் எங்கெல்ஸ்


## தேர்வு நூல்கள்

பன்னிரண்டு
தொகுதிகளில்

தொகுதி
9



Karl Marx


F Engels

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# மார்க்ஸ் எங்கெல்ஸ்

# தேர்வு நூல்கள்

## பன்னிரண்டு தொகுதிகளில்

## தொகுதி

## 9


முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

**К. Маркс, Ф. Энгельс**

ИЗБРАННЫЕ ПРОИЗВЕДЕНИЯ В 12 ТОМАХ

Том 9

*на тамильском языке*

**K. Marx, F. Engels**

SELECTED WORKS IN 12 VOLUMES

Volume 9

*in Tamil*

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1988

$МЭ\frac{0101010000-477}{014(01)-88}346-88$

ISBN 5-01-000864-5 (т. 9)

## பொருளடக்கம்


கா. மார்க்ஸ். கோத்தா செயல்திட்டத்தின் விமர்சனம். பி. எங்கெல்ஸ் எழுதிய முன்னுரை . . . 7

கா. மார்க்ஸ். வி. பிராக்கேயுக்கு எழுதிய கடிதம். மே 5, 1875 . . . . . . . . 10

கா. மார்க்ஸ். ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சியின் செயல்திட்டத்தைப் பற்றி சில குறிப்புகள் . . . . . . . . . . . . . 13

I . . . . . . . . . . . . . . 13

II . . . . . . . . . . . . . . 31

III . . . . . . . . . . . . . . 34

IV . . . . . . . . . . . . . . 36

பி. எங்கெல்ஸ். ஔ. பெபெலுக்கு எழுதிய கடிதம். மார்ச் 18—28, 1875 . . . . . 46

பி. எங்கெல்ஸ். கா. காவுத்ஸ்கிக்கு எழுதிய கடிதம். பிப்ரவரி 23, 1891 . . . . . . 59

பி. எங்கெல்ஸ். ''இயற்கையின் இயக்க இயலுக்கு'' முன்னுரை . . . . . . . . . . 65

பி. எங்கெல்ஸ். ''டூரிங்குக்கு மறுப்புக்குப்'' பழைய முகவுரை. இயக்க இயலைப் பற்றி . 98

பி. எங்கெல்ஸ். மனிதக் குரங்கு மனிதனாக மாறிய இடைநிலைப்படியில் உழைப்பின் பாத்திரம் . . . . . . . . . . . . . . 114
பி. எங்கெல்ஸ். கார்ல் மார்க்ஸ் . . . . . . . 138
கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ். ஔ. பெபெல், வி. லீப்க்னெஹ்ட், வி. பிராக்கே மற்றும் இதரர்களுக்கு எழுதிய சுற்றறிக்கைக் கடிதம் என்பதிலிருந்து. III. மூன்று ஜூரிஹ்காரர் களின் அறிக்கை . . . . . . . . . . . . 157
பி. எங்கெல்ஸ். லண்டனிலிருந்த பி. லா. லவ் ரோவுக்கு எழுதிய கடிதம். நவம்பர் 12—17, 1875 . . . . . . . . . . . . . . 171
கா. மார்க்ஸ். ஹாம்பர்க்கிலிருந்த வி. பிலோசுக்கு எழுதிய கடிதம். நவம்பர் 10, 1877 177
பி. எங்கெல்ஸ். வியென்னாவிலிருந்த கா. காவுத் ஸ்கிக்கு எழுதிய கடிதம். செப்டெம்பர் 12, 1882 . . . . . . . . . . . . . . 178

பதிப்பாளர் குறிப்புகள் . . . . . . . 180
பெயர்க் குறிப்பகராதி . . . . . . . 204

கா. மார்க்ஸ்

# கோத்தா செயல்திட்டத்தின் விமர்சனம்[1]

## பி. எங்கெல்ஸ் எழுதிய முன்னுரை[2]

இங்கே வெளியிடப்படுகின்ற கையெழுத்துப் பிரதி—பிராக்கேயுக்கு எழுதிய கடிதம் மற்றும் நகல் செயல்திட்டத்தின் விமர்சனம்—1875இல், கோத்தா ஒற்றுமை காங்கிரசுக்குச்[3] சற்று முன்பாக பிராக்கேயுக்கு அனுப்பப்பட்டது; அவர் படித்த பிறகு கேய்ப், ஆவுயெர், பெபெல் மற்றும் லீப்க்னெஹ்டிடம் காட்டிய பிறகு மார்க்சுக்குத் திரும்ப அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுக் கொள்ளப் பட்டிருந்தார். ஹாலெ கட்சிக் காங்கிரஸ்[4] கோத்தா செயல் திட்டத்தைப் பற்றிய விவாதத்தைக் கட்சியின் நிகழ்ச்சி நிரலில் சேர்த்திருப்பதால் இந்த விவாதத்துக்கு முக்கியமான—ஒருவேளை ஆக முக்கியமான—ஆவணத்தை இனியும் நான் வெளியிடாமலிருந்தால் அதைப் பதுக்கி வைக்கின்ற குற்றத்தைச் செய்தவனாவேன் என்று கருதுகிறேன்.

ஆனால் இந்தக் கையெழுத்துப் பிரதிக்கு மற்றொரு, அதிக ஆழமான முக்கியத்துவம் இருக்கிறது. இங்கே லஸ்ஸால் தன்னுடைய கிளர்ச்சி சம்பந்தமாக ஆரம்பத்திலிருந்து கடைப்பிடித்த திசைவழியைப் பற்றி, அவருடைய பொருளாதாரக் கோட்பாடுகள், செயல்தந்திரம் ஆகிய இரண்டையும் பற்றி மார்க்சின் அணுகுமுறை தெளிவாக, உறுதியாக விரித்துரைக்கப்படுகிறது.

இங்கே நகல் திட்டம் பகுத்தாராயப்படுகின்ற தீவிரமான டுமை, அதன் விளைவாகப் பெறப்பட்ட முடிவுகள் எடுத்துரைக்கப்படுகின்ற இரக்கமற்ற தன்மை, நகல் செயல்

திட்டத்தின் குறைகள் அம்பலப்படுத்தப்படுதல்—இவை அனைத்தும் இன்று—பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு—இனிமேல் யாரையும் புண்படுத்த மாட்டா. தனிவகையான லஸ்ஸால்வாதிகள் உதிரியான அழிவுக்குவியல் என்ற முறையில் இப்பொழுது வெளிநாட்டில் மட்டுமே இருக்கிறார்கள்; ஹாலெயில் கோத்தா செயல்திட்டத்தைத் தயாரித்தவர்களே அது சிறிது கூட போதாது என்று அதைக் கைவிட்டு விட்டார்கள்.

எனினும் நான் சில தீவிரமான தனிப்பட்ட கருத்துக்களையும் முடிவுகளையும் அவசியமில்லாத இடங்களில் அகற்றி அவற்றினிடத்தில் புள்ளிகளை வைத்திருக்கிறேன். மார்க்ஸ் இன்று இக்கையெழுத்துப் பிரதியை வெளியிடுவாரானால் அவரும் இதையே செய்திருப்பார். சில இடங்களில் காட்டமான சொற்பிரயோகங்கள் இடம் பெற்றிருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, மார்க்சும் நானும் மற்றெந்த நாட்டின் இயக்கத்தையும் காட்டிலும் ஜெர்மனியில் நடைபெற்ற இயக்கத்துடன் அதிக நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்தோம்; ஆகவே நாங்கள் இந்த நகல் செயல்திட்டத்தில் காணப்பட்ட சந்தேகமில்லாத பின்வாங்கலைப் பற்றி அதிகமாகக் கலவரமடைந்தோம். இரண்டாவதாக, நாங்கள் அப்பொழுது—அகிலத்தின் ஹேக் காங்கிரஸ்[5] முடிந்து இரண்டு ஆண்டுகள் கூடப் பூர்த்தியடையாதிருந்த பொழுது—ஜெர்மனியின் தொழிலாளர் இயக்கத்தில் நடைபெற்றிருந்த எல்லாவற்றுக்கும் எங்களைப் பொறுப்பாக்கிய பக்கூனின் மற்றும் அவருடைய அராஜகவாதிகளுக்கு எதிராக மிகவும் கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோம்; ஆகவே இந்தச் செயல்திட்டத்தின் இரகசியத் தகப்பனார் என்று எங்களையும் சேர்த்து வர்ணிப்பார்கள் என்பதை எதிர்பார்த்தோம். இந்தக் காரணங்கள் இப்பொழுது இல்லாதபடியால் சம்பந்தப்பட்ட பகுதிகள் அவசியமில்லாதிருக்கின்றன.

தணிக்கையின் விளைவாகத் தோன்றிய காரணங்களுக்காகவும் சில வாக்கியங்கள் நீக்கப்பட்டு அந்த இடங்களில் புள்ளிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. நான் கடுமை குறைந்த

சொற்களைப் பயன்படுத்தியிருக்கின்ற இடங்களில் அவை சதுர அடைப்புக் குறிகளுக்குள் தரப்பட்டிருக்கின்றன. இவற்றைத் தவிர இந்தக் கையெழுத்துப் பிரதியின் வாசகம் சொல்லுக்குச் சொல் அப்படியே மறுபதிப்புச் செய்யப் படுகிறது.

லண்டன், ஜனவரி 6, 1891

பி. எங்கெல்ஸ்

*Die Neue Zeit*, Bd. 1,
எண் 18, 1890—1891
என்ற சஞ்சிகையில்
வெளியிடப்பட்டது

சஞ்சிகை வாசகப்படி
அச்சிடப்பட்டது

மூலம் ஜெர்மன்
மொழியில் எழுதப்பட்டது

கா. மார்க்ஸ்

# வி. பிராக்கேயுக்கு எழுதிய கடிதம்

லண்டன், மே 5, 1875

அன்புள்ள பிராக்கே,

ஒற்றுமை செயல்திட்டத்தைப் பற்றிப் பின்வரும் விமர்சனக் குறிப்புகளைத் தாங்கள் படித்த பிறகு கேய்ப், ஆவுயெர், பெபெல் மற்றும் லீப்க்னெஹ்ட் படிப்பதற்காக இவற்றை அனுப்பி வைக்கும்படி வேண்டுகிறேன். நான் மிகவும் அதிகமாக வேலையில் மூழ்கிப் போயிருக்கிறேன்; நான் எவ்வளவு வேலை செய்யலாம் என்று டாக்டர்கள் அனுமதித்திருக்கின்ற எல்லையை மீறி விடுகிறேன். ஆகவே இத்தகைய நீண்ட கடிதத்தை எழுதுவது எனக்குச் சிறிதும் ''மகிழ்ச்சியைத்'' தரவில்லை. எனினும் கட்சியிலிருக்கின்ற நமது நண்பர்கள்—அவர்களுக்காகத்தான் இந்தக் கடிதம் எழுதப் பட்டது—இனிமேல் நான் எடுக்கக் கூடிய நடவடிக்கைகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாமலிருப்பதற்கு இது அவசியமே. ஏனென்றால் ஒற்றுமை காங்கிரஸ் முடிவடைந்த பிறகு, மேற்கூறப்பட்ட கோட்பாடுகளின் செயல்திட்டத்திலிருந்து எங்களுடைய நிலை முற்றிலும் வேறுபட்டது, எங்களுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்று ஒரு சிறு அறிக்கையை எங்கெல்சும் நானும் வெளியிடப் போகிறோம்.

எய்ஸெனாஹ் கட்சி[6] என்று சொல்லப்படுகின்ற இயக்கத்தை நாங்கள் இங்கிருந்து இரகசியமாக வழிகாட்டுகிறோம் என்ற கருத்து—அது முற்றிலும் தவறானதாகும்—வெளிநாடுகளில் ஏற்பட்டிருப்பதால், கட்சியின் எதிரிகள் இக்கருத்தை மிகவும் கவனமாக வளர்த்துக் கொண்டிருப்பதால் இந்த அறிக்கை தவிர்க்க முடியாததாகும். சமீபத்

தில் வெளியிடப்பட்ட ஒரு ருஷ்யப் புத்தகத்தில்[7] பக்கூனின் அந்தக் கட்சியின் செயல்திட்டம், இதரவைகளுக்கு மட்டு மல்லாமல் லீப்க்னெஹ்ட் மக்கள் கட்சியுடன்[8] ஒத்துழைப் பதற்குத் தொடங்கிய நாள் முதலாகச் செய்த ஒவ்வொரு நடவடிக்கைக்கும் கூட என்னையே பொறுப்பாக்குகிறார்.

இதைத் தவிர, என்னுடைய கருத்தின்படி கட்சியில் மனச் சோர்வுண்டாக்குகின்ற, ஆட்சேபகரமான செயல் திட்டத்துக்கு — இராஜதந்திரமான மௌனத்தின் மூல மாகக் கூட—அங்கீகாரம் அளிக்காமலிருப்பது என்னுடைய கடமையாகும்.

ஓர் உண்மையான இயக்கத்தின் ஒவ்வொரு காலடியும் ஒரு டஜன் செயல்திட்டங்களைக் காட்டிலும் அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. ஆகவே எய்ஸெ னாஹ் செயல்திட்டத்துக்கும் அப்பால் போக முடியவில்லை— அன்றைய நிலைமைகள் அதை அனுமதிக்கவில்லை—என் றால், பொது எதிரிக்கு எதிரான நடவடிக்கைக்குரிய உடன் பாட்டை மட்டுமே ஒருவர் செய்திருக்க வேண்டும். ஆனால் கோட்பாடுகளைக் கொண்ட செயல்திட்டத்தைத் தயாரித்த தன் மூலம் (கணிசமான காலம் பொது நடவடிக்கையின் மூலம் அதற்குப் பாதை அமைக்கப்படுகின்ற வரையிலும் அதை ஒத்திப் போடுவதற்குப் பதிலாக) கட்சியின் தகுதி நிலையை மொத்த உலகமும் அளவிடுவதற்குரிய மைல்கற் களை அதற்கு முன்பு நிறுவுகின்றனர்.

லஸ்ஸால்வாதிகளின் தலைவர்கள் ஒத்துக் கொண்டார் கள் என்றால் சந்தர்ப்பங்கள் அவர்களை அப்படி நிர்ப்பந் தித்தன. கொள்கைகளைப் பற்றிப் பேரம் பேச முடியாது என்று தொடக்கத்திலேயே அவர்களிடம் தெரிவித்திருந்தால் பொது நடவடிக்கைக்கு ஒரு செயல்திட்டம் அல்லது ஸ்தா பனத் திட்டத்துடன் அவர்கள் திருப்தி அடையும்படி ஏற்பட் டிருக்கும். இதற்குப் பதிலாக ஆணைகளைப் பெற்றுக் கொண்டு வரும்படி அவர்களை அனுமதித்தனர், இந்த ஆணைகள் கட்டுப்படுத்தத்தக்கவை என்று அங்கீகரித்தனர்; அதன் மூலம் யாருக்கு உதவி அவசியமாக இருந்ததோ அவர் களிடம் நிபந்தனையின்றிச் சரணடைந்தனர். இந்த மொத்த

விவகாரத்துக்கும் முடி சூட்டுவதைப் போல சமரசக் காங்கிரசுக்கு முன்பாக ஒரு காங்கிரசை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்—அவர்களுடைய சொந்தக் கட்சி தன்னுடைய காங்கிரசை *post festum** நடத்திக் கொண்டிருக்கிறது. எல்லா விமர்சனத்துக்கும் ஒரு தந்திரத்தின் மூலம் முடிவு கட்ட, தன்னுடைய சொந்தக் கட்சி சிந்தனை செய்வதற்கு எத்தகைய சந்தர்ப்பமும் கொடுக்காமலிருக்க வேண்டும் என்று யாரோ விரும்பினார்கள் என்பது வெளிப்படையாகும். ஒற்றுமை என்ற விவரமே தொழிலாளர்களுக்குத் திருப்தியைத் தருவது ஒருவருக்குப் புரிகிறது என்றபோதிலும் இந்தத் தற்காலிகமான வெற்றி மிகவும் அதிகமான விலை கொடுத்து வாங்கப்படவில்லை என்று ஒருவர் நம்புவது தவறாகும்.

செயல்திட்டம் லஸ்ஸால்வாத நம்பிக்கையின் கோட்பாடுகளைப் புனிதப்படுத்துகிறது என்பதை ஒதுக்கிவிட்டால் கூட அது வேறு சிறப்பில்லாதிருக்கிறது.

நான் சமீப எதிர்காலத்தில் மூலதனம் நூலின் பிரெஞ்சுப் பதிப்பின் கடைசிப் பகுதிகளை உங்களுக்கு அனுப்பி வைப்பேன். பிரெஞ்சு அரசாங்கம் விதித்த தடையினால் அச்சிடுகின்ற வேலை கணிசமான காலத்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அது இந்த வாரத்தில் அல்லது அடுத்த வாரத்தின் ஆரம்பத்தில் தயாராகி விடும். முந்திய ஆறு பகுதிகளும் உங்களுக்குக் கிடைத்தனவா? தயவு செய்து, பெர்ன்ஹார்டு பெக்கெரின் முகவரியை எனக்குத் தெரிவியுங்கள்; நான் அவருக்கும் கடைசிப் பகுதிகளை அனுப்ப வேண்டும்.

*Volksstaat* பதிப்பகம்[9] விசித்திரமான முறைகளைப் பின்பற்றுகிறது. உதாரணமாக, இந்தக் கணம் வரை கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கின்** ஒரு பிரதி கூட எனக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

மிக்க மரியாதையுடன்
தங்கள் கார்ல் மார்க்ஸ்

---

* —நேர்ப்பொருளில்: கொண்டாட்டத்துக்குப் பிறகு, அதாவது தாமதமாக.—ப-ர்.

** கா. மார்க்ஸ், கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கின் உண்மை உருவம்.—ப-ர்.

கா. மார்க்ஸ்

# ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சியின் செயல்திட்டத்தைப் பற்றி சில குறிப்புகள்

## I

1. ''எல்லாச் செல்வத்துக்கும் எல்லாக் கலாச்சாரத்துக்கும் உழைப்பே தோற்றுவாய்; பயனுள்ள உழைப்பு சமூகத்தின் மூலமாக மற்றும் சமூகத்தில் மட்டுமே சாத்தியமாக இருப்பதால் உழைப்பின் பலன்கள் சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் குறையாத அளவில் சம உரிமையுடன் சொந்தமானவை.''

பாராவின் முதல் பகுதி: ''எல்லாச் செல்வத்துக்கும் எல்லாக் கலாச்சாரத்துக்கும் உழைப்பே தோற்றுவாய்.''

எல்லாச் செல்வத்துக்கும் உழைப்பு தோற்றுவாய் அல்ல. உழைப்பைப் போன்றே பயன் மதிப்புகளுக்கு (பொருளாயதச் செல்வம் என்பது நிச்சயமாக இவைதானே!) இயற்கை ஒரு தோற்றுவாயே; உழைப்பும் கூட மனித உழைப்புச் சக்தி என்ற இயற்கைச் சக்தியின் வெளிப்பாடு மட்டுமே. மேற்கூறிய சொற்றொடரைக் குழந்தைகளின் அரிச்சுவடிப் புத்தகங்கள் அனைத்திலும் காண முடியும்; உழைப்பு அதற்குரிய பொருள்களோடும் கருவிகளோடும் செய்யப்படுகிறது என்பதைக் குறிக்கின்ற அளவுக்கு அந்தச் சொற்றொடர் சரியானதே. ஆனால் இந்த முதலாளி வர்க்கச் சொற்றொடர்கள் அவற்றுக்கு அர்த்தத்தைத் தருகின்ற நிபந்தனைகளைப் பற்றி மௌனம் சாதிப்பதை ஒரு சோஷலிஸ்டுச் செயல்திட்டம் அனுமதிக்க முடியாது. மனிதன் தொடக்கத்திலிருந்து உழைப்பின் எல்லாக் கருவிகள் மற்றும் பொருள்களின் மூலத்

தோற்றுவாயான இயற்கையின் பால் ஒரு உடைமையாளர் என்ற முறையில் நடந்து கொள்வதால், அதைத் தனக்குச் சொந்தம் என்றவாறு நடத்துவதால், அவனுடைய உழைப்பு பயன் மதிப்புகளின்—ஆகவே செல்வத்துக்கும் கூடத்—தோற்றுவாயாக இருக்கிறது. உழைப்புக்கு இயற்கைக்கும் உயர்வான படைப்புச் சக்தியைப் போலியான முறையில் ஏற்றிச் சொல்வதற்கு முதலாளி வர்க்கத்துக்கு மிகவும் நல்ல காரணங்கள் இருக்கின்றன. உழைப்பு இயற்கையை நம்பியிருக்கின்றது என்ற உண்மையிலிருந்தே தன்னுடைய உழைப்புச் சக்தியைத் தவிர வேறு எந்த உடைமையும் இல்லாத நபர்—சமூக மற்றும் கலாச்சாரத்தின் எல்லா நிலைமைகளிலும்—உழைப்பின் பொருளாயத நிலைமைகளைத் தமக்கு உடைமையாக்கிக் கொண்ட மற்ற மனிதர்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்பது அவசியமாகப் பெறப்படுகிறது. அவர்கள் அனுமதித்தால் மட்டுமே அவன் உழைக்க முடியும்; ஆகவே அவர்கள் அனுமதித்தால் மட்டுமே அவன் வாழ முடியும்.

இந்த வாக்கியத்தை இருக்கின்றபடி, அல்லது அது நொண்டிக் கொண்டிருக்கின்றபடி நாம் விட்டுவிடுவோம். முடிவில் ஒருவர் என்ன எதிர்பார்ப்பார்? அநேகமாக இதையே எதிர்பார்ப்பார்:

''எல்லாச் செல்வத்துக்கும் உழைப்பே தோற்றுவாய் என்பதால் சமூகத்தில் எவரும் உழைப்பின் உற்பத்தி என்ற முறையில் அல்லாமல் செல்வத்தைச் சுவீகரிக்க முடியாது. ஆகவே ஒரு நபர் உழைக்கவில்லை என்றால் அவர் மற்றவர்களுடைய உழைப்பைக் கொண்டு வாழ்கிறார், தன்னுடைய கலாச்சாரத்தையும் மற்றவர்களுடைய உழைப்பின் விளைவாகப் பெறுகிறார்.''

இதற்குப் பதிலாக ''இருப்பதால்'' என்ற இணைப்பின் மூலமாக இரண்டாவது கருதுகோள் சேர்க்கப்படுகிறது; முதல் கருதுகோளை விட்டுவிட்டு இதிலிருந்து முடிவு பெறப்படுகிறது.

பாராவின் இரண்டாம் பகுதி: ''பயனுள்ள உழைப்பு சமூகத்தின் மூலமாக மற்றும் சமூகத்தில் மட்டுமே சாத்தியம்.''

முதற் கருதுகோளின்படி எல்லாச் செல்வத்துக்கும் எல்லாக் கலாச்சாரத்துக்கும் உழைப்பே தோற்றுவாய்; ஆகவே உழைப்பு இல்லாத சமூகம் சாத்தியமல்ல. இப்பொழுது நாம் இதன் மறுதலையை, சமூகம் இல்லாமல் ''பயனுள்ள'' உழைப்பு சாத்தியமல்ல என்று அறிந்து கொள்கிறோம்.

பயனற்ற உழைப்பு—சமூக ரீதியில் ஆபத்தான உழைப்பும் கூட—சமூகத்தில் மட்டுமே லாபகரமான உழைப்பின் ஒரு பிரிவாக இருக்க முடியும், ஒருவன் சோம்பேறியாக இருந்து கொண்டு வாழ்க்கை நடத்துவது சமூகத்தில் மட்டுமே முடியும், இதரவை, இதரவை என்றுகூட ஒருவர் கூறியிருக்க முடியும்—சுருக்கமாகச் சொல்வதென்றால் ரூஸோ எழுதிய அனைத்தையும் ஒருவர் காப்பியடித்திருக்க முடியும்.

மற்றும், ''பயனுள்ள'' உழைப்பு என்பது என்ன? உத்தேசிக்கப்பட்ட பயனுள்ள விளைவை உற்பத்தி செய்கின்ற உழைப்பு மட்டுமே என்பது நிச்சயம். கல்லை வீசி ஒரு பிராணியைக் கொல்கின்ற, கனிகளைச் சேகரிக்கின்ற, இதரவை ஒரு காட்டுமிராண்டி—மனிதக் குரங்கு நிலைக்குப் பிறகு மனிதன் காட்டுமிராண்டியாகத்தான் இருந்தான்—''பயனுள்ள'' உழைப்பை நிறைவேற்றுகிறான்.

மூன்றாவதாக, முடிவு: ''பயனுள்ள உழைப்பு சமூகத்தின் மூலமாக மற்றும் சமூகத்தில் மட்டுமே சாத்தியமாக இருப்பதால் உழைப்பின் பலன்கள் சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் குறையாத அளவில் சம உரிமையுடன் சொந்தமானவை.''

சிறந்த முடிவு! பயனுள்ள உழைப்பு சமூகத்தின் மூலமாக மற்றும் சமூகத்தில் மட்டுமே சாத்தியம் என்றால் உழைப்பின் பலன்கள் சமூகத்துக்குச் சொந்தம்—ஆகவே சமூகத்தை, உழைப்பின் ''நிலைமையை'' வைத்திருக்க அவசியமில்லாதவை மட்டும் தனிப்பட்ட தொழிலாளிக்குக் கிடைக்கிறது.

உண்மையில், குறிப்பிடப்பட்ட எந்தச் சந்தர்ப்பத்திலும் இருந்து கொண்டிருக்கின்ற சமூக நிலைமையை ஆதரிப்பவர்கள் இந்தக் கருதுகோளை எல்லாக் காலங்களிலும் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். முதலில் அரசாங்கம் மற்றும் அதனுடன்

சம்பந்தப்பட்ட ஒவ்வொன்றின் கோரிக்கைகளும் வருகின்றன—ஏனென்றால் சமூக அமைப்பை நீடிக்கச் செய்கின்ற சமூக உறுப்பு அதுவே; அடுத்து தனியுடைமையின் வெவ்வேறு ரகங்களின் கோரிக்கைகள் வருகின்றன—ஏனென்றால் தனியுடைமையின் வெவ்வேறு ரகங்கள்தான் சமூகத்தின் அடிப்படைகள், இதரவை. இத்தகைய பொருளற்ற சொற்றொடர்களை விரும்பியபடி வளைக்கவும் மாற்றவும் முடியும் என்பதை ஒருவர் காணக் கூடும்.

இந்தப் பாராவின் முதல் மற்றும் இரண்டாம் பகுதிகள் பின்வருகின்ற அமைப்பில் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடிய இணைப்பைக் கொண்டிருக்கின்றன:

''சமூக உழைப்பு என்ற முறையில் மட்டுமே உழைப்பு செல்வம் மற்றும் கலாச்சாரத்தின் தோற்றுவாயாக இருக்கிறது'', அல்லது அதே பொருளைத் தருகின்ற ''சமூகத்தின் மூலமாக மற்றும் சமூகத்தில் மட்டுமே''.

இந்தக் கருதுகோள் மறுக்க முடியாத விதத்தில் சரியானதே; ஏனென்றால் உதிரியான உழைப்பு (அதன் பொருளாயத நிலைமைகள் முன்னூகிக்கப்பட்டிருந்தால்) பயன் மதிப்புகளைப் படைக்க முடியும் என்றாலும், அது செல்வத்தையோ அல்லது கலாச்சாரத்தையோ படைக்க முடியாது.

ஆனால் அடுத்த கருதுகோளும் இதே அளவுக்கு மறுக்கப்பட முடியாதது:

''உழைப்பு சமூக ரீதியில் வளர்ச்சியுற்று, அதன் மூலம் செல்வம் மற்றும் கலாச்சாரத்தின் தோற்றுவாயாக மாறும் விகிதாச்சாரத்தில் தொழிலாளர்கள் மத்தியில் ஏழ்மையும் வறுமையும் வளர்ச்சியடைகின்றன, தொழிலாளர் அல்லாதவர்களிடம் செல்வமும் கலாச்சாரமும் வளர்ச்சியடைகின்றன.''

இது வரையிலும் உள்ள எல்லா வரலாற்றிலும் இது தான் விதி. ''உழைப்பு'' மற்றும் ''சமூகத்தைப்'' பற்றிப் பொதுப்படையான சொற்றொடர்களை எழுதுவதற்குப் பதிலாக இங்கே என்ன செய்திருக்க வேண்டுமென்றால் இன்றைய முதலாளித்துவச் சமூகத்தில் இந்தச் சமூக சாபக் கேட்டை அகற்றுவதற்குத் தொழிலாளர்களுக்கு உதவுகின்ற

மற்றும் அவர்களை நிர்ப்பந்திக்கின்ற பொருளாயத மற்றும் இதர நிலைமைகள் கடைசியில் எப்படித் தோற்றுவிக்கப் பட்டிருக்கின்றன என்பதை ஸ்தூலமாக நிரூபித்திருக்க வேண்டும்.

உண்மை என்னவென்றால் நடையிலும் கருத்திலும் குளறுபடிச் செய்யப்பட்டிருக்கின்ற இந்த மொத்த பாராவுமே ''குறையாத அளவில் உழைப்பின் பலன்கள்'' என்ற லஸ்ஸால்வாத முழக்கத்தைக் கட்சிக் கொடியின் உச்சியில் கோஷமாகப் பொறிப்பதற்காக மட்டுமே இந்த இடத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ''உழைப்பின் பலன்கள்'', ''சம உரிமை'' இதரவற்றை நான் பிறகு விவாதிப்பேன், ஏனென்றால் இனிமேல் அதே விஷயம் சற்று வித்தியாசமான வடிவத்தில் திருப்பிச் சொல்லப்பட்டிருக்கிறது.

> 2. ''இன்றைக்கிருக்கின்ற சமூகத்தில் உழைப்புக் கருவிகள் முதலாளித்துவ வர்க்கத்துக்கு ஏகபோகமாக இருக்கின்றன. அதனால் தொழிலாளி வர்க்கத்துக்கு ஏற்படுகின்ற சார்புநிலை அதன் துன்பம் மற்றும் அடிமைத்தனத்தின் எல்லா வடிவங்களுக்கும் காரணமாக இருக்கிறது.''

அகிலத்தின் விதிமுறைகளிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்ற இந்த வாக்கியம்—இந்த ''முன்னேற்றமான'' வடிவத்தில்—தவறாகும்.

இன்றைக்கிருக்கின்ற சமூகத்தில் உழைப்புக் கருவிகள் நிலவுடைமையாளர்கள் (நிலவுடைமையின் ஏகபோகம் மூலதனத்தின் ஏகபோகத்துக்குக் கூட அடிப்படையாகும்) மற்றும் முதலாளிகளுக்கு ஏகபோகமாக இருக்கின்றன. சம்பந்தப்பட்ட பாராவில் அகிலத்தின் விதிமுறைகள் ஏகபோக வர்க்கங்களில் எந்த ஒன்றையும் குறிப்பிடவில்லை. விதிமுறைகள் **''உழைப்புச் சாதனங்களை, அதாவது வாழ்க்கையின் தோற்றுவாய்களை ஏகபோகமாக்கியவரைப்''** பற்றிப் பேசுகின்றன. ''வாழ்க்கையின் தோற்றுவாய்களை'' என்ற கூடுதலான சொற்றொடர் உழைப்புக் கருவிகளில் நிலமும் சேர்க்கப்

பட்டிருப்பதைப் போதுமான தெளிவுடன் எடுத்துக் காட்டுகிறது.

லஸ்ஸால் முதலாளி வர்க்கத்தை **மட்டுமே** தாக்கினார், நிலவுடைமையாளர்களைத் தாக்கவில்லை—இதன் காரணங்கள் தற்பொழுது பொதுவாகத் தெரியும்—என்பதனால் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இங்கிலாந்தில் ஒரு முதலாளி வழக்கமாகத் தன்னுடைய பாக்டரி அமைக்கப்பட்டிருக்கின்ற நிலத்துக்குக் கூட உடைமையாளராக இருப்பதில்லை.

> 3. ''உழைப்புக் கருவிகள் சமூகத்தின் பொதுச் சொத்தாக மேம்பாடடைவதும் உழைப்பின் பலன்களை எல்லா உழைப்பாளிகளுக்கும் நியாயமாக வினியோகிப்பதும் அவர்கள் எல்லோரையும் கூட்டுறவு முறையில் ஒழுங்குபடுத்துவதும் உழைப்பின் விடுதலைக்கு அத்தியாவசியமாகும்.''

''உழைப்புக் கருவிகள் சமூகத்தின் பொதுச் சொத்தாக மேம்பாடடைவது''(!) என்று எழுதப்பட்டிருப்பது ''பொதுச் சொத்தாக மாற்றப்படுவது'' என்று எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு; ஆனால் இது அவ்வளவு முக்கியமல்ல.

**''உழைப்பின் பலன்கள்''** என்றால் என்ன? உழைப்பால் ஏற்பட்ட பொருளா அல்லது அதன் மதிப்பா? பின்னால் சொல்லப்பட்டதாக இருக்குமானால் அந்தப் பொருளின் மொத்த மதிப்பா அல்லது நுகர்வு செய்யப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் மதிப்போடு உழைப்பு புதிதாகச் சேர்த்திருக்கும் மதிப்பின் அந்தப் பகுதி மட்டும்தானா?

''உழைப்பின் பலன்கள்'' என்பது லஸ்ஸால் உபயோகிக்கின்ற தெளிவில்லாத கருத்தாகும்; திட்டவட்டமான பொருளாதாரக் கருதுகோள்களுக்குப் பதிலாக அவர் இதைப் பயன்படுத்துகிறார்.

''நியாயமாக'' வினியோகிப்பது என்றால் என்ன?

இன்றைக்கிருக்கும் வினியோகம் ''நியாயமானது'' என்று முதலாளிகள் ஆணித்தரமாகப் பேசுவதில்லையா? மேலும்

இன்றைய உற்பத்தி முறையின் அடிப்படையில் இது ஒன்று மட்டுமே ''நியாயமான'' வினியோகம் என்பது உண்மை தானே? பொருளாதார உறவுகள் சட்டக் கருதுகோள்களால் ஒழுங்குபடுத்தப்படுவதா அல்லது, இதற்கு மாறாக, சட்ட உறவுகள் பொருளாதார உறவுகளிலிருந்து தோன்ற வில்லையா?''நியாயமான''வினியோகத்தைப் பற்றி பல்வேறு சோஷலிஸ்டுக் குறுங்குழுவாதிகளும் அதிகமான அளவுக்கு வேறுபாடான கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லையா?

இங்கே ''நியாயமான'' வினியோகம் என்ற வார்த்தை களில் அடங்கியிருப்பது என்ன என்பதைப் புரிந்து கொள் வதற்கு நாம் முதல் பாராவையும் இந்தப் பாராவையும் சேர்த்துப் படிக்க வேண்டும். பிந்தியது ''உழைப்புக் கரு விகளை சமூகத்தின் பொதுச் சொத்தாகக் கொண்டு எல்லா உழைப்பாளிகளையும் கூட்டுறவு முறையில் ஒழுங்குபடுத்து கின்ற'' சமூகத்தை முன்னூகிக்கிறது; ''உழைப்பின் பலன் கள் சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் குறையாத அளவில் சம உரிமையுடன் சொந்தமானவை'' என்று முதல் பாராவிலிருந்து நாம் தெரிந்து கொள்கிறோம்.

''சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்குமா?'' வேலை செய்யாமல் இருப்பவர்களுக்கும் சேர்த்தா? ''உழைப்பின் பலன்கள் குறையாத அளவில்'' என்று சொல்லப்பட்டதே, அதில் மிஞ்சுவது என்ன? சமூகத்தில் உழைக்கின்ற உறுப் பினர்களுக்கு மட்டுமா? அப்படியானால் சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் தரப்பட்டிருக்கும் ''சம உரிமை'' என்ன வாகும்?

ஆனால் ''சமூகத்தின் எல்லா உறுப்பினர்களும்'' மற்றும் ''சம உரிமை'' என்பவையெல்லாம் வெறும் வார்த்தைகளே. இந்தக் கம்யூனிஸ்டு சமூகத்தில் ஒவ்வொரு தொழிலாளியும் லஸ்ஸால்வாத ''உழைப்பின் பலன்களைக் குறையாத அள வில்'' பெற வேண்டும் என்பதே மூலப்பகுதி.

முதலாவதாக, ''உழைப்பின் பலன்கள்'' என்ற சொற் களை உழைப்பின் உற்பத்திப் பொருள் என்ற அர்த்தத்தில் நாம் எடுத்துக் கொள்வோம்; அப்படியானால் கூட்டு உழைப் பின் பலன்கள் மொத்த சமூக உற்பத்திப் பொருள் ஆகும்.

2*

இதிலிருந்து நாம் பின்வருவனவற்றைக் கழிக்க வேண்டும்:

முதலாவதாக, உபயோகிக்கப்பட்ட உற்பத்திச் சாதனங்களுக்குப் பதிலாக வேறு ஏற்படுத்துவதற்குரிய ஒதுக்கீடு.

இரண்டாவதாக, உற்பத்தியின் விஸ்தரிப்புக்கான கூடுதல் ஒதுக்கீடு.

மூன்றாவதாக, விபத்துக்கள், இயற்கையால் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான சேம ஒதுக்கீடு அல்லது இன்ஷூரன்ஸ் ஒதுக்கீடு.

''குறையாத அளவில் உழைப்பின் பலன்களிலிருந்து'' இவற்றைக் கழித்து விடுவது ஒரு பொருளாதார அவசியமாகும். இவற்றின் அளவு இருக்கின்ற சக்திகள், சாதனங்களினாலும் பகுதியளவுக்குச் சாத்தியமானவை பற்றிய கொள்கையினாலும் நிர்ணயிக்கப்படுகிறது; எனினும் சமத்துவத்தைக் கொண்டு ஒருபோதும் இதைக் கணக்கிட முடியாது.

மொத்த உற்பத்திப் பொருளில் இனி மிஞ்சுவது, நுகர்வுச் சாதனமாக உபயோகிக்க உத்தேசிக்கப்படும் அடுத்த பகுதியே.

இதைத் தனி நபர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்கு முன்பு இதிலிருந்து பின்வருவனவற்றை மறுபடியும் கழிக்க வேண்டும்:

முதலாவதாக, உற்பத்தியோடு நேரடியாக சேராத பொது நிர்வாகச் செலவுகள்.

ஆரம்பத்திலிருந்தே இந்தப் பகுதி—இன்றைய சமூகத்துடன் ஒப்பிடும் பொழுது—மிகவும் அதிகமான அளவுக்குக் குறைந்து விடும்; புதிய சமூகம் வளர்ச்சி அடையும் பொழுது அதன் விகிதாச்சாரம் குறைந்து விடும்.

இரண்டாவதாக, பொதுவான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருப்பது—பள்ளிக்கூடங்கள், மருத்துவ வசதிகள், இதரவை.

ஆரம்பத்திலிருந்தே இந்தப் பகுதி—இன்றைய சமூகத்துடன் ஒப்பிடும் பொழுது—கணிசமான அளவில் அதிகரிக்கும்; புதிய சமூகம் வளர்ச்சி அடையும் பொழுது அதன் விகிதாச்சாரம் அதிகரிக்கும்.

மூன்றாவதாக, வேலை செய்ய இயலாதவர்களுக்காக ஒதுக்கப் படும் நிதி, இதரவை; சுருக்கமாகச் சொல்வதென்றால், இன்று ஏழைகள் நிவாரணம் என்ற பிரிவின் கீழ் சேர்க்கப் படுவது.

லஸ்ஸால்வாதத் தாக்கத்தின் காரணமாக இந்தச் செயல் திட்டம் ஒரு குறுகிய பார்வையில் ''வினியோகத்தை'' மட்டுமே மனதில் கொண்டிருக்கிறது; அதாவது, கூட்டுறவுச் சங்கத்தின் தனிப்பட்ட உற்பத்தியாளர்களிடையே பிரித்துக் கொடுக்கப்படுகின்ற நுகர்வுச் சாதனத்தின் பகுதியை மட்டுமே குறிக்கிறது. இதை நாம் இப்பொழுது எடுத்துக் கொள்வோம்.

''குறையாத அளவில் உழைப்பின் பலன்கள்'' முன்பே யாருக்கும் தெரியாமலே ''குறைவடைந்த'' பலன்களாக மாற்றப்படுகின்றன. ஆனால் தனிப்பட்ட நபர் என்ற முறை யில் ஒரு உற்பத்தியாளர் எதை இழந்து விடுகிறாரோ அதை சமூகத்தின் உறுப்பினர் என்ற முறையில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அடைந்து விடுகிறார்.

''குறையாத அளவில் உழைப்பின் பலன்கள்'' என்ற சொற்றொடர் மறைந்து விடுவதைப் போல ''உழைப்பின் பலன்கள்'' என்ற சொற்றொடரும் முழுமையாக மறைந்து விடுகிறது.

உற்பத்திச் சாதனங்களைப் பொது உடைமையாகக் கொண்டிருக்கின்ற கூட்டுறவுச் சமூகத்துக்குள் உற்பத்தியா ளர்கள் தங்களுடைய பொருள்களைப் பரிவர்த்தனை செய் வதில்லை. இப்பொழுது, முதலாளித்துவச் சமூகத்துக்கு மாறுபட்ட வகையில், தனிப்பட்ட உழைப்பு மறைமுகமான வழியில் இனிமேலும் இருக்காமல் மொத்த உழைப்பின் பிரிக்க முடியாத அங்கமாக இருப்பதால் இந்தப் பொருள் களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் உழைப்பு இந்தப் பொருள் களின் மதிப்பு என்ற வகையில், அவற்றில் அடங்கியிருக்கும் பொருளாயதத் தன்மையாகக் குறைவான அளவில் தோன்று கிறது. இவ்விதத்தில் ''உழைப்பின் பலன்கள்'' என்ற சொற் றொடர்—அது தெளிவற்றதாக இருப்பதால் இன்று ஆட்

சேபத்துக்குரியதாக இருக்கிறது—அதன் எல்லா அர்த்தத்தையும் இழந்து விடுகிறது.

இங்கு நாம் ஆராய வேண்டியிருப்பது தனது சொந்த அடித்தளங்களின் மீது வளர்ச்சியடைந்துள்ள ஒரு கம்யூனிச சமுதாயத்தை அல்ல; அதற்கு மாறாக, முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து வெளித்தோன்றி, ஆகவே தான் உதித்த அந்தப் பழைய சமுதாயத்திடமிருந்து பெறப்பட்ட பிறவிக் குறிகள் ஒவ்வொரு வழியிலும்—பொருளாதார வழியிலும் தார்மிக வழியிலும் அறிவு வழியிலும்—இன்னமும் பதிந்திருப்பதுமான கம்யூனிச சமுதாயத்தையே நாம் இங்கே ஆராய்கிறோம். எனவே தனிப்பட்ட உற்பத்தியாளர் சமூகத்துக்குத் தான் என்ன கொடுத்தாரோ, அதையே—எல்லாக் கழித்தல்களும் செய்யப்பட்ட பிறகு—மிகத் துல்லியமாக அவர் திரும்பப் பெறுகிறார். அவர் சமூகத்துக்குக் கொடுத்தது உழைப்பில் அவருக்குரிய பகுதியாகும். உதாரணமாக, ஒரு சமூக உழைப்பு நாள் தனிப்பட்டவர்களுடைய உழைப்பு மணி நேரங்களின் மொத்த எண்ணிக்கையைக் கொண்டிருக்கிறது; தனிப்பட்ட உற்பத்தியாளரின் தனிப்பட்ட உழைப்பு நேரம் அவர் பங்கு கொண்டிருக்கும் சமூக உழைப்பு நாளின் பகுதி, அதில் அவருடைய பங்கு எனலாம். அவர் இந்த எண்ணிக்கையுள்ள உழைப்பை (பொது நிதிகளுக்கு அவருடைய உழைப்பைக் கழித்துக் கொண்ட பிறகு) கொடுத்திருக்கிறார் என்ற சான்றிதழைச் சமூகத்திலிருந்து பெறுகிறார்; இதைக் கொண்டு நுகர்வுச் சாதனங்களின் சமூக இருப்பிலிருந்து தனது உழைப்பின் அளவுக்கு மதிப்பைக் கொண்ட நுகர்வுச் சாதனங்களை வாங்கிக் கொள்கிறார். அவர் ஒரு வடிவத்தில் சமூகத்துக்குக் கொடுத்த உழைப்பின் அதே அளவை வேறொரு வடிவத்தில் திரும்ப வாங்கிக் கொள்கிறார்.

இங்கே பண்டங்களின் பரிவர்த்தனையை—இது சம மதிப்புகளின் பரிவர்த்தனையாக இருக்கும் அளவில்—ஒழுங்குபடுத்துகின்ற அதே கோட்பாடு நிலவுகின்றது என்பது தெளிவு. உள்ளடக்கமும் வடிவமும் மாறி விட்டன; ஏனென்றால் மாறி விட்ட நிலைமைகளின் கீழ் ஒருவர் தன்னுடைய

உழைப்பைத் தவிர வேறு ஒன்றையும் கொடுக்க முடியாது; மேலும், தனிப்பட்ட நுகர்வுச் சாதனங்களைத் தவிர வேறு ஒன்றும் தனி நபர்களின் உடைமைப் பொருளாக முடியாது. ஆனால் சம்பந்தப்பட்ட தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் மத்தியில் பிந்தியதை வினியோகிப்பதைப் பொறுத்தவரை யில் பண்ட சம மதிப்புகளைப் பரிவர்த்தனை செய்வதி லுள்ள கோட்பாடுதான் நிலவுகிறது: ஒரு வடிவத்தில் உள்ள குறிப்பிட்ட அளவு உழைப்பு வேறொரு வடிவத்தில் உள்ள சம அளவு உழைப்புக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகிறது.

எனவே தத்துவமும் நடைமுறையும் இனிமேல் மோதிக் கொள்வதில்லை என்ற போதிலும் சம உரிமை என்பது இன்னும் கோட்பாட்டளவில் முதலாளித்துவ உரிமையாகவே இருக்கிறது; பண்டங்களின் பரிவர்த்தனையில் சம மதிப்பு களின் பரிவர்த்தனை தனிப்பட்ட இனத்தில் இருப்பதில்லை —சராசரியில் மட்டுமே உண்டு.

இவ்விதத்தில் முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும் இந்தச் சம உரிமை இன்னும் முதலாளித்துவக் கட்டுப்படுத்தல் என்னும் பழியைத் தொடர்ச்சியாகத் தாங்கியிருக்கிறது. உற்பத்தியாளர்களின் உரிமை அவர்கள் கொடுக்கின்ற உழைப்பின் விகிதாச்சாரத்தில் இருக்கிறது, சமமான ஆதார அளவு, அதாவது உழைப்பு அளவுகோலாகப் பயன்படுவதில் தான் சமத் தன்மை அடங்கியிருக்கிறது.

ஆனால் ஒரு நபர் மற்றொரு நபரைக் காட்டிலும் உடலமைப்பிலோ, அறிவாற்றலிலோ உயர்ந்தவராக இருக் கிறார்; எனவே அவர் ஒரே அளவுள்ள நேரத்தில் அதிகமான உழைப்பைக் கொடுக்கிறார் அல்லது அவர் அதிக நேரம் உழைக்க முடிகிறது. உழைப்பை அளவுகோலாக வைத்துக் கொள்வதென்றால் அது கால அளவின் மூலம் அல்லது தீவிரத் தன்மையின் மூலம் வரையறுக்கப்பட வேண்டும்; இல்லையென்றால் அது ஆதார அளவுகோலாக இருக்க முடி யாது. இந்த சம உரிமையானது சமமாக இல்லாத உழைப் புக்கு சமமில்லாத உரிமையாகும். ஒவ்வொருவரும் அடுத்த வரைப் போலவே ஒரு தொழிலாளி என்பதால் அது வர்க்க வேறுபாடுகளை அங்கீகரிப்பதில்லை; ஆனால் அது தனிப்

பட்ட தகுதிகள் சமமில்லாதிருப்பதை, அதன் மூலம் உற்பத்தித் திறன் வேறுபடுவதை இயல்பான சிறப்புத் தகுதிகள் என்று மௌனமாக அங்கீகரிக்கிறது. எனவே இது, ஒவ்வொரு உரிமையையும் போல, அதன் உள்ளடக்கத்தில் சமத்துவம் இல்லாத உரிமையாகும். உரிமை என்பது இயற்கையாகவே ஒரு சமமான அளவுகோலைப் பயன்படுத்துவதாக மட்டுமே இருக்க முடியும்; ஆனால் சமமாக இல்லாத தனிநபர்கள் (அவர்கள் சமமாக இல்லாதிருக்கவில்லை என்றால் அவர்கள் வெவ்வேறு தனிநபர்களாக இருக்க மாட்டார்கள்) ஒரு சமமான கருத்துநிலையின் கீழ் கொண்டு வரப்படும் அளவுக்கு ஒரு சமத்துவமான ஆதார அளவுகோலால் மட்டுமே அளக்கப்பட முடியும், ஒரு திட்டவட்டமான பகுதியிலிருந்து மட்டுமே எடுக்கப்படுகிறார்கள்; இங்கேயுள்ள உதாரணத்தின்படி தொழிலாளர்களாக மட்டுமே கருதப்படுகிறார்கள்; அவர்கள் சம்பந்தமாக மற்ற எல்லாமே புறக்கணிக்கப்படுவதால் வேறு ஒன்றையும் பார்ப்பதில்லை. மேலும், ஒரு தொழிலாளிக்குத் திருமணமாகியிருக்கிறது; இன்னொரு தொழிலாளிக்குத் திருமணம் நடைபெறவில்லை; ஒரு தொழிலாளிக்கு இன்னொரு தொழிலாளியைக் காட்டிலும் அதிகமான குழந்தைகள் இருக்கின்றன, இதரவை. ஆகவே ஒருவர் சமமான உழைப்பை அளித்து சமுதாய நுகர்வு நிதியிலிருந்து சமமான பங்கு பெறுவதன் மூலம் உண்மையில் ஒருவர் இன்னொருவரை விட அதிகமாகப் பெறுவதற்கும், ஒருவர் இன்னொருவரை விடச் செல்வந்தராக இருப்பதற்கும், இன்னும் பலவாறாகவும் நேர்கிறது. இந்தக் குறைபாடுகளைத் தவிர்க்க உரிமை சமமாக இருப்பதற்குப் பதிலாகச் சமமின்றி இருத்தல் வேண்டும்.

இந்தக் குறைபாடுகள் கம்யூனிச சமுதாயத்தின் முதற் கட்டத்தில் தவிர்க்க முடியாதவை; ஏனென்றால் இச்சமுதாயம் நீடித்த பிரசவ வேதனைக்குப் பிறகு முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து இப்பொழுதுதான் பிறந்து வெளிவந்திருக்கிறது. சமுதாயத்தின் பொருளாதார அமைப்பையும் அதனால் தகவமைக்கப்பட்ட கலாச்சார வளர்ச்சி நிலையையும் காட்டிலும் உரிமை உயர்ந்து விட முடியாது.

கம்யூனிச சமுதாயத்தின் உயர் கட்டத்தில், தனி நபரை உழைப்புப் பிரிவினைக்குக் கீழ்ப்படுத்தி அடிமைத் தளையிடுவதும் அதனுடன் கூட கருத்து உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையிலான எதிர்நிலையும் மறைந்த பின், உழைப்பானது பிழைப்புக்குரிய சாதனமாக மட்டுமின்றி வாழ்க்கையின் முதற்பெரும் தேவையுமாகிய பின், தனிநபருடைய சர்வாம்ச வளர்ச்சியோடு கூட உற்பத்திச் சக்திகளும் அதிகரித்து விட்ட பின், பொது சமுதாயச் செல்வத்தின் அருவிகள் அனைத்தும் மேலும் அபரிமிதமாகப் பெருக்கெடுத்து ஓடுகையில்—அப்பொழுதுதான் முதலாளித்துவ உரிமையின் குறுகிய வரம்பு முழுமையாகக் கடக்கப்பட்டு, சமுதாயம் தன் பதாகையில் ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைக்கு ஏற்ப!'' என்று பொறித்துக் கொள்ளும்.

ஒரு பக்கத்தில் ''குறையாத அளவில் உழைப்பின் பலன்கள்'' என்பதையும் மறு பக்கத்தில் ''சம உரிமை'', ''நியாயமான வினியோகம்'' என்பனவற்றையும் பற்றி நான் இங்கே சற்று அதிகமாக எழுதியிருக்கிறேன். ஒரு பக்கத்தில், ஒரு காலத்தில் ஏதோ அர்த்தத்தைக் கொண்டிருந்துஇப்பொழுது காலாவதியாகிப் போன வார்த்தைக் கூளமாக மாறியிருக்கின்ற கருத்துக்களை வறட்டுக் கோட்பாடுகளாக நம்முடைய கட்சியின் மீது மறுபடியும் திணிக்க முயற்சிப்பதும், மறு பக்கத்தில், மிக அதிகமான உழைப்பிற்குப் பிறகு கட்சியில் ஏற்படுத்தியிருக்கின்ற—இப்பொழுது வேரூன்றி விட்ட—யதார்த்தவாதப் பார்வையை, ஜனநாயகவாதிகளிடமும் பிரெஞ்சு சோஷலிஸ்டுகளிடமும் சாதாரணமாகக் காணப்படுகின்ற சித்தாந்த, சட்ட மற்றும் இதர குப்பை கூளங்களைப் பற்றிய பிதற்றலின் மூலமாகக் கெடுப்பதற்குச் செய்யும் முயற்சியும் எவ்வளவு பெரிய குற்றம் என்பதை எடுத்துக் காட்டவே இப்படி எழுதியிருக்கிறேன்.

மேலே தரப்பட்டிருக்கும் விமரிசனத்தைத் தவிர, வினியோகம் என்று சொல்லப்படுவதைப் பற்றி அதிகமான பரபரப்பை ஏற்படுத்துவதும் அதற்குத் தலைமையான அழுத்தம் கொடுப்பதும் பொதுவாகத் தவறாகும்.

நுகர்வுச் சாதனங்களின் விநியோகம் எவ்வகையிலிருந்த போதிலும் அது உற்பத்தி நிலைமைகளின் விநியோகத்தின் விளைவுதான். எனினும் இரண்டாவதாகச் சொல்லப்படுகின்ற விநியோகம் உற்பத்தி முறையின் ஒரு பகுதியே ஆகும். உதாரணமாக, முதலாளித்துவ உற்பத்தி முறையை எடுத்துக் கொள்வோம்; இதில் உற்பத்தியின் பொருளாயத நிலைமைகள் மூலதனம், நிலம் ஆகிய சொத்துக்களின் வடிவத்தில் தொழிலாளர் அல்லாதவர்களின் கைகளில் இருக்கின்றன; ஆனால் உற்பத்தியின் தனிப்பட்ட நிலைமைக்கு, உழைப்புச் சக்திக்குப் பெருந்திரளான மக்கள் உடைமையாளர்களாக இருக்கிறார்கள்; முதலாளித்துவ உற்பத்தி முறை இப்படி அமைந்திருக்கிறது. உற்பத்தியின் மூலக் கூறுகளை இப்படி விநியோகம் செய்தால் தானாகவே ஏற்படுகின்ற விளைவு தான் இன்றைய தினத்திலுள்ள நுகர்வுச் சாதனங்களின் விநியோகம். உற்பத்தியின் பொருளாயத நிலைமைகள் தொழிலாளர்களின் கூட்டுச் சொத்தாக இருந்தால் நுகர்வுச் சாதனங்களின் விநியோகம் இன்றைக்கு இருப்பதிலிருந்து வித்தியாசமான முறையில் ஏற்படும். உற்பத்தி முறையிலிருந்து விநியோகத்தை சுயேச்சையானதாக நினைப்பதையும் அதை அவ்வாறு ஆராய்வதையும் முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களிடமிருந்து கொச்சையான சோஷலிசம் (அதனிடமிருந்து ஜனநாயகத்தின் ஒரு பகுதியும்) எடுத்துக் கொண்டு விட்டது; எனவேதான் சோஷலிசம் விநியோகத்தையே தலைமையாக சுற்றிச் சுழல்வதாகக் காட்டப்படுகிறது. உண்மையான உறவைத் தெளிவாக எடுத்துக் காட்டி எவ்வளவோ காலமான பிறகு மறுபடியும் எதற்காகப் பின்னால் போக வேண்டும்?

> 4. ''உழைப்பை விடுதலை செய்வது தொழிலாளி வர்க்கத்தின் பணியாக இருக்க வேண்டும்; அதனுடன் சம்பந்தப்பட்ட மட்டில் இதர அனைத்து வர்க்கங்களும் ஒரு பிற்போக்குத் திரள் மட்டுமே.''

முதல் கூற்று அகிலத்தின் பொது விதிமுறைகளின் ஆரம்பத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது, ஆனால் அது ''அபி

விருத்தி'' செய்யப்பட்டிருக்கிறது. ''தொழிலாளி வர்க்கத்தினரின் விடுதலையைத் தொழிலாளி வர்க்கத்தினரே வென்றெடுத்துக் கொள்ள வேண்டும்''* என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது; இங்கே அதற்கு மாறாக ''தொழிலாளி வர்க்கம்'' விடுதலை செய்ய வேண்டும்—எதை? ''உழைப்பை''. இதைப் புரிந்து கொள்ளக் கூடியவர்கள் புரிந்து கொள்ளட்டும்.

இதற்கு நட்ட ஈடான எதிர்க்கூற்று, மறு பக்கத்தில் முதல் தரமான லஸ்ஸால்வாத மேற்கோளாகும்: ''அதனுடன் (தொழிலாளி வர்க்கத்துடன்) சம்பந்தப்பட்ட மட்டில் இதர அனைத்து வர்க்கங்களும் ஒரு பிற்போக்குத் திரள் மட்டுமே.''

கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை கூறுகிறது: ''இன்று முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து நிற்கும் எல்லா வர்க்கங்களிலும் பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் மெய்யாகவே புரட்சிகரமான வர்க்கமாகும். ஏனைய வர்க்கங்கள் நவீனத் தொழிலினது வளர்ச்சியின் முன்னால் நலிவுற்றுச் சிதைந்து முடிவில் மறைந்து போகின்றன, பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் நவீனத் தொழிலுக்கே உரித்தான அதன் நேரடி விளைவாய் அமைகிறது.''**

காலாவதியான உற்பத்தி முறைகளினால் படைக்கப்படுகின்ற அனைத்து சமூக அந்தஸ்துகளையும் தக்க வைத்துக் கொள்ள விரும்புகின்ற நிலப்பிரபுத்துவப் பெரிய நிலவுடைமையாளர்களுடனும் கீழ்நிலை மத்தியதர வர்க்கத்தினருடனும் ஒப்பிடுகின்ற பொழுது முதலாளி வர்க்கம் இங்கே ஒரு புரட்சிகரமான வர்க்கமாக, பெரிய அளவுத் தொழில் துறையைக் கொண்டு வருகின்றதாகக் கருதப்படுகிறது. ஆகவே அவர்கள் முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்து ஒரு பிற்போக்குத் திரளாக அமையவில்லை.

மறு பக்கத்தில், முதலாளி வர்க்கத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது பாட்டாளி வர்க்கம் புரட்சிகரமானது; ஏனென்

* இப்பதிப்பு, தொகுதி 5, பக்கம் 26.—ப-ர்.

** இப்பதிப்பு, தொகுதி 1, பக்கம் 209.—ப-ர்.

றால் பெரிய அளவுத் தொழில்துறையை அடிப்படையாகக் கொண்டு தான் வளர்ச்சியடைந்த பிறகு அது, உற்பத்தியில் எந்த முதலாளித்துவத் தன்மையை முதலாளி வர்க்கம் நிரந்தரப்படுத்துவதற்கு முயல்கிறதோ அதை உற்பத்தியிலிருந்து பறிக்கப் பாடுபடுகிறது. ஆனால் ''மத்தியதர வர்க்கத்தின் கீழ்ப் பகுதிகளாகிய'' மக்கள் ''பாட்டாளி வர்க்கத்துக்குப் போய் விடும் தறுவாயில் இருக்கிறார்கள்'' என்பதனால் புரட்சிகரமாக மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்று கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை எடுத்துக் காட்டியிருக்கிறது.

ஆகவே இந்தக் கருத்துநிலையிலிருந்து பார்க்கும் பொழுது, அவர்கள் தொழிலாளி வர்க்கத்துடன் ஒப்பிடும் பொழுது ''முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்து''—மற்றும் நிலப்பிரபுத்துவப் பெரிய நிலவுடைமையாளர்களையும் துணையாகச் சேர்த்துக் கொண்டு—''ஒரு பிற்போக்குத் திரள் மட்டுமே'' என்று சொல்வது மறுபடியும் பிதற்றல் தான்.

கடந்த தேர்தலின் போது கைவினைஞர்கள், சிறு அளவுத் தயாரிப்பாளர்கள், இதரர்களிடம் மற்றும் விவசாயிகளிடம் இப்படிப் பிரகடனம் செய்தார்களா: என்ன ''எங்களுடன் சம்பந்தப்பட்ட மட்டில் நீங்கள் முதலாளி வர்க்கம் மற்றும் நிலப்பிரபுத்துவப் பெரிய நிலவுடைமையாளர்களுடன் சேர்ந்து ஒரு பிற்போக்குத் திரள் மட்டுமே''?

லஸ்ஸால் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை மனப்பாடமாக அறிவார்; அவருடைய விசுவாசமிக்க சீடர்கள் அவர் எழுதிய சுவிசேஷங்களை நன்றாக உருப்போட்டிருப்பதைப் போன்றதே இது. எனவே லஸ்ஸால் அறிக்கையை மிக அதிகமாகத் திரித்துக் கூறுகிறார் என்றால் முதலாளி வர்க்கத்துக்கு எதிராக அதன் எதேச்சாதிகார மற்றும் நிலப்பிரபுத்துவ எதிரிகளுடன் அவருடைய கூட்டணிக்குப் பகட்டான வர்ணம் பூசுவதற்காக மட்டுமே இதைச் செய்திருக்கிறார்.

மேலும், மேற்கூறிய பாராவில் அவருடைய அசரீரியான பொன்மொழி அகிலத்தின் பொது விதிமுறைகளிலிருந்து அரைகுறையாக எடுக்கப்பட்ட மேற்கோளுடன் எத்தகைய

தொடர்பும் இல்லாமல் பிரதானமாக வலிந்து புகுத்தப்படுகிறது. எனவே இங்கே அது வெறும் அதிகப் பிரசங்கித்தனமே, பெர்லின் நகரத்து மராத்* செய்கின்ற மலிவான அதிகப் பிரசங்கங்களில் ஒன்றுதான்; ஹெர் பிஸ்மார்க்குக்கு அது சிறிதுகூட அதிருப்தியை ஏற்படுத்தாது என்பது மெய்யே.

> 5. ''தொழிலாளி வர்க்கத்தினுடைய முயற்சிகளின் அவசியமான விளைவு—அவை எல்லா நாகரிகமடைந்த நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் பொதுவானவை—மக்களினங்களின் சர்வதேச சகோதரத்துவமாக இருக்கும் என்பதை அது உணர்ந்து முதலாவதாக இன்றைய தேசிய இன அரசு என்ற கட்டுக்கோப்பிற்குள் தன்னுடைய விடுதலைக்காகப் பாடுபடுகிறது.''

கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கைக்கும் அதற்கு முந்திய சோஷலிசம் அனைத்துக்கும் எதிரான விதத்தில் லஸ்ஸால் மிகவும் குறுகலான தேசிய நிலையிலிருந்து தொழிலாளர்கள் இயக்கத்தைக் கண்டார். அவரை இதில் பின்பற்றுகிறார்கள்—அதிலும் அகிலத்தின் பணிகளுக்குப் பிறகு!

தொழிலாளி வர்க்கம் போராட வேண்டுமென்றால் கூட தன்னுடைய சொந்த நாட்டில் தன்னை ஒரு வர்க்கம் என்ற முறையில் அமைத்துக் கொள்ள வேண்டும், அதற்குச் சொந்த நாடுதான் உடனடியான போராட்டக் களம் என்பது முற்றிலும் தானாகத் தெரிந்ததே. அந்த அளவில் அதன் வர்க்கப் போராட்டம் தேசியமானதே—இது சாராம்சத்தில் அல்ல, ஆனால் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை சொல்வதைப் போல ''வடிவத்தில்''. ஆனால் ''இன்றைய தேசிய இன அரசு என்ற கட்டுக்கோப்பு''—உதாரணமாக, ஜெர்மன் சாம்ராஜ்யம்—பொருளாதார ரீதியில் ''உலகச் சந்தை என்ற கட்டுகோப்பிற்குள்ளாகவும்'' அரசியல் ரீதியில் ''அரசுகளின் அமைப்பு என்ற கட்டுக் கோப்பிற்குள்ளாகவும்'' இருக்கிறது. ஜெர்மன்

---

* அனேகமாக *Neuer Social-Demokrat* பத்திரிகையின் ஆசிரியரான ஹாஸெல்மனைப் பற்றிய கிண்டலான குறிப்பு.—**ப-ர்.**

வர்த்தகம் என்பது அதே சமயத்தில் வெளிநாட்டு வர்த்தகமே என்பது ஒவ்வொரு வர்த்தகரும் அறிந்ததே. ஹெர் பிஸ்மார்க்கின் பெரும் புகழ் துல்லியமாக இப்படிப்பட்ட சர்வதேசக் கொள்கையைப் பின்பற்றுவதில்தான் அடங்கியிருக்கிறது என்பது நிச்சயமே.

ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி தன்னுடைய சர்வதேசியவாதத்தை எப்படிக் குறுக்கியிருக்கிறது? தன்னுடைய முயற்சிகளின் விளைவாக "மக்களினங்களின் சர்வதேச சகோதரத்துவம்" ஏற்படும் என்ற உணர்வுக்கு—முதலாளி வர்க்கத்தின் சமாதானம் மற்றும் விடுதலை லீகிலிருந்து[10] இரவல் பெற்ற சொற்றொடர் இது. ஆளும் வர்க்கங்களுக்கும் அவர்களுடைய அரசாங்கங்களுக்கும் எதிரான கூட்டுப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தினரின் சர்வதேச சகோதரத்துவத்துக்கு இது சமம் என்று கருதப்படுகிறது. ஆகவே ஜெர்மன் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசக் கடமைகளைப் பற்றி ஒரு வார்த்தை கூட இல்லை! அது தன்னுடைய சொந்த முதலாளி வர்க்கத்துக்கும்—அது ஏற்கெனவே தொழிலாளி வர்க்கத்தை எதிர்த்து மற்ற எல்லா நாடுகளையும் சேர்ந்த முதலாளி வர்க்கத்துடன் கைகோர்த்து நிற்கிறது—ஹெர் பிஸ்மார்க்கின் சதிகார சர்வதேசக் கொள்கைக்கும் இப்படிச் சவால் விடுகிறது!

உண்மையில் இந்தச் செயல்திட்டத்தின் சர்வதேசியவாதம் சுதந்திர வர்த்தகக் கட்சியின் சர்வதேசியவாதத்தைக் காட்டிலும் கூட மிகவும் அதிகமாகக் கீழே இறங்கி விட்டது. பிந்திய கட்சியும் தன்னுடைய முயற்சிகளின் விளைவாக "மக்களினங்களின் சர்வதேச சகோதரத்துவம்" ஏற்படும் என்று வலியுறுத்துகிறது. எல்லா மக்களினங்களும் சொந்த நாட்டில் வர்த்தகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற உணர்வுடன் அது ஒருக்காலும் திருப்தி அடைவதில்லை; ஆனால் வர்த்தகத்தை சர்வதேசமாக்குவதற்கு அது ஏதாவது செய்கிறது.

தொழிலாளி வர்க்கத்தினரின் சர்வதேச நடவடிக்கை "சர்வதேசத் தொழிலாளர் சங்கம்" இருப்பதை எவ்விதத்திலும் சார்ந்திருக்கவில்லை. அந்த நடவடிக்கைக்கு ஒரு

மத்திய அமைப்பை உருவாக்குவதற்குச் செய்யப்பட்ட முதல் முயற்சியே அது. அந்த முயற்சியின் உந்துதலின் காரணமாக அது நிரந்திரமான வெற்றியாக இருந்தது, ஆனால் அதன் முதல் வரலாற்று வடிவத்தில் அதன் ஈடேற்றம் பாரிஸ் கம்யூனின் வீழ்ச்சிக்குப் பிறகு இனியும் சாத்தியமாக இருக்கவில்லை.

ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி புதிய செயல்திட்டத்தில் சர்வதேசியவாதத்தைத் தொடுவதில்லை என்று சத்தியம் செய்து விட்டது என்று பிஸ்மார்க்கின் *Norddeutsche* தன்னுடைய எசமானருக்குத் திருப்தி அளிக்கும்படி அறிவித்தது முற்றிலும் சரியானதே.[11]

## II

> ''ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி இந்த ஆதாரக் கோட்பாடுகளிலிருந்து தொடங்கி சுதந்திர அரசையும்—மற்றும்—சோஷலிச சமூகத்தையும் அடைவதற்கு; கூலியின் இரும்பு விதியுடன் சேர்த்துக் கூலி முறையையும் மற்றும் சுரண்டலின் ஒவ்வொரு வடிவத்தையும் ஒழிப்பதற்கு; எல்லா வகையான சமூக மற்றும் அரசியல் ஏற்றத்தாழ்வைப் போக்குவதற்கு சட்ட பூர்வமான எல்லா வழிகளிலும் பாடுபடும்.''

''சுதந்திர'' அரசைப் பற்றிப் பிறகு எழுதுகிறேன்.

ஆகவே எதிர்காலத்தில் ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி லஸ்ஸாலின் ''கூலியின் இரும்பு விதியில்'' நம்பிக்கை வைக்க வேண்டும்! இதை மறக்காமலிருக்க வேண்டும் என்பதற்காக ''கூலியின் இரும்பு விதியுடன் சேர்த்துக் கூலி முறையையும் (கூலியுழைப்பு முறை என்று இருக்க வேண்டும்) ஒழிப்பது'' என்ற பிதற்றல் இங்கே இடம் பெறுகிறது. நான் கூலியுழைப்பை ஒழித்தால் இயற்கையாகவே அதன் விதிகளையும் ஒழித்து விடுகிறேன்—அவை ''இரும்பா'' அல்லது கடற்பஞ்சா என்பது முக்கியமல்ல. ஆனால் கூலியுழைப்புக்கு எதிராக லஸ்ஸாலின் தாக்குதல் விதி என்று பெயரிடப்பட்டுள்ள இதன் மீதே அநேகமாகத் தனியாகச்

சுழல்கிறது. ஆகவே லஸ்ஸால்வாதிகளின் குறுங்குழு வெற்றி பெற்றிருக்கிறது என்று எடுத்துக் காட்டுவதற்காகக் ''கூலி முறை'' ''கூலியின் இரும்பு விதியுடன் சேர்த்து'' ஒழிக்கப் பட வேண்டும்—அது இல்லாமல் அல்ல.

''கூலியின் இரும்பு விதியில்'' ''இரும்பு'' என்ற வார்த்தையைத் தவிர லஸ்ஸாலுக்குச் சொந்தமானது எதுவுமில்லை என்பது எல்லோரும் அறிந்ததே. அந்த வார்த்தை கூட கேதேயின் ''மாபெரும், நிரந்தரமான இரும்பு விதிகள்'' என்ற சொற்றொடரிலிருந்து இரவல் பெறப்பட்டதே. ''இரும்பு'' என்பது ஒரு சின்னம்; அதன் மூலம் உண்மையான விசுவாசிகள் ஒருவரையொருவர் அடையாளம் தெரிந்து கொள்கிறார்கள். ஆனால் லஸ்ஸாலின் முத்திரை பொறிக்கப் பட்ட இந்த விதியை நான் ஏற்றுக் கொண்டால்—ஆகவே அவருடைய அர்த்தத்தில் நான் ஏற்றுக் கொண்டால்—அதற்கு அவருடைய மெய்ப்பித்தலையும் நான் ஏற்றுக் கொண்டாக வேண்டும். அது என்ன? லஸ்ஸால் மரணமடைந்த பிறகு லாங்கே ஏற்கெனவே எடுத்துக் காட்டியதைப் போல அது மால்தசின் மக்கள் தொகைத் தத்துவமே[12] (இதை லாங்கேதான் பிரசாரம் செய்தார்). ஆனால் இந்தத் தத்துவம் சரி என்றால் நான் கூலியுழைப்பை நூறு முறை ஒழித்தால் கூட இந்த ''இரும்பு விதியை'' ஒழிக்க முடியாது; ஏனென்றால் அப்பொழுது இந்த விதி கூலியுழைப்பு முறையை மட்டுமின்றி ஒவ்வொரு சமூக அமைப்பையும் ஆள்கிறது. பொருளியலாளர்கள் இத்தத்துவத்தை நேர் அடிப்படையாகக் கொண்டு சோஷலிசம் வறுமையை ஒழிக்க முடியாது—அதன் அடிப்படை இயற்கையிலேயே இருக்கிறது—அதனால் வறுமையைப் பொதுப்படையாக்க மட்டுமே, ஒரே சமயத்தில் சமூகத்தின் மொத்தப் பரப்பு முழுவதிலும் வினியோகித்தலையே செய்ய முடியும் என்று கடந்த ஐம்பது வருடங்களாக நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்!

ஆனால் இவை அனைத்தும் கூட முக்கியமல்ல. இந்த விதியை லஸ்ஸால் தவறாக வகுத்தளிப்பது ஒரு புறமிருக்கட்டும், உண்மையிலேயே அருவருப்பான பின்னடைவு பின்வரும் பகுதியில் காணப்படுகிறது.

கூலிகள் அவற்றின் தோற்றத்தின்படி இல்லை, அதாவது அவை உழைப்பின் மதிப்பு அல்லது விலை அல்ல, அவை உழைப்புச் சக்தியின் மதிப்பை அல்லது விலையை மறைக்கின்ற வடிவம் மட்டுமே என்ற விஞ்ஞான ரீதியான தெளிவு நம்முடைய கட்சியில் லஸ்ஸாலின் மரணத்துக்குப் பிறகு ஓங்கியிருக்கிறது. ஆகவே கூலிகளைப் பற்றிய மொத்த முதலாளி வர்க்கக் கருத்தும் அந்தக் கருத்துக்கு எதிராக இது வரையிலும் சொல்லப்பட்ட அனைத்து விமர்சனமும் நிரந்தரமாகத் தூக்கியெறியப்பட்டன; கூலித் தொழிலாளி குறிப்பிட்ட அளவு நேரம் முதலாளிக்காக (ஆகவே உபரி மதிப்பை அவருடன் சேர்ந்து நுகர்வு செய்கின்றவர்களுக்கும் கூட) இலவச உழைப்புச் செய்கின்ற அளவுக்கு மட்டுமே அவன் தன்னுடைய சொந்த ஜீவனத்துக்கு உழைக்க, அதாவது வாழ்வதற்கு அனுமதிக்கப்படுகிறான்; நாளொன்றுக்கு வேலை செய்யும் நேரத்தை அதிகப்படுத்துவதன் மூலம் அல்லது உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி, அதாவது உழைப்புச் சக்தியின் தீவிரத்தை அதிகப்படுத்துதல், இதரவற்றின் மூலம் இந்த இலவச உழைப்பை அதிகப்படுத்துவதைச் சுற்றியே மொத்த முதலாளித்துவ உற்பத்தி முறையும் சுழன்று வருகிறது; ஆகவே கூலியுழைப்பு முறை என்பது அடிமை முறையாகும், அதிலும் தொழிலாளியின் ஊதியம் அதிகரித்தாலும் அல்லது குறைந்தாலும் உழைப்பின் சமூக உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடைகின்ற விகிதத்தில் அதிகம் கூர்மையடைகின்ற அடிமைத்தனம் என்பது உண்மையே என்ற தெளிவு ஏற்பட்டது. இந்தத் தெளிவு நம்முடைய கட்சியில் மேன்மேலும் வலுப்பெற்ற பிறகு லஸ்ஸாலின் வறட்டுக் கோட்பாட்டுக்குத் திரும்புகிறார்கள்; கூலிகள் என்றால் என்னவென்பது லஸ்ஸாலுக்குத் தெரியாது, அவர் முதலாளி வர்க்கப் பொருளியலாளர்களைப் பின்பற்றி விஷயத்தின் சாராம்சத்துக்குப் பதிலாக வெளித் தோற்றத்தை எடுத்துக் கொண்டார் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

இது அடிமைத்தனத்தின் ரகசியத்தைக் கடைசியில் தெரிந்து கொண்டு கலகம் செய்து கொண்டிருக்கும் அடிமைகளுக்கு மத்தியில் காலாவதியான கருத்துக்களுக்கு இன்னும்

அடிமையாக இருக்கின்ற ஓர் அடிமைக் கலகக்காரர்களின் செயல்திட்டத்தில், அடிமை முறையில் அடிமைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற உணவு ஒரு குறிப்பிட்ட குறைவான உச்ச அளவுக்கு மேல் அதிகரிக்க முடியாது என்பதால் அடிமை முறையை ஒழிக்க வேண்டும் என்று பொறிப்பதைப் போன்றிருக்கிறது!

நம் கட்சியில் பெருந்திரளானவர்கள் மத்தியில் பரவியிருக்கின்ற தெளிவுக்கு எதிராக இத்தகைய கோரமான தாக்குதலை நம்முடைய கட்சிப் பிரதிநிதிகள் செய்ய முடிந்தது என்ற உண்மையே அவர்கள் எத்தகைய குற்றவாளித்தனமான பொறுப்பின்மையுடனும் எந்த அளவுக்கு மனச்சாட்சி இல்லாமலும் இந்தச் சமரசச் செயல்திட்டத்தைத் தயாரித்தார்கள் என்பதை நிரூபிக்கவில்லையா?!

பாராவின் முடிவில் எழுதப்பட்டிருக்கின்ற ''எல்லா வகையான சமூக மற்றும் அரசியல் ஏற்றத்தாழ்வைப் போக்குதல்'' என்ற தெளிவில்லாத சொற்றொடருக்குப் பதிலாக வர்க்க வேறுபாடுகள் ஒழிக்கப்படும் பொழுது அவற்றிலிருந்து தோன்றுகின்ற எல்லா வகையான சமூக மற்றும் அரசியல் ஏற்றத்தாழ்வும் தானாகவே மறைந்து விடும் என்று எழுதப் பட்டிருக்க வேண்டும்.

## III

> ''சமூகப் பிரச்சினையின் தீர்வுக்குப் பாதை அமைப்பதற்கு அரசு உதவியுடன் உழைக்கும் மக்களின் ஜனநாயக நிர்வாகத்தில் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட வேண்டுமென்று ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி கோருகிறது. உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் தொழில்துறையிலும் விவசாயத் துறையிலும்—மொத்த உழைப்பையும் சோஷலிச அமைப்பு ரீதியாக்குதல் அவற்றிலிருந்து ஏற்படுகின்ற பெரிய அளவில்—அமைக்கப்பட வேண்டும்.''

லஸ்ஸால்வாதக் ''கூலியின் இரும்பு விதிக்குப்'' பிறகு தீர்க்கதரிசியின் மருந்து குறிப்பிடப்படுகிறது. அதற்குச் செல்கின்ற பாதையும் தகுதியான முறையில் ''அமைக்கப்படுகிறது''. இன்றைக்கிருக்கும் வர்க்கப் போராட்டத்துக்குப்

பதிலாகப் பத்திரிகை நிருபரின் சொற்றொடர் உபயோகிக் கப்படுகிறது: ''சமூகப் பிரச்சினை''—அதன் ''தீர்வுக்குப்'' ''பாதை அமைக்க'' வேண்டும். ''மொத்த உழைப்பையும் சோஷலிச அமைப்பு ரீதியாக்குதல்'' சமூகத்தின் புரட்சிகர மாற்ற நிகழ்வுப் போக்கிலிருந்து பிறப்பதற்குப் பதிலாக அது, உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு— இவற்றை ''அமைப்பது'' தொழிலாளிகள் அல்ல, அரசே— ''அரசு உதவியிலிருந்து'' ''ஏற்படுகிறது''. அரசின் கடன் பணத்தைக் கொண்டு ஒரு புதிய ரயில்வே மட்டுமல்ல, ஒரு புதிய சமூகத்தையும் நிர்மாணிக்க முடியும் என்பது லஸ்ஸாலின் கற்பனைக்குப் பொருந்துவதே!

''அரசு உதவி'' ''உழைக்கும் மக்களின்'' ஜனநாயக நிர்வாகத்தின் கீழ் வைக்கப்படுகிறது—குற்ற உணர்ச்சியின் எச்சங்கள் இதற்குக் காரணமாக இருக்க வேண்டும்.

முதலாவதாக, ஜெர்மனியில் ''உழைக்கும் மக்களில்'' பெரும்பான்மையினர் விவசாயிகளே, பாட்டாளிகள் அல்ல.

இரண்டாவதாக, ''ஜனநாயக'' என்பது ஜெர்மன் மொழியில் *"volksherrschaftlich"* (''மக்களின் ஆட்சியினால்'') என்று அர்த்தம். ''உழைக்கும் மக்களின் மக்களின் ஆட்சியினால் செய்யப்படும் நிர்வாகம்'' என்றால் என்ன அர்த்தம்? அரசிடம் இந்தக் கோரிக்கைகளை முன்வைப்பதன் மூலம் தான் ஆட்சி செய்யவில்லை, ஆட்சி செய்கின்ற அளவுக்கு முதிர்ச்சி அடையவுமில்லை என்ற தன்னுடைய முழு உணர்வை வெளியிடுகின்ற உழைக்கும் மக்களைப் பற்றி என்ன சொல்ல முடியும்!

லுயீ ஃபிலீப்பின் ஆட்சிக் காலத்தில் பிரெஞ்சு சோஷலிஸ்டுகளுக்கு எதிராக பியுஷேயால் முன்வைக்கப்பட்டு *Atelier* இன்[13] பிற்போக்கான தொழிலாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மருந்தைப் பற்றிய விமர்சனத்தைக் குறித்து இங்கே எழுதுவது மிகையானதாகும். இங்கே முக்கியமான குற்றம் இந்தக் குறிப்பிட்ட விஷயத்தைச் செயல்திட்டத்தில் சேர்த்தது அல்ல, பொதுவாக, ஒரு வர்க்க இயக்கத்தின் நிலையிலிருந்து குறுங்குழு இயக்கத்தை நோக்கிப் பின்னால் காலடி வைத்ததே.

தொழிலாளர்கள் சமூக அளவில் கூட்டுறவு உற்பத்திக்கு, முதலாவதாக தேசிய அளவில் தங்களுடைய சொந்த நாட்டில் கூட்டுறவு உற்பத்திக்கு அவசியமான நிலைமைகளை நிறுவுவதற்கு விரும்புகிறார்கள் என்றால் அவர்கள் உற்பத்தியின் இன்றைய நிலைமைகளைப் புரட்சிகரமாக்கப் பாடுபடுகிறார்கள் என்று மட்டுமே அர்த்தம்; அரசு உதவியுடன் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதற்கும் அதற்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. ஆனால் இன்றைக்கிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை அவை அரசாங்கங்கள் அல்லது முதலாளி வர்க்கத்தின் பாதுகாப்புப் பெறும் அமைப்புகளாக இல்லாமல் தொழிலாளர்களின் சுதந்திரமான படைப்புகளாக இருக்கின்ற அளவுக்கு மட்டுமே அவை பயனைக் கொண்டிருக்கும்.

## IV

நான் இப்பொழுது ஜனநாயகப் பகுதிக்கு வருகிறேன்:

A. ‘‘அரசின் சுதந்திரமான அடிப்படை.’’

முதலாவதாக, ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி ‘‘சுதந்திர அரசுக்காகப்’’ பாடுபடுகிறது என்று இரண்டாம் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

‘‘சுதந்திர அரசு’’—இதன் பொருள் என்ன?

பணிவு மிக்க குடிமக்கள் என்ற குறுகிய எண்ணத்தை அகற்றி விட்ட தொழிலாளர்கள் அரசைச் ‘‘சுதந்திரமான தாக்குதல்’’ என்ற நோக்கத்தை ஒருபோதும் கொண்டிருக்க மாட்டார்கள். ஜெர்மன் சாம்ராஜ்யத்தில், ருஷ்யாவைப் போலவே, ‘‘அரசு’’ அநேகமாக ‘‘சுதந்திரமானதாகவே’’ இருக்கிறது. அரசு என்பது சமூகத்தின் மேலே திணிக்கப்பட்ட உறுப்பு என்ற நிலையிலிருந்து சமூகத்துக்கு முழுமைாகக் கீழ்ப்படிந்த நிலைக்கு அதை மாற்றுவதில்தான் சுதந்திரம் அடங்கியிருக்கிறது; இன்றும் கூட அரசு வடிவங்கள் ‘‘அரசின் சுதந்திரத்தைக்’’ குறைப்பதைப் பொறுத்தவரை

அதிகச் சுதந்திரமாக அல்லது குறைந்த சுதந்திரமாக நடந்து கொள்கின்றன.

இந்தச் செயல்திட்டத்தை நிறைவேற்றுகின்ற அளவுக்கு ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சியில் சோஷலிஸ்டுக் கருத்துக்கள் மேலெழுந்தவாரியாகக் கூடப் பிரபலமடையவில்லை என்பதை அக்கட்சி காட்டுகிறது; இன்றைக்கு இருக்கும் சமூகத்தை (எதிர்காலத்தில் ஏற்படுகின்ற எந்த சமூகத்துக்கும் இது பொருந்தும்) இன்றைக்கிருக்கும் அரசின் (அல்லது எதிர்கால சமூகம் என்றால் எதிர்கால அரசின்) ''அடிப்படை'' என்று எடுத்துக் கொள்ளாமல் அது அரசை ஒரு சுதந்திரமான அமைப்பாக, தனக்கென்று சொந்தமான ''அறிவுத்துறை, அறவியல், விடுதலைக் கோட்பாட்டைக்'' கொண்ட அமைப்பாக எடுத்துக் கொள்கிறது.

இந்தச் செயல்திட்டத்தில் ''இன்றைய அரசு'', ''இன்றைய சமூகம்'' என்ற சொற்கள் எவ்வளவு ஆரவாரமாகத் தவறாக உபயோகிக்கப்படுகின்றன; அது தன் கோரிக்கைகளை முன்வைக்கின்ற அரசைப் பற்றியும் எவ்வளவு தப்பபிப்பிராயங்களை ஆரவாரத்தோடு ஏற்படுத்துகிறது என்பதைப் பற்றியும் என்ன எழுதுவது?!

''இன்றைய சமூகம்'' முதலாளித்துவ சமூகம்; நாகரிகமடைந்த எல்லா நாடுகளிலும் இச்சமூகம் இருந்து வருகிறது; அதிகமாகவோ குறைவாகவோ மத்திய காலக் கூறுகளின் கலப்படத்திலிருந்து விடப்பட்டதாகவும் அந்தந்த நாட்டின் தனிப்பட்ட வரலாற்று வளர்ச்சியால் அதிகமாகவோ குறைவாகவோ பாதிக்கப்பட்டதாகவும் அதிகமாகவோ குறைவாகவோ வளர்ச்சியுற்றதாகவும் இருந்து வருகிறது. மறு புறத்தில் ''இன்றைய அரசு'' அந்தந்த நாட்டின் எல்லையைக் கடந்ததும் மாறி விடுகிறது. இது ஸ்விட்சர்லாந்தில் இருப்பதிலிருந்து பிரஷ்ய-ஜெர்மன் சாம்ராஜ்யத்தில் மாறுபட்டிருக்கிறது; அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருப்பதிலிருந்து இங்கிலாந்தில் மாறுபட்டிருக்கிறது. ஆகவே ''இன்றைய அரசு'' என்பது ஒரு கற்பனையே.

எனினும் நாகரிகமடைந்த பல்வேறு நாடுகளிலும் இருக்கின்ற பல்வேறு அரசுகளும் வடிவத்தில் வெவ்வேறு வகை

யாக இருந்தாலும், ஒன்று மற்றொன்றைக் காட்டிலும் முதலாளித்துவ வழியில் அதிகமான அல்லது குறைவான வளர்ச்சியைப் பெற்றிருப்பதைத் தவிர இவை அனைத்துக்கும் பொதுவான அம்சம் ஒன்று இருக்கிறது—இவை நவீன முதலாளித்துவ சமூகத்தின் அடிப்படையில் அமைந்தவை. ஆகவே இவை சில முக்கியமான பொது இயல்புகளைப் பெற்றிருக்கின்றன. இந்த அர்த்தத்தில் ''இன்றைய அரசு'' என்று, இந்த அரசின் தற்போதைய மூலவேரான முதலாளித்துவ சமூகம் மடிந்து மறைந்து விடுகின்ற வருங்கால அரசிலிருந்து வேறுபடுத்திப் பேசுவது சாத்தியமே.

ஆகவே இக்கேள்வி எழுகிறது: கம்யூனிச சமூகத்தில் அரசில் ஏற்படப் போகும் மாறுதல் என்ன? வேறுவிதமாகக் கூறினால் தற்போதுள்ள அரசின் பணிக்கு ஒப்பான எந்த சமூகப் பணிகள் அப்பொழுது எஞ்சியிருக்கும்? இந்தக் கேள்விக்கு விஞ்ஞான ரீதியில் மட்டுமே பதிலளிக்க முடியும். ''மக்கள்'' என்னும் சொல்லை ''அரசு'' என்னும் சொல்லுடன் ஆயிரம் வழியில் இணைப்பதன் மூலம் சாண் அளவு கூட இந்தப் பிரச்சினையின் தீர்வை நெருங்கி வந்து விட முடியாது.

முதலாளித்துவ சமூகத்துக்கும் கம்யூனிச சமூகத்துக்கும் இடையில் ஒன்று மற்றொன்றாகப் புரட்சிகர மாற்றமடையும் கட்டம் உள்ளது. இதற்கு இணையாக அரசியல் இடைக்கால கட்டம் ஒன்றும் இருக்கிறது; இந்த இடைக்காலத்தில் அரசு **பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரச் சர்வாதிகாரம்** என்பதைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

ஆனால் இந்தச் செயல்திட்டம் இதைப் பற்றியோ கம்யூனிச சமூகத்தின் எதிர்கால அரசைப் பற்றியோ எடுத்துக் கூறவில்லை.

பொதுவான வாக்குரிமை, நேரடியாகச் சட்டமியற்றல், பொதுஜன உரிமைகள், மக்கள் ராணுவம், இதரவை ஆகிய எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த ஜனநாயகப் பல்லவிக்கு அப்பால் அதற்கு வேறு அரசியல் கோரிக்கைகள் எதுவுமே இல்லை. முதலாளிகளின் மக்கள் கட்சி[14], சமாதானம் மற்றும் விடுதலை லீக் ஆகியவற்றின் எதிரொலி என்ற

அளவிலேதான் அவை இருக்கின்றன. இந்தக் கோரிக்கைகள் அனைத்துமே—அவற்றை மகத்தான அற்புதங்களைப் போல மிகைப்படுத்திச் சொல்லவில்லையென்றால்—ஏற்கெனவே நிறைவேறி விட்டவையே. ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் எல்லைகளுக்குள் இருக்கும் அரசில் இவை இல்லை என்பதைத் தவிர ஸ்விட்சர்லாந்து, அமெரிக்க ஐக்கிய நாடு, இதர நாடுகளில் அவை இருக்கின்றன. இப்படிப்பட்ட ''எதிர்கால அரசு'' என்பது ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் ''எல்லைக்கு'' அப்பால் இருந்த போதிலும் அது இன்றைய அரசுதான்.

ஆனால் ஒரு விஷயம் மறக்கப்பட்டு விட்டது. ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சியானது ''இன்றைய தேசிய இன அரசு'' என்ற கட்டுக்கோப்பிற்குள் இயங்குவதாக வெளிப்படையாகவே தெரிவிப்பதால், அதன் சொந்த அரசுக்குள், பிரஷ்ய-ஜெர்மன் சாம்ராஜ்யத்துக்குள் அது இயங்குவதால்—வேறுவிதமாக இருக்குமானால் அதன் கோரிக்கைகள் பெருமளவுக்கு அர்த்தமில்லாதவையாக இருக்கும், ஏனென்றால் ஒருவர் தனக்குக் கிடைக்காதவற்றை மட்டுமே கோரிக்கைகளாக எழுப்புகிறார்—அது முக்கியமான ஒன்றை, அதாவது இந்த சிறு ஆடம்பரப் பொருள்கள் அனைத்துமே மக்களின் அரசுரிமை என்று சொல்லப்படுவதை அங்கீகரிப்பதை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன என்பதை மறந்து விடக்கூடாது; எனவே அவை ஒரு ஜனநாயகக் குடியரசுக்கு மட்டுமே பொருத்தமானவையாகும்.

எனவே லுயி ஃபிலீப் மற்றும் லுயி நெப்போலியனுடைய ஆட்சியின் போது பிரெஞ்சுத் தொழிலாளர்களின் செயல் திட்டத்தைப் போல ஒரு ஜனநாயகக் குடியரசைக் கோருவதற்குத் துணிச்சல் இல்லாதிருப்பதால்—கவனமாக நடந்து கொள்ள வேண்டுமென்று சந்தர்ப்பங்கள் வற்புறுத்துவதால் அதுவும் புத்திசாலித்தனமே—நாடாளுமன்ற வடிவங்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட, நிலப்பிரபுத்துவச் சேர்க்கைகளைக் கொண்ட கலப்பாகவும் ஏற்கெனவே முதலாளிகளின் தாக்கத்துக்கு உட்பட்டு அதிகார வர்க்கத்தினால் செப்பனிடப்பட்டு போலீஸ் பாதுகாப்புடன் உள்ள இராணுவ எதேச்சாதிகாரம் என்பதைத் தவிர வேறு எவ்விதமாகவும்

இல்லாத ஒரு அரசிடம் ஒரு ஜனநாயகக் குடியரசில் மட்டுமே பொருளுடையதாக இருக்கக் கூடிய உரிமைகளைக் கோருகின்ற தந்திரத்தை—இது கண்ணியமும் அல்ல, ''கௌரவமானதும்'' அல்ல—கையாண்டிருக்கக் கூடாது; அதன் பிறகு இவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு அரசைச் ''சட்டபூர்வமான வழிகளின் மூலம்'' நிர்ப்பந்திக்க முடியும் என்ற கற்பனையை அதே அரசிடம் உறுதி மொழியாகச் சொல்லியிருக்கக் கூடாது!

கொச்சையான ஜனநாயகம் ஜனநாயகக் குடியரசில் ஒரு பொற்காலத்தைக் காணுகிறது; முதலாளித்துவ சமூகத்தின் அரசின் இந்தக் கடைசி வடிவத்தில் இறுதி முடிவு ஏற்படும் வரை வர்க்கப் போராட்டம் நடக்கப் போகிறது என்று அது ஒருபோதும் சந்தேகித்ததில்லை. அப்படிப்பட்ட கொச்சையான ஜனநாயகம் கூட போலீசினால் அனுமதிக்கப்பட்ட—ஆனால் தர்க்கத்தால் அனுமதிக்கப்படாத—எல்லைகளுக்குள் மட்டுமே நின்று விடுகின்ற இந்த ஜனநாயகவாதத்தைக் காட்டிலும் மலைகளைப் போல உயர்ந்து நிற்கிறது.

''அரசு'' என்ற வார்த்தை அரசாங்க இயந்திரத்தை அல்லது அரசை—சமூகத்திலிருந்து உழைப்புப் பிரிவினையின் மூலம் பிரிக்கப்பட்ட விசேஷமான உயிரினமாக அது இருக்கின்ற அளவுக்கு—குறிக்கிறது என்பது பின்வரும் வார்த்தைகளிலிருந்து தெரியவருகிறது: ''படிப்படியாக முன்னோக்கிப் போகின்ற ஒருமுனை வருமான வரி அரசின் **பொருளாதார அடிப்படையாக** இருக்க வேண்டுமென்று ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி கோருகிறது'', இதரவை. அரசாங்க இயந்திரத்துக்குப் பொருளாதார அடிப்படை வரிகளே—மற்றவை எதுவுமல்ல. ஸ்விட்சர்லாந்தில் இருக்கின்ற ''எதிர்கால அரசில்'' இந்தக் கோரிக்கை மிக நன்றாகவே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. வெவ்வேறு சமூக வர்க்கங்களின் வெவ்வேறான வருமான மூலங்களை வருமான வரி முன்னூகிக்கிறது; இதன் மூலம் முதலாளித்துவ சமூகத்தையும் முன்னூகிக்கிறது. எனவே லிவர்பூல் நகரத்தைச் சேர்ந்த நிதித் துறைச் சீர்திருத்தவாதிகள்—கிளாட்ஸ்தனுடைய தம்பியின் தலைமையில் திரண்டிருக்கும் முதலாளிகள்—

இந்தச் செயல்திட்டத்திலிருக்கும் இதே கோரிக்கைகளை முன்வைப்பதில் அதிசயமில்லை.

> B. ''அரசின் அறிவு மற்றும் அறவியல் அடிப்படையாகப் பின்வருவன இருக்க வேண்டுமென்று ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி கோருகிறது:
>
> ''1. அரசின் மூலம் நடைபெறுகின்ற பொது மற்றும் **சமத்துவ ஆரம்பக் கல்வி.** அனைவருக்கும் பள்ளி வருகை கட்டாயமாக்கப்படுதல். இலவசக் கல்வி.''

சமத்துவ ஆரம்பக் கல்வி? இச்சொற்களின் பின்னாலிருக்கும் கருத்து என்ன? இன்றைய சமூகத்தில் (ஒருவர் இதை மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொள்ள முடியும்) எல்லா வர்க்கங்களுக்கும் கல்வி சமமாக இருக்க முடியும் என்று கருதப்படுகிறதா? அல்லது கூலித் தொழிலாளர்களுக்கு மட்டுமல்லாமல் விவசாயிகளுடைய பொருளாதார நிலைமைகளுக்கும் மட்டுமே பொருத்தமான கல்வித் துணுக்காக உள்ள ஆரம்பப் பள்ளிக்கு உயர் வர்க்கங்களும் கூட கட்டாயமாகக் குறைக்கப்பட வேண்டும் என்று கோரப்படுகிறதா?

''அனைவருக்கும் பள்ளி வருகை கட்டாயமாக்கப்படுதல். இலவசக் கல்வி.'' முன்னால் சொல்லப்பட்டது ஜெர்மனியில் கூட இருக்கிறது; இரண்டாவது, ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரை ஸ்விட்சர்லாந்திலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் இருக்கிறது. அமெரிக்காவில் சில மாநிலங்களில் உயர் கல்வி நிலையங்களின் கல்வி கூட ''இலவசமாக'' இருக்கிறதென்றால் உண்மையில் உயர் வர்க்கத்தினருடைய கல்விக்காகப் பொது வரியிலிருந்து பணம் செலவு செய்வதே என்று தான் அதற்கு அர்த்தம். A பிரிவின் 5ஆம் ஷரத்தில் ''இலவச நீதி நிர்வாக முறை'' என்று கோரப்பட்டிருப்பதற்கும் இதுதான் அர்த்தம் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும். கிரிமினல் சட்டத்தின்படி நீதி நிர்வாகம் எங்குமே இலவசம் தான். சிவில் சட்ட நீதி என்பது அநேகமாக முற்றிலும் சொத்துக்களைப் பற்றிய தகராறுகள் சம்பந்தமான

தாகும்; ஆகவே அது உடைமை வர்க்கத்தினரையே அநேக மாக முழுமையாக பாதிக்கிறது. அவர்கள் தேசியக் கருவூலத்திலிருந்து தங்கள் வழக்குகளை நடத்துவதா?

பள்ளிக்கூடங்களைப் பற்றிய பாராவில் குறைந்த பட்ச மாக ஆரம்பப் பள்ளிக்கூடத்துடன் சேர்ந்து தொழில் நுட்பப் பள்ளிக்கூடங்களை (தத்துவம் மற்றும் செய்முறை) கோரியிருக்க வேண்டும்.

**''அரசின் மூலம் நடைபெறுகின்ற ஆரம்பக் கல்வி''** என்பது முற்றிலும் ஆட்சேபிக்கப்பட வேண்டியதாகும். ஒரு பொதுச் சட்டத்தின் மூலம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு நிதியுத வியை, ஆசிரியர்களின் கல்வித் தகுதிகளை, கல்விப் பிரிவு களை, இதரவற்றை வரையறுப்பது மற்றும்—அமெரிக்க ஐக்கிய நாட்டில் செய்யப்பட்டிருப்பதைப் போல—இந்தச் சட்டத் தகுதிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்று அரசு ஆய்வாளர்களின் மூலம் மேற்பார்வையிடுதல் என்பது மக்களுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்புக்கு அரசை நியமிப் பதிலிருந்து மிகவும் வேறானதாகும்! பள்ளிக்கூடத்தின் மீது எவ்விதமான தாக்கத்தையும் செலுத்தாதபடி அரசும் திருச்சபையும் சம அளவுக்கு ஒதுக்கி வைக்கப்பட வேண்டும். குறிப்பாக, பிரஷ்ய-ஜெர்மன் சாம்ராஜ்யத்தில் (''எதிர்கால அரசைப்'' பற்றிப் பேசுகிறோம் என்ற உளுத்துப் போன தந்திரத்தில் ஒருவர் ஒளிந்து கொள்ளக் கூடாது; இதைப் பொறுத்தமட்டில் நிலைமை எப்படி இருக்கிறது என்பது நமக்குத் தெரியும்) இதற்கு மாறாக மக்கள் அரசுக்கு மிகவும் கண்டிப்பான முறையில் போதிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பது உண்மையே.

ஆனால் என்னதான் ஜனநாயக ஓசை இருந்தாலும் செயல் திட்டம் முழுவதுமே அரசு பற்றிய லஸ்ஸால்வாதக் குறுங் குழுவின் அடிமைப் புத்தி கொண்ட நம்பிக்கையில் அல்லது அதைக் காட்டிலும் சிறப்பில்லாத ஜனநாயக அதிசயங்கள் மீதான நம்பிக்கையில் தோய்ந்திருக்கிறது; அல்லது சோஷ லிசத்துக்கு சம அளவுக்கு அந்நியமான இந்த இரண்டு ரகங் களையும் சேர்ந்த நம்பிக்கைகளுக்கும் இடையில் அது ஒரு சமரசமாக இருக்கிறது.

"விஞ்ஞான ஆராய்ச்சிக்குச் சுதந்திரம்" என்று பேசுகிறது பிரஷ்ய அரசியலமைப்புச் சட்டத்தில் ஒரு பாரா. இங்கே அது அவசியமா?

"மனச்சாட்சிச் சுதந்திரம்"! Kulturkampfஇன்[15] இன்றைய கட்டத்தில் மிதவாதத்திடம் அதன் பழைய முழக்கங்களை ஒருவர் நினைவுபடுத்த விரும்பினால் அதைப் பின்வரும் வடிவத்தில் மட்டுமே செய்ய முடியும் என்பது நிச்சயம்: போலீஸ்காரர்களுடைய குறுக்கீடு இல்லாமல் ஒவ்வொருவரும் தன்னுடைய உடல் தேவைகளையும் மதத் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு முடிய வேண்டும். ஆனால் முதலாளி வர்க்கத்தின் "மனச்சாட்சிச் சுதந்திரம்" என்பது சாத்தியமான எல்லா விதமான மதத்தின் மனச்சாட்சிச் சுதந்திரத்தை சகித்துக் கொள்வதைத் தவிர வேறு எதுவுமில்லை என்ற உண்மை தனக்குத் தெரிந்ததே, தன்னைப் பொறுத்த மட்டில் மத மாய்மாலங்களிலிருந்து மனச்சாட்சியை விடுதலை செய்யப் பாடுபடுகிறது என்பதை மற்றவை எப்படி இருந்த போதிலும் தொழிலாளர்கள் கட்சி இங்கே எடுத்துக் காட்டியிருக்க வேண்டும். ஆனால் "முதலாளி வர்க்க" மட்டத்தை மீறிப் போய் விடாதிருக்கவே ஒருவர் முனைகிறார்.

நான் இப்பொழுது கடைசிப் பகுதிக்கு வந்து விட்டேன்; ஏனென்றால் இனிமேல் செயல்திட்டத்தில் அடுத்தபடியாகத் தொடர்கின்ற பிற்சேர்க்கை அதன் குறிப்பிட்ட உள்ளடக்கக் கூறு அல்ல. எனவே நான் இப்பொழுது மிகவும் சுருக்கமாக எழுதுகிறேன்.

## 2. "வழக்கமான வேலை நாள்."

வேறு எந்த நாட்டிலும் தொழிலாளர்கள் கட்சி இத்தகைய தெளிவில்லாத கோரிக்கையை முன்வைக்கவில்லை; குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் கட்சி முறையானது என்று கருதுகின்ற ஒரு நாளின் வேலை நேரத்தை எப்பொழுதுமே நிர்ணயித்துக் கோரியிருக்கிறது.

3. ''பெண் உழைப்பைக் கட்டுப்படுத்துவதும் குழந்தை உழைப்பைத் தடை செய்வதும்.''

வேலை நாளை ஆதாரப்படுத்தல் என்பது வேலை நாளின் கால அளவு, இடை ஓய்வு, இதரவற்றைப் பொறுத்தமட்டில் பெண் உழைப்பைக் கட்டுப்படுத்துவதையும் சேர்த்துக் கொண்டிருக்க வேண்டும்; இல்லையென்றால் குறிப்பாகப் பெண்களின் உடலுக்கு ஆரோக்கியக் குறைவான அல்லது தார்மிக ரீதியில் பெண்பாலினருக்கு ஆட்சேபகரமான தொழிற் பிரிவுகளில் பெண்கள் வேலை செய்வதைத் தவிர்ப்பதை மட்டுமே குறிக்கும். அதுதான் இங்கே அர்த்தமென்றால் அப்படியே தெளிவாகச் சொல்லியிருக்க வேண்டும். ''குழந்தை உழைப்பைத் தடை செய்வது''! இங்கே உச்ச வயதைக் குறிப்பிடுவது முற்றிலும் அவசியம்.

பெரிய அளவுத் தொழில்துறை இருக்கின்ற பொழுது குழந்தை உழைப்பை முழுமையாகத் தடை செய்வது பொருந்தாது; ஆகவே அது வீணான, வெறும் பக்தி பூர்வமான விருப்பமே.

அது நிறைவேறுவது—அது சாத்தியமாக இருக்குமானால்—பிற்போக்கானதாக இருக்கும்; ஏனென்றால் வெவ்வேறு வயதுடைய பிரிவினர்களுக்கு ஏற்ற முறையில் வேலை நேரத்தைக் கண்டிப்பான முறையில் ஒழுங்குபடுத்துவதும் குழந்தைகளின் பாதுகாப்புக்கு அவசியமான மற்ற காப்பு நடவடிக்கைகளும், உற்பத்தியில் ஈடுபடுகின்ற உழைப்பும் கல்வியும் ஆரம்பத்தில் இணைவது இன்றைய சமூகத்தை மாற்றியமைக்கக் கூடிய மிகவும் சக்தி வாய்ந்த சாதனங்களில் ஒன்றாகும்.

4. ''பாக்டரி, பட்டறை மற்றும் மனை உற்பத்தித் தொழிலை அரசு மேற்பார்வை செய்தல்.''

பிரஷ்ய-ஜெர்மன் அரசைக் கருத்தில் கொண்டு ஆய்வாளர்கள் நீதிமன்றத்தினால் மட்டுமே நீக்கப்பட வேண்டும் என்று திட்டவட்டமாகக் கோரியிருக்க வேண்டும்; ஆய்வாளர்கள் தம் வேலைப் பொறுப்புகளில் அலட்சியம் காட்டினால் அவர்கள் மீது வழக்குத் தொடருவதற்கு எந்தத்

தொழிலாளிக்கும் உரிமை வேண்டும்; ஆய்வாளர்கள் மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

5. ''கைதிகளின் உழைப்பை ஒழுங்குபடுத்துதல்.''

ஒரு பொதுவான தொழிலாளர்கள் செயல்திட்டத்தில் இது ஒரு அற்பமான கோரிக்கையே. எப்படி இருந்தாலும், போட்டியைப் பற்றிய அச்சத்தின் காரணமாக சாதாரணக் குற்றவாளிகளை மிருகங்களைப் போல நடத்துவதை அனுமதிக்கின்ற உத்தேசம் கிடையாது; தங்களை மேம்படுத்திக் கொள்வதற்கு அவர்களிடமிருக்கும் ஒரே சாதனமாகிய உற்பத்தியில் ஈடுபடும் உழைப்பைப் பறிக்கின்ற விருப்பம் கிடையாது என்பது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்க வேண்டும். சோஷலிஸ்டுகளிடம் ஒருவர் குறைந்த பட்சம் இதையாவது எதிர்பார்ப்பார் என்பது நிச்சயமே.

6. ''செயலுரமிக்க கடன்பொறுப்புச் சட்டம்.''

''செயலுரமிக்க'' கடன்பொறுப்புச் சட்டம் என்பதற்கு என்ன அர்த்தம் என்று எடுத்துக் கூறியிருக்க வேண்டும்.

வழக்கமான வேலை நாளைப் பற்றிப் பேசுகின்ற பொழுது பாக்டரி சட்டத்தில் ஆரோக்கிய விதிகள் மற்றும் காப்பு நடவடிக்கைகளைப் பற்றிய பகுதி, இதரவை அக்கறையுடன் சிந்திக்கப்படவில்லை. இந்த விதிகள் மீறப்படுகின்ற சமயத்தில் மட்டுமே கடன்பொறுப்புச் சட்டத்தின் படித் தலையிட முடியும்.

சுருக்கமாகச் சொல்வதென்றால், இந்தப் பிற்சேர்க்கையும் கூட கவனத்தோடு தயாரிக்கப்படவில்லை.

Dixi et salvavi animam meam.*

*1875 ஏப்ரல்—மேயின் தொடக்கத்தில்*
*கா. மார்க்சினால் எழுதப்பட்டது*

| | |
|---|---|
| *Die Neue Zeit*, Bd. 1, எண் 18, 1890—1891 என்ற சஞ்சிகையில் சுருங்கிய வடிவத்தில் வெளியிடப்பட்டது | கையெழுத்துப் பிரதியின் படி அச்சிடப்பட்டது<br>மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது |

* —நான் பேசிவிட்டேன், என் ஆன்மாவைக் காப்பாற்றிவிட்டேன்.—ப-ர்.

பி. எங்கெல்ஸ்

# ஔ. பெபெலுக்கு எழுதிய கடிதம்[16]

*லண்டன், மார்ச் 18—28, 1875*

*அன்புள்ள பெபெல்,*

*நீங்கள் பிப்ரவரி 23ஆம் தேதியன்று எழுதிய கடிதம் கிடைத்தது; தாங்கள் மிகவும் ஆரோக்கியமாக இருப்பதைப் பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்.*

*இந்த ஒற்றுமை விவகாரத்தைப் பற்றி நாங்கள் என்ன நினைக்கிறோம் என்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். துரதிர்ஷ்டவசமாக உங்களைப் போன்ற நிலையில்தான் நாங்களும் இருக்கிறோம். எங்களுக்கு லீப்க்னெஹ்டோ அல்லது வேறு எவருமோ எவ்விதமான தகவலும் அனுப்பவில்லை. ஆகவே எங்களுக்கும் பத்திரிகைகளில் பிரசுரமான செய்திகள் மட்டுமே தெரியும். சுமார் ஒரு வார காலத்துக்கு முன்னர் நகல் செயல்திட்டம் வெளியிடப்படுவதற்கு முன்னர் பத்திரிகைகளிலும் ஒன்றுமில்லை. இந்த நகல் எங்களுக்கு அதிக வியப்பை அளித்திருக்கிறது என்பது நிச்சயம்.*

*நம்முடைய கட்சி லஸ்ஸால்வாதிகளுடன் சமரசத்துக்கு அல்லது குறைந்த பட்சம் ஒத்துழைப்புக்கு அடிக்கடி பிரேரணைகளைச் செய்திருக்கிறது; ஹாஸென்கிளெவெர்கள், ஹாஸெல்மன்கள் மற்றும் டோல்கேகள் அவற்றை அதே அளவுக்கு அடிக்கடியும் இகழ்ச்சியுடனும் நிராகரித்தபடியால், இந்தக் கனவான்கள் இப்பொழுது தாங்களாகவே முன்வந்து சமரசப் பிரேரணையை முன்வைக்கிறார்கள் என்றால் அவர்கள் மிகவும் நெருக்கடியான நிலையில் சிக்கியிருக்க வேண்டும் என்று ஒரு குழந்தை கூட முடிவு செய்திருக்கும். ஆனால் இந்த நபர்களுடைய குணாம்சம் எல்லோருக்கும் தெரியும்*

என்பதால் அவர்கள் தொழிலாளர்கள் கருத்தில் நம்முடைய கட்சியின் செல்வாக்கைக் குறைத்துத் தங்களுடைய ஆடுகின்ற நிலையை மறுபடியும் உறுதிப்படுத்த முடியாதபடிச் சாத்தியமான எல்லா உத்தரவாதங்களையும் நிபந்தனையாக விதிப்பதற்கு அவர்களுடைய நெருக்கடியைப் பயன்படுத்திக் கொள்வது நம்முடைய கடமை. அவர்களிடம் அதிகமான வெறுப்புடனும் அவநம்பிக்கையுடனும் நாம் பேசியிருக்க வேண்டும்; அவர்கள் எந்த அளவுக்குத் தங்களுடைய குறுங்குழுவாதக் கோஷங்களையும் ''அரசு உதவியையும்'' கைவிட்டு அதனிடத்தில் 1869ஆம் ஆண்டு எய்ஸெனாஹ் செயல்திட்டத்தின் இன்றியமையாத அம்சங்களை அல்லது இக்காலத்துக்கு ஏற்றபடி அதன் திருந்திய வடிவத்தை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே ஒற்றுமை என்பது வலியுறுத்தப்பட்டிருக்க வேண்டும். நம்முடைய கட்சி தத்துவத் துறையில், ஆகவே செயல்திட்டத்துக்குத் தீர்மானகரமான துறையில் லஸ்ஸால்வாதிகளிடமிருந்து கற்றுக்கொள்ளக் கூடியது ஒன்றுமே இல்லை; ஆனால் நம்முடைய கட்சியில் லஸ்ஸால்வாதிகள் கற்றுக் கொள்ளக் கூடியவை சில உண்டு என்பது உறுதி. ஒற்றுமையின் முதல் நிபந்தனை அவர்கள் குறுங்குழுவாதிகளாக, லஸ்ஸால்வாதிகளாக நீடிக்கக் கூடாது, மற்றும் எல்லாவற்றுக்கும் முக்கியமானது என்னவென்றால் அரசு உதவி என்னும் எல்லா நோய்களுக்கும் மருந்தை முற்றிலும் கைவிட முடியாவிட்டாலும் அது கீழ்நிலையான தற்காலிக நடவடிக்கை, சாத்தியமான பல வழிகளில் அதுவும் ஒன்று என்பதை அவர்கள் அங்கீகரிக்க வேண்டும். நம்முடைய கட்சியினர் தத்துவ ரீதியில் லஸ்ஸால்வாதிகளின் தலைவர்களைக் காட்டிலும் நூறு மடங்கு உயர்ந்தவர்கள், ஆனால் அரசியல் சூழ்ச்சியில் அதே அளவுக்குத் தாழ்ந்தவர்கள் என்பதை நகல் செயல்திட்டம் எடுத்துக் காட்டுகிறது: ''நேர்மையாளர்கள்''* மோசடிக்காரர்களால் மீண்டும் ஈவிரக்கமின்றி ஏமாற்றப் பட்டுவிட்டார்கள்.

---

* இச்சொல் எய்ஸெனாஹர்களைக் குறிக்கிறது.—ப-ர்.

முதலாவதாக, தொழிலாளி வர்க்கத்துடன் சம்பந்தப் பட்ட மட்டில் இதர அனைத்து வர்க்கங்களும் ஒரு பிற் போக்குத் திரள் மட்டுமே என்கின்ற லஸ்ஸாலின் ஆர்ப் பாட்டமான, ஆனால் வரலாற்று ரீதியில் போலியான சொற் றொடர் ஒப்புக் கொள்ளப்படுகிறது. இக்கருதுகோள் ஒரு சில மிகவும் அசாதாரணமான இனங்களில் மட்டுமே உண் மையாகும்: உதாரணமாக, கம்யூனைப் போன்ற பாட்டாளி வர்க்கத்தின் புரட்சி அல்லது முதலாளி வர்க்கம் அரசையும் சமூகத்தையும் தன்னுடைய சொந்த பிம்பத்தில் உருவாக்கி யிருக்கின்ற, அதன் அடிச்சுவட்டில் ஜனநாயகக் குட்டி முத லாளி வர்க்கமும் கூட இப்புத்தாக்கத்தை அதன் இறுதி விளைவுகள் வரை ஏற்கெனவே கொண்டு சென்றிருக்கின்ற நாடு. உதாரணமாக, ஜெர்மனியில் ஜனநாயகக் குட்டி முத லாளி வர்க்கம் இந்தப் பிற்போக்குத் திரளைச் சேர்ந்தது என்றால் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சி அதனுடன், மக்கள் கட்சியுடன் பல ஆண்டுகளாகக் கைகோர்த்திருந்தது எப்படி? *Volksstaat* அநேகமாகத் தன் னுடைய அரசியல் பகுதி முழுவதையும் குட்டி முதலாளி வர்க்க ஜனநாயக *Frankfurter Zeitung* இலிருந்து[17] எடுத்துப் பிரசுரிக்க முடிந்தது எப்படி? மக்கள் கட்சி மற்றும் குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகத்தின் செயல்திட்டத்துடன் நேரடியாகவும் வாசகத்தின்படியும் பொருந்துகின்ற ஏழு கோரிக்கைகள் இச்செயல்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டது எப்படி? நான் ஏழு அரசியல் கோரிக்கைகள் 1—5 மற்றும் 1—2ஐக் குறிப்பிடுகிறேன்; இவற்றில் முதலாளி வர்க்க ஜனநாயகத் தன்மை கொண்டிராத ஒரு கோரிக்கை கூட இல்லையே.[18]

இரண்டாவதாக, தொழிலாளர் இயக்கம் ஒரு சர்வதேச இயக்கம் என்ற கோட்பாடு—நோக்கிலும் செயலிலும்—இப்பொழுது முழுமையாகக் கைவிடப்படுகிறது; இக்கோட் பாட்டை ஐந்து ஆண்டுக் காலம் மிகவும் கடினமான நிலை மைகளில் அதிகச் சிறப்பான முறையில் உயர்த்திப் பிடித்த நபர்கள் இதைக் கைவிடுகிறார்கள். ஐரோப்பாவின் இயக் கத்தின் தலைமையிலிருந்த ஜெர்மன் தொழிலாளர்களின்

நிலை சாராம்சத்தில் யுத்தத்தின்[19] போது அவர்கள் கடைப் பிடித்த மெய்யான சர்வதேச அணுகுமுறையில் அடங்கி யிருக்கிறது; வேறு எந்த நாட்டுப் பாட்டாளி வர்க்கமும் இவ்வளவு சிறப்பான முறையில் நடந்திருக்காது. ஆனால் அவர்கள் இக்கோட்பாட்டை, எந்த ஸ்தாபனத்திலும் அதை வெளியிடுகின்ற ஒவ்வொரு முயற்சியையும் நசுக்குவதற்கு அரசாங்கங்கள் பாடுபடுகின்ற அதே அளவுக்கு வெளிநாட் டில் எல்லா இடங்களிலும் உள்ள தொழிலாளர்கள் அதை வலியுறுத்திக் கொண்டிருக்கின்ற இத்தருணத்தில் கைவிட வேண்டும்! அப்படியானால் தொழிலாளர்கள் இயக்கத்தின் சர்வதேசியவாதத்தில் என்ன மிஞ்சும்? ஐரோப்பியத் தொழி லாளர்கள் தம்முடைய விடுதலைக்காக எதிர்காலத்தில் ஒத்துழைக்கின்ற வாய்ப்பு கூட அல்ல—எதிர்கால ''மக் களினங்களின் சர்வதேச சகோதரத்துவம்'', சமாதான லீகின் முதலாளிகளின் ''ஐரோப்பாவின் ஐக்கிய நாடுகள்'' என்ற தெளிவில்லாத காட்சியே மிஞ்சும்!

அகிலத்தைப் பற்றி இப்படிப் பேசுதல் முற்றிலும் அவ சியமில்லாதது என்பது மெய்யே. ஆனால் அவர்கள் மிகவும் குறைந்தபட்சம் செய்திருக்க வேண்டியது 1869ஆம் ஆண்டுச் செயல்திட்டத்திலிருந்து சிறிதும் பின்வாங்காதிருத்தல் மற்றும் பின்வருமாறு தெரிவித்தல் என்பது உறுதி: ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி, முதலாவதாக, அதற்கு விதிக்கப் பட்ட அரசு எல்லைகளுக்குள் இயங்குகிறது (ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கத்தின் பெயரால் பேசுவதற்கு அதற்கு உரிமையில்லை, அதிலும் பொய் சொல்வதற்கு நிச்சயமாக உரிமையில்லை) என்ற போதிலும் அது அனைத்து நாடுகளை யும் சேர்ந்த தொழிலாளர்களுடன் தன்னுடைய ஒருமைப் பாட்டை உணர்ந்திருக்கிறது, இது வரை செய்திருப்பதைப் போலவே இனியும் இந்த ஒருமைப்பாடு தன் மீது சுமத்து கின்ற கடமைகளை நிறைவேற்றுவதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கும். தன்னை அகிலத்தின் பகுதி என்று நேர டியாகப் பிரகடனம் செய்தல் அல்லது கருதுதல் ஆகியவை இல்லாமலும் கூட இத்தகைய கடமைகள் ஏற்படுகின்றன; உதாரணமாக, வேலைநிறுத்தப் போராட்டங்களின் போது

உதவி செய்தல் மற்றும் கருங்காலிகளாக இல்லாதிருத்தல்; கட்சி இதழ்கள் வெளிநாடுகளில் நடைபெறுகின்ற இயக்கங்களைப் பற்றிய செய்திகளை ஜெர்மன் தொழிலாளர்களுக்குத் தெரிவிப்பதைப் பற்றி அக்கறை காட்டுதல்; வமிசாவளி யுத்தங்கள் வெடித்தல் அல்லது அப்படிப்பட்ட அச்சுறுத்தலுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தல்—அத்தகைய யுத்தங்களின் போது நடத்தை 1870 மற்றும் 1871இல் முன்மாதிரியான முறையில் செய்யப்பட்ட நடத்தையை ஒத்திருக்க வேண்டும்—இதரவை.

மூன்றாவதாக, லஸ்ஸால்வாதக் ''கூலியின் இரும்பு விதி'' தம் மீது சுமத்தப்படுவதை நம்மவர்கள் அனுமதித்திருக்கிறார்கள்; அது முற்றிலும் காலாவதியான பொருளாதாரக் கருத்தை, அதாவது தொழிலாளிக்கு சராசரியாகக் குறைந்த பட்சக் கூலி மட்டுமே கொடுக்கப்படுகிறது, ஏனென்றால் மால்தசின் மக்கள்தொகைத் தத்துவத்தின்படி எப்பொழுதும் தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கிறது (இது லஸ்ஸாலின் வாதம்) என்பதை அடிப்படையாகக் கொண்டது. கூலிகளை ஒழுங்குபடுத்துகின்ற விதிகள் மிகவும் சிக்கலானவை, சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி சில சமயங்களில் ஒரு விதியும் மற்ற சமயங்களில் இன்னொரு விதியும் ஆதிக்கம் செலுத்துகின்றன, ஆகவே அவை எவ்விதத்திலும் இரும்பைப் போன்றில்லாமல் நெகிழ்ச்சியாக இருக்கின்றன, லஸ்ஸால் கற்பனை செய்ததைப் போல இந்த விவகாரத்தை ஒருக்காலும் சில வார்த்தைகளில் முடித்து விட முடியாது என்பதை மார்க்ஸ் **மூலதனத்தில்** விவரமாக நிரூபித்திருக்கிறார். இந்த விதிக்கு ஆதரவான மால்தஸ் வாதக் கூற்று—அதை லஸ்ஸால் மால்தஸ் மற்றும் ரிக்கார்டோவிடமிருந்து (பின்னவர் திரித்துக் கூறப்பட்டார்) பிரதியெடுத்தார்—லஸ்ஸாலின் மற்றொரு பிரசுரத்தில் காணப்பட்டு, உதாரணமாக *Arbeiterlesebuch*, பக்கம் 5இல் மேற்கோள் காட்டப்படுகின்ற அளவில், அதை மார்க்ஸ் **மூலதனத்தில்** ''மூலதனத் திரட்சி'' என்ற பகுதியில் நுணுக்கமாக மறுத்திருக்கிறார்.* ஆகவே லஸ்ஸாலின் ''இரும்பு விதியைக்''

* கா. மார்க்ஸ், **மூலதனம்,** தொகுதி 1.—ப-ா.

கடைப்பிடிப்பதன் மூலம் நாம் போலியாக நிரூபிக்கப்படு கின்ற போலியான கருத்தை ஏற்றுக் கொள்கின்றோம்.

நான்காவதாக, செயல்திட்டம் அதன் ஒரே சமூகக் கோரிக்கை என்ற முறையில் லஸ்ஸாலின் அரசு உதவியை அதன் அப்பட்டமான வடிவத்தில், பியுஷேயிடமிருந்து லஸ்ஸால் திருடியதை முன்வைக்கிறது. இந்தக் கோரிக்கை முற்றிலும் பயனற்றது என்பதை பிராக்கே மிகச் சிறப்பாக அம்பலப்படுத்திய பிறகு, நம்முடைய கட்சிப் பேச்சாளர்கள்—எல்லோரும் என்றில்லாவிட்டாலும்—அநேகமாக எல்லோருமே லஸ்ஸால்வாதிகளை எதிர்த்துப் போராடுகின்ற பொழுது இந்த ''அரசு உதவிக்கு'' எதிராக வந்து விட்ட பிறகு இது நடைபெறுகிறது! நம்முடைய கட்சி இதற்கும் கீழாக இறங்கித் தன்னைக் கேவலப்படுத்திக் கொள்ள முடியாது. சர்வதேசியவாதம் அமான்ட் கோக் அளவுக்கும் சோஷலிசம் முதலாளி வர்க்கக் குடியரசுவாதி பியுஷே—அவர் சோஷலிஸ்டுகளை வெல்வதற்காக, சோஷலிஸ்டுகளுக்கு எதிராக இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்—அளவுக்கும் கீழே இறக்கப்பட்டு விட்டன!

எனினும் எவ்வளவு உயர்வாகப் பார்த்தாலும் லஸ்ஸால் வாத அர்த்தத்தில் ''அரசு உதவி'' என்பது ''சமூகப் பிரச்சினையின் தீர்வுக்குப் பாதை அமைப்பதாகப்'' போலியாக வர்ணிக்கப்படுகின்ற நோக்கத்தை அடைவதற்குரிய பல நடவடிக்கைகளில் ஒரு நடவடிக்கை மட்டுமே—தத்துவ ரீதியில் தீர்க்கப்படாத சமூகப் பிரச்சினை நமக்கு இன்னும் இருந்து கொண்டிருப்பதைப் போல! ஆகவே ''ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி தொழில்துறையிலும் விவசாயத்திலும் தேசிய அளவில் கூட்டுறவு உற்பத்தியை நிறுவுவதன் மூலம் கூலியுழைப்பையும் அதனுடன் சேர்ந்து வர்க்க வேறுபாடுகளையும் ஒழிப்பதற்குப் பாடுபடுகிறது, இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கையையும் அது ஆதரிக்கிறது'' என்று ஒருவர் கூறினால் எந்த லஸ்ஸால்வாதியும் அதற்கு எதிராக எதுவும் சொல்ல முடியாது.

ஐந்தாவதாக, தொழிலாளி வர்க்கத்தை தொழிற்சங்கங்களின் மூலம் ஒரு வர்க்கம் என்ற முறையில் அமைப்பதைப்

பற்றி ஒரு சொல் கூட எழுதப்படவில்லை. இது மிகவும் முக்கியமான அம்சம்; ஏனென்றால் இது பாட்டாளி வர்க்கத்தின் மெய்யான வர்க்க ஸ்தாபனம். பாட்டாளி வர்க்கம் மூலதனத்துடன் தன்னுடைய அன்றாடப் போராட்டங்களை அதன் மூலமாக நடத்துகிறது, அதில் தன்னைப் பயிற்றுவித்துக் கொள்கிறது; இன்று நிலவுகின்ற மிகவும் மோசமான பிற்போக்கின் நடுவிலும் (பாரிசில் தற்பொழுது உள்ளதைப் போல) அதை இனிமேல் அழிக்க முடியாது. இந்த ஸ்தாபனம் ஜெர்மனியிலும் அடைந்திருக்கின்ற முக்கியத்துவத்தைக் கருதுகின்ற பொழுது அதைச் செயல்திட்டத்தில் குறிப்பிடுவதும் இயலுமானால் கட்சி ஸ்தாபனத்தில் அதற்கு ஓர் இடம் ஒதுக்குவதும் முற்றிலும் அவசியம் என்பது நம்முடைய கருத்தாகும்.

நம்மவர்கள் லஸ்ஸால்வாதிகளுக்குத் திருப்தியளிப்பதற்காக இவை அனைத்தையும் செய்திருக்கிறார்கள். மறு தரப்பினர் எதை விட்டுக் கொடுத்திருக்கிறார்கள்? செயல்திட்டத்தில் ஓரளவுக்குக் குழப்பமான, முற்றிலும் ஜனநாயகக் கோரிக்கைகள் குவிந்திருக்கின்றன—அவற்றில் பல இன்றைய பாணி என்ற முறையில் சேர்க்கப்பட்டவையே—உதாரணமாக, ஸ்விட்சர்லாந்தில் உள்ள ''மக்கள் சட்டமியற்றும் முறை'' (அது எதையாவது செய்கிறது என்றால் நன்மையைக் காட்டிலும் தீமையையே அதிகமாகச் செய்கிறது). ''மக்கள் நிர்வாகம் செய்தல்''—அதில் அர்த்தம் உண்டு. எல்லா அதிகாரிகளும் தங்களுடைய நிர்வாக நடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் சாதாரணச் சட்டங்களின்படி, சாதாரண நீதிமன்றங்களில் ஒவ்வொரு குடிமகனுக்கும் பதிலளிப்பதற்குக் கடமைப்பட்டிருக்க வேண்டும் என்னும் எல்லா சுதந்திரத்துக்கும் முதல் நிபந்தனை அதே அளவுக்கு இடம் பெறவில்லை. மிதவாத முதலாளி வர்க்கத்தின் ஒவ்வொரு செயல்திட்டத்திலும் இடம் பெறுகின்ற விஞ்ஞான ஆராய்ச்சிக்குச் சுதந்திரம் மற்றும் மனச்சாட்சிச் சுதந்திரத்தைப் போன்ற கோரிக்கைகள் இங்கே இடம் பெற்றிருப்பது ஓரளவுக்கு விசித்திரமானது என்ற உண்மையைப் பற்றி நான் இதற்கு மேல் எழுதப் போவதில்லை.

சுதந்திர மக்கள் அரசு சுதந்திர அரசாக மாற்றப்படு கிறது. இலக்கண ரீதியாகப்பார்த்தால் சுதந்திர அரசு என்பது குடிமக்களைப் பொறுத்தமட்டில் சுதந்திரமானது, ஆகவே எதேச்சாதிகாரமான அரசாங்கத்தைக் கொண்ட அரசு என்பது அர்த்தம். அரசைப் பற்றிய எல்லா வாசகத் தையும் விட்டுவிட வேண்டும்; கம்யூனுக்குப் பிறகு இது மிகவும் அவசியம்; ஏனென்றால் அது அந்தச் சொல்லின் நேர்ப்பொருளில் ஒருபோதும் அரசாக இருக்கவில்லை. அராஜகவாதிகள் ''மக்கள் அரசு'' என்னும் சொற்றொடரை நாம் அருவருப்படைகின்ற அளவுக்கு நம்முடைய முகங் களுக்கு முன்னால் வீசியெறிந்திருக்கிறார்கள். ஆனால் புரூ தோனை மறுத்து மார்க்ஸ் எழுதிய நூலும்* அதன் பிறகு எழுதப்பட்ட கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையும்** சோஷலிச சமூக அமைப்பு ஏற்படும் பொழுது அரசு தானாகவே உலர்ந்து (sich auflöst), உதிர்ந்து மறைந்து விடும் என்று நேரடி யாக அறிவிக்கின்றன. ஆகவே அரசு என்பது போராட்டத்தின் போது, புரட்சியின் போது எதிரிகளைப் பலவந்தமாக ஒடுக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற தற்காலிகமான நிறுவனம் மட்டுமே என்பதால் சுதந்திர மக்கள் அரசைப் பற்றிப் பேசுவது முற்றிலும் பிதற்றலாகும்; பாட்டாளி வர்க்கம் அரசை இன்னும் உபயோகிக்கின்ற அளவில் அது சுதந்திரத்தின் நலன்களுக்காக அதைப் பயன்படுத்த வில்லை, தன்னுடைய எதிரிகளை அடக்குவதற்குப் பயன் படுத்துகிறது; சுதந்திரத்தைப் பற்றிப் பேசுவது சாத்திய மான உடனே, அமைப்பு என்ற வகையில் அரசு முடிந்து விடுகிறது. ஆகவே எல்லா இடங்களிலும் ''அரசு'' என்ற சொல்லுக்குப் பதிலாக ''கம்யூன்'' என்னும் பிரெஞ்சுச் சொல்லின் பொருளை மிகவும் சிறப்பான முறையில் வெளி யிடுகின்ற "Gemeinwesen" என்ற நல்ல, பழைய ஜெர்மன்

* கா. மார்க்ஸ், மெய்யறிவின் வறுமை. திரு. புரூதோன் எழுதிய ''வறுமையின் மெய்யறிவு'' எனும் நூலுக்குப் பதில்.—ப-ர்.

** இப்பதிப்பு, தொகுதி 1, பக்கங்கள் 170—249 பார்க்க, —ப-ர்,

சொல்லை உபயோகிக்க வேண்டும் என்று நாம் ஆலோசனை கூறுகிறோம்.

''எல்லாவிதமான வர்க்க வேறுபாடுகளையும் ஒழித்தல்'' என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற ''எல்லா வகையான சமூக மற்றும் அரசியல் ஏற்றத்தாழ்வைப் போக்குதல்'' என்பதும் கூட மிகவும் ஆட்சேபகரமான சொற்றொடராகும். ஒரு நாட்டுக்கும் அடுத்த நாட்டுக்கும், ஒரு மாநிலத்துக்கும் மற்றொரு மாநிலத்துக்கும், ஒரு ஸ்தலத்துக்கும் மற்றொன்றுக்கும் இடையில் கூட வாழ்க்கை நிலைமைகளில் ஓரளவான ஏற்றத்தாழ்வு எப்பொழுதும் இருக்கும்; அதைக் குறைந்தபட்சமாகக் குறைக்க இயலுமே தவிர முற்றிலும் அகற்றுவது ஒருபோதும் முடியாது. ஆல்ப்ஸ் மலைகளில் வசிப்பவர்களுக்கு சமவெளிகளில் வசிக்கின்ற மக்களிடமிருந்து வேறுவிதமான வாழ்க்கை நிலைமைகள் எப்பொழுதும் இருக்கும். சோஷலிச சமூகத்தில் சமத்துவம் ஆட்சி செய்யும் என்னும் கருத்து பழைய ''சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்'' என்பதின் மீது அமைக்கப்பட்டிருக்கின்ற ஒருதரப்பான பிரெஞ்சுக் கருத்து ஆகும்; இக்கருத்து அதன் காலத்திலும் இடத்திலும் வளர்ச்சியில் ஒரு கட்டம் என்ற முறையில் நியாயமாக இருந்தது; முந்திய சோஷலிஸ்டு மரபுகளில் ஒருதரப்பான எல்லாக் கருத்துக்களையும் போல இதையும் இப்பொழுது கைவிட வேண்டும்; ஏனென்றால் இது மக்களுடைய மனங்களில் குழப்பத்தை மட்டுமே உற்பத்தி செய்கிறது; மேலும் விவரத்தை அதிகமான துல்லியத்துடன் எடுத்துக் கூறுகின்ற முறைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தச் செயல்திட்டம் சாதாரணமான வலிமையற்ற சொற்களில் எழுதப்பட்டிருக்கிறது; அநேகமாக அதில் ஒவ்வொரு சொல்லைப் பற்றியும் குறை சொல்ல முடியும் என்ற போதிலும் நான் இத்துடன் முடித்துக் கொள்கிறேன். அதன் தன்மை இப்படி இருப்பதால் அது நிறைவேற்றப்படுமானால் அந்த அடிப்படையில் அமைக்கப்படுகின்ற புதிய கட்சியை மார்க்சும் நானும் ஒருபோதும் ஆதரிக்க முடியாது; அதன் பால்—பொது மேடைகளிலும் கூட—எங்களுடைய

அணுகுமுறை எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டியிருக்கும். வெளிநாடுகளில் ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சியின் எவ்விதமான மற்றும் ஒவ்வொரு பேச்சுக்கும் நடவடிக்கைக்கும் நாங்கள் பொறுப்பாக்கப்படுகிறோம் என்பதை நீங்கள் நினைவிலிறுத்த வேண்டும். உதாரணமாக, பக்கூனின் எழுதிய அரசும் அராஜகவாதமும் என்ற நூல், *Demokratisches Wochenblatt*[20] தொடங்கியதிலிருந்து லீப்க்னெஹ்ட் சிந்திக்காமலே பேசிய அல்லது எழுதிய ஒவ்வொரு சொல்லுக்கும் எங்களைப் பொறுப்பாக்குகிறது. நாங்கள் இங்கேயிருந்து மொத்தக் காட்சியையும் இயக்கிக் கொண்டிருக்கிறோம் என்று கற்பனை செய்வதற்கு மக்கள் விரும்புகிறார்கள்; ஆனால் நாங்கள் கட்சியின் உள்விவகாரங்களில் அநேகமாக ஒருபோதும் தலையிட்டது கிடையாது என்பது என்னைப் போலவே உங்களுக்கும் தெரியும். நாங்கள் இயன்ற அளவுக்கு தவறுகளைத் திருத்துவதற்கு மட்டுமே, அதிலும் தத்துவ ரீதியான தவறுகள் செய்யப்பட்டு விட்டன என்று நாங்கள் கருதிய பொழுது மட்டுமே தலையிட்டிருக்கிறோம். ஆனால் இந்தச் செயல்திட்டம் ஒரு திருப்பு முனையைக் குறிக்கிறது என்பதை நீங்கள் உணர்வீர்கள்; அதை ஏற்றுக் கொள்கின்ற கட்சி சம்பந்தமாக எல்லாவிதமான மற்றும் ஒவ்வொரு பொறுப்பையும் நாங்கள் மறுக்குமாறு அது மிகவும் சுலபமாக எங்களை நிர்ப்பந்திக்கும்.

பொதுவாக ஒரு கட்சியின் அதிகார பூர்வமான செயல் திட்டம் அந்தக் கட்சி என்ன செய்கிறது என்பதைக் காட்டிலும் குறைந்த முக்கியத்துவம் உள்ளதே. ஆனால் ஒரு புதிய செயல்திட்டம் என்பது பகிரங்கமாக விரிக்கப்படுகின்ற பதாகை ஆகும்; வெளியுலகம் அதைக் கொண்டுதான் அந்தக் கட்சியை மதிப்பிடுகிறது. ஆகவே அது எக்காரணத்தைக் கொண்டும் காலடியைப் பின்னால் வைக்கக் கூடாது; எய்ஸெனாஹ் செயல்திட்டத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது புதிய செயல்திட்டம் அதையே செய்கிறது. மற்ற நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் இந்தச் செயல்திட்டத்தைப் பற்றி என்ன கூறுவார்கள், ஜெர்மனியின் மொத்த சோஷலிஸ்டு

பாட்டாளி வர்க்கம் லஸ்ஸால்வாதத்துக்கு முன்பாக இப்படி மண்டியிடுதல் எத்தகைய மனப்பதிவை ஏற்படுத்தும் என்பதையும் ஒருவர் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

அதே சமயத்தில் இந்த அடிப்படையில் ஏற்படுகின்ற ஒற்றுமை ஓர் ஆண்டுக்குக் கூட நீடிக்காது என்று நான் உறுதியாகக் கருதுகிறேன். நம்முடைய கட்சியின் சிறந்த மேதைகள் கூலியின் இரும்பு விதியையும் அரசு உதவியையும் பற்றிய லஸ்ஸால்வாதக் கருதுகோள்களை உருப்போட்டு ஒப்பிக்கின்ற நிலைக்கு இறங்கப் போகிறார்களா? உதாரணமாக, நீங்கள் அப்படிச் செய்வதை நான் பார்க்க விரும்புகிறேன்! அவர்கள் உண்மையாகவே அப்படிச் செய்தால் பொதுக் கூட்டங்களில் இருப்பவர்கள் அவர்களைக் கூச்சல் போட்டு அடக்குவார்கள். யூதரான ஷைலக் தன்னுடைய ஒரு பவுண்டு இறைச்சியில் உறுதியாக இருந்ததைப் போல[21] லஸ்ஸால்வாதிகளும் செயல்திட்டத்தின் இந்த அம்சங்களை வற்புறுத்துவார்கள் என்று நான் உறுதியாகக் கருதுகிறேன். பிரிந்துவிடுதல் விரைவில் ஏற்படும்; ஆனால் நாம் ஹாஸெல்மன், ஹாஸென்கிளெவெர், டோல்கே மற்றும் கம்பெனியினரை மீண்டும் ''நேர்மையாளர்களாக'' ஆக்கியிருப்போம்; பிரிந்த பிறகு நாம் பலவீனமானவர்களாக இருப்போம், லஸ்ஸால்வாதிகள் முன்னைக் காட்டிலும் பலமுடையவர்களாக இருப்பார்கள். நம்முடைய கட்சி தன்னுடைய அரசியல் தூய்மையை இழந்து விடும்; அது தன்னுடைய பதாகையில் சிறிது காலத்துக்குப் பொறித்துக் கொண்ட லஸ்ஸால்வாதச் சொற்றொடர்களை முழுமனதோடு மீண்டும் எதிர்ப்பது ஒருபோதும் முடியாது; லஸ்ஸால்வாதிகள் தாங்களே மிகவும் உண்மையான, ஒரே தொழிலாளர்கள் கட்சி, நம்மவர்கள் பூர்ஷ்வா என்று மீண்டும் கூறுவார்களானால் இச்செயல்திட்டம் அதை நிரூபிக்கும். அதிலுள்ள சோஷலிஸ்டு நடவடிக்கைகள் அனைத்தும் அவர்களுடையது, நம்முடைய கட்சி அதில் சேர்த்திருக்கின்ற அனைத்தும் குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகத்தின் கோரிக்கைகளே; எனினும் அதே செயல்திட்டத்தில் அதுதான் குட்டி முதலாளி வர்க்க ஜன

நாயகத்தின் பிரதிநிதிகளையும் ''ஒரு பிற்போக்குத் திரளின்'' பகுதி என்று வர்ணிக்கிறது.

பிஸ்மார்க்கின் பிறந்த நாளை முன்னிட்டு ஏப்ரல் முதல் தேதியன்றுதான் உங்களை விடுதலை செய்யப் போகிறார்கள் என்பதால், கடிதத்தை இரகசியமாக அனுப்புகின்ற எந்த முயற்சியிலும் அது கைப்பற்றப்பட்டு அம்பலமாகி விடுவதை நான் விரும்பாததனால் இங்கேயே வைத்திருக்கக் கருதினேன். ஆனால் பிராக்கேயிடமிருந்து இப்பொழுது கடிதம் வந்திருக்கிறது; செயல்திட்டத்தைப் பற்றி அவருக்கும் தீவிரமான சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதால் அவர் எங்களுடைய கருத்தை அறிய விரும்புகிறார். ஆகவே நான் இக்கடிதத்தை அவருக்கு அனுப்புகிறேன்; அவர் படித்த பிறகு உங்களுக்கு அனுப்பி வைப்பார்; நான் எல்லாவற்றையுமே மறுபடியும் எழுத வேண்டிய அவசியம் இருக்காது.மேலும், நான் மூடிமறைக்கப்படாத உண்மையை ராமிடம் கூறியிருக்கிறேன்; லீப்க்னெஹ்டுக்குச் சுருக்கமாக மட்டுமே எழுதினேன். அவர் எல்லாவற்றையும் பற்றி ஒரேயொரு சொல்லைக் கூட எங்களிடம் ஒருபோதும் தெரிவிக்கவில்லை (அவர் எங்களிடம் துல்லியமான முறையில் தெரிவித்திருப்பதாக ராமும் மற்றவர்களும் நினைத்துக் கொண்டிருந்தார்கள்), அதாவது எதுவும் செய்ய இயலாத அளவுக்குக் காலதாமதம் ஆகின்ற வரை என்று சொல்லலாம்; நான் அவரை மன்னிக்கப் போவதில்லை. ஆனால் அவர் எப்பொழுதுமே இப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறார். அதனால்தான் நாங்கள், மார்க்ஸ், நான் ஆகிய இருவருமே அவருடன் அதிருப்திகரமான கடிதப் போக்குவரத்தை அதிகமாக வைத்திருந்தோம். ஆனால் இந்த முறை அவர் உண்மையாகவே மிகவும் மோசமாக நடந்து கொண்டிருக்கிறார்; நாங்கள் நிச்சயமாக அவரை ஆதரிக்கப் போவதில்லை.

கோடைகாலத்தில் எப்படியாவது இங்கே வருவதற்கு முயற்சி செய்யுங்கள். நீங்கள் தாராளமாக என்னுடன் தங்கலாம்; பருவநிலை நன்றாக இருந்தால் நாம் ஒரு சில நாட்களாவது கடலில் நீந்திக் குளிக்கலாம்; நீங்கள் அதிகமான

*காலம் சிறையில் இருந்தபடியால் அது உங்களுக்கு நலமளிப்பதாக இருக்கும்.*

*நேசமிக்க வாழ்த்துக்களுடன்*
*தங்கள்* பி. எ.

*மார்க்ஸ் சமீபத்தில் புதிய இருப்பிடத்துக்கு மாறி விட்டார். அவருடைய புதிய முகவரி: 41, மெயிட்லண்ட் பார்க், கிரெசென்ட், நார்ட்-வெஸ்ட், லண்டன்.*

A. Bebel, *Aus meinem Leben*,
Vol. II, Stuttgart, 1911
*என்ற புத்தகத்தில்*
*முதலில் வெளியிடப்பட்டது*

*புத்தகத்தின் வாசகப்படி*
*அச்சிடப்பட்டது*

*மூலம் ஜெர்மன்*
*மொழியில்*
*எழுதப்பட்டது*

பி. எங்கெல்ஸ்

# கா. காவுத்ஸ்கிக்கு எழுதிய கடிதம்

*லண்டன், பிப்ரவரி 23, 1891*

*அன்புள்ள காவுத்ஸ்கி,*

*நேற்று முந்திய நாளன்று நான் அனுப்பிய விரைவான பாராட்டுதல்கள் உங்களுக்குக் கிடைத்திருக்கும். ஆகவே இப்பொழுது மீண்டும் இதே பொருளுக்கு, மார்க்சின் கடிதத்துக்குத்* திரும்புவோம்.*

*அக்கடிதம் நம்முடைய எதிரிகளின் கரங்களில் ஆயுதமாகப் பயன்படக் கூடும் என்ற அச்சம் ஆதாரமற்றது. எதுவும், எல்லாமே கெடுநோக்குடன் அவதூறு செய்யப்படுகின்றன என்பது உண்மையே; ஆனால் பொதுவாக நம்முடைய எதிரிகளிடம் ஏற்பட்ட மொத்த மனப்பதிவு இந்த ஈவிரக்கமற்ற சுயவிமர்சனத்துக்கு முன்பாக அவர்கள் முழுமையாக நிலைகுலைந்து போனதாகும்; ஒரு கட்சி இப்படி சுயவிமர்சனம் செய்து கொள்ள முடியுமானால் அதற்கு எவ்வளவு உள்வலிமை இருக்க வேண்டும் என்ற உணர்ச்சியைத் தோற்றுவித்தது. நீங்கள் எனக்கு அனுப்பிய (அதற்கு மிகவும் நன்றி!) எதிர்த்தரப்புப் பத்திரிகைகளிலும் எனக்கு வேறு வழிகளில் கிடைத்தவற்றிலும் இதைப் பார்க்க முடியும். உண்மையைச் சொல்வதென்றால் நான் அந்த ஆவணத்தை வெளியிட்ட பொழுது அதுதான் உண்மையில் என்னுடைய உத்தேசமாகும். முதல் தருணத்தில் இங்குமங்கும் சில நபர்கள் அதைப் பற்றி அதிருப்தியடைவார்கள் என்பதை நான் எதிர்பார்த்தேன்; ஆனால் அதைத் தவிர்க்க முடியாது, ஆவணத்தின் உள்ளடக்கம் அதைப் போதிய அளவில் விஞ்சி நிற்கும் என்று நான் கருதினேன். அதைத் தாங்கிக் கொள்*

---

* *கா. மார்க்ஸ்,* கோத்தா செயல்திட்டத்தின் விமர்சனம் *இத்தொகுதி, பக்கங்கள் 10—45 பார்க்க).*—ப-ர்.

கின்ற அளவுக்குக் கட்சிக்குப் பலம் இருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும்; பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் உபயோகிக்கப்பட்ட இந்த வெளிப்படையான சொற்போரைக் கட்சி இன்னும் தாங்கிக் கொள்ள முடியும் என்று நான் கணக்கிட்டேன். ஒருவர் இந்தப் பலப் பரீட்சையை நியாயமான பெருமிதத்துடன் சுட்டிக் காட்டி, இதைப் போன்ற துணிவுடன் நடந்து கொள்ளக் கூடிய இன்னொரு கட்சி எங்கே இருக்கிறது என்று கேட்க முடியும். அந்தப் பணி இதற்கிடையில் சாக்சன் மற்றும் வியென்னாவின் *Arbeiter-Zeitung*க்கும் *Züricher Post*க்கும்[22] விடப்பட்டிருக்கிறது.

*Neue Zeit*[23] 21ஆம் இதழில் இதை வெளியிட்டதற்குப் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொண்டிருப்பது மிகவும் மென்மையானதே; ஆனால் கடைசியாகப் பார்க்கும் பொழுது முதல் தூண்டுதல் என்னிடமிருந்து வந்தது, மேலும் நான் ஓரளவுக்கு உங்களை நிர்ப்பந்தித்தேன் என்பதை மறக்காதீர்கள். ஆகவே பிரதான பொறுப்பு என்னைச் சேர்ந்தது. விவரங்களைப் பொறுத்தமட்டில், அவற்றைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் எப்பொழுதும் இருக்க முடியும் என்பது உறுதி. நீங்களும் டீத்சும் ஆட்சேபித்த ஒவ்வொன்றையும் நான் நீக்கினேன் மற்றும் மாற்றினேன்; டீத்ஸ் இன்னும் கூடுதலான பகுதிகளைக் குறித்திருப்பார் என்றால் நானும் இயன்ற அளவில் இன்னும் அதிகமாக அவருடன் ஒத்துழைத்திருப்பேன்; நான் அதை எப்பொழுதுமே உங்களிடம் நிரூபித்திருக்கிறேன். ஆனால் முக்கியமான விஷயத்தைப் பொறுத்தமட்டில், செயல்திட்டம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு இக்கையெழுத்துப் பிரதியை வெளியிடுவது என்னுடைய கடமை ஆகும். அதிலும் ஹாலெயில் லீப்க்னெஹ்ட் அறிக்கை அளித்த பிறகு[24] இது மிகவும் அவசியம்; அங்கே அவர் பகுதியளவில் அதன் பகுதிகளை எத்தகைய சம்பிரதாயமும் இல்லாமல் தன்னுடைய சொந்த உடைமையைப் போன்று உபயோகித்தார்; பகுதியளவில் அதன் பெயரைக் குறிப்பிடாமல் எதிர்வாதம் செய்தார்; மார்க்ஸ் இருந்திருப்பாரானால் இந்த உதிரி வேலைக்கு

மறுப்பாக மூலத்தை வெளியிட்டிருப்பார் என்பது உறுதி; அவருக்குப் பதிலாக அதைச் செய்வது என்னுடைய கடமை. துரதிர்ஷ்டவசமாக அந்தச் சமயத்தில் ஆவணம் எனக்குக் கிடைக்கவில்லை; அதற்குக் கணிசமான காலத்துக்குப் பிறகு மிகவும் அதிகமாகத் தேடிய பிறகு அதைக் கண்டு பிடித்தேன்.

மார்க்ஸ் லஸ்ஸாலைப் பற்றி எழுதியிருப்பது பழைய லஸ்ஸால்வாதிகளுக்கு ஆத்திரமூட்டியிருக்கிறது என்று பெபெல் உங்களுக்கு எழுதியிருப்பதாக நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். அப்படியும் இருக்கலாம். இந்த நபர்களுக்கு உண்மை தெரியாது; அதைப் பற்றி அவர்களுக்கு அறிவூட்டுவதற்கு இது வரை எதுவும் நடைபெற்றதாகத் தோன்றவில்லை. லஸ்ஸாலின் மாபெரும் சிறப்பு முழுவதுமே இதை அடிப்படையாகக் கொண்டிருந்தது, மார்க்சின் ஆராய்ச்சியின் விளைவுகளைத் தன்னுடைய சொந்த ஆராய்ச்சி என்று பகட்டாகக் காட்டிக் கொள்வதற்கும் பொருளாதாரத்தை அரைகுறையாகப் படித்திருந்ததனால் அவற்றைத் திரித்துக் கூறுவதற்கும் மார்க்ஸ் பல ஆண்டுக் காலம் அவரை அனுமதித்திருந்தார் என்பது அவர்களுக்குத் தெரியா விட்டால் அது என்னுடைய குறை அல்ல. ஆனால் நான் மார்க்சினுடைய இலக்கியப் பொறுப்பாளி; ஆகவே நான் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும்.

லஸ்ஸால் இருபத்தாறு ஆண்டுகளாக வரலாற்றுக்குச் சொந்தமானவர். சோஷலிஸ்டு எதிர்ப்புச் சட்டத்தின்[25] காரணமாக லஸ்ஸாலைப் பற்றிய வரலாற்று ரீதியான விமர்சனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்றால் அதை நிறைவேற்ற வேண்டிய காலம் கடைசியாக வந்து விட்டது; மார்க்சைப் பொறுத்தமட்டில் லஸ்ஸாலின் உண்மையான நிலையைத் தெளிவு படுத்தியே ஆக வேண்டும். லஸ்ஸாலின் உண்மையான உருவத்தை மறைத்து அவரை மாபெரும் தலைவராகக் காட்டுகின்ற கட்டுக்கதை கட்சியின் நம்பிக்கைக்குரிய கோட்பாடாக முடியாது. இயக்கத்துக்கு லஸ்ஸாலின் சேவைகளை ஒருவர் எவ்வளவு உயர்வாக மதிப்பிட்டாலும் அதில் அவருடைய வரலாற்றுப் பாத்திரம் ஐயப்பாட்டுக்கு

இடமளிக்கிறது. லஸ்ஸால் என்ற சோஷலிஸ்டின் ஒவ்வொரு காலடியிலும் லஸ்ஸால் என்ற வாய்வீச்சுக்காரர் குறுக்கிடுகிறார். எங்கும் லஸ்ஸால் என்ற கிளர்ச்சிக்காரர் மற்றும் அமைப்பாளருக்கு உள்ளே ஹாட்ஸ்ஃபெல்ட் வழக்கை நடத்திய லஸ்ஸால் என்ற வழக்கறிஞர்[26] தெரிகிறார்: வழிமுறைகளைத் தேர்ந்தெடுப்பதில் அதே மனித வெறுப்பு, சந்தேகப்படக் கூடிய, ஊழல் மனிதர்களைத் தன்னைச் சுற்றி வைத்துக் கொள்வதில் அதே தனிவிருப்பம், அவர்களை சாதாரணமான கருவிகளைப் போல உபயோகித்து விட்டுப் பிறகு தூக்கியெறிதல். அவர் 1862 வரை நடைமுறையில் பிரத்யேகமான பிரஷ்ய கொச்சையான ஜனநாயகவாதியாக இருந்தார், அவரிடம் போனப்பார்டிசச் சாய்வுகள் முனைப்பாக இருந்தன (அவர் மார்க்சுக்கு எழுதிய கடிதங்களை நான் படித்து சிறிது நேரமே ஆகியிருக்கிறது); அவர் முற்றிலும் தனிப்பட்ட காரணங்களுக்காக மாறினார், தன்னுடைய கிளர்ச்சியைத் தொடங்கினார். இரண்டு ஆண்டுகள் முடிவதற்குள் தொழிலாளர்கள் முதலாளி வர்க்கத்துக்கு எதிராக முடியாட்சியை ஆதரிக்க வேண்டும் என்றார், அவர் குணாம்சத்தில் தன்னை ஒத்திருந்த பிஸ்மார்க்குடன் சேர்ந்து சூழ்ச்சி செய்தார்; அவர் மட்டும் சுட்டுக் கொல்லப்பட்டிரா விட்டால்—அது அவருடைய அதிர்ஷ்டம்—இயக்கம் நடைமுறையில் காட்டிக் கொடுக்கப்பட்டிருக்கும் என்பது நிச்சயம். அவருடைய கிளர்ச்சிப் பிரசுரங்களில் அவர் மார்க்சிடமிருந்து கடன் வாங்கிய சரியான விஷயங்கள் அவருடைய சொந்த, லஸ்ஸால்வாத, எப்பொழுதுமே போலியான விளக்கங்களுடன் மிகவும் அதிகமாகக் கலந்திருப்பதால் இரண்டையும் அநேகமாகப் பிரிக்க முடியாது. லஸ்ஸாலைப் பற்றிய மார்க்சின் தீர்ப்பினால் பாதிக்கப்பட்டதாக உணர்கின்ற தொழிலாளர்களின் பகுதி லஸ்ஸாலை அவருடைய இரண்டு ஆண்டுக் காலக் கிளர்ச்சியின் மூலமாக மட்டுமே, அவற்றையும் கூட வர்ணம் தடவிய மூக்குக் கண்ணாடியின் மூலமாக மட்டுமே அறிந்திருக்கிறது. ஆனால் வரலாற்று ரீதியான விமர்சனம் இத்தகைய தப்பெண்ணங்களுக்கு முன்னால் நிரந்தரமாகப் பணிவுடன் நிற்க முடியாது. மார்க்சுக்கும் லஸ்ஸாலுக்கும்

முடிவாகக் கணக்குத் தீர்ப்பது என்னுடைய கடமையாகும். அது நிறைவேறி விட்டது; தற்பொழுது நான் அதோடு நிறுத்திக் கொள்கிறேன். மேலும் எனக்கு இப்பொழுது மற்ற வேலைகள் இருக்கின்றன. மார்க்ஸ் லஸ்ஸாலைப் பற்றிக் கொண்டிருந்த கடுமையான தீர்ப்பை வெளியிட்டது அதன் விளைவை ஏற்படுத்தும், மற்றவர்களுக்கும் துணிவைத் தரும். ஆனால் என்னை நிர்ப்பந்தித்தால் எனக்கு வேறு வழி கிடையாது: லஸ்ஸால் கட்டுக்கதையை ஒரேயடியாக ஒழித்துக் கட்ட வேண்டியிருக்கும்.

*Neue Zeit* பத்திரிகையைத் தணிக்கை செய்ய வேண்டும் என்று ரைஹ்ஸ்டாக் குழுவில் குரல்கள் ஒலித்திருப்பது உண்மையில் நல்லதே. சோஷலிஸ்டு எதிர்ப்புச் சட்டம் அமுலிலிருந்த பொழுது குழு செய்த சர்வாதிகாரத்தின் ஆவி (அது அப்பொழுது அவசியமாக இருந்தது, சிறப்பாக நிறைவேற்றப்பட்டது என்பது உண்மையே) அல்லது வான் ஷ்வைட்சருடைய முன்னாளைய கண்டிப்பான ஸ்தாபனத்தை நினைவு கூர்தல் என்பதைத் தவிர இது என்ன? ஜெர்மன் சோஷலிஸ்டு விஞ்ஞானம் பிஸ்மார்க்கின் சோஷலிஸ்டு எதிர்ப்புச் சட்டத்திலிருந்து விடுதலை அடைந்த பிறகு சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர்களாலேயே தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்படுகின்ற புதிய சோஷலிஸ்டு எதிர்ப்புச் சட்டத்துக்கு உட்படுத்தப்படுவது மேதாவிலாசம் நிறைந்த கருத்து என்பது மெய்தான். மற்றவற்றைப் பொறுத்தமட்டில், மரங்கள் வானத்தைத் தொடும் அளவுக்கு வளர முடியாது.

*Vorwärts* பத்திரிகையில்[27] வெளிவந்திருக்கின்ற கட்டுரை எனக்கு அதிகமான பரபரப்பை ஏற்படுத்தவில்லை. என்ன நடந்தது என்பதைப் பற்றி லீப்க்னெஹ்ட் எழுதட்டும் என்று நான் காத்திருக்கிறேன்; பின்னர் இரண்டு கட்டுரைகளுக்கும் இயன்ற அளவுக்கு நட்புத் தொனியில் நான் பதிலளிப்பேன். *Vorwärts* கட்டுரையில் திருத்தப்பட வேண்டிய சில தவறுகள் (உதாரணமாக, நாம் ஒற்றுமையை விரும்பவில்லை, சம்பவங்கள் மார்க்ஸ் தவறு செய்ததை நிரூபித்தன, இதரவை) மட்டுமே இருக்கின்றன; வெளிப்படையான சிலவற்றை உறுதி செய்ய வேண்டும். புதிய தாக்குதல்கள்

அல்லது போலியான வாதங்கள் இந்த விவாதத்தைத் தொடரும்படி என்னை நிர்ப்பந்திக்கா விட்டால் என்னைப் பொறுத்தமட்டில் இந்தப் பதிலுடன் இந்த விவாதத்தை முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் தோற்றம் நூலைப் பதிப்புக்குத்* தயாரித்துக் கொண்டிருக்கிறேன் என்று டீத்சிடம் தெரிவியுங்கள். ஆனால் ஃபிஷரிடமிருந்து இன்று கடிதம் வந்திருக்கிறது; அவருக்கு இன்னும் மூன்று புதிய முன்னுரைகள் வேண்டுமாம்![28]

தங்கள் பி. எ.

போல்ஷிவிக் சஞ்சிகை, எண் 22, 1931 என்ற இதழில் ருஷ்ய மொழியில் முதலில் வெளியிடப்பட்டது

கையெழுத்துப் பிரதியின் படி அச்சிடப்பட்டது

மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

---

*—குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்னும் நூலின் நாலாம் ஜெர்மன் பதிப்புக்கு.—ப-ர்.

பி. எங்கெல்ஸ்

# "இயற்கையின் இயக்க இயலுக்கு" முன்னுரை[29]

இயற்கையைப் பற்றிய நவீன ஆராய்ச்சி முறை ஒன்று மட்டுமே விஞ்ஞான ரீதியான, முறைப்படுத்தப்பட்ட, பன் முக வளர்ச்சி பெற்றுள்ளது; இந்த வளர்ச்சி பண்டைக் காலத்து மாண்பு மிக்க இயற்கை-தத்துவவியல் உள்ளுணர்வு களுக்கு மாறாகவும் அராபியர்களின் மிக முக்கியத்துவம் பொருந்திய, ஆனால் துண்டுதுண்டான கண்டுபிடிப்புகளுக் கும்—இக்கண்டுபிடிப்புகள் பெரும் பாகம் பலனின்றி மறைந்து விட்டன—மாறாகவும் உள்ளது; மிக சமீபத்திய வரலாறு முழுவதையும் போலவே இயற்கையைப் பற்றிய இந்த நவீன ஆராய்ச்சியும், ஜெர்மானியர்களாகிய நாம் மதச்சீர்திருத்த காலம் (Reformation)[30] என்று குறிப்பிடுகிற மகத்தான சகாப்தத்திலிருந்து, அந்தச் சமயத்தில் நம்மைத் தழுவிய தேசிய துரதிர்ஷ்ட காலத்திலிருந்து, மறுமலர்ச்சிக் காலம் (Renaissance) என்று பிரெஞ்சுக்காரர்களாலும் Cinguecento* என இத்தாலியர்களாலும்—இவற்றில் எந்தப் பெயரும் அதன் முழுமையை வெளிப்படுத்துவதில்லை—அழைக்கப்படு கிற காலத்திலிருந்து தொடங்குகிறது. பதினைந்தாம் நூற் றாண்டின் பிற்பகுதியிலிருந்து இந்தச் சகாப்தம் ஆரம்பிக் கிறது. நகரங்களில் உள்ள நகரத்தார் (burghers) உதவியுடன் அரசர் குலம் நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் அதிகாரப் பிடிப்பை உடைத்து மகத்தான முடியரசுகளை ஸ்தாபித் தது; சாராம்சத்தில் இவை தேசிய இன அடிப்படையில் அமைந்தன; இவற்றிற்குள்ளிருந்துதான் நவீன ஐரோப்பிய

*—நேர்ப்பொருளில்: 1500க்கள், அதாவது பதினா றாம் நூற்றாண்டு.—ப-ர்.

தேசிய இனங்களும் நவீன முதலாளித்துவ சமூகமும் வளர்ந்து வெளிப்பட்டன. நகரத்தாரும் பிரபுக்களும் ஒருவரோ டொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்த அதே பொழுதில் ஜெர்மன் விவசாயிகளின் போர் கலகம் புரிகிற விவசாயிகளை மட்டுமன்றி—இதில் புதுமை எதுவும் இல்லை—அவர்கள் பின்னே சரக்குகளைப் பொது உடைமையாக்குக என்று கோஷித்துக் கொண்டு கைகளிலே செங்கொடி ஏந்தி வந்த நவீன பாட்டாளி வர்க்கத்தின் முதல் தொகையினரையும் அரங்கில் ஏற்றி எதிர்கால வர்க்கப் போராட்டங்களைத் தீர்க்கதரிசனத்துடன் சுட்டிக் காட்டியது. பைஸான்தியம் பேரரசின் வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றப்பட்ட கையெழுத்துப் பிரதிகளும் ரோமா புரியின் இடிபாடுகளிடையே தோண்டியெடுக்கப்பட்ட பண்டையச் சிற்பச் சிலைகளும் மேற்கு நாடுகளைத் திகைப்பிலாழ்த்தும்படியான ஒரு புதிய உலகத்தை, பண்டைய கிரேக்க உலகத்தை வெளிப்படுத்தின; அதனுடைய ஒளி பொங்கும் வடிவங்களின் முன்னே மத்திய காலத்தின் ஆவிக் கணங்கள் மறைந்தொழிந்தன; கலைகளின் மலர்ச்சியில் கற்பனைக்கும் எட்டாத சிகரங்களை இத்தாலி எட்டிப் பிடித்தது; ஆதாரச் சிறப்பெய்திய பண்டைக் காலத்தின் பிரதி பிம்பம் போல் அது இருந்தது; அந்தச் சிகரத்தை அதன் பின்னர் அது எட்டவே இல்லை. இத்தாலியிலும் பிரான்சிலும் ஜெர்மனியிலும் ஒரு புதிய இலக்கியம், முதன் முறையாக ஒரு நவீன இலக்கியம் உருப்பெற்றது; இதை சற்றே பின்தொடர்ந்து ஆங்கில, ஸ்பானிய இலக்கியங்களில் ஆதாரச் சிறப்பான சகாப்தங்கள் தோன்றின. பழங்கால orbis terrarum* எல்லைகள் கடக்கப்பட்டன; உலகம் உண்மையில் அப்பொழுதுதான் முதன் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டது; உலக ரீதியான வாணிபத்திற்கும் சாதாரணக் கைத்தொழிலிலிருந்து பட்டறைத் தொழில் முறைக்கு மாறுவதற்கும் அடிக்கற்கள் அப்போதுதான் நாட்டப்பட்டன; இந்தப் பட்டறைத் தொழில் முறை நவீனப் பெரும் அளவு இயந்திரத் தொழிலுக்கும் துவக்கப் புள்ளியாக அமைந்தது. மனிதர்களின் சிந்தனையின் மீது திருச்சபை செலுத்திய

*—உலகப் பரப்பின்.—ப-ர்.

சர்வாதிகாரம் உடைத்து நொறுக்கப்பட்டது; ஜெர்மன் தேசிய இனங்களில் பெரும்பாலானவை அதை நீக்கி விட்டு புரோட்டஸ்டென்டு மதத்தைத் தழுவின; அராபியர்களிட மிருந்து பெறப்பட்டு புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கிரேக்கத் தத்துவவியலால் ஊட்டம் கொடுக்கப்பட்ட சுதந்திரமான சிந்தனையின் உற்சாகமூட்டும் உணர்வு லத்தீன் மொழி பேசுவோரிடையே மேலும் மேலும் வேரூன்றி 18வது நூற்றாண்டின் பொருள்முதல்வாதத்திற்கு வழிகோலியது.

இதுவரை மனிதகுலம் அனுபவத்தில் கண்டவற்றில் இதுவே ஆகப்பெரிய மகத்தான முற்போக்குப் புரட்சியா கும்; பேராற்றல் உள்ளவர்கள் தேவைப்பட்ட, பேராற்றல் உள்ளவர்களைத் தோற்றுவித்த யுகம் அது—சிந்தனாசக்தி யிலும் உணர்விலும் குணத்திலும் பல விதவிதமான திறமை களிலும் கல்வித் தேர்ச்சியிலும் அவர்கள் பேராற்றல் உடை யவர்களே. நவீன பூர்ஷ்வா வர்க்க ஆட்சியின் ஸ்தாபகர் களுக்கு பூர்ஷ்வா வரையறைகள் சிறிதேனும் இல்லை. நேர் மாறாக, அந்தக் காலத்தின் துணிச்சல் மிக்க தன்மை அவர் களுக்கு உயர்வாகவோ, குறைவாகவோ ஏதோ ஓர் அளவில் உத்வேகம் ஊட்டியது. முக்கியஸ்தன் என்று ஓரளவுக்குக் கருதப்பட்ட எவனும் விரிவாகப் பிரயாணம் செய்யாதவ னாகவோ, நான்கு அல்லது ஐந்து மொழிகளில் பயிற்சி இல் லாதவனாகவோ, பல துறைகளிலும் புகழ் பெறாதவனா கவோ அநேகமாக இருந்ததில்லை. லியனார்டோ டா வீன்சி ஒரு மகத்தான ஓவியக் கலைஞன் மட்டுமல்ல; அவன் கணித வியல், இயந்திர அமைப்பு, பொறியியல் ஆகிய துறைகளிலும் ஒரு மேதை; பௌதிகவியலின் பல்வேறு கிளைகளும் அவ னுக்கு முக்கியமான கண்டுபிடிப்புகளால் கடமைப்பட்டுள் ளன. அல்பிரேஹ்ட் டியுரேர் ஓர் ஓவிய நிபுணன், உலோகச் செதுக்குக் கலைஞன், சிற்பி, கட்டிட இயல் புலவன்; அது மட்டுமல்ல, அவன் அரண்கள் அமைப்பதில் ஒரு புதிய முறை யையே சிருஷ்டித்தவன்; அவனுடைய தத்துவத்தில் பல கருத் துக்கள் மொன்டலம்பேர் என்பவராலும் நவீன ஜெர்மன் அரண் அமைப்பு விஞ்ஞானத்தாலும் வெகு காலத்திற்குப் பின்னால் மறுபடியும் எடுத்தாளப்பட்டன. மக்கியவேலி

என்பவன் ஆட்சிக் கலை, வரலாறு துறைகளில் புலவன்; கவிஞனும் கூட; அதே சமயத்தில், நவீன காலத்தில் இராணுவ விவகாரங்களைப் பற்றி முதன்முதலில் எழுதிய புகழ் பெற்ற எழுத்தாளனும் அவனே. லூதர் திருச்சபையின் அவுகியஸ் குதிரை இலாயங்களை[31] மட்டுமின்றி ஜெர்மன் மொழியிலும் குவிந்து போன அவுகியஸ் குதிரை இலாயங்களையும் அகற்றி சுத்தம் செய்தார்; ஜெர்மன் மொழியின் நவீன உரைநடையைச் சிருஷ்டித்தவரும் அவரே. மேலும், அவர் வெற்றி முரசு கொட்டும் தேவ கீதத்தின் இராகத்தையும் வார்த்தைகளையும் உருவாக்கினார்; அதுவே பின்னால் 16ஆம் நூற்றாண்டின் மர்செல்யேஸ் கீதமாகவும் பரிணமித்தது.[32] அக்காலத்து மாவீரர்கள் தொழில் பிரிவினையின் விலங்குகளில் இன்னமும் அகப்பட்டு அடிமைப்படவில்லை; ஒருசார்புத் தன்மையை உண்டாக்குகிற அதன் கட்டுத் தளைகளின் விளைவுகளை அவர்களுக்குப் பின்னால் வந்தவர்களிடம் நாம் அடிக்கடி காண்கிறோம். ஆனால் ஏறக்குறைய அவர்கள் அனைவரும் தத்தம் நிகழ்கால இயக்கங்களின், நடைமுறைப் போராட்டங்களின் மத்தியிலே வாழ்ந்து செயலாற்றி வந்தார்கள் என்பதே அவர்களின் பிரத்யேகமான குணாம்சமாகும்; அவர்கள் ஏதாவது ஒரு தரப்பில் நின்று போராட்டத்தில் பங்கு பற்றினர்; ஒருவன் பேசியும், எழுதியும், மற்றொருவன் வாளேந்தியும், பலர் இரண்டையும் கையாண்டும் போராட்டத்தில் பங்கு பற்றினர். ஆகவே அவர்களுடைய குணத்தின் முழுமையும் வலிமையும் சேர்ந்து அவர்களைப் பூரண மனிதர்களாக்கின. தங்களுடைய படிப்பறைகளில் உட்கார்ந்து கொண்டு ஆராய்ச்சியை மட்டும் செய்து கொண்டிருந்தவர்கள் அப்பொழுது விதிவிலக்காகவே இருந்தனர்—அவர்கள் இரண்டாந்தர, மூன்றாந்தரமான நபர்களாகவோ, ஈடுபட்டுத் தங்களுக்குக் கஷ்டங்களை ஏற்படுத்திக் கொள்ள விரும்பாத அற்பவாதிகளாகவோ இருந்தனர்.

அந்தக் காலத்தில் இயற்கை விஞ்ஞானமும் இந்தப் பொதுப் புரட்சியின் மத்தியிலேதான் வளர்ச்சியடைந்து முற்றிலும் புரட்சிகரமானதாக விளங்கியது; உண்மையில்

அது தன்னுடைய வாழும் உரிமையைப் போராடி வென்று கொள்ள வேண்டியிருந்தது. நவீனத் தத்துவவியலுக்குத் துவக்கமாக இருந்த இத்தாலியப் பெருந்தகையாளர்களுக்குப் பக்கத்திலேயே இதுவும் இன்க்விஸிஷன் எரிகம்பத்துக்கும் சிறைச்சாலைகளுக்கும் தனது தியாகிகளை ஈந்தது. இயற்கையைச் சுதந்திரமாக ஆராய்வதை ஒடுக்குவதில் புரோட்டஸ்டென்டுகள் கத்தோலிக்குகளை மிஞ்சி விட்டனர் என்பது குறிக்கத்தக்கது. இரத்த ஓட்டத்தைக் கண்டுபிடிக்கும் தருவாயில் இருந்த ஸெர்வேட் என்பவரை எரிகம்பத்தில் கட்டி உயிரோடு எரிக்கச் செய்தார் கால்வின்; அது மட்டுமல்ல, கால்வின் அவரை உயிருடன் இரண்டு மணி நேரம் நெருப்பில் வறுத்தெடுக்கப்படவும் செய்வார்; இன்க்விஸிஷன் ஜோர்தானோ புரூனோவை உயிரோடு எரித்ததோடு போதும் என்றிருந்தது.

காப்பேர்னிக்கசின் அமரத்துவம் வாய்ந்த நூல் வெளியிடப்பட்டதானது இயற்கை விஞ்ஞானம் தனது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்த புரட்சிகரமான செயலாக இருந்தது; அது ஏறக்குறையப் போப்பாண்டவரின் ஆணைப் பத்திரத்தைப் பகிரங்கமாக எரித்த லூதரின் செயலைத் திரும்பவும் செய்துகாட்டியதாக இருந்தது; அந்த நூலின் வாயிலாக காப்பேர்னிக்கஸ்—மிகுந்த தயக்கத்துடன், ஒரு விதத்தில் மரணப் படுக்கையில் தாம் படுத்த பிறகேதான்—இயற்கையின் விவகாரங்களில் மதபீடத்தினர் செலுத்திய ஆதிக்கத்திற்குச் சவால் விடுத்தார்.[33] இயற்கை விஞ்ஞானத்துக்கும் இறைமையியலுக்கும் இடையே உள்ள பரஸ்பர கோரிக்கைகளைப் பற்றிய சர்ச்சை இன்று வரை தொடர்ந்தும் சிலருடைய சிந்தனையில் முற்றுப் பெறாமலும் நீடிக்கிறது என்ற போதிலும், இயற்கை விஞ்ஞானம் இறைமையியலிலிருந்து விடுதலை பெற்றதானது அந்த நாளிலிருந்து துவங்கிற்று இருந்த போதிலும், அந்தக் காலத்திலிருந்து விஞ்ஞானங்களின் வளர்ச்சி அசுர நடையில் முன்னேறியது; புறப்பட்ட நிலையிலிருந்து அது விலகிச் செல்லும் தூரத்தின் வர்க்கத்துக்குத் தகவுப் பொருத்தமாக அதன் வளர்ச்சியின் வேகம் அதிகரித்தது என்றும் சொல்லக் கூடும். இனிமேல், உயிர்ப்புள்ள பருப்பொருளின் உன்னதமான விளைபொரு

ளான மனித மனத்தின் விஷயத்தில் இயக்கத்தின் நியதி என்பது உயிர்ப்பற்ற பருப்பொருள் இயக்கத்துக்குரிய நியதிக்குத் தலைகீழானதாகும் என்று உலகுக்குக் காட்டுவது போல் இருந்தது.

இயற்கை விஞ்ஞானத்தின் இப்போது புதிதாகத் துவங்கிய முதல் கட்டத்தின் பிரதான வேலை தன் அருகாமையிலுள்ள விஷயாதாரங்களை உடனடியாக ஜீரணித்துத் தேர்ச்சி பெறுவதே. மிகப் பெரும்பான்மையான துறைகளில் அது அரிச்சுவடியிலிருந்து துவங்க வேண்டியிருந்தது. யூக்லிட் வடிவ கணிதத்தையும் ப்தாலமியின் சூரிய மண்டல அமைப்புத் தத்துவத்தையும் பண்டைக் காலம் சொத்தாக விட்டுச் சென்றது; அராபியர்கள் தசாம்ச முறை, அல்ஜிப்ராவின் தொடக்க விவரங்கள், நவீன காலத்திய எண்கள், இரசவாதம் ஆகியவற்றை விட்டுச் சென்றனர்; கிறிஸ்துவ மத்திய காலம் ஒன்றையும் விட்டுச் செல்லவில்லை. அவசியத்தின் நிமித்தமாக, இந்த நிலையில் பூவுலக, விண்ணுலகக் கோள்களின் இயந்திரவியல் என்ற இயற்கை விஞ்ஞானத்தின் மிக மிக அடிப்படையான விஞ்ஞானமே முதலிடம் பெற்றது; மேலும் இதற்குப் பக்கத்திலேயே, இதற்குத் துணையாக நிற்கும் வகையில் கணிதவியல் முறைகளைக் கண்டுபிடித்து நிறைநேர்த்தியாக்குவதும் நடந்தது. மகத்தான சாதனைகள் இதில் சாதிக்கப்பட்டன. நியூட்டன், லின்னேயஸ் இவர்களால் இனங்கண்டு கொள்ளும் காலத்தின் இறுதிக் கட்டத்தில் விஞ்ஞானங்களின் இப்பிரிவுகள் ஒருவகையான தேர்ச்சி பெற்றதை நாம் காண்கிறோம். மிக முக்கியமான கணிதவியல் முறைகளின் அடிப்படையான லட்சணங்கள் ஸ்தாபிக்கப்பட்டன: விசேஷமாக டெக்கார்ட்டின் பகுப்பு முறை வடிவ கணிதம், நேப்பெரின் லாகரிதம், லேய்ப்னிட்ஸ், ஒரு வகையில் நியூட்டன் ஆகியோரின் வகையீட்டு, தொகையீட்டு நுண்கணிதம் என்றவாறு. கெட்டிப் பொருள்களின் இயந்திரவியலுக்கும் இது பொருந்தும்; அதனுடைய பிரதான நியதிகள் இறுதியாகத் தெளிவாக்கப்பட்டன. முடிவாக, சூரிய மண்டலத்தை ஆராயும் வானியலில் கோள்களின் இயக்கத்தைப் பற்றிய நியதிகளைக் கேப்ளர் கண்டுபிடித்

தார்; பருப்பொருளின் பொதுவான இயக்க நியதிகளின் கண்ணோட்டத்திலிருந்து நியூட்டன் அவைகளை வரையறுத்தார். இயற்கை விஞ்ஞானத்தின் இதர பிரிவுகள் இந்த ஆரம்ப கட்ட நிறைநேர்த்திக்கும் கூட வெகு தூரத்திற்குப் பிற்பட்டு நின்றன. இந்தக் காலகட்டத்தின் இறுதி வாக்கில் தான் திரவப் பொருள்கள், வாயுப் பொருள்கள் ஆகியவற்றின் இயந்திரவியல் மேற்கொண்டு ஆராயப்பட்டது.* பௌதிகவியல் தனது ஆரம்பக் கட்டத்திலிருந்து—ஒளியியலைத் தவிர—அதிகமாக ஒன்றும் வளர்ந்துவிடவில்லை; வானியலின் நடைமுறைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய காரணத்தால் ஒளியியல் பிரமாதமாக அபிவிருத்தி பெற்றது. புளோஜிஸ்டன் தத்துவத்தால்[34] இரசாயனவியல் இரசவாதத்திலிருந்து முதல் தடவையாக விடுதலை பெற்றது. கனிப்பொருளியலின் கருப்பருவத்தை விட்டு பூவியியல் அதிகமாக ஒன்றும் வளர்ந்துவிடவில்லை; இதனால் தொல்லுயிரியல் என்பது தோன்றுவதற்கும் முடியாதிருந்தது. கடைசியாக, உயிரியல் துறையில் தாவர, விலங்கியல் சம்பந்தமாக மட்டுமல்லாமல் உடற்கூறுவியல், குறிப்பாக உடலியல் சம்பந்தப்பட்ட ஏராளமான விஷயாதாரங்களைச் சேகரிப்பதும் இனம் பிரித்து வகைப்படுத்துவதும் இன்னும் பிரதான வேலையாக இருந்தன. ஆகவே உயிரின் பல்வேறு வகையான வடிவங்களை ஒப்பு நோக்குதலையும் அவை பூகோள ரீதியாக எவ்வாறு சிதறி அமைந்துள்ளன என்பதையும் அவைகளின் சீதோஷ்ண, இதர வாழ்க்கைச் சூழ்நிலைகளையும் பற்றி ஆராய்வது என்ற பேச்சிற்கே இடமில்லாமலிருந்தது. இங்கே லின்னேயஸ் காரணமாக தாவரவியலும் விலங்கியலும் மட்டுமே ஏறத்தாழ முழுமையை நெருங்கின.

இந்தக் காலகட்டம் முழுவதற்கும் இனக்குறிப்பாய் அமைந்த அம்சம் என்னவெனில், ஒரு விசித்திரமான பொதுக் கண்ணோட்டம் விவரமாக விளக்கம் பெற்றி

* கையெழுத்துப் பிரதியின் ஓரத்தில் பி. எங்கெல்ஸ் பென்சிலிலே குறித்திருப்பதாவது: ''ஆல்ப்ஸ் மலைப் பிரதேச நதிகளைக் கட்டுப்படுத்துவது குறித்து டொரிச் சேல்லி.''—ப-ர்.

ருந்ததேயாகும்; அதன் கேந்திரமான கருத்து இயற்கை பரிபூரணமான மாறாத் தன்மை கொண்டது என்பதே. இயற்கை எந்த முறையில் தோன்றியிருந்தாலும் அது ஒரு தடவை தோன்றிய பிறகு அது தொடர்ந்து இருந்து வந்திருக்கிற காலம் முழுவதும் அது தோன்றிய போதிருந்தவாறே நிலை பெற்றுள்ளது. மர்மமான ''ஆதித் தூண்டுதல்'' ஒன்றால் ஒரு தடவை இயக்கப்பெற்ற பிறகு விண்கோள்களும் அவைகளின் துணைக்கோள்களும் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட நீள்வட்டப் பாதைகளின் வழியே நிரந்தரமாக அல்லது பிரபஞ்ச முடிவுக் காலம் வரை வட்டமிட்டுத் திரிந்த வாறுள்ளன. தத்தம் இடங்களில் விண்மீன்கள் ஸ்திர நிலை பெற்றன, நிலை மாற்றம் பெற முடியாமலிருக்கின்றன; ''பிரபஞ்ச வியாபகமான புவி ஈர்ப்புச் சக்தியின்'' காரணமாக தத்தம் இடத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த நில உலகம் சதாசர்வ காலம் அல்லது மாற்றாக அதன் சிருஷ்டியின் முதல் நாளிலிருந்து யாதொரு மாற்றமுமின்றி ஒரே விதமாக இருந்து வருகிறது. இன்றைய ''ஐந்து கண்டங்கள்'' எப்பொழுதுமே இருந்து வந்திருக்கின்றன; இந்த ''ஐந்து கண்டங்களில்'' அதே மலைகளும் பள்ளத்தாக்குகளும் ஆறுகளும் அதே சீதோஷ்ண நிலையும்—மனிதனால் இடப்பெயர்ச்சி அல்லது மாற்றம் செய்யப்பட்டதைத் தவிர—அதே தாவர, மிருக ராசிகளும் இருந்தன. தாவர, மிருக ராசிகள் ஒரு தடவை தோன்றியதோடு அப்படியே நிரந்தரமாக ஸ்தாபிக்கப்பட்டு விட்டன; இன ராசிகளின் அந்தந்த வகை ராசிகள் அந்தந்த வகைப்பட்ட ராசிகளையே உண்டாக்கியவாறிருந்தன. கலப்புச் சேர்க்கையால் இங்குமங்கும் சிற்சில புதிய ராசிகள் தோன்றியிருக்கலாம் என்று லின்னேயஸ் ஒப்புக் கொண்டது மிகப் பெரிய விஷயமாக இருந்தது. காலத்தில் வளருகிற மனித இனத்தின் வரலாற்றிற்கு நேர்மாறாக இடவெளியில் வெளிப்படுத்திக் கொள்கிற தன்மை மட்டுமே இயற்கையின் வரலாற்றிற்குக் கற்பிக்கப்பட்டது. இயற்கையில் எல்லா மாற்றமும் எல்லா வளர்ச்சியும் மறுக்கப்பட்டன. ஆரம்பத்தில் எவ்வளவோ புரட்சிகரமாக இருந்த இயற்கை விஞ்ஞானம் பூரணமான

தேக்கத் தன்மை கொண்ட இயற்கையுடன் திடீரென எதிரே முட்டிக் கொண்டது; தோன்றிய காலத்தில் இருந்தவாறே இன்னும் கூட இருக்கிற, ஊழிக் காலம் வரை அல்லது நிரந்தரமாக அதே விதமாக இருந்து விடக் கூடிய இயல்பையுள்ள இயற்கையைக் கண்டது.

அறிவுத் துறையிலும் தனது விஷயாதாரங்களை அலசியாராய்வதிலுங்கூட 18ஆம் நூற்றாண்டின் முதற்பாதியைச் சேர்ந்த இயற்கையியல் பண்டைக் கால கிரீசை விட மேலானதாக எந்த அளவுக்கு இருந்ததோ, அந்த அளவுக்கு இந்த விஷயாதாரங்களைத் தத்துவ ரீதியாகப் பயின்று தன் வயமாக்கிக் கொள்வதில், இயற்கையைப் பற்றிய பொதுவான கண்ணோட்டத்தின் விஷயத்தில் அது பண்டைக் கால கிரீசை விடத் தாழ்ந்திருந்தது. பிரபஞ்சம் என்பது சாராம்சத்தில் ஒரு பாழ்வெளியிலிருந்து உதித்ததொன்றாக, வளர்ந்து உருப்பெற்றதொன்றாக கிரேக்கத் தத்துவஞானிகள் கருதினர். நாம் ஆராயும் காலகட்டத்தைச் சேர்ந்த இயற்கை விஞ்ஞானிகளோ எனில், அதை இறுதியாகச் சமைந்து போனதொன்றாக, மாறாத் தன்மை கொண்டதாகக் கருதினர்; அவர்களில் பெரும்பாலோர் அது ஒரு சொடுக்கில் சிருஷ்டிக்கப்பட்டதென்று நம்பினர். விஞ்ஞானம் இறைமையியலின் வலைப்பின்னலில் மிக நெருக்கமாக இன்னும் சிக்கிக் கிடந்தது. இயற்கையைக் கொண்டே விளக்க இயலாத, வெளியிலிருந்து வருகிற ஒரு தூண்டுதலில் இறுதிக் காரணத்தை எல்லாத் துறைகளிலும் அது தேடிச் சென்று அடைந்தவாறிருந்தது. பிரபஞ்ச வியாபகமான புவி ஈர்ப்புச் சக்தி என்று நியூட்டனால் படாடோபமாகப் பெயர் சூட்டப்பட்ட கவர்ச்சிச் சக்தி பருப்பொருளின் ஒரு முக்கியமான குணமாகக் கருதப்பட்டாலும் கூட, கோள்களின் நீள்வட்டப் பாதைகளை முதலில் தோற்றுவித்த அந்த விளக்கப்படாத புடைப் பெயர்ச்சிச் சக்தி எங்கிருந்து முளைத்தது? எண்ணற்ற தாவர, மிருக வகைகள் தோன்றியது எவ்வாறு? எல்லாவற்றையும் விட மனிதன் எவ்வாறு தோன்றினான்? ஏனெனில் மனிதன் அனாதி காலம் தொட்டு இருக்கவில்லை என்பது உறுதியான சேதி. இப்படிப்பட்ட வினாக்களுக்கு எல்லாவற்றையும்

படைத்த ஒரு சிருஷ்டிகர்த்தாவையே பொறுப்பாக்கி அடிக்கடி இயற்கையியல் விடை கொடுத்து வந்தது. இந்தக் காலப் பகுதியின் தொடக்கத்தில் காப்பேர்னிக்கஸ் இறைமையியலை வெளியேறச் செய்தார்; நியூட்டன் இறைமைக்குரிய ஆதித் தூண்டுதலைப் பற்றிய கருத்து வைத்து இந்தக் காலப் பகுதியை முடித்தார். இந்த இயற்கையியல் அடைந்த உச்ச நிலையான பொதுக் கருத்து என்னவெனில், இயற்கையின் ஏற்பாடுகளிலே ஒரு செயல்நோக்குள்ள தன்மை இருக்கிறது என்பதே; இதுவே வோல்ஃபின் ஆழமற்ற காரணகாரியவாதம்; இதன்படி எலிகளைத் தின்னப் பூனைகள் படைக்கப்பட்டன, பூனைகள் தின்பதற்காக எலிகள் படைக்கப்பட்டன, ஆக இயற்கை முழுவதுமே சிருஷ்டிகர்த்தாவின் விவேகத்துக்குச் சான்று கூறவே படைக்கப்பட்டது. அக்காலத்தைச் சேர்ந்த தத்துவஞானம் அன்றைய இயற்கையியலின் தளையுண்டிருந்த நிலையால் தடம் புரளாதவாறு தன்னைக் காத்துக் கொண்டதும், அது ஸ்பினோஸா முதல் மாபெரும் பிரெஞ்சுப் பொருள்முதல்வாதிகள் ஈறாக உலகத்தை உலகத்தைக் கொண்டே விளக்க வேண்டும் என்று வலியுறுத்தி விபரமாக நியாயப்படுத்தும் வேலையை எதிர்காலத்திய இயற்கையியலுக்கு விட்டதும் அதன் உன்னதமான பெருமைக்குரிய விஷயங்களாகும்.

18வது நூற்றாண்டின் பொருள்முதல்வாதிகளையும் இந்தக் காலகட்டத்திற்குள் நான் உட்படுத்துகிறேன்; ஏனெனில் மேலே கூறிய இயற்கை விஞ்ஞான விஷயாதாரங்களைத் தவிர அவர்களுக்கு வேறு ஒன்றும் கிடைக்கவில்லை. காண்ட் என்பவரின் சகாப்தகரமான நூல் அவர்களைப் பொறுத்தவரை அவர்கள் அறியாத இரகசியமாகவே இருந்தது; அவர்களுக்குப் பின்னால் வெகு காலம் கழித்தே லாப்லாஸ் தோன்றினார்.[35] இயற்கையைப் பற்றிய இந்தக் காலாவதியாகிவிட்ட கண்ணோட்டம் விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தால் சல்லடைக் கண்களாகத் துளைக்கப்பட்டுவிட்ட போதிலும் 19வது நூற்றாண்டின் முதல் பாதி முழுவதிலும் ஆதிக்கம் செலுத்தியது என்பதையும்* இன்னும் கூட அதன் சாரப்பொருள் எல்லாப் பள்ளிகளிலும்

போதிக்கப் படுகிறது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.**

இயற்கையைப் பற்றிய இந்தக் குறுகிப் போன கண்ணோட்டத்தில் முதல் உடைப்பு ஏற்படுத்தியவர் ஓர் இயற்கை விஞ்ஞானி அல்ல, ஒரு தத்துவஞானியே. 1755இல் கான்ட்டினுடைய **வானத்தின் பொதுவான இயற்கை வரலாறு மற்றும் தத்துவம்** என்கிற நூல் வெளிவந்தது. ஆதித் தூண்டுதல் என்கிற பிரச்சினை அடிபட்டுப் போயிற்று; பூமியும் சூரிய மண்டல அமைப்பு முழுவதும் காலத்தின் போக்கிலே **தோன்றி உருக்கொண்ட** ஒன்றாகத் தெரிந்தன. பௌதிக வியலே, இயக்க மறுப்பியலைப் பற்றி உஷாராக இரு![36]

---

* கையெழுத்துப் பிரதியின் ஓரத்தில் ஒரு குறிப்பு உள்ளது: ''இயற்கை பற்றிய பழைய கண்ணோட்டத்திற்கு இருந்த வளையாத் தன்மையே எல்லா இயற்கை விஞ்ஞானத்தையும் ஒரே முழுமையானதாகப் பொதுவாகப் புரிந்து கொள்வதற்கு அடிப்படை அளித்தது: பிரெஞ்சுக் கலைக் களஞ்சியவாதிகள் அதை இன்னமும் வெறுமே இயந்திர முறையிலே—அக்கம் பக்கமாக—செய்து கொண்டிருந்தார்கள்; அதன் பிறகு சான்-சிமோனும் ஹெகல் நிறைவாக்கிய இயற்கை பற்றிய ஜெர்மன் தத்துவஞானமும் ஒரே காலத்தில் செய்தன.''—ப-ர்.

** எந்த மனிதரின் விஞ்ஞான சாதனைகள் இந்தக் கருத்து ஒழிக்கப்பட மிக முக்கியமான விஷயாதாரங்களை நல்கியதோ, அதே மனிதர் 1861இல் கூட இந்தக் கருத்தை எவ்வளவு பிடிவாதமாகப் பிடித்துக் கொண்டிருக்க முடிந்தது என்பதைக் கீழ்கண்ட ஆதாரச் சிறப்புள்ள சொற்கள் விளக்கும்:

''நமது சூரிய மண்டலத்தின் எல்லா ஏற்பாடுகளும்—நாம் புரிந்து கொள்ள முடிகிற அளவில்—தற்போது இருக்கிறவற்றைப் பாதுகாப்பதையும் அவை மாற்றமில்லாமல் நீடித்துத் தொடர்ந்து இருப்பதையும் காப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. எப்படி மிகப் புராதன காலத்திலிருந்து இந்தப் பூமியின் மீது உள்ள எந்தப் பிராணியும் தாவரமும் முன்னை விட மேலான நிறைவை அடையவில்லையோ, எவ்வித மாறுதலுக்கும் உட்பட்டிருக்கவில்லையோ, எப்படி எல்லா உயிர்களிலும் கட்டங்களை

எனும் எச்சரிக்கையில் சிந்தனை பால் உள்ள வெறுப்பை நியூட்டன் வெளியிட்டாரே, அந்த வெறுப்பை இயற்கை விஞ்ஞானிகளில் மிகப் பெரும்பாலார் சற்றே குறைத்துக் கொண்டிருந்திருந்தால், கான்ட்டின் ஒளி மிகுந்த இந்தக் கண்டுபிடிப்பு ஒன்றிலிருந்தே அவர்கள் சில முடிவுகளுக்கு வருமாறு கட்டாயப்படுத்தப்பட்டு, அந்த முடிவுகள் அவர்களை முடிவேயில்லாத திரிபுகளினின்றும் பொய்யான திசைகளிலே அளவிடற்கரிய நேரத்தையும் உழைப்பையும் வீணாக்கியதினின்றும் தவிர்த்திருக்கும். ஏனெனில் கான்ட்டின் கண்டுபிடிப்பு எதிர்கால முன்னேற்றம் முழுவதற்குமான தொடக்க முனையைத் தன்னுள் கொண்டிருந்தது. பூமி தோன்றி உருக்கொண்டதொன்று என்றால், அதனுடைய இன்றைய புவியியல் ரீதியான, பூகோளவியல் ரீதியான, சீதோஷ்ண ரீதியான நிலையும், தாவரங்களும் மிருகங்களும் கூட தோன்றி உருக்கொண்டவையே; இடவெளியில், அக்கம் பக்கமாக வாழ்ந்ததைப் பற்றி மட்டுமின்றிக் காலத்திலும் ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்றாக வாழ்ந்ததைப் பற்றியும் அதற்கு வரலாறு இருந்திருக்க வேண்டும். இந்தத் திசையில் உடனடியாக மேற்கொண்டு ஆராய்ச்சிகள் உறுதியாக நடத்தப்பட்டிருந்தால் இயற்கை விஞ்ஞானம் இன்றைய நிலையை விடப் பெருமளவுக்கு முன்னேற்றமடைந்திருக்கும். ஆனால் தத்துவஞானத்தால் என்ன நன்மை ஏற்பட முடியும்? பல்லாண்டுகள் கழிந்த பின் லாப்லாசும் ஹெர்

---

அக்கம் பக்கமாகத்தான் பார்க்கிறோமே தவிர ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்று வந்தாற்போல் அல்லவோ, எப்படி சரீரத்தின் ஸ்தூலத் தன்மையில் நமது இனமும் கூட எப்போதுமே ஒரே விதமாகத்தான் இருந்து வந்திருக்கிறதோ, அதே போலத்தான் அக்கம் பக்கமாக வாழும் வானுலகக் கோள்கள் எவ்வளவுதான் பல ரகத் தன்மை பெற்றிருந்தாலும், அதைக் கொண்டு இந்த வடிவங்கள் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்கள் என நாம் அனுமானிக்க நியாயமேயில்லை; அதற்குப் பதிலாக, சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொன்றும் தன்னைப் பொறுத்தவரை சமமான அளவுக்கு நிறைவு பெற்றதே'' (மேட்லர், தெளிவான வானியல், பெர்லின், 1861, ஐந்தாம் பதிப்பு, பக்கம் 316). (பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

ஷெலும் காண்ட் செய்த பணியின் உள்ளடக்கங்களை விளக்கப்படுத்தி அதற்கு உறுதியான அஸ்திவாரத்தை அமைத்து அதன் மூலம் படிப்படியாக ''ஒளிமுகில் அனுமானவுரைக்கு'' ஆதரவு கிடைக்கும் வரை காண்ட்டின் நூல் உடனடிப் பலன் களின்றிக் கிடந்தது. மேலும் கிடைத்த கண்டுபிடிப்புகள் அந்த அனுமானவுரைக்கு இறுதியாக வெற்றி தந்தன; இவை களில் முக்கியமானவை: ஸ்திர நிலையிலுள்ள நட்சத்திரங் களின் முறையான இயக்கத்தின் கண்டுபிடிப்பு, பிரபஞ்ச வெளியில் ஓர் எதிர்ப்பு ஊடகம் இருப்பது நிரூபணம் ஆதல், பிரபஞ்சப் பருப்பொருளின் இரசாயன ரீதியான ஒருமைப் பாடும் காண்ட் வகுத்தபடிச் சுடர் விடும் ஒளிமுகில் கூட்டங் கள் இருப்பதும் நிறமாலைப் பகுப்பாய்வால் ருசுப்பிக்கப் படல்.*

இயற்கை என்பது ஏதோ வெறுமே இருக்கும் நிலை யிலுள்ளது மட்டுமல்ல, அது தோன்றி உருக்கொண்டு மறை வதும் கூட என்கிற உதயமாகி வரும் கருத்தோட்டம் மற் றொரு பக்கத்திலிருந்து ஆதரவு பெற்றிரா விட்டால், இயற் கை விஞ்ஞானிகளில் பெரும்பாலோர் மாறிக் கொண்டிருக் கும் பூமி மாற்றவே முடியாத உயிரினங்களைச் சுமந்துள்ளது என்பதிலுள்ள முரண்பாட்டைப் பற்றி அவ்வளவு சீக்கிரத் தில் உணரத் தலைப்பட்டிருப்பார்களா என்று சந்தேகிக்க இடமுண்டு. ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்றாகவும் ஒன் றின் மீது மற்றொன்று படிந்ததாகவும் உருப்பெற்றமைந்த நில உலகப் படிவங்களை மட்டுமின்றி, மறைந்து போன பிராணிகளின் மேலோடுகளும் எலும்புக்கூடுகளும், மறைந்து போன தாவரங்களின் தண்டுகளும் இலைகளும் கனிகளும் அப்படிவங்களில் புதைந்து கிடப்பதையும் புவியியல் தோன்றி சுட்டிக் காட்டியது. பூமி முழுவதும் மட்டுமின்றி, அத னுடைய தற்போதைய மேல்பரப்பும் அதன் மீது உயிர்வாழ் கின்ற பிராணிகள், தாவரங்கள் ஆகியவையும் காலப் போக்

* கையெழுத்துப் பிரதியின் ஓரத்தில் ஒரு குறிப்பு உள்ளது: ''காண்ட் அவர்களிடமிருந்தே, ஏற்றவற்றங்கள் பூமியின் சுழற்சியை மந்தப்படுத்துகின்றன என்பதும் தற் போதுதான் அறியப்பட்டுள்ளது.''—ப-ர்.

கில் ஒரு வரலாறு உள்ளவை என்பதை அங்கீகரிக்கத் தீர்மானிக்க வேண்டியதாயிற்று. இதை ஆரம்பத்தில் விருப்பமின்றியே அங்கீகரித்தார்கள். பூமியின் புரட்சிகளைப் பற்றிய குவியேயின் தத்துவம் சொற்களில் புரட்சிகரமானதாகவும் சாராம்சத்தில் பிற்போக்காகவும் இருந்தது. ஒரே ஒரு தெய்வீகப் படைப்புக்குப் பதிலாகத் திரும்பத் திரும்ப நிகழும் சிருஷ்டியின் செயல்களின் முழுத் தொடரை அமர்த்தி விட்டு அவர் அற்புதத்தை இயற்கையின் முக்கியமான சாதனமாகச் செய்தார். ஒரு சிருஷ்டிகர்த்தாவின் மனோநிலைக்கேற்ற திடீர் புரட்சிகளுக்குப் பதில் பூமியின் மெதுவான மாற்றத்தின் படிப்படியான விளைவுகள் எனக் கண்டதின் பயனாக லாயெல் புவியியலில் முதல் தடவையாகப் பகுத்தறிவைப் புகுத்தினார்.*

லாயெலின் தத்துவம் அதற்கு முந்திய எந்தத் தத்துவத்தையும் விட மாறாத உயிரினங்கள் என்ற அனுமானத்திற்கு முரணாக இருந்தது. பூமியின் மேல்பரப்பும் வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளும் படிப்படியாக அடையும் மாற்றம், உயிரினங்கள் படிப்படியாக மாறுவதற்கும் அவை மாறி வரும் சுற்றுச் சார்புகளுக்கேற்றவாறு தங்களைச் சரிப்படுத்திக் கொள்வதற்கும் உயிர் வகைகளில் மாறுபாடுகள் நிகழ்வதற்கும் நேராக இட்டுச் சென்றது. ஆனால் சம்பிரதாயம் என்பது கத்தோலிக்க திருச்சபையில் மட்டுமின்றி, இயற்கை விஞ்ஞானத்திலும் ஒரு சக்தியே. பல்லாண்டுகளாக லாயெல் கூட இந்த முரண்பாட்டைப் பார்க்கவில்லை; அவருடைய சீடர்கள் பார்த்ததோ, அதை விடக் குறைவு. இக்காலத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் ஆதிக்கம் பெற்று விட்ட

* லாயெலின் கண்ணோட்டத்தின்—குறைந்த பட்சம் அதன் துவக்க வடிவத்தின்—குறைபாடு, பூமி மீது செயல்படுகிற சக்திகள் அளவிலும் பண்பிலும் மாறாதவை எனக் கருதியதிலே இருந்தது. அவரைப் பொறுத்தவரை, பூமிக்குக் குளிர்ந்து வரும் போக்கு இல்லை; ஒரு திட்டவட்டமான திசையில் பூமி வளர்வதில்லையாம், வெறுமே தொடர்பற்ற, தற்செயலான முறையிலே மாறுகிறதாம். **(பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)**

தொழில் பிரிவினையைக் கொண்டே இதை விளக்க முடியும்; இந்தத் தொழில் பிரிவினை ஒவ்வொருவனையும் அவனுடைய தனித் துறையுடன் வரையறுத்து நிறுத்தி விட்டது; இதனால் விரிந்த கண்ணோட்டத்தை இழக்காதவர்கள் ஒரு சிலர் மட்டுமே.

இதற்கிடையே பௌதிகவியல் மகத்தான அளவில் முன்னேறியது; 1842ஆம் ஆண்டில் ஏறக்குறைய ஒரே சமயத்தில் மூன்று வெவ்வேறான நபர்கள் இந்த முன்னேற்றத்தின் பலன்களைப் பொதுமைப்படுத்தியளித்தனர்; இயற்கை விஞ்ஞானத்தின் இத்துறைக்கு இவ்வாண்டு சகாப்தகரமானதாகும். ஹெயல்பிரான் என்ற நகரில் மாயர் என்பவரும் மாஞ்செஸ்டரில் ஜோவுல் என்பவரும் வெப்பம் இயந்திர சக்தியாகவும் இயந்திர சக்தி வெப்பமாகவும் மாறுவதைச் சோதனையின் மூலம் நிரூபித்துக் காட்டினர். வெப்பத்திற்குரிய இயந்திர வகைப்பட்ட நிகர்மதிப்பு நிர்ணயித்தது இதைப் பற்றிய எல்லா சந்தேகங்களுக்கும் முடிவு கட்டியது. அதே சமயத்தில் பௌதிகவியலில் ஏற்கெனவே தனித் தனியாகக் காணப்பட்ட முடிவுகளை வைத்துக் கொண்டு செயல்பட்டதின் மூலம் குரோவ் என்பவர்—இவர் ஓர் ஆங்கில வழக்குரைஞர், இயற்கை விஞ்ஞானத்தைத் தொழிலாகக் கொண்டவர் அல்ல—இயந்திர சக்தி, வெப்பம், ஒளி, மின்விசை, காந்த விசை என்று சொல்லப்படுகிற எல்லாப் பௌதிகச் சக்திகளும், இரசாயனச் சக்தி என்றழைக்கப்படுவதும் கூட, குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஒன்று மற்றொன்றாக மாறுகின்றன; அப்படி மாறும் பொழுது சக்தி சிறிதேனும் வீணாவதில்லை என்று நிரூபித்தார். இதை நிரூபித்ததின் மூலம் பிரபஞ்சத்தில் உள்ள இயக்கத்தின் மொத்த அளவு ஸ்திரமானது என்ற டெக்கார்ட்டின் கோட்பாட்டைப் பௌதிகத் துறையிலும் அவர் மெய்ப்பித்தார். இத்துடன் பௌதிகவியலின் மாற்றொணாத ''இனங்கள்'' என்று கருதப்பட்ட அந்த விசேஷ பௌதிகவியல் சக்திகள் என்பன பல்வேறு விதமாக வித்தியாசப்படுத்தப்பட்ட பருப்பொருளின் இயக்க வடிவங்களே எனவும் அவை குறிப்பிட்ட நியதிகளுக்குட்பட்டு ஒன்று மற்றொன்றாக மாறுகின்றன

எனவும் தீர்மானமாயிற்று. பௌதிகச் சக்திகள் ஏதோ தற்செயலாகத்தான் இவ்விவ்வளவு எண்ணிக்கையுடையனவாக இருக்கின்றன என்ற கருத்து, அவைகளுக்குள் உள்ள உள் தொடர்புகளும் ஒன்று மற்றொன்றாக மாறும் தன்மைகளும் நிரூபிக்கப்பட்டதினால் விஞ்ஞானத்திலிருந்தே ஒழிக்கப்பட்டது. இயக்கத்திலிருக்கும் பருப்பொருளின் நிரந்தரமான வட்டப் போக்கே கடைசிக்கும் கடைசியான முடிவு என்று நிர்ப்பந்தமாகச் சுட்டிக் காட்டிய ஒரு விளைவுக்கே பௌதிகவியலும், அதற்கு முன் வந்த வானியலைப் போல், வந்து சேர்ந்தது.

லவுவஸியேயுக்குப் பின், குறிப்பாக டால்டனுக்குப் பிறகு வியக்கத்தக்க துரித வளர்ச்சியடைந்த இரசாயனவியல் மற்றொரு பக்கத்திலிருந்து இயற்கையைப் பற்றிய பழங்கருத்துக்களைத் தாக்கியது. இது வரை உயிரினங்களால் மட்டுமே உண்டாக்கப்பட்ட கூட்டுப் பொருள்கள் ஜட வஸ்துக்கள வாயிலாகத் தயாரிக்கப்பட்டன; இதனால் இரசாயனவியலின் நியதிகள் உயிரற்ற வஸ்துக்களுக்குச் செல்லத்தக்கவையாக இருப்பதைப் போலவே உயிர்த் தன்மை உள்ள வஸ்துக்களுக்கும் செல்லத்தக்கன என்பது ருசுப்பிக்கப்பட்டது; ஆக, ஜட வஸ்துவுக்கும் உயிர்த் தன்மை வஸ்துவுக்கும் இடையே உள்ள அகழிக்கு, கான்ட் கூட எப்போதுமே கடக்க முடியாதது என்று கருதிய அகழிக்கு பாலமிடப்பட்டுப் பெருமளவுக்கு இணைக்கப்பட்டது.

இறுதியாக, இதற்கு முந்திய நூற்றாண்டின் நடுப் பகுதியில் இருந்து திட்டமிட்டு நடத்தப்பட்ட விஞ்ஞான ஆய்வுப் பயணங்களும் யாத்திரைகளும், உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இருந்த ஐரோப்பியக் காலனிகளைப் பற்றி அங்கு வாழ்ந்த நிபுணர்கள் நடத்திய முன்னை விட முழுமையான ஆராய்ச்சிகளும், தொல்லுயிரியல், உடற்கூறுவியல், மனித உடலியல் ஆகியவற்றின் பொதுவான முன்னேற்றமும்—அவை குறிப்பாக மைக்ராஸ்கோப் முறையாகப் பயன்படுத்தப்பட்ட பிறகும் உயிரணு கண்டுபிடிக்கப்பட்ட பிறகும் பெற்ற முன்னேற்றமும்—ஆகியவற்றால் உயிரியல் துறை ஆராய்ச்சியிலும் கூட ஏராளமான விஞ்ஞான விஷயாதாரங்

கள் சேகரிக்கப்பட்டன; இக்காரணத்தால் ஒப்பு நோக்கும் முறையை பின்பற்றுவது சாத்தியமாயிற்று என்பது மட்டுமல்ல, அது இன்றியமையாததாகவும் ஆயிற்று.* ஒப்பு நோக்கும் பௌதிகப் பூகோளவியலால், ஒரு பக்கம், பலரக தாவர, மிருக வகைகளின் வாழ்க்கைச் சூழ்நிலைகள் ஸ்தாபிக்கப்பட்டன; மற்றொரு பக்கத்தில், பல்வேறு உயிரினங்கள் அவைகளின் ஒரேமாதிரியான உறுப்புகளை வைத்து ஒப்பு நோக்கப்பட்டன; அவைகளின் முதிர்ச்சி பெற்ற நிலைகளில் மட்டுமின்றி, அவைகளுடைய வளர்ச்சியின் எல்லாக் கட்டங்களிலும் ஒப்பு நோக்கப்பட்டன. இந்த ஆராய்ச்சி மேன்மேலும் ஆழமாகவும் நுணுக்கமாகவும் செய்யப்பட்டு அதன் பாதிப்பால் வரவர உயிர் வகைகளின் மாற்ற வொண்ணா நிலைபாடு என்ற இறுகிப் போன கருத்தமைப்பு மேன்மேலும் சிதறியது. தனித்தனியான தாவர, மிருக வகைகள் என்பன மேலும் மேலும் பிரிக்க முடியாதவாறு பின்னி நின்றன என்பது மட்டுமல்ல, amphioxus, lepidosiren என்ற மிருகங்களும்[37] கண்டு பிடிக்கப்பட்டன; இதற்கு முந்திய இனவகைபிரித்தல்** என்பது இதனால் கேலிக் கூத்தாக்கப்பட்டது; இறுதியாக, தாவர வகையைச் சேர்ந்தனவோ அல்லது மிருக வகையைச் சேர்ந்தனவோ என்று கூடச் சொல்ல முடியாத உயிரினங்களும் தென்பட்டன. உயிர்ப்புள்ள உலகம் முழுவதின் வளர்ச்சி வரலாற்றுக்கும் தனித்த ஓர் உயிரினத்தின் வரலாற்றுக்கும் உள்ள வியக்கத்தக்க ஒருமைப்பாடு பளிச்சிட்டுத் தயக்கங்காட்டியவர்களையும் கூட அதை அங்கீகரிக்க நிர்ப்பந்திக்கும் அளவுக்குத் தொல்லுயிரியல் பதிவேடுகளிடையே உள்ள இடைவெளிகள் நிறைவு பெற்றன; இருட்குகையில் வழி தெரியாமல் மேலும் மேலும் தடுமாறிப் போன தாவரவியலும் விலங்கியலும் சரியான வழி கண்டு பிடித்து வெளியே வருவதற்குரிய அரியாத்னா

* கையெழுத்துப் பிரதியின் ஓரத்தில் ஒரு குறிப்பு உள்ளது: ''கருவியல்.''—ப-ர்.

** கையெழுத்துப் பிரதியின் ஓரத்தில் ஒரு குறிப்பு உள்ளது: "Ceratodus. அதே போல் archaeopteryx,[38] முதலியன.''—ப-ர்.

வின் சரடாக[39] அது விளங்கியது. சூரிய மண்டலம் காலத்தால் முடிவற்றது என்பதை கான்ட் தாக்கிய ஏறக்குறைய அதே சமயத்தில் கி. வோல்ஃப் என்பவர் 1759ஆம் ஆண்டில் உயிரினங்களின் ஸ்திரத் தன்மை என்பதின் மீது தமது முதல் தாக்குதலைத் தொடுத்து பரிணாமத் தத்துவத்தைப் பிரகடனம் செய்ததானது குறிப்பிடத்தக்கது. ஆனால் அவர் விஷயத்தில் ஒரு பிரகாசமான அனுமானமாக இருந்த அது ஓகென், லாமார்க், பாயர் ஆகியோரின் கரங்களில் உறுதியான வடிவம் பெற்றது; பின்னர் சரியாக நூறு வருடங்கள் கழித்து 1859ஆம் ஆண்டில் டார்வின் மூலமாக வெற்றிகரமாக மேலே கொண்டு செல்லப்பட்டது. ஏறத்தாழ அதே காலத்தில் எல்லா உயிரினங்களின் இறுதியான உடலமைப்பியல் கூறுகளாக ஏற்கெனவே காட்டப்பட்ட புரோடோபிளாஸம் என்ற உயிர்த்தாதுவும் உயிரணுவும் சுயேச்சையாக உண்டாகின்றன என்பதும் உயிரினங்களின் கீழ்நிலை வடிவங்கள் அவை என்பதும் ஸ்தாபிக்கப்பட்டது. இது உயிர்ப்பற்ற இயற்கைக்கும் உயிர்ப்புள்ள இயற்கைக்கும் இடையே உள்ள அகழியைப் பெரிய அளவுக்குக் குறுக்கி விட்டது மட்டுமல்ல; உயிரினங்களின் இனத்தோற்றத் தத்துவத்தின் பாதையிலே முன்பு நின்ற இடர்ப்பாடுகளில் மிக முக்கியமான தொன்றை அப்புறப்படுத்தியது. இயற்கையைப் பற்றிய புதிய கண்ணோட்டம் பிரதான அம்சங்களில் முழுமை பெற்றது: வளையாத் தன்மை யாவும் கரைந்து போயிற்று; ஸ்திரத் தன்மையெல்லாம் கலைந்து போயிற்று; நிலையானதாகக் கருதப்பட்ட எல்லாவற்றின் விசேஷமான அம்சங்களும் மாறுந்தன்மையுடையன என்றாயின; நிரந்தரமான மாற்றத்திலும் சுழற்சியிலும் இயற்கை முழுவதுமே இயங்கி வருகிறது எனத் தெளிவாக்கப்பட்டது.

---

ஆக மிகச் சிறிய மூலகத்திலிருந்து மிகப் பெரியது வரை, மணலின் மிகச் சிறு ராசி முதல் சூரியன்கள் வரை, புரோடிஸ்டா[40] முதல் மனிதன் வரை இயற்கை முழுவதும் நிரந்தரமாகத் தோன்றுவதிலும் மறைவதிலும், நிற்காமல் மாறிக்

கொண்டிருப்பதிலும், இடையறாத இயக்கத்திலும் மாற்றத்திலும் தான் நிலைநிற்கிறது என்ற கிரேக்க தத்துவஞானத்தின் மகத்தான ஸ்தாபகர்களின் கண்ணோட்ட முறைக்கே நாம் மறுபடியும் திரும்பி வந்து விட்டோம். ஆனால் முக்கியமான ஒரு வித்தியாசம் மட்டும் உண்டு; கிரேக்கர்கள் விஷயத்தில் ஒளி மிக்க உள்ளுணர்வாக இருந்த அது நமது விஷயத்தில் அனுபவத்தை ஒட்டிய கறாரான விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவாக இருந்தது; இதனால் மேலும் தெளிவுடனும் கச்சிதமான வடிவத்தைப் பெற்றும் விளங்கியது. இந்த வட்ட வளர்ச்சிப் போக்கைப் பற்றிய அனுபவ பூர்வமான ருசுக்களில் சில இடைவெளிகள் இருக்கின்றன என்பது உண்மையே; ஆனால் ஏற்கெனவே உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டு விட்ட அதனுடன், வருடாவருடம் அந்த இடைவெளிகள் நிறைவு பெற்று வருவதையும் சேர்த்து ஒப்பு நோக்கினால் அவை முக்கியத்துவத்தை இழந்து விடுகின்றன. நட்சத்திர வானியல், இரசாயனவியல், புவியியல் ஆகிய பிரதான விஞ்ஞானப் பிரிவுகள் விஞ்ஞான ரீதியாக நிலைத்துநின்று ஒரு நூற்றாண்டு கூட முற்றாகவில்லை; உடலியலில் ஒப்பு நோக்கும் முறை ஏற்பட்டு ஐம்பது ஆண்டுகள் கூட ஆகவில்லை; ஏறக்குறைய உயிரினங்களின் வளர்ச்சி அனைத்துக்கும் அடிப்படை வடிவமான உயிரணு கண்டுபிடிக்கப்பட்டு நாற்பது ஆண்டுகள் கூட முடியவில்லை; எனவே மேற்கூறிய ருசுக்களின் விபரங்களில் இடைவெளிகள் இல்லாமல் எப்படி இருக்க முடியும்?!

---

பால்வெளிப்பாதையின் (Milky Way) வெளிப்புறத்தில் உள்ள விண்மீன்ராசிகளின் வளையங்களை எல்லையாகக் கொண்டுள்ள நமது பிரபஞ்சத் தீவைச் சேர்ந்த எண்ணற்ற சூரியன்களும் சூரிய மண்டலங்களும் சுற்றிச்சுழன்று ஒளி வீசும் வாயுப் படலங்கள் குளிர்ந்து இறுகியதால் ஏற்பட்டவையாகும்; விண்மீன்களின் சொந்த இயக்கத்தைப் பற்றி சில நூற்றாண்டுகள் ஆராய்ச்சிகள் நடந்து அதைக் குறித்து ஓர் உட்பார்வை கிடைத்த பின்னரே ஒருவேளை அவைகளின்

இயக்க நியதிகள் வெளியாகலாம். இந்த வளர்ச்சி எல்லா இடங்களிலும் ஒரே விகிதத்தில் நடைபெறவில்லை என்பது தெளிவு. இருண்ட கோள்கள் இருப்பதை அங்கீகரிக்கும்படி வானியல் மேலும் மேலும் நிர்ப்பந்திக்கப்பட்டு வருகிறது; அவை கோள் இயல்பு மட்டும் பெற்றவை அல்ல; எனவே அவை நமது விண்மீன் மண்டலத்தில் உள்ள ஒளி அணைந்த சூரியன்களேயாம் (மேட்லர்). மற்றொரு புறத்தில் (செக்கி என்பவரின் கருத்துப்படி) வாயு ரூபத்தில் உள்ள ஒளிமுகிற் படலங்களின் ஒரு பகுதி இன்னமும் முழு வடிவம் பெற்றிராத சூரியன்கள் என்கிற வகையில் நமது நட்சத்திர மண்டலத்தைச் சேர்ந்தவையாயுள்ளன; மேட்லர் என்ற விஞ்ஞானி அறுதியிட்டுக் கூறுவது போல், இதர ஒளிமுகிற்கூட்டங்கள் வெகு தூரத்தில் உள்ள சுயேச்சையான பிரபஞ்சத் தீவுகளாக இருக்கக் கூடும் என்பதற்கான சாத்தியக் கூறுகளும் இதில் உள்ளடங்குகின்றன; இவை எந்த வளர்ச்சிக் கட்டங்களில் உள்ளன என்பது நிறமாலைக் கருவியின் மூலம் நிர்ணயிக்கப்பட வேண்டியுள்ளது.

ஒரு தனிப்பட்ட ஒளிமுகிற்படலத்திலிருந்து ஒரு சூரிய மண்டலம் எவ்வாறு உண்டாகிறது என்பதை லாப்லாஸ் ஒப்பாரும் மிக்காருமற்ற முறையில் விவரமாக எடுத்துக் காட்டியுள்ளார்; அவருக்குப் பிந்திய விஞ்ஞானம் அவரது கருத்தை மேலும் மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

இவ்விதம் உருவான தனித்தனியான கோள்களின் மீது— சூரியன்கள் மட்டுமின்றிக் கோள்கள், துணைக்கோள்கள் ஆகியவற்றின் மீதும்—துவக்க நிலையில் ஆட்கொண்ட பருப்பொருளின் இயக்க வடிவம் நாம் கூறும் வெப்பம் என்பதேயாம். சூரியனில் தற்போதுள்ள வெப்ப நிலையிலும் கூட மூலகங்களின் எவ்வித இரசாயனக் கூட்டுப் பொருள்கள் உண்டாகவும் சாத்தியப்பாடு இல்லை; இவ்விதச் சூழ்நிலைகளில் வெப்பம் எந்த அளவுக்கு மின்சாரமாக அல்லது காந்த சக்தியாக மாற்றப்படுகிறது என்பதைத் தொடர்ந்தாற் போல் நடைபெறுகிற சூரிய ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தும்; வெப்பத்திற்கும் ஈர்ப்புச் சக்திக்கும் உள்ள முரண்பாடு ஒன்றினாலேயே சூரியனில் இயந்திர முறையிலான இயக்கம்

உண்டாகிறது என்பது ஏறக்குறைய நிரூபிக்கப்பட்டதாகவே கொள்ளலாம்.

கோள்கள் சிறிதாக இருக்கிற வரை அவை துரிதமாகக் குளிர்ந்து விடுகின்றன; துணைக்கோள்கள், நுண்கோள்கள் (asteroids), எரி நட்சத்திரங்கள் ஆகியன நமது சந்திரன் வெகு காலத்திற்கு முன்பே அணைந்து போனதைப் போல முதன் முதலில் குளிர்ச்சியடைகின்றன. கோள்கள் இதை விட மெதுவாகவும் மையமாக உள்ள சூரியன் எல்லாவற்றைக் காட்டிலும் மிக மெதுவாகவும் குளிர்ச்சியடைகின்றன.

படிப்படியாகக் குளிர்ச்சி பெறப்பெற இயக்கத்தின் ஒன்று மற்றொன்றாக மாறுகிற பௌதிக வடிவங்களின் பரஸ்பரச் செயற்பாடு மேலும் மேலும் முன்னணிக்கு வருகிறது; இறுதியிலே ஒரு குறிப்பிட்ட கட்டத்திலிருந்து அவைகளின் இரசாயன உறவு முக்கியத்துவம் பெற ஆரம்பிக்கிறது; இதற்கு முன்பு இரசாயன ரீதியாக உறக்கத்திலிருந்த மூலகங்கள் இரசாயன ரீதியாக ஒன்று மற்றொன்றிலிருந்து வேறுபடத் துவங்குகின்றன; இரசாயன குணாம்சங்களைப் பெறுகின்றன; ஒன்று மற்றொன்றுடன் இணைகின்றன. வெப்ப நிலை குறையக் குறைய இந்த இரசாயனக் கூட்டுப் பொருள்களும் தொடர்ந்து மாறுகின்றன; இந்தக் குறையும் வெப்ப நிலை ஒவ்வொரு மூலகத்தை மட்டுமன்றி மூலகங்களின் ஒவ்வொரு தனித்தனியான கூட்டுப் பொருளையும் வெவ்வேறு விதமாகப் பாதிக்கிறது; வாயு ரூபமாக உள்ள பொருளின் ஒரு பகுதி முதலில் திரவமாகவும் பிறகு திடப் பொருளாகவும் மாறுவதோடு இப்படிச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய சூழ்நிலைகளோடும் இந்தக் கூட்டுப் பொருள்கள் மாறுபாடு அடைகின்றன.

விண்கோள் உறுதியான மேலோட்டைப் பெற்று அதன் மேல்பரப்பில் நீர் திரளும் நேரம், மையத்திலுள்ள சூரியனிலிருந்து எவ்வளவு வெப்பம் அதற்கு அனுப்பப்படுகிறதோ, அதை விட அதிகமாகத் தன்னுள் உள்ள வெப்பத்தை இழக்கக் கூடிய நிலையை அடையும் நேரத்தோடும் பொருந்துகிறது. அதன் வாயு மண்டலம் நாம் இப்போது கூறுகிற அர்த்தத்தில் உள்ள பருவநிலை நிகழ்ச்சிகளுக்கு அரங்கா

கிறது; அதன் மேல்பரப்பு புவியியல் மாற்றங்களின் அரங்காகிறது; கோளின் மிக வெப்பமான, திரவத் தன்மையுள்ள மையத்திலிருந்த மெதுவாகக் குறைந்து வரும் அதன் வெளிப்புற விளைவுகளுடன் நீர்ப்பொழிவால் ஏற்படுத்தப்படும் படிவங்களை ஒப்பு நோக்கும் போது பின்சொன்னதினால் நிகழும் புவியியல் மாற்றங்கள் மேலும் மேலும் அதிகமான முக்கியத்துவம் பெறுகின்றன.

கடைசியாக, புரதப் பொருள் உயிர் பிடிக்கும் வரையறையை மீறாத அளவுக்குக் குறைந்த பட்சம் பெரும் பகுதி மேல்பரப்பில் வெப்ப நிலையானது சமனமடையும் போது இதர இரசாயனப் பூர்வாங்க நிலைகள் சாதகமாக இருந்தால் புரோடோபிளாஸம் என்ற உயிர்த் தாது உண்டாகிறது. இந்தப் பூர்வாங்க நிலைகள் என்ன என்பதை நாம் இன்னும் அறியவில்லை. இதில் வியப்பொன்றும் இல்லை; ஏனெனில் புரதப் பொருளின் இரசாயனச் சூத்திரம் கூட இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லை; இரசாயனத் துறையில் எத்தனை வித மாறுபட்ட புரதப் பொருள்கள் உள்ளன என்பதும் கூட நமக்குத் தெரியாது; முழுமையாகவே ஓர் அமைப்பில்லாத புரதப் பொருள் உயிரின் எல்லா அத்தியாவசிய செய்கைகளையும்—உணவைச் செரித்தல், மலஜலங் கழித்தல், அசைவு, சுருங்குதல், தூண்டலுக்கு நெகிழ்தல், இனப்பெருக்கம் ஆகியவற்றை—செயற்படுத்துகிறது என்பது அறியப்பட்டு சுமார் பத்தாண்டுகள்தான் ஆகிறது.

இதிலிருந்து அடுத்த படி,முன்னேற்றம் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் உருவாகி இந்த அமைப்பு உருவமற்ற புரதப் பொருள் ஒரு மென் சவ்வுப் போர்வையாக உள்ள உட்கருவைக் கொண்ட முதல் உயிரணுவை உற்பத்தி செய்யப் பல ஆயிரம் ஆண்டுகள் பிடித்திருக்கும். உயிர்ப்புள்ள உலகு முழுமையின் அமைப்பியல் வளர்ச்சிக்கே இந்த முதல் அணு அடித்தளமாக அமைந்தது. தொல்லுயிரியல் பதிவேடுகளின் எல்லா விவரங்களையும் வைத்துப் பார்க்கும் போது முதலில் வளர்ச்சி பெற்றவை உயிரணுத் தன்மை உள்ளதும் அற்றதுமான எண்ணற்ற புரோடிஸ்டா இனங்களே; இவற்றில் Eozoon canadense[41] என்பது மட்டும் நமக்குக் கிடைத்

துள்ளது; இவற்றிலிருந்து சில படிப்படியான வேறுபாடுகள் பெற்று முதல் தாவரங்களாகவும் மற்றவை முதல் விலங்குகளாகவும் மாறின. இந்த முதல் விலங்குகளிலிருந்து பிரதானமாகப் பின்வந்த வேறுபாடுகளினால் அனேக வகைகள், வரிசை முறைகள், குடும்பங்கள், வம்சங்கள், இனங்களான விலங்குகள் தோன்றி வளர்ந்தன; கடைசியாக, நரம்பு மண்டலம் முழு வளர்ச்சி பெற்ற முதுகெலும்புள்ள மிருகங்களும் தோன்றின; இவைகளின் மத்தியிலிருந்து இறுதியாக இயற்கை தன்னைத் தானே உணரும் சக்தி பெற்ற முதுகெலும்புள்ள விலங்கான மனிதனும் தோன்றினான்.

மனிதன் கூடப் பாகுபாட்டு முறையினால் தோன்றியவனே. தனிப்பட்ட முறையில் மட்டுமல்ல—ஒரே ஒரு முட்டை அணுவிலிருந்து வளர்ந்து இயற்கையின் மிகச் சிக்கல் நிறைந்த சிருஷ்டியான ஓர் உயிரினமாக மட்டுமல்ல; வரலாற்று ரீதியாகவும் கூட. பல்லாயிர வருடப் போராட்டத்திற்குப் பிறகு பாதத்திலிருந்து கை வேறுபாடு அடைவது என்பதும் நிமிர்ந்த நடை என்பதும் இறுதியாக ஸ்தாபிக்கப்பட்டன; மனிதக் குரங்கிலிருந்து மனிதன் வேறுபட்டு நின்றான்; தெளிவான பேச்சுக்கும் மூளையின் மகத்தான வளர்ச்சிக்கும் அடித்தளம் அமைக்கப்பட்டது; இதனால் மனிதனுக்கும் மனிதக் குரங்கிற்கும் உள்ள அகழி இணைக்க முடியாததாகியது. கை விசேஷத் திறன் பெறுகிறது—இதன் உட்கிடை உழைப்புக்குரிய கருவி கிடைக்கிறது என்பதாகும்; உழைப்புக்குரிய கருவி என்னும் போது குறிப்பிட்ட மனிதச் செயல்பாடு என்பதும் இயற்கை மீது மனிதனின் மாற்றும் தன்மையுள்ள எதிரியக்கமான பொருள் உற்பத்தி என்பதும் ஆகிறது. விலங்குகளும் கூட உழைப்புக்குரிய கருவிகளை—குறுகிய பொருளில்—பெற்றுள்ளன; ஆனால் இந்தக் கருவிகள் அவற்றின் உடலுறுப்புகளாக உள்ளன: எறும்பு, தேனீ, பீவர்; விலங்குகளும் பொருள் உற்பத்தி செய்கின்றன; ஆனால் சூழ்ந்துள்ள இயற்கையின் மீது அவை விளைவிக்கும் மாற்றம் இவ்வியற்கையின் விஷயத்தில் ஒன்றுமில்லை என்றே சொல்லலாம். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தாவர, விலங்கினங்களை மாற்றி வைத்ததினால் மட்டு

மின்றி தான் குடியுள்ள இடத்தின் தோற்றத்தையும் பருவ நிலையையும், விலங்குகளையும் தாவரங்களையும் கூடத் திருத்தியமைத்து விட்டதின் மூலம் மனிதன் மட்டுமே இயற்கையின் மீது தனது முத்திரையைப் பதியவைப்பதில் வெற்றி கண்டான்; இதனால் இப்பூவுலகம் அழிகின்ற பொழுதுதான் அவனுடைய செயலின் விளைவுகளும் அழியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இத்தனையையும் அவன் முதன்மையாகவும் முக்கியமாகவும் சாதித்தது தனது **கையினால்.** இயற்கையை மாற்றியமைப்பதில் அவனிடம் இது வரை உள்ளதில் மிக வலுவுள்ளதான நீராவி எஞ்சினும் கூட ஓர் உழைப்புக் கருவி என்ற பொருளில் இறுதியாகக் கையைத்தான் சார்ந்துள்ளது. ஆனால் கையின் வளர்ச்சியுடன் படிப்படியாக மூளையும் வளர்ச்சி பெற்றுச் சென்றது; ஆரம்பத்தில் நடைமுறையில் பயனுள்ள தனித்தனி செய்கைகளுக்கு அவசியமான சூழ்நிலைகளைப் பற்றிய உணர்வும் பின்னர் அதிக சாதக நிலையிலுள்ள மக்களிடையே அந்த உணர்விலிருந்து அந்தச் சூழ்நிலைகளை ஆளும் இயற்கை நியதிகளைப் பற்றிய உட்பார்வையும் வந்தன. இயற்கையின் நியதிகளைப் பற்றிய அறிவு விரைவாகப் பெருகப் பெருக இயற்கையின் மீது எதிரியக்கமாகச் செயல்படுவதற்கான சாதனங்களும் வளர்ந்தன; கையுடனும் அதற்கு அக்கம் பக்கமாகவும் ஓரளவுக்கு அதன் காரணமாகவும் மனிதனின் மூளையும் அதை அனுசரித்து வளர்ச்சி பெற்றிருக்கவில்லை எனில், கை மட்டும் நீராவி எஞ்சினைப் படைத்திருக்க முடியாது.

மனிதனுடன் வரலாறு துவங்குகிறது. விலங்குகளுக்கும் அவைகளின் இனத்தோற்றத்திலிருந்து தொடங்கி படிப்படியாக இன்றைய நிலைக்கு எவ்வாறு பரிணமித்தன என்று ஒரு வரலாறு உண்டு. இருந்தாலும் கூட, இந்த வரலாறு அவைகளுக்காக உண்டாக்கப்பட்டதே; அதில் அவைகளே பங்கு பற்றும் அளவுக்கு அவைகளுடைய உணர்வும் விருப்பமும் இல்லாமலே இது நிகழ்கிறது. இதற்கு மாறாக மனிதர்கள்—குறுகிய பொருளில்—விலங்குகளிடமிருந்து எந்த அளவுக்கு விலகிச் செல்கிறார்களோ, அந்த அளவுக்கு அவர்கள் தங்களது வரலாற்றைத் தாங்களே உணர்வு பூர்வமாகப்

படைக்கின்றனர்; இதனால் அந்த அளவுக்கு எதிர்பாராத விளைவுகளினுடையவும் கட்டுக்குள் இல்லாத சக்திகளுடைய வும் பாதிப்புகள் இந்த வரலாற்றின் மீது குறைந்து, முன் கூட்டியே நிர்ணயித்தகு றிக்கோளுடன் வரலாற்றுப் பூர்வ மான விளைவும் மேலும் திட்பநுட்பமாகப் பொருந்துகிறது. ஆனால் இந்த அளவுகோலை மனித வரலாற்றிற்கு வைத்துப் பார்த்தோமெனில், தற்போது மிக அபிவிருத்தியடைந்துள்ள மக்களின் வரலாற்றுக்கு வைத்துப் பார்த்தாலும் கூட, கொள்ளப்பட்ட குறிக்கோள்களுக்கும் பெறப்பட்ட பலன் களுக்கும் பிரம்மாண்டமான தகவு வேறுபாடு இன்னும் கூட உள்ளது என்பதையும் எதிர்பாராத விளைவுகளே மேலோங்கி நிற்கின்றன என்பதையும் திட்டமிட்டு இயக்கி விடப்பட்ட சக்திகளைக் காட்டிலும் கட்டுக்குள் இல்லாத சக்திகளே அதிக வலுவுடன் விளங்குகின்றன என்பதையும் நாம் காண் கிறோம். மனிதர்களின் மிக முக்கியமான சரித்திர பூர்வ மான செயல்பாடு, அவர்களை விலங்குகளின் நிலையி லிருந்து மானுட நிலைக்கு உயர்த்தியதும் அவர்களின் இதர எல்லாச் செயல்பாடுகளுக்கும் பௌதிக அடித்தளமாக உள்ளதுமான செயல்பாடு—அதாவது, அவர்களுடைய வாழ்க்கைத் தேவைப் பொருள்களை உற்பத்தி செய்து கொள்வது, நம் காலத்தில் சமூக உற்பத்தி எனப்படு வது—கட்டுக்குள் இல்லாத சக்திகளின் எதிர்பார்க்காத விளைவுகளின் பரஸ்பர வினைக்கு உள்ளாக்கப்பட்டு, விரும்பப்படுகிற குறிக்கோள் விதிவிலக்காக மட்டுமே அடையப்பட்டும், அதனால் பெரும்பாலாக அதற்கு நேர் எதிராகவே பெறப்பட்டும் இருக்கிற வரை அது வேறு விதமாக இருக்க முடியாது. தொழில்துறையில் மிகவும் முன்னேறியுள்ள நாடுகளில் இயற்கைச் சக்திகளை நாம் அடக்கி மனிதனுக்காக உழைக்குமாறு ஏவியிருக்கிறோம்; இதன் மூலமாக எல்லையற்ற அளவுக்கு, வயது வந்த நூறு பேர்கள் முன்பு உற்பத்தி செய்ததை விட ஒரு சிறுவன் தற் போது அதிகமாக உற்பத்தி செய்யும் அளவுக்கு உற்பத்தி யைப் பெருக்கியுள்ளோம். இதன் பலன் என்ன? அதிகமாகிற வேலைப் பளுவும் அதிகமாகி வருகிற மக்களுடைய வறுமை

யும் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை பெரிய அளவுக்குச் சரிவு மேயாகும். வரலாற்று ரீதியான வளர்ச்சியின் சிகரம் எனப் பொருளாதாரவாதிகள் கொண்டாடும் சுயேச்சையான போட்டி, பிழைப்புப் போராட்டம் என்பது விலங்கின உலகின் சகஜமான நிலைப்பாடாகும் என டார்வின் எடுத்துக் காட்டிய பொழுது அவர் மனித குலத்தைப் பற்றி, விசேஷமாகத் தமது நாட்டவரைக் குறித்து எவ்வளவு கசப்பானதொரு நையாண்டி நூலை வரைந்து விட்டார் என்பதை அவர் அறியவில்லை. உற்பத்தியும் வினியோகமும் திட்டமிட்டு நடத்தப்படுகிற சமூக உற்பத்தி உணர்வு பூர்வமாக ஸ்தாபன ரீதியான அமைப்புக்குள் கொண்டு வரப்படுகின்ற போதுதான் சமூகத் துறையிலும் மனித குலம் இதர விலங்கின உலகிலிருந்து மேலே உயர்த்தப்பட முடியும்; அதே முறையில்தான் பொதுவான பொருள் உற்பத்தி இதைக் குறிப்பாக உயிரியல் துறையில் மனித குலத்திற்குச் செய்தது. சரித்திர ரீதியான பரிணாமம் என்பது அப்படிப்பட்டதொரு ஸ்தாபன ரீதியான அமைப்பைத்தானே தவிர்க்க முடியாததாக்குகிறது; ஒவ்வொரு நாளும் அதைச் சாத்தியமாக்கவும் செய்கிறது. அந்தக் காலத்திலிருந்து வரலாற்றின் ஒரு புதிய சகாப்தம் துவங்கும்; அதில் மானுட வாக்கமே, அத்துடன் எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த அதனுடைய செயலாற்றல்களுமே, குறிப்பாக இயற்கை விஞ்ஞானமே அடையக் கூடிய பெரும் முன்னேற்றம் இதற்கு முந்திய அனைத்தையும் வெகு தூரம் மிஞ்சித் திகழும்.

இருந்தாலும் கூட, ''பிறக்கும் அனைத்தும் அழியத் தக்கவையே.''* கோடிக்கணக்கான வருடங்களுக்குப் பிறகு, லட்சக்கணக்கான தலைமுறைகள் தோன்றி மறைந்த பிறகு துருவங்களிலிருந்து உந்திக் கொண்டு வரும் உறை பனிப் படலத்தை உருக்கி விடுவதற்குச் சூரியனுடைய குறைந்து வரும் வெப்பம் போதாததாகி விடக் கூடிய காலம் தவிர்க்க முடியாமல் வந்தே தீரும்; மனித குலம் பூமத்தியரேகை

---

* கேதே, ஃபாவுஸ்ட், பாகம் I, காட்சி 3 (''ஃபாவுஸ்டின் படிப்பறை'').—ப-ர்.

யைச் சுற்றிச் சூழ்ந்து வாழும் நிலை ஏற்பட்டு கடைசியாக அங்கும் வாழ்வுக்குப் போதுமான வெப்பம் இல்லாத நிலையை எய்தி விடும்; பிறகு படிப்படியாக உயிர்ப்புள்ள ராசிகளின் கடைசி எச்சங்களும் மறைந்து விடும்; சந்திரன் போல் இந்நில உலகம் ஒளி அணைந்து உறைந்து போய் ஆதிக்கும்மிருட்டில் நாளுக்கு நாள் குறுகி வருகிற விண்வெளிப் பாதையில் அதே போல் ஒளி அணைந்த சூரியனை வட்டமிட்டு வந்து அதனுள் விழுந்து விடும். இதே போல் இதர கிரகங்கள் முன்னமேயே விழுந்திருக்கும்; மற்ற கிரகங்களும் இதையே பின்பற்றி வரும். இசைவாக அமைந்துள்ள உறுப்புகளைக் கொண்ட ஓர் ஏற்பாட்டில் இருக்கிற, ஒளி பொருந்திய, வெப்பமான சூரிய மண்டலத்திற்குப் பதில் சில்லிட்டு மாண்டு போன ஒரு கோளம் பிரபஞ்சத்தின் அண்ட வெளியிலே தன்னந்தனியாகச் சுற்றி வரும். நமது சூரிய மண்டலத்திற்கு ஏற்படும் கதி நமது பிரபஞ்சத் தீவின் எல்லா மண்டலங்களுக்கும் முன்போ பிறகோ நிகழ்ந்துதான் தீரும்; இதர எல்லாப் பிரபஞ்சத் தீவுகளுக்கும் ஏற்பட்டே தீரும்; கண்ணில் படுவதற்கு உயிருள்ள ஒரு மனிதன் இருக்கும் போது கூட இந்நில உலகை வந்து சேராத ஒளியுள்ள அவ்வளவு தூரத்தில் இருக்கிற எண்ணற்ற பிரபஞ்சத் தீவுகளுக்கும் இது நிகழ்ந்தே தீரும்.

இவ்விதம் ஒரு சூரிய மண்டலம் தனது ஆயுள் வரலாற்றை முடித்துக் கொண்டு முடிவு எல்லையுள்ள எல்லாவற்றிற்கும் உரிய மரணத்திற்குப் பணிந்து விட்ட பொழுது மேற்கொண்டு என்ன? எல்லையற்ற அண்ட வெளியில் சூரியனின் சடலம் சதாசர்வ காலமும் உருண்டு வருமா? ஒரு காலத்தில் வரையறையற்றுப் பல்வேறு வகையாக வேறுபட்டு நின்ற இயற்கைச் சக்திகள் எல்லாம் கவர்ச்சி என்ற ஒரே ஓர் இயக்க வடிவத்தை மட்டும் நிரந்தரமாகப் பெற்று விடுமா?

''அல்லது''—செக்கி கேட்பது போல் (பக்கம் 810)—''மாண்டு போன இந்த மண்டலத்தை ஒளிர்கின்ற ஒளி முகிலாக ஆரம்ப நிலைக்கு மீண்டும் மாற்றி அதைப் புதிய வாழ்க்கைக்கு மீண்டும் உயிர்த்தெழச் செய்கிற வினைகள் இயற்கையில் உள்ளனவா? நாம் அறியோம்.''

$2 \times 2 = 4$ என்று நாம் அறிந்துள்ளதைப் போல, அல்லது பருப்பொருளின் கவர்ச்சி அது உள்ள தூரத்தை ஒட்டி சதுர அளவில் பெருகும் அல்லது குறையும் என்பதை அறிந்துள்ளதைப் போல, அது நமக்குத் தெரியாதுதான். இருந்த போதிலும், தத்துவ ரீதியான இயற்கை விஞ்ஞானம் இயற்கையைப் பற்றிய தனது கண்ணோட்டத்தை ஒரு முழுமையுள்ள இசைவான அமைப்பாக முடிந்த வரை நிர்மாணிக்கிறது; அப்படி இல்லையெனில், ஒரு சிந்திக்காத அனுபவ வியல்வாதியும் கூட அது இல்லாமல் தற்காலத்தில் ஒன்றும் சாதித்துவிட முடியாது; இதில் நாம் மிகவும் அடிக்கடி முற்றிலும் அறியப்படாத பரிமாணங்களைக் கொண்டு கணக்கிட வேண்டியுள்ளது; முரணற்ற சிந்தனை என்பதே எல்லாச் சமயங்களிலும் உதவி புரிந்து குறைபாடுள்ள அறிவை நிறைவு செய்ய வேண்டும். நவீன காலத்து இயற்கை விஞ்ஞானம் இயக்கத்தின் அழிக்கவொண்ணாத் தன்மை என்ற கோட்பாட்டைத் தத்துவஞானத்திலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது; இந்தக் கோட்பாடு இல்லாமல் இனி அது இருக்க முடியாது. ஆனால் பருப்பொருளின் இயக்கம் என்பது வெறும் கொச்சையான இயந்திர இயக்கம் மட்டுமல்ல, வெறும் இடப் பெயர்ச்சி மட்டுமல்ல; அது வெப்பம், ஒளி, மின் அழுத்தம், காந்த அழுத்தம், இரசாயனச் சேர்க்கை, இரசாயனச் சிதைவு, உயிர்ப்பு, இறுதியாக உணர்வும் ஆகும். பருப்பொருள் தனது எல்லையற்ற வாழ்வுக் காலம் முழுவதிலும் ஒரே ஒரு தடவை மட்டுமே—அதுவும் அதனுடைய சாஸ்வதமான நிலைநிற்புடன் ஒப்பிடும் போது மிக நுணுக்கமான குறுகிய காலத்திற்கு மட்டுமே—தனது இயக்கத்தை வேறுபடுத்திக் காட்ட அதனால் சாத்தியமாயிற்று என்றும் அதன் மூலம் இந்த இயக்கத்தின் செழுமை முழுவதும் வெளிப்பட்டது என்றும் இதற்கு முன்பும் பின்பும் அந்தந்தக் காலத்திற்கும் வெறும் இடப் பெயர்ச்சி அளவிற்குத் தன்னைக் குறுக்கிக் கொள்கிறது என்றும் கூறுவதெனில், பருப்பொருள் மாண்டு போகும் தன்மையுடையது, இயக்கம் தற்காலிகமானது என்பதற்குச் சமமாகும். இயக்கத்தின் அழிக்கவொண்ணாத் தன்மை என்பதை வெறும் அளவு

நிலையிலே மட்டும் கருதக் கூடாது; பண்பு நிலையிலும் அது கருதப்பட வேண்டும். பருப்பொருளின் சுத்தமான இயந்திர முறையிலான இடப் பெயர்ச்சி என்னும் போது சாதகமான சூழ்நிலைகளில் அது வெப்பம், மின்சாரம், இரசாயனச் செய்கை, உயிர்ப்பு என்று மாற்றம் பெறும் தன்மை பெற்றிருக்கிறது என்றும் ஆனால் அந்தச் சூழ்நிலைகளைத் தன்னுள்ளிருந்தே உற்பத்தி செய்து கொள்ள முடியவில்லை என்றும் ஆகிறது என்றால் அப்படிப்பட்ட பருப்பொருள் இயக்கத்தைப் பறிகொடுத்து விட்டது என்பதேயாகும். அந்த இயக்கம் தனக்குப் பொருத்தமான பல வடிவங்களைப் பெறும் தன்மையை இழந்து விட்டாலும் அது இன்னும் dynamis* பெற்றிருக்க முடியும் என்றும் ஆனால் energeia** மட்டும் இல்லை என்றும் ஆக அது தன்னில் ஒரு பகுதியை அழித்துக் கொண்டது என்றும் ஆகிறது. ஆனால் இவ்விரண்டும் சிந்திக்கச் சாத்தியமில்லாதவையாகின்றன.

இது மட்டும் உறுதி: ஒரு காலத்தில் நமது பிரபஞ்சத் தீவைச் சேர்ந்த பருப்பொருள், குறைந்த பட்சம் இரண்டு கோடி விண்மீன்களைக் கொண்ட சூரிய மண்டலங்களை உற்பத்தி செய்யக் கூடிய (மேட்லரின் கருத்துப்படி) அளவுக்குத் தனது இயக்கத்தை—அது எவ்வகையானது என்பது இன்னும் அறியப்படவில்லை—வெப்பமாக மாற்றியுள்ளது; அதே போல் அவை படிப்படியாக மறைவதும் திண்ணம். இந்த மாற்றம் எப்படி நிகழ்ந்தது? நமது சூரிய மண்டலத்தின் எதிர்கால caput mortuum*** புதிய சூரிய மண்டலங்கள் உண்டாவதற்கான மூலப் பொருளாக மறுபடியும் மாறுமா என்பதைப் பற்றி செக்கி பாதிரியாருக்கு எவ்வளவு குறைவாகத் தெரியுமோ, அதே போல் நமக்கும் குறைவாகவே தெரியும். இந்த இடத்திலே நாம் சிருஷ்டிகர்த்தாவை

*—விசை.—ப-ர்.

**—ஆற்றல்.—ப-ர்.

***—நேர்ப்பொருளில்: செத்த தலை; இங்கே அணைந்து போன சூரியனும் அதன் மேல் விழுந்த உயிரற்ற கோள்களும் குறிக்கப்படுகின்றன.—ப-ர்.

ஆதாரம் தேட வேண்டும், அல்லது அசையும் பருப்பொருளுக்குள் இயல்பாகவே அடங்கியுள்ள இயக்கத்தின் மாற்றங்களால் நமது பிரபஞ்சத் தீவைச் சேர்ந்த சூரிய மண்டலங்கள் உண்டாவதற்கான ஒளியூட்டம் மிக்க மூலப் பொருள் இயற்கையான முறையில் உற்பத்தி செய்யப்பட்டது, ஆகவே இயக்கத்தின் இந்த மாற்றங்களுக்கான சூழ்நிலைகளையும் பருப்பொருளே மறுபடியும் உற்பத்தி செய்தாக வேண்டும், அது கோடானுகோடி வருடங்களுக்குப் பிறகு ஏறக்குறையத் தற்செயலாகவாவது நிகழும், ஆனால் தற்செயலாக என்பதில் அவசியம் என்பதும் அடங்கியுள்ளது என்று நாம் தீர்மானிக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறோம்.

அப்படிப்பட்ட மாற்றத்திற்கான சாத்தியப்பாடு மேலும் மேலும் ஒப்புக் கொள்ளப்பட்டு வருகிறது. வானத்தில் இயங்கும் கோள்கள் இறுதியாக ஒன்றுக்குள் ஒன்று விழுந்தாக வேண்டும் என்ற கருத்திற்கே அனைவரும் வருகின்றனர்; அது மட்டுமின்றி, அப்படிப்பட்ட மோதல்கள் நிகழும் போது எவ்வளவு வெப்பம் உண்டாக்கப்படும் என்பதும் கூடக் கணக்கிடப்படுகிறது. புதிய விண்மீன்கள் திடீரெனப் பீறிட்டுக் கொழுந்து விடுவதாகவும் ஏற்கெனவே நாம் அறிந்த விண்மீன்களின் ஒளி திடீரெனச் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது என்றும் வானியல் நமக்கு அறிவிக்கிறது; அப்படிப்பட்ட மோதல்களினால் இந்த நிகழ்ச்சிகளுக்கு எளிதான விளக்கம் கிடைக்கிறது. மேலும், நமது கிரகங்களின் கூட்டம் சூரியனைச் சுற்றி வருகின்றது என்பதும் நமது சூரியன் நமது பிரபஞ்சத் தீவினுள்ளே இயங்குகிறது என்பதும் மட்டுமல்ல, நமது பிரபஞ்சத் தீவு முழுவதும் இதரப் பிரபஞ்சத் தீவுகளுடன் தற்காலிகமான, ஒப்புமைச் சமன் நிலையில் அண்டவெளியில் இயங்குகிறது; சுதந்திரமாக மிதக்கும் கோள்களின் சார்புச் சமன நிலையும் கூட அவைகளின் இயக்கம் பரஸ்பர ரீதியாக நிர்ணயிக்கப்பட்டால் மட்டும் நிலைநிற்க முடியும்; அண்டவெளி முழுவதிலும் எல்லா இடங்களிலும் வெப்பநிலை ஒரே மாதிரியாக இல்லை எனப் பலரும் அனுமானிக்கின்றனர். இறுதியாக, நமது பிரபஞ்சத் தீவின் எண்ணற்ற சூரியன்களின் வெப்பத்தில் மிக நுண்ணிய

அளவு நீங்கலாக மிகுதி முழுவதும் அண்டவெளியில் மறைந்து விடுகிறது என்பதும் ஒரு சென்டிகிரேட் டிகிரியில் பத்து லட்சத்தில் ஒரு பங்கின் அளவுக்குக் கூட அண்டவெளியின் வெப்பநிலையை அது உயர்த்துவதில்லை என்பதும் நமக்குத் தெரியும். இவ்வளவு பிரம்மாண்டமான அளவு வெப்பம் என்ன ஆகிறது? பிரபஞ்சத்தின் அண்டவெளிக்குச் சூடேற்றும் முயற்சியில் அது நிரந்தரமாகச் சிதறி மறைந்து வருகிறதா? நடைமுறையில் அது மாண்டு அழிந்ததா? அல்லது ஒரு டிகிரியில் பத்து அல்லது அதற்கு மேலான பூஜ்ஜியங்கள் உள்ள ஒரு தசாம்ச பின்னத்தின் அளவுக்கு அது அண்டவெளியின் வெப்ப நிலையை உயர்த்துகிறது என்ற பொருளில் தத்துவ ரீதியாக மட்டும் தொடர்ந்து நிலைநிற்கிறதா? இப்படி அனுமானித்தல், இயக்கத்தின் அழிக்கவொண்ணாத் தன்மையை மறுப்பதற்கொப்பாகும்; விண்கோள்கள் தொடர்ந்து ஒன்றுக்குள் ஒன்று விழுந்து விடுவதினால் தற்போதுள்ள இயந்திரச் சலனம் முழுவதும் வெப்பமாக மாறி அதுவும் அண்டவெளிக்குள் கதிர் வீச்சு முறையில் சென்று விடுகிறபடியால் ''சக்தியின் அழிக்கவொண்ணாத் தன்மை'' என்றெல்லாம் சொல்லப்பட்ட போதிலும் இயக்கம் என்பது பொதுவாக அழியும் என்ற கருத்திற்கு இடமளிப்பதாக ஆகிறது. (இதற்கிடையே, இங்கே இயக்கத்தின் அழிக்கவொண்ணாத் தன்மை என்ற சொற்றொடருக்குப் பதில் சக்தியின் அழிக்கவொண்ணாத் தன்மை என்ற சொற்றொடர் எவ்வளவு பொருத்தமற்றிருக்கிறது என்பதைக் காணலாம்.) ஆகையால் ஏதாவது ஒரு வழியில்—இவ்வழியைக் காட்டுவது பின்னால் இயற்கை விஞ்ஞான ஆராய்ச்சியின் கடமையாக இருக்கும்—அண்டவெளிக்குள் கதிர் வீச்சு முறையில் சென்ற வெப்பம் இயக்கத்தின் மற்றொரு வடிவமாக மாற முடியும் என்றதும் இந்த வடிவத்தில் அது சேமிக்கப்பட்டு மறுபடியும் செயலாற்றலுக்கு வர முடியும் என்றதுமான முடிவுக்குத்தான் நாம் வர வேண்டும். இதன் மூலமாக, ஒளி இழந்த சூரியன்கள் மறுபடியும் வெண்ணொளி வீசும் ஆவியாக மாறுவதில் உள்ள பிரதானமான முட்டுக்கட்டை நீங்குகிறது.

இதர விஷயங்களைப் பொறுத்தவரை, எல்லையற்ற காலத்தில் உலகங்கள் எப்பொழுதுமே ஒன்றைத் தொடர்ந்து ஒன்று உண்டாகும் என்பதானது, எல்லையற்ற அண்டவெளியில் எண்ணற்ற உலகங்கள் அக்கம் பக்கமாக நிலைபெற்றிருக்கின்றன என்ற கருத்தைத் தர்க்க ரீதியாக முழுமை பெறச் செய்கிறது—இந்தக் கோட்பாட்டின் அவசியம், தத்துவத்தை எதிர்க்கும் போக்குள்ள டிரேபரின் அமெரிக்க மூளையையும் கூடத் துளைத்துள்ளது.*

பருப்பொருள் ஒரு நிரந்தர வட்டத்தில் அசைந்து செல்கிறது: அது ஒரு முழுமையான வட்டம் ஆவதற்குப் பிடிக்கும் காலத்தை அளக்க நமது பூவுலக ஆண்டு ஒரு போதுமான அளவுகோல் அல்ல; இந்த வட்டத்தில் உயிரும் சுய உணர்வும் செயல்படுகிற இடவெளி எப்படிக் குறுகலாக வரையறுக்கப்பட்டுள்ளதோ, அதைப் போலவே மிகச் சிகரமான வளர்ச்சிக்கு ஆகும் காலம், உயிர்ப்புள்ள ராசிகளுக்கான காலம் குறுகலாக வரையறுக்கப்பட்டுள்ளது; இதை விட இயற்கையைப் பற்றியும் தங்களைப் பற்றியும் சுய உணர்வு உள்ள ஜீவிகளின் வாழ்வுக்கான காலமும் குறுகலாக வரையறுக்கப்பட்டுள்ளது; இந்த வட்டத்தில் பருப்பொருளினுடைய குறிப்பிட்ட வரம்புள்ள ஒவ்வொரு நிலைநிற்பு உருவம்—அது சூரியன் அல்லது ஒளிமுகிலான வாயுவாயினும், ஒரு தனிப்பட்ட விலங்கோ அல்லது மிருக இனமாயினும், இரசாயனச் சேர்க்கை அல்லது சிதைவு ஆயினும் சரி—சமமான அளவில் தற்காலிகமானது; இதில் எதுவும் நிரந்தரமான தன்மை கொண்டதல்ல; ஆனால் சாஸ்வதமாக மாறிக் கொண்டும் சாஸ்வதமாக இயங்கியும் வருகிற பருப்பொருளும் எந்த நியதிகளுக்குட்பட்டு அது மாறியும் இயங்கியும் வருகிறதோ, அவையும் சாஸ்வதமானவை. இருந்த போதி

* ''எல்லையற்ற அண்டவெளியில் பெருமளவு உலகங்கள் உள்ளன என்ற கருத்திலிருந்து எல்லையற்ற காலத்தில் உலகங்கள் தொடர்ந்தாற்போல உண்டாகும் என்ற கருத்திற்கு இட்டுச் செல்லப்படுகிறோம்'' (ஜா. வி. டிரேபர், ஐரோப்பாவின் சிந்தனைத் துறை வளர்ச்சி வரலாறு, தொகுதி 2, பக்கம் [325]). (பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

லும், காலத்திலும் இடவெளியிலும் இந்தச் சுழல் வட்டம் எவ்வளவு இரக்கமின்றி எத்தனை தடவை முழுமை பெற்றாலும், எத்தனை கோடி சூரியன்களும் பூமிகளும் தோன்றி மறைந்தாலும், ஒரு சூரிய மண்டலத்தில் ஒரே ஒரு கோளில் உயிர்ராசிகள் வாழ்வதற்கான சூழ்நிலைகள் உருவாக எவ்வளவு காலமானாலும், சிந்திக்கும் மூளையுள்ள விலங்குகள் தோன்றுவதற்கு முன்பு எத்தனையோ எண்ணற்ற உயிர்ராசிகள் தோன்றி மறைந்தாலும், அவை தங்கள் வாழ்வுக்குப் பொருத்தமான சூழ்நிலைகளை ஒரு குறுகலான கால கட்டத்திற்குப் பெற்று பின்னர் சற்றும் ஈவிரக்கமின்றி அழிக்கப்பட்டாலும்—ஒன்று மட்டும் நிச்சயம்: பருப்பொருள் தனது எல்லா உருமாற்றங்களிலும் நிரந்தரமான ஒன்றாகவே உள்ளது; அது தனது எந்த குணாம்சத்தையும் இழப்பதில்லை; ஆகவே, மேலும், அது பூமியில் எந்த உறுதியான நியதியின்படி தனது சிகரம் போன்ற படைப்பான சிந்திக்கும் மனதை அழித்து விடுகிறதோ, அதே நியதியின்படி வேறெங்காவது, ஏதாவதொரு காலத்தில் மறுபடியும் அதை உற்பத்தி செய்து தீர வேண்டும்.

*1875—1876இல்*
*பி. எங்கெல்சினால் எழுதப்பட்டது*

**மார்க்ஸ்-எங்கெல்ஸ் ஆவணங்கள்,** *நூல் II, 1925இல் ஜெர்மன் மொழியிலும் ருஷ்ய மொழியிலும் முதலில் வெளியிடப்பட்டது*

*கையெழுத்துப் பிரதியின் படி அச்சிடப்பட்டது*

*மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது*

பி. எங்கெல்ஸ்

# ''டூரிங்குக்கு மறுப்புக்குப்''* பழைய முகவுரை

## இயக்க இயலைப் பற்றி

பின்வரும் நூல் ஏதோ ஓர் ''உள்தூண்டுதல்'' காரணமாக எவ்வகையிலும் தோன்றியதல்ல. அதற்கு மாறாக, ஹெர் டூரிங்கின் புத்தம்புதிய சோஷலிசத் தத்துவத்தின் மீது விமர்சன ஒளியை வீசும்படி என்னைத் தூண்ட எவ்வளவு பெரிய முயற்சி எனது நண்பர் லீப்க்னெஹ்ட் செய்ய வேண்டியிருந்தது என்பதற்கு அவரே சான்று கூறுவார். இவ்வாறு செய்வது என்று என் மனதில் தீர்மானித்தவுடனேயே, ஒரு புதிய தத்துவஞான அமைப்பின் ஆக அணித்தான நடைமுறைப் பலன் என்று உரிமை கொண்டாடுகிற இந்தத் தத்துவத்தை, அதற்கும் இந்த அமைப்பிற்கும் உள்ள தொடர்பிலும் அலசி ஆராயவும் இவ்வாறாக அந்த அமைப்பையே பரிசீலனை செய்யவும் முன்வருவது தவிர எனக்கு வேறு வழியில்லை. ஆகவே சாத்தியமான எல்லா விஷயங்களைப் பற்றியும் அதோடு கூட வேறு சிலவற்றைப் பற்றியும் அவர் பிரஸ்தாபிக்கும் இந்த விரிந்த துறையில் ஹெர் டூரிங்கைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது. 1877ஆம் ஆண்டுத் துவக்கத்திலிருந்து ஆரம்பித்து லைப்சிக் *Vorwärts* பத்திரிகையில்[42] வெளிவந்த தொடர் கட்டுரைகளின் மூலம் இதுவே; இங்கு அவை தொடர்புள்ள முழுத் தொகுப்பாகத் தரப்படுகின்றன.

---

* *பி. எங்கெல்ஸ்,* டூரிங்குக்கு மறுப்பு. திரு. ஒய்கேன் டூரிங் விஞ்ஞானத்தில் நிகழ்த்திய புரட்சி.—ப-ர்.

எவ்வளவுதான் தற்புகழ்ச்சி செய்து கொண்டாலும் விஷயத்தின் தன்மை காரணமாகவே மிகமிக முக்கியத்துவமில்லாததாக இருக்கும் பொழுது ஓர் அமைப்புப் பற்றிய விமர்சனம் இவ்வளவு அதிக விவரமாக ஏன் முன்வைக்கப்பட்டிருக்கிறது என்பதற்குச் சமாதானமாக இரண்டு சந்தர்ப்பச் சூழல்களைச் சுட்டலாம். ஒரு புறத்தில், இன்று முற்றிலும் பொதுவான விஞ்ஞான அல்லது நடைமுறை அக்கறைக்குரியதான, சர்ச்சைக்குரியதான பிரச்சினைகள் மீதான எனது கண்ணோட்டத்தைப் பல்வேறு துறைகளிலும் உருப்படியான வடிவில் முன்வைப்பதற்கு இந்த விமர்சனம் எனக்கு வாய்ப்பளித்தது. ஹெர் டூரிங்கின் அமைப்புக்கு ஒரு மாற்றாக இன்னொரு அமைப்பை முன்வைக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குச் சிறிது கூட மனதில் தோன்றவில்லை எனினும் அதே போதில் என்னால் பல்வேறுவகையான விஷயாதாரங்கள் பரிசீலிக்கப்பட்டிருந்த போதிலும், என்னால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களில் உள்ளார்ந்து கிடக்கும் பரஸ்பரத் தொடர்பை வாசகர் கவனிக்காமலிருக்க முடியாது என்று நம்புகிறோம்.

மறு புறத்தில், ''அமைப்பு உருவாக்கும்'' ஹெர் டூரிங் தற்கால ஜெர்மனியில் எவ்வகையிலும் ஒரு தனிப்பட்ட புலப்பாடு அன்று. அந்த நாட்டில் சென்ற சிறிது காலமாகவே தத்துவஞான, விசேஷமாயும் இயற்கை பற்றிய தத்துவஞான அமைப்புகள் காளான்களைப் போன்று ஓர் இரவுக்குள் டஜன் கணக்கில் முளைத்தெழுந்து கொண்டிருக்கின்றன; அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றிலான எண்ணற்ற புதிய அமைப்புகளை நான் இதில் குறிப்பிடத் தேவையில்லை. நவீன அரசில் எவ்வாறு ஒவ்வொரு குடிமகனும் அவன் வாக்களிக்குமாறு கோரப்படுகிற எல்லாப் பிரச்சினைகளைப் பற்றியும் தீர்ப்பளிக்கத் தகுதிவாய்ந்தவனாக எண்ணப்படுகிறானோ, பொருளாதாரத்தில் எவ்வாறு ஒவ்வொரு நுகர்வோனும் தனது பராமரிப்புக்காக வாங்கும் வாய்ப்புடைய எல்லாப் பண்டங்களையும் பற்றிய ரசனைத் தேர்ச்சியுள்ளவனாக எண்ணப்படுகிறானோ, அதே மாதிரியான அனுமானங்கள் இப்போது விஞ்ஞானத்திலும் செய்யப்

படவிருக்கின்றன. எதைப் பற்றியும் யாரும் எழுதலாம்; தாம் படித்தாராயாத விஷயங்களைப் பற்றி மக்கள் வேண்டு மென்றே எழுதுவதிலும் இது ஒன்றே கறாரான விஞ்ஞான பூர்வமான முறை என்று முன்வைப்பதிலுமே துல்லியமாயும் இன்றைய ''விஞ்ஞான சுதந்திரம்'' அடங்கியுள்ளது. இந்த இறுமாப்புடைய போலி விஞ்ஞானத்தின் ஆகக் குறிப்பிடத் தக்க மாதிரியே ஹெர் டூரிங்; இந்தப் போலி விஞ்ஞானம் ஜெர்மனியில் இற்றை நாட்களில் எல்லாவிடங்களிலும் முண்டியடித்து முன்னுக்கு வந்து தனது அதிர்வூட்டும் உன் னத மடமையைக் கொண்டு எல்லாவற்றையும் மூழ்கடித்து வருகிறது. காவியம், தத்துவஞானம், பொருளாதாரம், வர லாற்றியல் இவைகளில் உன்னதமான மடமை; விரிவுரை யாற்றும் மண்டபத்திலும் பொது மேடையிலும் உன்னத மான மடமை; எங்கு நோக்கினும் உன்னதமான மடமை; இதர நாடுகளின் சாமான்யமான எளிமையான மடமையி லிருந்து தன்னை வேறுபடுத்திக் கொண்டு கருத்தாழத்திற் கும் மேன்மைக்கும் உரிமை கொண்டாடுகிற உன்னதமான மடமை; ஜெர்மனியில் செய்யப்பட்ட இதர சரக்குகளைப் போலவே—மலிவான ஆனால் மோசமான—ஜெர்மனியின் அறிவுத் துறைத் தொழிலின் ஆகக் குறிப்பிடத்தக்க பெரு மளவிலான உற்பத்திப் பொருளும் உன்னத மடமையே—துரதிர்ஷ்டவசமாக இது ஃபிலடெல்ஃபியா பொருட்காட்சி யில்[43] உற்பத்திச் சரக்குகளுடன் சேர்த்துக் காட்சிக்கு வைக் கப்படவில்லை. சமீபத்தில் ஜெர்மன் சோஷலிசமும் கூட—குறிப்பாக ஹெர் டூரிங்கின் நல்ல முன்னுதாரணத்திற்குப் பிறகு—கணிசமான அளவில் உன்னத மடமைக்கு ஆளாகி யிருக்கிறது; நடைமுறை சமூக-ஜனநாயக இயக்கம் இந்த உன்னத மடமையினால் தவறான வழிக்கு இட்டுச் செல்லப் படுவதற்கு சிறிதும் இடங்கொடுக்கவில்லை என்றால், இயற்கை விஞ்ஞானத்தைத் தவிர ஏறக்குறைய மற்றெல் லாத் துறைகளிலும் அசௌக்கியமுற்றுள்ள அந்த நாட் டில் இன்று தொழிலாளி வர்க்கம் குறிப்பிடத்தக்க அளவு ஆரோக்கியமான நிலையில் உள்ளது என்பதற்கு மேலும் ஒரு சான்றாகும்.

மனித அறிவு என்றைக்கும் சர்வத்தையும் அறிந்த ஞானத்தின் தன்மையைப் பெற முடியாது என்று நேகெலி மியூனிக் நகரில் நடைபெற்ற இயற்கை விஞ்ஞானிகளின் கூட்டத்தில் ஆற்றிய உரையில் குறிப்பிட்ட போது அவர் ஹெர் டூரிங்கின் சாதனைகளை அறிந்திருக்க முடியாது என்பது தெளிவாகிறது. இந்தச் சாதனைகள், அதிகப் பட்சம் பொழுதுபோக்குக்கு என்ற அளவில் மட்டுமே இயங்கக் கூடியதான பல துறைகளில் நான் அவரைப் பின்பற்றுமாறு என்னைக் கட்டாயப்படுத்தின. ஒரு ''சாமான்ய மனிதன்'' ஏதேனும் ஒரு கருத்தை வெளியிடுவது தகாத் துணிச்சல் என்று பெரும்பாலும் கருதப்பட்ட இயற்கை விஞ்ஞானத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் இது குறிப்பாகப் பொருந்தும். தனது விசேஷத் துறைக்கப்பால் ஒவ்வோர் இயற்கை விஞ்ஞானியும் ஒரு கற்றுக்குட்டியே,[44] vulgo* ஒரு சாமான்ய மனிதனே என்று அதே மியூனிக் நகரில் ஹெர்வீர்ஹவால் உரைக்கப்பட்டு பின்னால் வேறிடத்தில் விரிவாக விவாதிக்கப்பட்ட கருத்து எனக்குச் சற்றே ஊக்கமூட்டுவதாக உள்ளது. அப்படிச் சிறப்பான தேர்ச்சியுடைய ஒருவன் அருகாமையிலுள்ள துறைகளிலும் அவ்வப்போது அத்துமீறிப் பிரவேசிப்பதற்கான சுதந்திரத்தை எடுத்துக் கொள்ளலாம், எடுத்துக் கொள்ள வேண்டும்; அந்தத் துறைகளிலுள்ள விசேஷத் தேர்ச்சியுடையவர்கள் சிறு பிழைகள், நேர்த்திக் குறைவான சொல்லாட்சி விஷயமாக அவனுக்குச் சலுகை காட்டுவது போல, நானும் எனது பொதுவான தத்துவார்த்தக் கருத்துக்களுக்குச் சான்றாக இயற்கையின் மாற்றப் போக்குகளையும் இயற்கையின் நியதிகளையும் எடுத்துக் காட்டும் சுதந்திரத்தை மேற்கொண்டுள்ளபடியால் நானும் அந்தச் சலுகையை எதிர்பார்க்கலாம் என்று நம்புகிறேன். நவீன இயற்கை விஞ்ஞானம் அடைந்துள்ள விளைவுகள், ஓர் இயற்கை விஞ்ஞானியை—அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்—இன்று எவ்வாறு பொதுவான தத்துவ ரீதியான முடிவுகளுக்கு வருமாறு வலுவந்தமாக இட்டுச்

*—எளிமையாகச் சொல்வதென்றால்.—ப-ர்.

செல்கிறதோ, அதே தடுக்க முடியாத வலிமையுடன் தத்துவ ரீதியான விவகாரங்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவர் மீதும் வலிந்து செயல்படுகின்றன. இங்கு ஒருவிதத்தில் ஒரு குறை ஈடு செய்யப்படுகிறது. இயற்கை விஞ்ஞானத்தில் தத்துவ வாதிகள் கற்றுக்குட்டிகள் என்னும் பட்சத்தில் இயற்கை விஞ்ஞானிகளும் இன்று தத்துவத் துறையில், தத்துவஞானம் என்று இது வரை அழைக்கப்பட்டு வருகிற துறையில் அதே அளவுக்கு எதார்த்தத்தில் அப்படியேதான் உள்ளனர்.

அனுபவவாத இயற்கை விஞ்ஞானம் அறிவுத் துறைக்குப் பிரம்மாண்டமான அளவில் உருப்படியான விஷயாதாரங்களைச் சேகரம் செய்துள்ளது; ஆகவே திட்டமிட்ட முறையில் அவற்றின் பரஸ்பர உள்தொடர்புகளுக்கு ஏற்ப ஒவ்வொரு தனிப்பட்ட ஆராய்ச்சித் துறையிலும் அவற்றை வகைப்படுத்துவது முற்றிலும் அவசர அவசியமாகி விட்டது. தனிப்பட்ட அறிவுத் துறைகளையும் ஒன்றோடொன்று சரியான தொடர்புக்குள் கொண்டு வர வேண்டியதும் அதே அளவுக்கு அவசர அவசியமாகி விட்டது. அப்படிச் செய்யும் பொழுது இயற்கை விஞ்ஞானம் தத்துவத் துறைக்குள் பிரவேசிக்கிறது; இங்கு அனுபவவாதத்தின் முறைகள் பயன்படா, தத்துவ ரீதியிலான சிந்தனையே உதவிகரமாக இருக்க முடியும். ஆனால் தத்துவ ரீதியான சிந்தனை என்பது இயற்கையான திறன் என்ற அளவில் மட்டுமே ஓர் உள்ளார்ந்த பண்பாகும். இந்த இயற்கையான திறன் வளர்க்கப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டும்; அதன் மேம்பாட்டுக்கு முந்திய தத்துவஞானத்தைப் படித்தாராய்வது தவிர வேறு வழிகள் கிடையாது.

ஒவ்வொரு சகாப்தத்திலும்—ஆகவே நம்முடையதிலும்—தத்துவ ரீதியான சிந்தனை என்பது ஒரு வரலாற்று பூர்வமான விளைவாகும்; அது வெவ்வேறு காலங்களில் மிகவும் வெவ்வேறான வடிவங்களையும் அத்துடன் வெவ்வேறு உட்கிடக்கைகளையும் கொள்கிறது. ஆகவே சிந்தனை பற்றிய விஞ்ஞானம் என்பதும் மற்றவைகளைப் போலவே ஒரு வரலாற்று ரீதியான விஞ்ஞானமாகும்; மனித சிந்தனையின் வரலாற்று ரீதியான வளர்ச்சியின் விஞ்ஞானமாகும். அனுபவ

ரீதியான துறைகளில் சிந்தனையை நடைமுறையில் பிரயோகிக்கும் போதும் இது முக்கியத்துவமுடையதாகிறது. ஏனெனில், முதலாவதாக, சிந்தனையின் நியதிகளைப் பற்றிய தத்துவம், ''தர்க்கவியல்'' என்ற சொல்லைக் குறித்து அற்பவாதிகளின் அறிவாய்வு கற்பனை செய்து கொள்வது போல, என்றென்றைக்குமாக நிலைநாட்டப்பட்டு விட்டதான ஒரு ''நிரந்தரமான உண்மை'' ஆகாது. சம்பிரதாயத் தர்க்கவியல் அரிஸ்டாட்டில் காலமுதல் இந்த நாள் வரைக்கும் வன்மையான சர்ச்சையின் அரங்கமாக இருந்து வந்துள்ளது. இயக்க இயலை இது வரை ஓரளவுக்கு நெருக்கமாகப் பரிசீலனை செய்தவர்கள் அரிஸ்டாட்டில், ஹெகல் ஆகிய இரு சிந்தனையாளர்கள் மட்டுமே. ஆனால் இற்றை நாள் இயற்கை விஞ்ஞானத்திற்கு மிகவும் முக்கியமான சிந்தனா வடிவமாக அமைவது குறிப்பாயும் இயக்க இயல் ஒன்றே; ஏனெனில் இயற்கையில் நிகழ்கின்ற பரிணாம மாற்றப் போக்குகளையும் பொதுவான பரஸ்பரத் தொடர்புகளையும் ஒரு பரிசீலனைத் துறையிலிருந்து மற்றொன்றுக்கு மாறுவதில் உள்ள இடைநிலைகளையும் விளக்குகிற முறையாக மட்டுமின்றி, அதற்கு ஒப்பான ஒரு மாதிரி அமைப்பையும் அது மட்டுமே அளிக்கிறது.

இரண்டாவதாக, மனித சிந்தனையின் படிப்படியான வளர்ச்சியின் வரலாற்று பூர்வமான பாதையைப் பற்றியும் பல்வேறு காலங்களில் புற உலகத்திலான பொதுவான பரஸ்பரத் தொடர்புகள் குறித்த கருத்துக்களைப் பற்றியும் மற்றொரு கூடுதல் காரணத்திற்காகத் தத்துவ ரீதியான இயற்கை விஞ்ஞானம் அறிந்திருக்க வேண்டியது அவசியம்; அதாவது இந்த விஞ்ஞானம் தானே பிரகடனம் செய்த தத்துவங்களுக்கு அதுவே ஓர் உரைகல்லை வழங்குகிறது. இருந்த போதிலும் கூட இங்குதான் தத்துவஞானத்தின் வரலாற்றைப் போதியளவு அறிந்து கொள்ளாததன் குறைபாடு மிக அடிக்கடியும் வெளிப்படையாகவும் காட்சியளிக்கிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தத்துவஞானத்தில் முன்வைக்கப்பட்டு, தத்துவஞானத்தில் வெகு காலத்துக்கு முன்பே செல்வாக்கை இழந்து விட்டதான உத்தேசக் கருத்துக்

களைத் தத்துவம் உருவாக்கும் இயற்கை விஞ்ஞானிகள் புத்தம்புதிய விவேகமாக அடிக்கடி முன்வைக்கின்றனர்; இந்த உத்தேசக் கருத்துக்கள் சிறிது காலத்துக்குப் புதுப் பாணியாகவும் இருக்கின்றன. வெப்பத்தைப் பற்றிய இயந்திரத் தத்துவம் ஆற்றலின் அழியா நிலைக் கோட்பாட்டைப் பல புதிய ஆதாரங்களைக் கொண்டு வலுப்படுத்தி அதை மீண்டும் முன்னணியில் கொண்டு வந்து நிறுத்தியதானது நிச்சயமாயும் அதனுடைய மகத்தான சாதனையே; ஆனால் இந்தக் கோட்பாடு ஏற்கெனவே டெக்கார்ட்டால் முறைப்படுத்தி முன்வைக்கப்பட்டது என்பதை மதிப்புக்குரிய பௌதிகவியலாளர்கள் நினைவில் வைத்திருந்தார்கள் என்றால் அந்தக் கோட்பாடு முற்றிலும் புதிய ஒன்றாக மேடையில் தோன்றியிருக்க முடியுமா? பௌதிகவியலும் இரசாயனவியலும் அனேகமாக முற்றிலுமாக மூலக்கூறுகள் மற்றும் அணுக்களைப் பற்றி மறுபடியும் ஆராய்வதால் பண்டைய கிரேக்க அணுத் தத்துவஞானம் அவசியத்தை முன்னிட்டு மறுபடியும் முன்னுக்கு வந்துள்ளது. ஆனால் அதை இயற்கை விஞ்ஞானிகளில் சிறந்தவர்களே எவ்வளவு மேலெழுந்தவாரியாகப் பார்க்கின்றனர்! இவ்வாறாக, அதைத் தோற்றுவித்தது லெவ்க்கிப்பஸ் அல்ல மாறாக டெமாக்கிரீடஸ்தான் என்று கெக்கூலே நம்மிடம் சொல்லுகிறார் (**இரசாயனவியலின் நோக்கங்களும் சாதனைகளும்**); பண்பு ரீதியில் வேறுபட்ட மூலக அணுக்கள் நிலவுவதாக முதலில் அனுமானித்தவர் டால்டன் என்றும் வெவ்வேறு மூலகங்களுக்குத் தக்கதான வெவ்வேறு எடைகளை முதலில் அவைகளுக்குச் சாற்றியதும் அவரே என்றும் அவர் சாதிக்கிறார். ஆனால் பரிமாணத்திலும் வடிவிலும் மட்டுமல்ல **எடையிலும்** அணுக்களுக்கு வேறுபாடுகளை ஏற்கெனவே சாற்றியவர் எபிகூரஸ் என்பதை, அதாவது அணு எடையைப் பற்றியும் அணுப் பருமனைப் பற்றியும் அவர் தமது சொந்த வழியில் ஏற்கெனவே அறிந்திருந்தார் என்பதை டியோஜெனிஸ் லயெர்தியஸ் எழுதிய நூலில் (புத்தகம் X, §§ 43—44 மற்றும் 61) யாரும் படிக்க முடியும்.

1848ஆம் ஆண்டு ஜெர்மனி வேறு எதையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வரா விட்டாலும் தத்துவஞானத்தில்

மட்டும் ஒரு முழுமையான புரட்சியையே நிறைவேற்றி இருந்தது. அந்த நாடு நடைமுறைத் துறைக்குள் குதிப்பதன் மூலம், ஒரு புறத்தில், நவீனத் தொழில்துறை மற்றும் மோசடியின் ஆரம்பத்தை நிலைநாட்டியது; மறு புறத்தில், கேலிச் சித்திரம் போன்ற நாடோடி மதப் பிரசாரகர்களான ஃபோக்ட், பியூஹ்னர் ஆகியவர்களால் துவக்கப்பட்டு இயற்கை விஞ்ஞானம் பின்னாட்களில் ஜெர்மனியில் அடைந்த மாபெரும் முன்னேற்றத்தை ஆரம்பித்து விட்டது; பெர்லின் நகரத்துப் பழைய ஹெகலியவாதம் என்ற மணற்பாலையிலே தன்னை இழந்து விட்ட மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவ ஞானத்தின் பால் நாடு உறுதியுடன் முதுகைத் திருப்பி நின்றது. பெர்லின் நகரத்துப் பழைய ஹெகலியவாதத்திற்கு இது முற்றிலும் வேண்டியதே. ஆனால் விஞ்ஞானத்தின் கொடுமுடிகளை எட்டிப் பிடிக்க விரும்பும் ஒரு நாடு தத்துவார்த்தச் சிந்தனையின்றி அதைச் சமாளிப்பது சாத்தியமல்ல. இயற்கையின் மாற்றப்போக்குகளின் இயக்க இயல் தன்மை மனத்தின் மீது தடுக்க முடியாதவாறு தன்னைத் திணித்துக் கொண்டிருந்த நேரத்தில், தத்துவம் என்ற மலையில் வழி கண்டுபிடித்து ஏறிச் செல்ல இயற்கை விஞ்ஞானத்திற்கு இயக்க இயல் மட்டுமே துணை செய்ய முடியும் என்றிருந்த நேரத்தில் ஹெகலியவாதம் மட்டுமல்ல, இயக்க இயலும் கூட கழித்து வெளியே தள்ளப்பட்டது. ஆகவே பழைய இயக்க மறுப்பியலுக்கு வேறு வழியின்றித் திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று. அது முதற்கொண்டு பொது மக்களிடையே செல்வாக்குப் பெற்று நடப்பிலிருந்தது என்னவெனில், ஒரு பக்கம் அற்பவாதிகளுக்குப் பொருத்தமாக உருவாக்கப்பட்ட ஷோபன்ஹவரின் சத்தில்லாத சிந்தனைகளும் பின்னர் இவற்றுடன் சேர்ந்த கார்ட்மன் கருத்துக்களும்; மறு புறத்தில், ஃபோக்ட், பியூஹ்னர் போன்றோரின் நாடோடிப் பிரசாரத் தன்மையுள்ள விஞ்ஞானக்கேடான பொருள்முதல்வாதமுமே ஆகும். பல்கலைக்கழகங்களில் கதம்பவாதத்தின் மிக வேறுபட்ட பல ரகங்கள் ஒன்றோடொன்று போட்டியிட்டன; பழைய தத்துவஞானங்களின் எச்சங்களிலிருந்து மட்டுமே புனையப்பட்டு எல்லாமே

இயக்க மறுப்பியல் தன்மை கொண்டவையாக இருந்ததே அவற்றின் பொதுப்படையான ஒரே அம்சம். மூலச்சிறப்புள்ள தத்துவஞானத்தின் எச்சங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டதெல்லாம் ஒருவகையான புதிய கான்ட்டியவாதம் மட்டுமே; அதிலும் கூட நிரந்தரமாக அறியவே முடியாத தன்னிலைப் பொருள் இருப்பதாக முடிந்த முடிபாகக் கூறும் பகுதியே, பாதுகாக்கப்படச் சற்றும் தகுதியில்லா கான்ட் தத்துவத்தின் பகுதி அது. இவற்றின் இறுதி விளைவு தற்போது நிலவும் தத்துவார்த்த சிந்தனையிலுள்ள குளறுபடியும் குழப்பமுமேயாகும்.

இயற்கை விஞ்ஞானம் பற்றிய எந்த ஒரு தத்துவார்த்த நூலை ஒருவர் விரித்து நோக்கினாலும், இயற்கை விஞ்ஞானிகளின் மீது இந்தக் குளறுபடியும் குழப்பமும் எந்தளவுக்கு ஆட்சி செலுத்துகின்றன என்பதையும் தற்போது நடப்பிலுள்ள தத்துவஞானம் எனப்படுவது அவர்களுக்கு அறவே எவ்வித வழியையும் காட்டவில்லை என்பதையும் அவர்களே உணருகிறார்கள் என்ற அபிப்பிராயத்தைப் பெறாமல் இருக்க முடியாது. இங்கு இயக்க மறுப்பியல் சிந்தனையிலிருந்து இயக்க இயல் சிந்தனைக்கு ஏதாவது ஒரு முறையில் திரும்பி வராமல் தெளிவு பெறுவதற்கான சாத்தியக்கூறு இல்லை, உண்மையிலேயே வேறு வழி கிடையாது.

இந்தத் திரும்பி வருதல் என்பது பல வேறு வழிகளில் நடைபெற முடியும். இயக்க மறுப்பியலின் பழைய ப்ரொக்ருஸ்ட்டினுடைய படுக்கைக்குள்[45] மடங்க முடியாது என மறுக்கும் இயற்கை விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் வெறும் வன்மை மூலம் தன்னியல்பாக இயக்க இயலுக்குத் திரும்பி வர முடியும். ஆனால் அது நீண்ட நெடிய, வருந்தி உழைக்கத்தக்க பாதையாகும்; இதில் மிகப் பெரிய அளவிலான அவசியமில்லாத உரைசலைப் போக்க வேண்டும். இந்த மாற்றப்போக்கு பெரிய அளவுக்கு, குறிப்பாக உயிரியல் துறையில், ஏற்கெனவே நிகழ்ந்து வருகிறது. இயற்கை விஞ்ஞானத் துறையிலுள்ள தத்துவவாதிகள் இயக்க இயல் தத்துவஞானத்தை அதனுடைய வரலாற்று பூர்வமாக நிலவும் வடிவங்களில் மேலும் நெருக்கமாக அறிந்து கொள்வார்

களானால் அந்தப் பாதை பெருமளவுக்குச் சுருங்கும். அந்தவடிவங்களிடையே நவீன இயற்கை விஞ்ஞானத்திற்கு விசேஷமான பலனை அளிக்கக் கூடிய இரண்டு உள்ளன.

இவற்றில் முதலாவது கிரேக்க தத்துவஞானம். இங்கு இயக்க இயல் ரீதியான சிந்தனை இன்னும் அதன் ஆரம்ப எளிமையுடன் விளங்குகிறது; 17வது, 18வது நூற்றாண்டு களைச் சேர்ந்த இயக்க மறுப்பியல்—இங்கிலாந்தில் பேக் கனும் லோக்கும் செய்தது போல, ஜெர்மனியில் வோல்ஃப் செய்தது போல—தனது பாதைக்குக் குறுக்கே தானே போட்டுக் கொண்ட வசீகரமான தடைகளால் சங்கடப்பட வில்லை; இந்தத் தடைகளைப் போட்டுக் கொண்டதால் இயக்க மறுப்பியல் தன்னுடைய சொந்த முன்னேற்றத்தைத் தானே தடுத்துக் கொண்டது; ஒரு பகுதியைப் புரிந்து கொள் வதிலிருந்து முழுமையையும் புரிந்து கொள்ள முன்னேறு வதை, விஷயங்களின் பொதுவான பரஸ்பரத் தொடர்புகள் பற்றி ஒரு நுண்ணறிவு பெற முன்னேறுவதைத் தடைப் படுத்திக் கொண்டது. கிரேக்கர்கள் இயற்கையைப் பகுத்து ஆய்வு செய்து பார்ப்பதில் இன்னும் போதியளவு முன் னேறாத காரணத்தால் அவர்கள் இன்னும் இயற்கையை முழுமையாக, பொதுப்படையாகவே பார்த்தனர். இயற் கைப் புலப்பாட்டின் சர்வவியாபகமான தொடர்பு அதன் பிரத்யேக அம்சங்களில் இன்னும் நிரூபிக்கப்படவில்லை; கிரேக்கர்களைப் பொறுத்தவரை இது நேரடியான சிந்தனை விசாரத்தின் விளைவாகவே இருந்தது. இங்குதான் கிரேக்கத் தத்துவஞானத்தின் பற்றாக்குறை காணக்கிடக்கிறது; இதன் காரணமாகத்தான் உலகத்தைப் பற்றிய இதர கண்ணோட்ட முறைகளுக்கு அது விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. அதன் பிறகு அதை எதிர்த்துத் தோன்றிய எல்லா இயக்க மறுப்பியல்வாதிகளையும் விட அதற்குள்ள மேன்மையும் இங்குதான் உள்ளது. கிரேக்கர்களைப் பொறுத்தவரை இயக்க மறுப்பியல் தனது பிரத்யேக அம்சங்களில் சரியாக இருந்ததெனில் இயக்க மறுப்பியலைப் பொறுத்தவரை கிரேக்கர்கள் பொது அம்சங்களில் சரியாக இருந்தனர். மனித வளர்ச்சியின் வரலாற்றில் வேறு எந்த மக்களும்

உரிமை கொண்டாட முடியாத இடத்தை அந்த சிறிய நாட்டு மக்கள் தங்களது சர்வவியாபகமான அறிவுத் திறனாலும் செயல்பாட்டினாலும் பெற்றிருப்பதனாலேயே மற்றெல்லாத் துறைகளையும் போலவே தத்துவஞானத்திலும் நாம் அடிக்கடி அவர்களது சாதனைகளை நோக்கித் திரும்பி வரும்படி ஏன் நிர்ப்பந்திக்கப்படுகிறோம் என்பதற்கு இதுவே முதல் காரணம். இன்னொரு காரணம், உலகத்தைப் பற்றியதான பிந்திய கண்ணோட்ட முறைகள் ஏறத்தாழ எல்லாமே கிரேக்கத் தத்துவஞானத்தின் பல்விதமான வடிவங்களில் கரு உருவில், முளைப் பருவத்தில் அடங்கியிருந்தன என்பதே. ஆகையால் தத்துவார்த்த இயற்கை விஞ்ஞானம், தான் இன்று பற்றி நிற்கும் பொதுக் கோட்பாடுகளின் தோற்றம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றின் வரலாற்றை அறிய விரும்புமானால், கிரேக்கர்களிடம் அதே விதமாகத் திரும்பிச் செல்லுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறது. இந்த நுண்ணறிவு மேலும் மேலும் உந்தித் தள்ளிக் கொண்டு முன்னணிக்கு வந்து கொண்டிருக்கிறது. கிரேக்கர்கள் அனுபவ ரீதியான இயற்கை விஞ்ஞானத்தைப் பெற்றிருக்கவில்லை என்ற காரணத்தால் பேக்கனுடைய அகந்தையுடன் அவர்களை இழிவாகப் பார்த்து அதே பொழுதில் கிரேக்கர்களுடைய தத்துவஞானத்தின்—உதாரணமாக, அணுவியலின்—துண்டு துணுக்குகளை வைத்துக் கொண்டு—நிரந்தரமான உண்மைகளைப் போல—தாமே செயல்பட்டு வருகிற இயற்கை விஞ்ஞானிகள் தற்போது அரிதாகி வருகின்றனர். இந்த நுண்ணறிவு கிரேக்க தத்துவஞானத்துடன் உண்மையான பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்ள இன்னும் முன்னேற வேண்டும் என்பதே விரும்பத்தக்கது.

ஜெர்மன் இயற்கை விஞ்ஞானிகளுக்கு மிக நெருங்கி வருகிற இயக்க இயலின் இரண்டாவது வடிவம் கான்ட் முதல் ஹெகல் வரையிலான மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானமாகும். மேலே குறிப்பிடப்பட்ட புதிய கான்ட்டியவாதம் போக, கான்ட்டுக்கு மறுபடியும் திரும்புவது என்பது ஒரு புதிய பாணியாகி வருகிறது என்ற முறையில் முயற்சி தொடங்கி விட்டது. முன்பு லாப்லாஸ் கண்டுபிடித்

தார் என்று நம்பி ஒப்புக்கொள்ளப்பட்டதான சூரிய மண்டல அமைப்புத் தத்துவம் மற்றும் பூமியின் சுழற்சி ஏற்ற வற்றத்தால் வேகம் குறைக்கப்படுகிறது என்ற தத்துவம் ஆகிய இரு ஒளி மிக்க அனுமான தத்துவங்களை ஆக்கியோர் காண்ட்டே எனக் கண்டுபிடிக்கப்பட்டதும் அவையின்றி இன்று தத்துவ ரீதியான இயற்கை விஞ்ஞானம் எவ்வித முன்னேற்றமும் அடைய முடியாது என்பதனாலும் காண்ட் இயற்கை விஞ்ஞானிகளிடையே மறுபடியும் பெருமையான ஸ்தானம் வகிக்கிறார்; இது அவருக்கு முற்றிலும் பொருத்தமே. ஆனால் காண்ட்டின் நூல்களில் இயக்க இயலைப் பயில முயல்வது என்பது பயனற்ற முறையில் கடினமானதும் எவ்விதப் பலனும் தராததுமான வேலையாகும்; ஏனெனில் இயக்க இயலை முற்றிலும் தவறான தொடக்க முனையில் நின்று வளர்த்த போதிலும் அதன் விரிவான சாராம்சத்தினை உட்கொண்டுள்ள ஹெகலின் நூல்கள் தற்போது கிடைக்கின்றன.

ஒரு புறத்தில், ''இயற்கைத் தத்துவஞானத்துக்கு'' எதிர்ச்செயல்—அது இந்தத் தவறான தொடக்க முனையாலும் பெர்லின் நகரத்து ஹெகலியவாதம் நிராதரவாகச் சீரழிந்ததாலும் பெருமளவு நியாயமாயிருந்தது—முழுவதும் ஓய்ந்து வெறும் அவதூறாக மட்டுமே சீரழிந்த பிறகு, மறு பக்கத்தில், இயற்கை விஞ்ஞானம் அதன் தத்துவார்த்தத் தேவைகளைப் பொறுத்தவரை இன்றைய கதம்பவாத இயக்க மறுப்பியலினால் இவ்வளவு வெளிப்படையாகவே கைவிடப்பட்ட பிறகு ஹெர். டூரிங் இவ்வளவு மகிழ்ச்சியுடன் செயின்ட் விடூஸ் நடனத்தைத் தூண்டிக் கிளப்பாமல் இயற்கை விஞ்ஞானிகளின் முன்னிலையில் ஹெகலின் பெயரை மறுபடியும் உச்சரிப்பது சாத்தியமாகலாம்.

ஆன்மா, மனம், கருத்து இதுவே முதல், எதார்த்த உலகம் என்பது கருத்தின் ஒரு நகல் மட்டுமே என்ற ஹெகலினுடைய தொடக்க முனையை நியாயப்படுத்தி ஆதரிப்பது என்ற பிரச்சினையே இங்கு எழவில்லை என்பதை முதலிலேயே இவ்விடத்தில் நிலைநாட்டி விட வேண்டும். ஃபாயர்பாக் ஏற்கெனவே அதைக் கைவிட்டு விட்டார். விஞ்ஞானத்

தின் ஒவ்வொரு துறையிலும்—வரலாற்று விஞ்ஞானத்தைப் போல இயற்கை விஞ்ஞானத்திலும்—ஒருவர் குறிப்பிடப் பட்ட எதார்த்த உண்மைகளிலிருந்துதான் ஆராயப் புறப்பட வேண்டும் என்பதில் நாம் எல்லோரும் உடன்படுகிறோம்; ஆகையால் இயற்கை விஞ்ஞானத்தில் பொருளின் பல்வேறு வடிவங்கள் மற்றும் பருப்பொருளினுடைய இயக்கத்தின் பல்வேறு வடிவங்கள் இவைகளிலிருந்தே தொடங்க வேண் டும்; ஆகவே தத்துவார்த்த இயற்கை விஞ்ஞானத்திலும் கூடப் பரஸ்பரத் தொடர்புகளைப் புனைந்து எதார்த்த உண்மைகளுக்குள் புகுத்திப் பார்ப்பதென்பதல்ல—அதற்கு மாறாக, அவைகளிலிருந்தே கண்டுபிடித்து எடுக்கப்பட வேண்டும்; அப்படிக் கண்டுபிடிக்கப்படுகிற பொழுது அவை பரிசோதனை மூலம் முடிந்த வரை சரிபார்க்கப்பட வேண் டும்.

பெர்லின் நகரத்து ஹெகலியவாதிகளில் முதியவர்களும் இளைஞர்களும் பிரசாரம் செய்கிற அந்த ஹெகலிய அமைப் பின் வரட்டுத் தத்துவவாத சாராம்சத்தை ஸ்திரப்படுத்து வது என்பதும் அதே மாதிரியாகத் தற்போதைய பிரச்சினை யல்ல. எனவே கருத்துமுதல்வாதத் தொடக்க முனை வீழ்ச்சி யடையும் போது அதன் மேல் கட்டப்பட்ட அமைப்பும்—குறிப்பாக ஹெகலின் இயற்கைத் தத்துவஞானமும் சேர்ந்து—வீழ்ச்சியடைகிறது. இருந்த போதிலும், ஹெகலுக்கு எதிராக இயற்கை விஞ்ஞானிகள் நடத்திய தர்க்கவாதம்—அவர்கள் அவரைச் சரியாகப் புரிந்து கொண்ட அளவுக்கு—கீழ்க்கண்ட இரண்டு விஷயங்களை மட்டும் எதிர்ப்பதாக இருந்தது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்: அதாவது, கருத்துமுதல்வாதத் தொடக்க முனை என்பதும் எதார்த்த உண்மைகளுக்கு சவால் விட்டு எதேச்சையாகக் காட்டப்படும் அந்த அமைப்புமேயாகும்.

இத்தனைக்கும் ஈடு செய்த பிறகும் எஞ்சுவது ஹெகலின் இயக்க இயல். ''இப்போது பண்பாடு மிக்க ஜெர்மனியில் பெரிதாகப் பீற்றிக் கொள்கின்ற, சிடுசிடுப்பான, அகந்தை யுள்ள, இரண்டாம் தரமான அற்பர்களுக்கு''* நேர்மாறாக

* இப்பதிப்பு, தொகுதி 6, பக்கம் 32 பார்க்க.—ப-ர்.

மறக்கப்பட்ட இயக்க இயல் முறையையும் அதற்கு ஹெகலின் இயக்க இயலுடன் உள்ள தொடர்பையும் அத்துடன் வேறுபட்டுள்ள தன்மையினையும் மீண்டும் முன்னுக்குக் கொண்டு வந்ததிலும் அதே சமயம் அந்த முறையினை மூலதனம் என்ற நூலில் ஓர் அனுபவவாத விஞ்ஞானமான அரசியல் பொருளாதாரத்தின் உண்மைத் தகவல்களுக்குப் பிரயோகித்ததிலும் முதல்வராகத் திகழ்ந்தார் என்னும் பெருமை மார்க்சையே சார்ந்ததாகும். ஜெர்மனியிலும் கூட மார்க்சை விமர்சனம் செய்வதென்ற பாசாங்கின் பேரில் அவரைக் காப்பி அடிப்பதன் மூலம் (பல தடவை தவறாகவே) புதிய பொருளாதாரக் கருத்துப் பிரிவினர் விஞ்ஞான பூர்வமற்ற சுதந்திர வர்த்தக முறை ஆதரவாளர்களை விடமேலுயர்ந்து நிற்கும் அளவுக்கு மார்க்ஸ் அதை வெற்றிகரமாகச் செய்தார்.

ஹெகலுடைய அமைப்பின் இதர எல்லாக் கிளைப் பிரிவுகளையும் போலவே அவருடைய இயக்க இயலிலும் எல்லா எதார்த்தமான பரஸ்பரத் தொடர்புகளும் தலைகீழாக நிற்கின்றன. ஆனால் மார்க்ஸ் கூறுவதைப் போல: ''ஹெகலின் கரங்களில் இயக்க இயல் அனுபவிக்கின்ற மறைபொருள் தன்மையானது அதன் பொதுவான செயல்பாட்டு வடிவத்தைப் புரிந்து கொள்ளத்தக்க, உணர்வு பூர்வமான விதத்தில் முன்வைக்கின்ற முதல் மனிதராக இருக்கவிடாமல் அவரை எவ்விதத்திலும் தடுத்துவிடவில்லை. அவரிடம் அது தலைகீழாக நின்று கொண்டிருக்கிறது. மறைபொருள்வாத ஓட்டுக்குள் உள்ள பகுத்தறிவு முத்தை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டுமென்றால், அது மீண்டும் நேரான நிலையில் திருப்பி நிறுத்தப்பட வேண்டும்.''*

இயற்கை விஞ்ஞானத்திலும் கூட மெய்த்தொடர்பு தலையின் மீது நிற்கிற, அசல் வடிவத்திற்குப் பதில் அதன் நிழலை உண்மையென நினைக்கிற தத்துவங்களை நாம் அடிக்கடி சந்திக்கிறோம்; இதன் விளைவாக அவற்றை நேராக நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படிப்

* இப்பதிப்பு, தொகுதி 6, பக்கம் 32.—ப-ர்.

பட்ட தத்துவங்கள் பெரும்பாலும் கணிசமான காலத்துக்கு மேலோங்கி நிற்கின்றன. ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுக் காலம் வெப்பம் ஒரு சாதாரண பருப்பொருளின் ஓர் இயக்க வடிவம் என்பதற்குப் பதிலாக ஒரு விசேஷ மர்மப் பருப்பொருளாகக் கருதப்பட்டு வந்தது குறிப்பாயும் அத்தகைய ஒரு நிகழ்ச்சியாகும்; வெப்பம் பற்றியதான இயந்திரத் தத்துவம் மட்டுமே அதை நேராக நிறுத்தி வைத்தது. இருந்த போதிலும், கலோரிக் தத்துவத்தால் ஆட்கொள்ளப்பட்டிருந்த பௌதிகவியல் தொடர்ந்தாற்போல மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வெப்ப நியதிகளைக் கண்டுபிடித்து குறிப்பாக ஃபூரியே, சாடி கர்னோ இவர்களின் மூலமாக சரியான கருத்துக்கு வழி வகுத்தது; அது இப்பொழுது தனது முன்னோடியால் கண்டுபிடிக்கப்பட்ட நியதிகளை நேராகத் தூக்கி நிறுத்தும் பணியை, தனது சொந்த மொழியில் அவற்றைப் பெயர்க்கும்படியான பணியைத் தன் பங்குக்கு ஆற்ற வேண்டியதாயிற்று.* அதே விதமாக இரசாயன வியலில் நூறு வருடப் பரிசோதனைகளைக் கொண்டு புளோஜிஸ்டன் தத்துவம்[46] வேண்டிய விஷயாதாரங்களை முதலில் வழங்கியது; அவற்றின் உதவியால் லவுவஸியே பிரிஸ்ட்லியால் பெறப்பட்டதான பிராணவாயுவே அந்த விசித்திரமான புளோஜிஸ்டனுக்கு உண்மையான எதிரிடை என்று கண்டுபிடிக்க முடிந்தது, அதன் மூலம் புளோஜிஸ்டன் தத்துவம் முழுவதையும் அப்படியே தூக்கி எறிவதற்கு முடிந்தது. ஆனால் புளோஜிஸ்டன் தத்துவத்தின் பரிசோதனை விளைவுகள் இதனால் சற்றும் பாதிக்கப்படவில்லை. அதற்கு மாறாக, அவை தொடர்ந்து நீடித்தன; அவற்றின் வரையறுப்பு மட்டுமே தலை நேராக்கப்பட்டது; புளோஜிஸ்டன் வகைப்பட்டது என்பதற்குப் பதில் தற்போது செல்லத்தக்க இரசாயன மொழியில் பெயர்க்கப்பட்டது;

---

* கர்னோவின் வினைப்படுத்துகிற C அப்படியே தலைகீழாக மாற்றப்பட்டு $\frac{1}{C}$=முற்றமுழு வெப்பநிலையாகியது. இப்படி மாறாமல் இதைக் கொண்டு ஒன்றும் செய்யவியலாது. **(பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)**

இவ்வாறு அவை தமது செல்தகைமையினை உறுதிப்படுத்திக் கொண்டன.

கலோரிக் தத்துவத்திற்கும் வெப்பத்தின் இயந்திரத் தத்துவத்திற்கும் என்ன உறவுள்ளதோ, புளோஜிஸ்டன் தத்துவத்துக்கும் லவுவஸியே தத்துவத்துக்கும் என்ன சம்பந்தம் உள்ளதோ, அதே மாதிரியான சம்பந்தம்தான் ஹெகலின் இயக்க இயலுக்கும் பகுத்தறிவு பூர்வமான இயக்க இயலுக்கும் உள்ளது.

*1878 மே—ஜூன் தொடக்கத்தில்*
*பி. எங்கெல்சினால் எழுதப்பட்டது*

**மார்க்ஸ்-எங்கெல்ஸ் ஆவணங்கள்,** *நூல் II, 1925இல் ஜெர்மன் மொழியிலும் ருஷ்ய மொழியிலும் முதலில் வெளியிடப்பட்டது*

*கையெழுத்துப் பிரதியின் படி அச்சிடப்பட்டது*

*மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது*

பி. எங்கெல்ஸ்

# மனிதக் குரங்கு மனிதனாக மாறிய இடைநிலைப்படியில் உழைப்பின் பாத்திரம்[47]

சகல செல்வத்தினுடைய தோற்றுவாயும் உழைப்பே என அரசியல் பொருளாதார நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர். உண்மையிலே அதுதான் தோற்றுவாய்—இயற்கைக்கு அடுத்தபடியாக; அதற்கு இயற்கை மூலாதாரமாக வழங்கும் பொருளை அது செல்வமாக மாற்றுகிறது. ஆனால் அளவிடற்கரிய ரீதியில் அதை விட அது இன்னும் அதிகமும் கூட. ஓர் அர்த்தத்தில், உழைப்பு மனிதனையே படைத்தது என்று நாம் கூற வேண்டிய அளவுக்கு அது மனித வாழ்வு முழுவதற்கும் முதன்மையான அடிப்படை நிபந்தனையாக உள்ளது.

பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால், இன்னும் திட்டமாக நிர்ணயிக்கப்படாத, மூன்றாம் காலக்கூறு (Tertiary period) எனப் புவியியல்வாதிகள் அறிந்துள்ள பூமியின் வரலாற்றின் ஒரு சகாப்தத்தில்—அதனுடைய முடிவில் இருப்பதற்கு அதிக சாத்தியக்கூறு உண்டு—மிகவும் உன்னதமான வளர்ச்சி பெற்ற மனிதக் குரங்கு இனம் வெப்ப மண்டலத்தில்—தற்போது இந்து மாகடலின் அடியில் ஒருவேளை மூழ்கிப் போன ஒரு பெரும் கண்டமாக இருக்கலாம்—ஏதோ ஓர் இடத்தில் வாழ்ந்தது. நம்முடைய இந்த மூதாதையர்களைக் குறித்து ஒரு உத்தேசமான வர்ணனையை டார்வின் நமக்குக் கொடுத்துள்ளார். அவர்கள் முழுமையாகவே உரோமத்தால் மூடப்பட்டிருந்தனர்; அவர்கள் தாடிகளையும் கூர் முனையுள்ள காதுகளையும் பெற்றிருந்தனர்; மரங்களின்

மீது கூட்டங்கூட்டமாக அவர்கள் வாழ்ந்தனர்.[48]

மரமேறுதல் என்பது கை கால்களுக்கு வித்தியாசப்பட்ட தொழில்களைப் பகிர்ந்து விடுகிறது; அவர்களுடைய வாழ்க்கை முறையில் தட்டையான நிலத்தின் மீது நிலை பெயர்ந்து செல்ல வேண்டி ஏற்பட்ட போது இந்த மனிதக் குரங்குகள் படிப்படியாகக் கைகளைப் பயன்படுத்தும் பழக்கத்தைக் கைவிட்டன; மேலும் மேலும் அதிகமாக ஒரு நிமிர்ந்த உடற்பாணியையே அனுசரித்தன. **மனிதக் குரங்கு மனிதனாக மாறிய இடைநிலையில் இது நிர்ணயமானதொரு படி** ஆகும்.

தற்போதுள்ள எல்லா மனிதக் குரங்குகளுக்கும் நிமிர்ந்து நிற்கவும் பாதங்களினால் நடக்கவும் இயலும்; ஆனால் அது அவசர காலங்களிலேதான், அதுவும் விகாரமாகத்தான். அவைகளுடைய இயல்பான நடை பாதி நிமிர்ந்தும் பாதி குனிந்தும் செல்லும் நடை, அதில் அவை கைகளையும் பயன்படுத்துகின்றன. பெரும்பாலானவை தங்களது முஷ்டியின் விரற்கணுக்களைப் பூமியின் மீது ஊன்றிக் கால்களை உள் இழுத்து நீண்ட கைகளிடையே உடலை ஊசலாட்டிச் செலுத்துகின்றன—ஒரு நொண்டி கவைக் கோல்களினால் நடந்து செல்வதற்கொப்பாக இதைக் கூறலாம். பொதுவாக, நான்கு கால்களினால் நடப்பது முதல் இரண்டு கால்களினால் நடப்பது வரை உள்ள இடைநிலைக் கட்டங்களை எல்லாம் இன்றைய மனிதக் குரங்குகளிடையே காணலாம். இருந்தாலும், பின் சொன்ன நடை அவைகளில் எதற்கும் தாற்காலிகமாகச் சமாளித்துக் கொள்வதற்கு மேலாக முக்கியத்துவம் உடையதாக இருக்கவில்லை.

உரோமம் படர்ந்த நமது மூதாதையரிடையே நிமிர்ந்த நடை என்பது முதலில் ஒரு விதியாகவும் பின்னர் கால அடைவில் ஓர் அவசியமாகவும் ஆயிற்று, இதற்குள்ளாக கைகளுக்குப் பல்வேறு வகையான இதர வேலைகளின் பொறுப்பும் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது புரிய முடியும். மனிதக் குரங்குகளிடையே ஏற்கெனவே கைகளும் பாதங்களும் பயன்படுத்தப்படுவதில் சிறிது வித்தியாசம் இருக்கிறது. மேலே சொன்னதற்கொப்ப, மரமேறுவதில் கைகளுக்கும் பாதங்

களுக்கும் வெவ்வேறு உபயோகங்கள் உள்ளன. கீழ்ப் படியில் உள்ள சில பாலூட்டிகள் தங்களது முன்பாதங்களை உபயோகிப்பதைப் போல உணவைச் சேகரிக்கவும் பிடிக்கவுமே கைகள் பிரதானமாக உபயோகிக்கப்படுகின்றன. மரங்களில் தங்களுக்குக் கூடுகளைக் கட்டிக் கொள்ளவும் அல்லது உதாரணமாக சிம்பன்ஸி குரங்கைப் போலத் தங்களை சீதோஷ்ண நிலைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளக் கிளைகளிடையே கூரைகள் வேய்ந்து கொள்ளவும் கூடப் பல மனிதக் குரங்குகள் கைகளைப் பயன்படுத்துகின்றன. பகைவர்களிடமிருந்து காத்துக்கொள்ளத் தங்களது கைகளினால் கழிகளைப் பிடிக்கின்றன; தங்களது கைகளைக் கொண்டு எதிரிகளைப் பழங்களாலும் கற்களாலும் தாக்குகின்றன. அவை கூண்டில் பிடிபடும் போது மனிதர்களிடமிருந்து சில சிறிய செயல்களை ஒத்த வடிவத்தில் செய்யத் தங்களது கைகளைப் பயன்படுத்துகின்றன. இதில்தான், மனிதனை அதிகப் பட்சம் ஒத்த மனிதக் குரங்குகளின் வளர்ச்சியடையாத கைக்கும் லட்சக்கணக்கான ஆண்டுகளின் உழைப்பினால் உன்னதமான சிறப்பு பெற்றுள்ள மனிதக் கைக்குமிடையே உள்ள பெரிய இடைவெளியை ஒருவன் காண்கிறான். இந்த இரு கைகளிலும் உள்ள எலும்புகளும் தசைகளும் எண்ணிக்கையிலும் பொதுவான இணைப்பு ஏற்பாட்டிலும் ஒரே மாதிரியானவை; ஆனால் எந்தக் குரங்கின் கையும் ஒத்த மாதிரி செய்ய முடியாத நூற்றுக் கணக்கான செயல்களை மிகக் கீழ் படியிலுள்ள ஒரு காட்டுமிராண்டியின் கை செய்ய முடியும்—எந்தக் குரங்கின் கையும் எந்தக் காலத்திலும் மிகக் கரடுமுரடான கல் கத்தியைக் கூட உருவாக்கியதில்லை.

மனிதக் குரங்கிலிருந்து மனிதனாக மாறிய இடைநிலையான பல்லாயிரமாண்டுகளில் நமது மூதாதையர்கள் படிப்படியாகத் தங்களது கைகளைப் பொருந்தியவாறு பழக்கப்படுத்தக் கற்றுக் கொண்ட முதற்செயல்கள் மிக சாதாரணமானவையாக மட்டுமே இருந்திருக்க முடியும். எவரிடையே மிருகங்களையொத்த நிலைக்கு மீண்டும் திரும்பக் கூடிய நிலைமை அதிகமாகவிருக்கவும், அதே சமயத்தில் உடல் துறையிலும் பின்னடைவு ஏற்படுவதும் அனுமானிக்க இயலு

கிறதோ, அப்படிப்பட்ட மிகக் கீழ்ப் படியிலிருந்த காட்டு மிராண்டிகளும் கூட அந்த இடைநிலை வாசிகளை விட எவ்வளவோ மேம்பட்டவர்களே. முதல் சக்கிமுக்கிக் கல் மனிதக் கையினால் கத்தியாக உருவாக்கப்படுவதற்கு முன்பு ஒப்பு நோக்கினால் நாமறிந்த வரலாற்றுக் காலம் அற்பமாகி விடுகிற ஒரு காலக்கூறு கடந்து விட்டிருக்கக் கூடும். ஆனால் நிர்ணயமான அடி எடுத்து வைக்கப்பட்டாகி விட்டது; கை சுதந்திரம் பெற்று விட்டது; இனி மேற்கொண்டு அது மேலும் மேலும் அதிக நுண்திறத்தைப் பெற முடியும்; இவ்வாறு பெறப்பட்ட அதிக நெகிழ்ச்சித் திறமும் வழி வழியாக அடையப்பட்டு தலைமுறைக்குத் தலைமுறை பெருகி வந்தது.

இவ்வாறாக கை உழைப்பிற்கான உறுப்பு என்பது மட்டுமல்ல, உழைப்பின் விளைபயனும் அதுவே. உழைப்பு, எப்பொழுதும் புதிய செயல்களுக்குப் பொருந்தியவாறு அமைத்துக் கொள்ளல், இவ்விதத்தில் விசேஷ வளர்ச்சி அடைந்த தசைகள், தசை நார்கள், காலத்தின் மிக நீண்ட கூறுகளில் எலும்புகள் இவைகளை வழி வழியாகப் பெறுதல், இவ்வாறு வழி வழியாகப் பெறப்பட்ட நுண்ணயங்களைப் புதிய, மேலும் மேலும் கூடுதலான சிக்கலான செயல்களுக்குத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தல் ஆகியன ஒரு ரஃப யேலின் ஓவியங்களையும் ஒரு தொர்வால்ட்ஸனின் சிற்பங்களையும் ஒரு பகனீனியின் சங்கீதத்தையும் செப்பிடுவித்தையின் விளைவு போல முன்கொண்டு வந்து நிறுத்தத்தக்க மகோன்னதத் தேர்ச்சியை மனிதனின் கைக்கு அளித்தன.

ஆனால் கை மட்டும் தனித்து இருக்கவில்லை; அது முழுமொத்தமான, உயர்ந்த பட்ச பல்கூட்டுத் தொகுதியான அங்கஜீவியின் ஓர் உறுப்பாகும். கை என்ன நற்பயனைப் பெற்றதோ, அதை அது பணி புரிந்த உடலமைப்பு முழுவதும் பெற்றது; இது இரண்டு வழிகளில் நடந்தேறியது.

முதலாவதாக, வளர்ச்சியின் பரஸ்பரத் தொடர்பு விதி என டார்வின் அழைத்ததற்கொப்ப உடலமைப்பு அந்த நற்பயனைப் பெற்றது. ஓர் அங்கஜீவியின் தனிப்பட்ட உறுப்புகளின் பிரத்யேகத் தன்மை வாய்ந்த வடிவங்கள் எப்

போதுமே மேலீடாக அவைகளுடன் தொடர்பற்றதாகத் தெரிகிற இதர உறுப்புகளின் குறிப்பிட்ட வடிவங்களுடன் பிணைக்கப்பட்டுள்ளன என்று அந்த விதி அறிவிக்கிறது. இவ்வாறாக ஜீவ அணுக் கருவற்ற சிவப்பு ரத்த அணுக்களையும் முதுகெலும்பின் முதல் எலும்புடன் இரட்டை மூட்டுக்களால் இணைக்கப்பட்ட தலையையும் உள்ள எல்லா மிருகங்களும் எவ்வித விதிவிலக்குமின்றித் தங்களது குட்டிகளுக்குப் பாலூட்டப் பால் சுரப்பிகள் பெற்றிருக்கின்றன. அதைப் போலவே, பாலூட்டும் மிருகங்களின் பிளவுபட்ட குளம்புகள் என்பது அசைபோடுவதற்கான பல் கூறடங்கிய வயிற்றைப் பெற்றிருப்பது என்பதுடன் முறையாக இணைக்கப்பட்டுள்ளது. சில குறிப்பிட்ட வடிவங்களில் மாற்றங்கள் என்பதில் உடலினுடைய இதர உறுப்புகளின் வடிவங்களில் மாற்றங்கள் என்பன அடங்கியுள்ளன—இந்தத் தொடர்பை நம்மால் விளக்க முடியவில்லையெனினும் இது உண்மையே. நீலக் கண்களைப் பெற்ற தூய வெள்ளைப் பூனைகள் எப்போதுமே அல்லது கிட்டத்தட்ட எப்போதுமே செவிடாக உள்ளன. படிப்படியாக மேலும் மேலும் நிறைவு பெற்று வந்த மனிதக் கையும் இதை ஒத்து ஒரே அளவில் நிமிர்ந்த நடைக்கு உகந்த வகையில் பாதங்கள் பொருந்தி வந்தமையும் சேர்ந்து இந்தப் பரஸ்பரத் தொடர்பு இணைப்பின் காரணமாக அங்கஜீவிகளின் இதர உறுப்புகள் மீது நிச்சயமாக எதிர்ச்செயல் கொண்டன. இருந்த போதிலும் கூட, யதார்த்த உண்மையைப் பொதுப்படையாக அன்றி அதற்கு மேல் அதிகமாகச் சொல்லுவதற்குச் சாத்தியமல்லாத வகையில் போதுமான அளவுக்கு இந்தச் செயற்பாடு பரிசீலிக்கப்படவில்லை.

உடலமைப்பின் இதர பகுதிகளின் மீது கையினுடைய வளர்ச்சியின் நேரடியான, எடுத்துக் காட்டத்தக்க செயலாட்சி அதை விட அதிக முக்கியத்துவம் உடையதாகும். நமது வானர மூதாதையர்கள் சமூக உணர்வு கொண்டவர்களாக இருந்தனர் என்பது ஏற்கெனவே கவனத்தில் கொள்ளப்பட்டது; மிருகங்களிலேயே மிக அதிக சமூக உணர்வு கொண்ட மனிதனின் தோற்றத்தை சமூக உணர்வில்லாத

மிக சமீபத்திய மூதாதையரிடையே தேடுவது சாத்திய மில்லை என்பது தெளிவு. கையின் வளர்ச்சியுடன், உழைப் புடன் இயற்கையின் மீது ஆளுகை கொள்வது தொடங்கியது; ஒவ்வொரு புதிய முன்னேற்றத்தோடும் மனிதனுடைய அறி வெல்லை விரிவாகி வந்தது. இயற்கைப் பொருள்களின் அது வரை அறியப்படாமல் இருந்த புதிய பண்புகளைத் தொடர்ந்தாற்போல அவன் கண்டுபிடித்துக் கொண்டிருந் தான். மற்றொரு புறம், பரஸ்பர ஆதரவு, கூட்டுச் செயல் என்பதற்கான வழக்குகளைப் பெருக்கியும் ஒவ்வொரு தனி நபருக்கும் இவ்வித கூட்டுச் செயலின் நல்லாதாயத்தைத் தெளிவுபடுத்தியும் சமூக உறுப்பினர்கள் நெருங்கிக் கூடி வர உழைப்பின் வளர்ச்சி அவசியமாகவே உதவி புரிந்தது. சுருக்கமாகக் கூறுவதென்றால் உருவாகிக் கொண்டிருந்த மனிதர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்வதற்கு ஏதோ ஒன்று உள்ளவர்களாகிற நிலையை எய்தினர். தேவை என்பது ஓர் உறுப்பைப் படைத்தது; மனிதக் குரங்கின் வளர்ச்சியுறாத குரல்வளை மெதுவாக ஆனால் நிச்சய மாகச் சுரபேதத்தின் மூலம் இன்னும் கூடுதலான வளர்ச்சி பெற்ற சுரபேதத்தை உற்பத்தி செய்ய மாற்றியமைக்கப் பட்டது; வாயின் உறுப்புகள் படிப்படியாக ஒரு தீர்க்கமான ஒலிக்குப் பின் மற்றொன்றாக உச்சரிக்கக் கற்றுக் கொண் டன.

உழைப்பிலிருந்தும் அதனுடைய மாற்றப்போக்கிலிருந் தும் மொழியின் பிறப்பை விளக்குவது ஒன்றே சாலவும் பொருத்தமுடையது என மிருகங்களுடன் ஒப்பிட்டு நோக் குங்கால் நிரூபிக்கப்படுகிறது. மிக அதிகப்பட்சம் வளர்ச்சி பெற்ற மிருகங்களுக்கும் தங்களுக்குள் பரஸ்பரத் தொடர்பு கொள்ள அவசியமான அந்தச் சிறிய அளவுக்கும் கூடத் தீர்க்கமான பேச்சு தேவைப்படுவதில்லை. இயற்கை நிலை யில் அதற்குப் பேசுவதற்கு அல்லது மனிதப் பேச்சைப் புரிவதற்குச் சாத்தியப்படவில்லை என்பதினால் தனக்கு ஏதோ ஒரு தடை இருப்பதான உணர்ச்சி எந்த மிருகத் திற்கும் இல்லை. மனிதனால் பழக்கப்படும் பொழுது இது முற்றாகவே வேறுபடுகிறது. நாயும் குதிரையும் மனித

னுடன் கொண்ட நட்புக் கூட்டு காரணமாக, அவைகளது கருத்து வீச்சின் எல்லைக்குள், எம்மொழியையும் புரிய எளிதாகக் கற்றுக் கொள்ளுகிற அளவுக்குத் தீர்க்கமான பேச்சைக் கூர்ந்து கேட்கக் கூடிய காதுகளை வளர்த்துக் கொண்டுள்ளன. மேலும், அவைகளுக்கு முன்பு அப்பாற்பட்டதாக இருந்த, மனிதனின் பால் அபிமானம், நன்றியுணர்வு, முதலான உணர்ச்சிகளைக் கொள்ளுவதற்கான திறனையும் அவை பெற்று உள்ளன. இப்படிப்பட்ட மிருகங்களுடன் அதிகமாகப் பழக வாய்ப்புள்ள ஒருவன், அனேக வழக்குகளில் அவை இப்பொழுது பேசுவதற்குச் சாத்தியமற்ற தங்களது நிலையை ஒரு குறைபாடாக உணருகின்றன என்ற நம்பிக்கையிலிருந்து எளிதாகத் தப்பிக்க முடியாது; இருந்தாலும், துரதிர்ஷ்டவசமாக, இந்தக் குறைபாடு இனி நேர் செய்ய முடிகிற ஒன்றல்ல; ஏனெனில் அவைகளுடைய வாய்த் தொனி உறுப்புகள் ஒரு திட்டமான திசையில் மிகப் பிரத்யேகத் தன்மை பெற்று விட்டன. ஆனாலும் வாய்த் தொனி உறுப்புகள் உள்ளவற்றில் இந்தத் திறமின்மையும் குறிப்பிட்ட வரையறைகளுக்குள் மறைந்து விடுகிறது. பறவைகளின் குரல் கொடுக்கும் உறுப்புகள் மனிதனுடையவற்றை விட எவ்வளவு மாறுபட முடியுமோ அவ்வளவு மாறுபட்டிருந்தாலும் கூட, எல்லா விலங்குகளிலும் பறவைகள் மட்டுமே பேசுவதற்குக் கற்றுக் கொள்ள வல்லவை; மிகவும் அருவருக்கத்தக்க குரலைக் கொண்டுள்ள கிளிதான் மிகச் சிறப்பாகப் பேசுகிறது. கிளி என்ன பேசுகிறதோ, அதைப் புரிந்து கொள்வதில்லை என்று யாரும் ஆட்சேபிக்க வேண்டாம். மனிதர்களுடன் பேசவும் நட்புறவு கொள்ளவுமான இன்பத்திற்காக மட்டும் கிளி ஒரேயடியாய் மணிக் கணக்கில் பேசும்; தொடர்ந்தாற்போலத் தனது சொற்செல்வம் முழுவதையும் திரும்பத் திரும்ப ஒப்பிக்கும் என்பது உண்மையே. ஆனால் அதனுடைய கருத்துக்களின் வீச்சு எல்லைக்குட்பட்டு தான் சொல்வதைப் புரிந்து கற்றுக் கொள்ள முடியும். வசைச் சொற்களின் பொருளைப் பற்றிய கருத்தைப் பெறத்தக்க வகையில் ஒரு கிளிக்கு அவைகளைச் சொல்லிக் கொடுங்கள் (வெப்ப மண்டலத்திலிருந்து திரும்பு

கிற மாலுமிகளின் ஓர் இன்பமான பொழுதுபோக்கு இது); பிறகு அதைத் தொந்தரவு செய்யுங்கள்; வசைச் சொற்களை பெர்லினில் உள்ள ஒரு தள்ளுவண்டிப் பழம் விற்பவனைப் போல மிகப் பொருத்தமாக உபயோகிக்க அது தெரிந்து கொண்டிருக்கிறது என்பதைக் கண்டறிவீர்கள். தின்பண்டங்கள் கொடுக்கக் கெஞ்சும் போதும் இது பொருந்துகிறது.

முதலில் உழைப்பு, அதன் பின்னரும், அத்துடன் சேர்ந்தும் பேச்சு—இந்த மிக முக்கியமான இரண்டு தூண்டுகைகளின் செயலாட்சியினால் மனிதக் குரங்கின் மூளை படிப்படியாக மனிதனுடைய மூளையாக மாறியது; இது அதை ஒத்ததாக இருந்த போதிலும் அதை விட இன்னும் பெரிதாகவும் இன்னும் நேர்த்தியாகவும் இருந்தது. மூளையின் வளர்ச்சியுடன் கைகோத்துக் கொண்டு அதனுடைய மிக உடனடியான கருவிகளான புலன்களின் வளர்ச்சியும் சென்றது. பேச்சின் படிப்படியான வளர்ச்சியுடன் ஒத்த வகையில் கேட்கும் உறுப்பும் செம்மையடைவது என்பது தவிர்க்க முடியாமல் தொடர்ந்ததைப் போல மூளையின் வளர்ச்சி முழுவதையும் தொடர்ந்து எல்லாப் புலன்களும் செம்மையடைந்தன. மனிதனுடையதை விடப் பருந்தின் கண்கள் மிக தூரத்தைப் பார்க்கின்றன; ஆனால் மனிதனுடைய கண்கள் பருந்தினதை விடக் கணிசமாகவே அதிகமானவற்றைப் பொருள்களில் உய்த்துணருகின்றன. மனிதனதை விட நாயின் முகரும் உணர்வு மிகக் கூர்மையானதே; ஆனாலும் மனிதனுக்கு வெவ்வேறான பொருள்களைக் குறிக்கிற திட்டமான அறிகுறிகளாக உள்ள வாசனைகளில் நூற்றில் ஒரு பகுதியைக் கூட அதனால் வகைவேறுபாடு காண முடியாது. மனிதக் குரங்கு ஸ்பரிச உணர்வைக் கரடுமுரடான, ஆரம்ப நிலையில் மட்டுமே பெற்றிருக்கும்; மனிதக் கையின் வளர்ச்சியுடன் அக்கம்பக்கமாகவே, அதுவும் உழைப்பின் மூலமாக, வளர்ச்சி பெற்றது.

மூளை, அதன் பணியாட்களான புலன்கள், மேலும் மேலும் தெளிவு பெறும் பகுத்தறிவு, பொதுமைப்படுத்தவும் முடிவு காணவும் உள்ள திறன் ஆகியவற்றின் வளர்ச்சி

உழைப்பின் மீதும் பேச்சின் மீதும் ஏற்படுத்திய எதிர்ச் செயற்பாடு உழைப்பு, பேச்சு இவற்றின் கூடுதலான வளர்ச்சிக்குத் திரும்பத் திரும்பத் தூண்டுகைகளை அளித்து வந்தது. மனிதக் குரங்கிலிருந்து வேறுபட்டவனாக மனிதன் இறுதியாக மாறியவுடன் இந்த வளர்ச்சி முற்றுப்பெற்று விடவில்லை; ஆனால் ஒட்டுமொத்தத்தில் கூடுதலான வலுமிக்க முன்னேற்றத்தைப் பெற்றது; இது வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு மக்களினங்களிடையே அளவிலும் திசையிலும் மாறுபடவும் அங்குமிங்கும் ஸ்தல அல்லது தற்காலிகப் பின்னேற்றத்தால் இடைமறிக்கப்படவும் செய்தது. இந்தக் கூடுதலான அபிவிருத்தி, முழு வளர்ச்சி பெற்ற மனிதன் தோன்றியவுடன் செயலுக்கு வந்த புதியதோர் ஆக்கக் கூறான சமூகம் என்பதினால் ஒரு புறத்தில் வலுவுடன் முன்னோக்கி உந்தப்படவும் மறு புறம் இன்னும் திட்டமான திசைகளில் வழி நடத்தப்படவும் செய்தது.

மரமேறிகளான குரங்குகளின் கூட்டத்திலிருந்து மனித சமூகம் தோன்றுவதற்குள் லட்சக்கணக்கான ஆண்டுகள்—மனிதனுடைய ஆயுளில் ஒரு வினாடிக்கு இருப்பதை விட அதிக முக்கியத்துவம் இதற்குப் பூமியின் வரலாற்றில் ஏதும் இல்லை*—நிச்சயமாகவே கடந்து சென்றன. ஆனால் இறுதியாக அது தோன்றத்தான் செய்தது. குரங்குகளின் ஒரு கூட்டத்திற்கும் மனித சமூகத்திற்கும் இயல்பு ரீதியான வேறுபாடாகத் திரும்பவும் நாம் எதைக் காண்கிறோம்? உழைப்பு. பூகோளச் சூழ்நிலைகளால் அல்லது அண்டையிலுள்ள மந்தைகளின் எதிர்ப்பால் வரையறை செய்யப்பட்ட தீனிப் பிரதேசத்திற்குள் இரை தேடிக் கொண்டிருப்பதுடன் ஒரு மனிதக் குரங்குக் கூட்டம் திருப்தியடைந்தது; புதிய தீனிப் பிரதேசங்களைப் பெறுவதற்காக அது குடிபெயர்ச்சிகளை அல்லது போராட்டங்களை மேற்கொண்

---

* தாவரங்களும் மிருகங்களும் வாழ்வதற்கு உகந்த வகையில் போதுமான அளவுக்குப் பூமி குளிர்ச்சியடையப் பத்து கோடி ஆண்டுகளுக்கும் சிறிது அதிகமாகவே கடந்தன என்று இவ்வகையில் நிபுணரான ஸர் வில்லியம் தாம்ஸன் என்பவர் கணக்கிட்டுள்ளார். (பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

டது; தனது கழிவுப் பொருளைக் கொண்டு அப்பிரதேசங்களுக்குத் தன்னுணர்வின்றி உரமளித்ததைத் தவிர்த்து அவை இயற்கை நிலையில் அளித்ததற்கு மேலாக வலிந்தெடுக்க அது திறனற்றிருந்தது. எல்லாத் தகுந்த தீனி நிலங்களும் வியாபிக்கப்பட்டவுடன் மனிதக் குரங்குகளின் மொத்த தொகையில் பெருக்கம் ஏற்படவில்லை; அதிகப்பட்சம் அவைகளின் எண்ணிக்கை ஒரே நிலையில் தங்கி விட்டது. ஆனால் எல்லா மிருகங்களும் பெருமளவு உணவை விரயம் செய்கின்றன; அத்துடன் கூடுதலாக, உணவின் அடுத்த தலைமுறையை முளையிலேயே அழித்து விடுகின்றன. வேட்டைக்காரனைப் போலன்றி ஓநாய் தனக்கு அடுத்த ஆண்டிற்குக் குட்டிகளை உணவாக அளிக்கும் பெண்மானை விட்டு வைப்பதில்லை; முழு வளர்ச்சி பெறுவதற்கு முன்னரே இளம் புதர்களைத் தின்று விடுகிற கிரேக்க நாட்டு வெள்ளாடுகள் நாட்டிலுள்ள எல்லா மலைகளையும் பசுமையின்றி வெறிச்சோட வைத்தன. மிருகங்களின் இந்தச் ''சூறையாடும் பொருளாதாரம்'', இனவகைகள் தங்களது வழக்கமான உணவைக் கைவிட்டு இதர வகைக்கு ஏற்றவாறு தங்களை அமைத்துக் கொள்ள நிர்ப்பந்தித்து அவை படிப்படியாக நிலைமாறுதல் அடைவதில் முக்கியப் பாத்திரம் வகிக்கிறது; இதன் புண்ணியத்தால் அவைகளின் ரத்தம் ஒரு வேறுபட்ட இரசாயன ஆக்கத்தைப் பெறவும் உடலமைப்பு படிப்படியாக வேறுபடவும் செய்கிறது; அதே பொழுதில் தங்களைத் திருத்தியமைத்துக் கொள்ளாத இனவகைகள் சிறுகச் சிறுக இறந்து விடுகின்றன. நமது மூதாதையர்கள் மனிதக் குரங்கிலிருந்து மனிதனாக மாறியதில் இந்தச் சூறையாடும் பொருளாதாரம் பெரும் அளவில் நற்பங்காற்றியுள்ளது என்பதில் யாதோர் ஐயமும் இல்லை. மனிதக் குரங்குகளில் புத்திக் கூர்மையிலும் சூழ்நிலைமைகளுக்குப் பொருந்தியவாறு அமைத்துக் கொள்வதிலும் மற்றெல்லாவற்றையும் விட மேலோங்கி நின்ற ஓர் இனத்தில் இந்தச் சூறையாடும் பொருளாதாரம் உணவாக உபயோகிக்கப்பட்ட செடிகளின் எண்ணிக்கையைத் தொடர்ந்து பெருக்குவதற்கும் உணவு வகைச் செடிகளின் உண்ணத்தக்க பகுதிகளை மேலும் மேலும் கூடு

தலாக உண்ணப்படுவதற்கும் இட்டுச் சென்றது. சுருக்கத்தில், உணவு மேலும் மேலும் பல்வகையதாயிற்று; உடலுக்குள் செல்லும் பொருட் சத்துகளின் வகையும் அவ்வாறேயாயிற்று; இந்தப் பொருட் சத்துகளே மனிதனாக மாறுவதற்கான இரசாயன ஆதாரப்படிகளாகும். ஆனால் அவை அத்தனை சேர்ந்தும் கூட இன்னும் உழைப்பு என்ற சொல்லிற்குப் பொருத்தமான பொருளைப் பெற்று விடவில்லை. உழைப்புக் கருவிகளைச் செய்வதிலிருந்தே உழைப்பு ஆரம்பமாகிறது. நாம் காண்கிற மிகப் புராதனமான உழைப்புக் கருவிகள்—இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ள, வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மனிதனின் வழிவழியாக வந்த உடைமைகளைக் கொண்டும் வரலாற்றுக் காலத்தின் ஆரம்ப மக்களுடையவும் மிக மிக முதிர்ச்சியற்ற தற்காலத்துக் காட்டுமிராண்டிகளுடையவும் வாழ்க்கைப் பாங்கைக் கொண்டும் நிர்ணயிப்பதெனில் மிகப் புராதன உழைப்புக் கருவிகள் தான் என்ன? வேட்டையாடுவதற்கும் மீன் பிடிப்பதற்குமான அக்கருவிகளில் முன்சொன்னவை அதே சமயத்தில் ஆயுதங்களாகவும் பயன்பட்டன. வேட்டையாடுதல், மீன் பிடித்தல் என்றால் தாவர உணவை மட்டும் உட்கொள்வது என்பது மாறி அத்துடன் இறைச்சியையும் உபயோகிக்கிற நிலை ஏற்பட்டது என்று பொருள்; மனிதக் குரங்கு மனிதனாக மாறிய இடைநிலை மாற்றப்போக்கில் இது மற்றொரு முக்கியமான படியாகும். அங்கஜீவியின் வளர்சிதை மாற்றத்திற்குத் தேவையான எல்லா முக்கியமான ஆக்கக் கூறுகளும் ஏறக்குறையப் பக்குவப்பட்ட நிலையில் இறைச்சி உணவில் உள்ளன; ஜீரணத்திற்கு ஆகும் நேரத்தைக் குறைத்ததின் மூலமாக அது தாவர வாழ்விற்கு ஒத்த, உடலின் தாவரத் தன்மை சார்ந்த இதர மாற்றப்போக்குகளையும் குறைத்தது; இவ்வாறு மிருக வாழ்வு என்பது செயல்திறனுடன் வெளிப்பட்டுச் செயல்படுவதற்குக் கூடுதலான நேரம், பொருள், சக்தி ஆகியவற்றை அது பெற்றுக் கொடுத்தது. உருவாகி வந்த மனிதன் தாவர இனத்திலிருந்து விலகிச் சென்ற அளவுக்கு அவன் மிருகத்தை விட மேல் நிலைக்கு உயர்ந்தான். இறைச்சியுடனேயே அக்கம்பக்கமாக ஏற்பட்ட

தாவர உணவின் பழக்கம் காட்டுப் பூனை, காட்டு நாய் ஆகியவற்றை மனிதனுக்கு ஊழியர்களாக மாற்றியதைப் போலவே, தாவர உணவிற்கு அக்கம்பக்கமாக இறைச்சி உணவையும் பொருந்த அமைத்துக் கொண்டது உருப் பெற்று வந்த மனிதன் உடல் வலுவையும் சுதந்திரத்தையும் பெறுவதில் நற்பங்காற்றியது. ஆயினும் இறைச்சி உணவு மிக அதிகப்பட்சம் மூளைக்கே நற்பயனை விளைவித்தது; அதனுடைய ஊட்டத்திற்கும் வளர்ச்சிக்கும் தேவையான பொருள்களை இப்பொழுது இன்னும் செழுமையாக அது பெற்றது; எனவே தலைமுறைக்குத் தலைமுறை அதிக விரைவாகவும் முழுநிறைவாகவும் அபிவிருத்தியடைய அதற்குச் சாத்தியமாயிற்று. தாவர உணவு உண்போருக்கு முழு மதிப்புக் கொடுத்த போதிலும், சொல்ல வேண்டியதென்னவெனில் இறைச்சி உணவின்றி மனிதன் வாழ்நிலை பெற்று விடவில்லை. இறைச்சி உணவினால் ஏதோ ஒரு காலத்தில் நாமறிந்த சகல மக்கள் இனங்களிலுமே நரமாமிசப்பட்சணியாக மாற அது இட்டுச் சென்றது எனினும் (பெர்லின்வாசிகளின் மூதாதையர்களான வெலெடாபியன்கள் அல்லது வில்ட்ஸியன்கள் ஆகியோர் பத்தாவது நூற்றாண்டு வரைக்கும் தங்களது பெற்றோரை உண்பதை வழக்கமாகப் பெற்றிருந்தனர்) அது இன்று நமக்கு முக்கியமல்ல.

இறைச்சி உணவு நிர்ணயமான முக்கியத்துவம் உடைய இரண்டு புதிய முன்னேற்றங்களுக்கு இட்டுச் சென்றது—நெருப்பைப் பயன்படுத்தல், மிருகங்களைப் பழக்குதல். முதலாவது அரை ஜீரண நிலையில் உணவை வாய்க்கு வழங்கியதால் ஜீரண மாற்றப்போக்கை மேலும் சுருக்கியது; இரண்டாவது வேட்டையாடுவதோடு கூட இறைச்சி இன்னும் அபரிமிதமாகவும் ஒழுங்காகவும் கிடைப்பதற்கான புதியதொரு தோற்றுவாயைத் திறந்து விட்டது; மேலும், பாலிலும் அதைச் சேர்ந்த விளைபொருள்களிலும் ஊட்டத்தில் இறைச்சிக்குக் குறைந்த பட்சம் சமமான மதிப்புள்ள புதியதோர் உணவுப் பண்டத்தை அளித்தது. இவ்வாறு இவ்விரண்டு முன்னேற்றங்களும் மனிதனுடைய விடுதலைக்குப் புதிய சாதனங்களாக விளங்கின. மனிதனுடையவும் சமூகத்

தினுடையவும் அபிவிருத்திக்கு அவை மகத்தான முக்கியத் துவம் உடையனவாக இருந்தாலும், அவைகளின் மறைமுக விளைவுகளைப் பற்றி இங்கு நாம் விரித்துக் கூறினால் அது நம்மை வேறு புறம் வெகு தூரம் இட்டுச் சென்று விடும்.

உண்ணத்தக்கவற்றை எல்லாம் உண்ணக் கற்றுக் கொண் டதைப் போலவே மனிதன் எந்த சீதோஷ்ண நிலையிலும் வாழவும் கற்றுக் கொண்டான். குடியிருக்கத்தக்க உலகம் முழுவதிலும் அவன் வியாபித்தான்; தனது சொந்தப் போக் கில் அதை முழுமையாகச் சாதித்த ஒரே மிருகம் அவனே. எல்லா சீதோஷ்ண நிலைகளுக்கும் தங்களைப் பழக்கப் படுத்திக் கொண்ட இதர மிருகங்கள்—வீட்டுப் பிராணிகளும் பூச்சி இனங்களும்—தங்களது சொந்தப் போக்கில் சுயேச் சையாக அவ்வாறு மாறவில்லை; மனிதனுடைய அடிச்சு வட்டைப் பின்பற்றிச் சென்றே அவ்வாறு மாறின. ஒரே மாதிரியான வெப்ப சீதோஷ்ண நிலை நிலவிய தனது அசல் குடியிருப்புப் பிரதேசத்திலிருந்து மனிதன் வேனிற்காலம், பனிக்காலம் என வருடம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ள குளிர் பிரதேசங்களுக்குப் பெயர்ந்து சென்றதானது புதிய தேவைகளை—குளிரையும் ஈரத்தையும் எதிர்த்துக் காப் பாகப் புகலிடமும் உடுப்பும் என்பதாக—படைத்தது; இத னால் உழைப்புக்கான புதிய துறைகளும் செயலுக்கான புதிய வடிவங்களும் தோன்றின; இவை மேலும் மேலும் மனிதனை மிருகத்திலிருந்து வேறுபடுத்தின.

கைகள், பேச்சு உறுப்புகள், மூளை இவற்றினுடைய ஒருங்கிணைப்பான செயற்பாட்டினால்—ஒவ்வொரு தனி மனிதனிடத்தில் மட்டுமின்றிச் சமூகத்திலும் கூட—மனிதர் கள் மேலும் மேலும் சிக்கல் மிகுந்த காரியங்களை நிறை வேற்றத் திறன் பெற்றனர்; மேலும் மேலும் உயர்ந்த குறிக் கோள்களைத் தங்களுக்கு நிர்ணயித்துக் கொள்வதும் அவற்றை அடைவதும் அவர்களுக்குச் சாத்தியமாயிற்று. ஒவ் வொரு தலைமுறையின் வேலையும் கூட வித்தியாசப்பட் டது; கூடுதலான செய்நேர்த்தியும் பல்வகைத் தன்மையும் அது பெற்றது. வேட்டையாடுவது, கால்நடைகளை வளர்ப் பது என்பதுடன் விவசாயமும் சேர்ந்தது; அதைத் தொடர்ந்து

நூற்பு, நெசவு வேலைகள், உலோக வேலைகள், மண் பாண் டங்கள் செய்தல், கடற்பயணம் ஆகியனவும் வந்தன. வாணி பம், தொழில் இவற்றுடன் இறுதியாகக் கலைகளும் விஞ் ஞானமும் தோன்றின; குலங்கள் தேசங்களாகவும் அரசுகளா கவும் வளர்ந்தன. சட்டமும் அரசியலும், அவற்றோடு மனி தனுடைய உள்ளத்தில் மனித விவகாரங்களின் அந்த விநோ தமான பிரதிபிம்பமான மதமும் எழுந்தன. உள்ளத்தின் விளைபொருள்களாக முதலாவதாகத் தோற்றமளித்தவை யும் மனித சமூகங்களில் மேலாதிக்கம் செலுத்தியவையுமான இந்த எல்லாப் பிம்பங்களுக்கும் எதிராக உழைக்கும் கையின் மிகையான தன்னடக்கம் உள்ள விளைபொருள்கள் பின் னணிக்குச் சென்றன; சமூக வளர்ச்சியின் மிக ஆரம்ப கட்டத் திலேயே (உதாரணமாக, புராதனக் குடும்பத்திலேயே) உழைப்புக்குத் திட்டம் வகுத்த உள்ளம் தன்னுடையதன்றி இதர கைகளால் அவ்வாறு திட்டமிடப்பட்ட உழைப்பை நிறைவேற்றவும் சாத்தியமாக்கியதால் அது இன்னும் கூடு தலாகவே நிகழ்ந்தது. நாகரிகத்தினுடைய துரித வளர்ச்சி யின் பெருமை முழுவதும் உள்ளத்திற்கே, மூளையின் வளர்ச் சிக்கும் செயலுக்குமே வழங்கப்பட்டது. (எவ்வாறாயினும் உள்ளத்தில் புலன் நுகர்ச்சி செய்யப்பட்டு அதில் பிரதி பலிக்கிற) தங்களுடைய தேவைகளிலிருந்தன்றிக் கருத்துக் களிலிருந்தே எழுகின்றன என்று தங்களுடைய செயல்களை விளக்க மனிதர்கள் வழக்கப்படுத்திக் கொண்டனர்; எனவே காலப் போக்கில், விசேஷமாகப் பண்டைய உலகின் வீழ்ச் சிக்குப் பிறகு மனிதர்களின் மனதில் மேலாதிக்கம் செலுத்திய ஒரு கருத்துமுதல்வாத உலகக் கண்ணோட்டம் எழுந்தது. டார்வின் கருத்தோட்டத்தைச் சேர்ந்த அதிகப் பொருள் முதல்வாத இயற்கை விஞ்ஞானிகள் கூட மனிதனுடைய ஆரம்ப பிறப்பைக் குறித்து ஒரு தெளிவான கருத்தை இன் னும் கூடப் பெற இயலாத அளவுக்கு அது இன்னும் மனிதர் களை ஆட்சி செய்து வருகிறது; ஏனெனில் அதனுடைய கருத்தியல் செல்வாக்கின் கீழ்பட்டுள்ள அவர்கள் அதில் உழைப்பு ஆற்றியுள்ள பங்கை அங்கீகரிப்பதில்லை.

ஏற்கெனவே சுட்டிக் காட்டியது போல, மிருகங்கள்

தங்களது செயல்களால்—மனிதனைப் போலவே, ஆனால் அந்த அளவுக்கு இல்லாமல் இருந்தாலும்—சுற்றுச் சார்புகளை மாற்றுகின்றன; இந்த மாற்றங்கள் தங்களது முறைக்கு அவற்றை நிகழ்த்தியவர்களின் மீது எதிர்ச்செயல் புரிந்து அவர்களை மாற்றுகின்றன என்பதையும் கண்டோம். இயற்கையில் எதுவுமே தனிமைப்பட்ட நிலையில் நிகழ்வதில்லை. ஒவ்வொன்றும் மற்ற ஒவ்வொன்றையும் பாதிக்கிறது, பாதிக்கப்படுகிறது. பெரும்பாலான இனங்களில் இந்தப் பல தரப்பட்ட இயக்கமும் பரஸ்பரச் செயற்பாடும் மறக்கப்படுவதால் மட்டுமே நமது இயற்கை விஞ்ஞானிகள் மிக எளிய விஷயங்களிலும் கூட ஒரு தெளிவான உட்பார்வை பெறுவதினின்றும் தடுக்கப்படுகின்றனர். கிரேக்க நாட்டில் வெள்ளாடுகள் காடுகள் புத்துயிர் பெறுவதை எப்படி தடுத்தன என்பதைக் கண்டோம்; செயின்ட் ஹெலேனா தீவில் ஆரம்பத்தில் குடியேறியவர்களால் கொண்டு வரப்பட்ட வெள்ளாடுகளும் பன்றிகளும் ஏறக்குறையப் பூரணமாகவே அங்கிருந்த பழைய செடிகொடியினத்தையே ஒழித்து விடுவதில் வெற்றி கண்டு, பின்னால் வந்த மாலுமிகள், குடியேறியவர்கள் இவர்களால் கொணரப்பட்ட செடிகள் பரவுவதற்கு இவ்வாறு வழி வகுத்தன. ஆனால் மிருகங்கள் சுற்றுச் சார்புகள் மீது எவ்வித உட்கருத்தின்றி அவைகளைப் பொறுத்த வரை தற்செயலாகவும் நிரந்தரமான பாதிப்பை நிகழ்த்துகின்றன. ஆனால் மனிதர்கள் மிருகங்களிடமிருந்து விலகிச் செல்கிற அளவுக்கு இயற்கையின் மீது அவர்களின் பாதிப்பு முன்கூட்டியே நிர்ணயித்த, திட்டமான குறிக்கோள்களை நோக்கிய திசைமுகம் கொண்ட, முன்னரே சிந்தித்துத் திட்டமிட்ட செயலின் இயல்பை மேலும் மேலும் கொள்கிறது. அவை என்ன செய்கின்றன என்பதை உணராமலேயே மிருகங்கள் ஓர் இடத்தில் உள்ள செடிகொடியினத்தை அழிக்கின்றன. மனிதன் அதை அழிப்பது அவ்வாறு செய்வதினால் விடுபடுகிற நிலத்தில் வேளாண்மைப் பயிரை விதைக்க அல்லது மரங்களை அல்லது திராட்சைக் கொடிகளை நடுவதற்காகவேயாம்; விதைப்பதைப் போலப் பல மடங்கை அவை அளிக்கின்றன என்பதை அவன் அறிவான். உபயோக

கரமான செடிகளையும் வீட்டுப் பிராணிகளையும் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு அவன் மாற்றி கண்டங்கள் அனைத்தின் மாவடை, மரவடை வகைகளையே இவ்வாறு மாற்றி விடுகிறான். இதை விட இன்னும் அதிகமாக. செயற்கை இனப் பெருக்கத்தின் மூலம் செடிகளும் மிருகங்களும் மனிதனுடைய கையினால் அடையாளம் தெரியாத அளவுக்கு மாற்றப்படுகின்றன. நமது தானிய வகைகள் எந்தக் காட்டுச் செடிகளிலிருந்து தோன்றினவோ, அவை பயனற்ற வகையில் இன்னும் கூடத் தேடப்பட்டு வருகின்றன. மிக வித்தியாசப்பட்ட வளர்ப்பினங்களைச் சேர்ந்த நமது நாய்கள் அல்லது இவற்றிற்குச் சமமான எண்ணிக்கையுள்ள வளர்ப்பினங்களைச் சேர்ந்த குதிரைகள் எந்தக் காட்டு மிருகங்களின் வழிமரபாக வந்தன என்பதைக் குறித்து இன்னும் சர்ச்சை உள்ளது.

முன்கூட்டியே சிந்தித்த, திட்டமிட்ட முறையில் செயல்பட மிருகங்களுக்கு உள்ள ஆற்றலைக் குறித்து சர்ச்சை புரிய நமக்கு மனதிற்படாது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இதற்கு எதிர்மாறாக, எங்கெங்கு புரோடோபிளாஸம், உயிருள்ள அல்புமின் நிலைவாழ்ந்து எதிர்ச்செயல் புரிகிறதோ, அதாவது திட்டமான புறநிலைத் தூண்டுகைகளின் விளைவாக மிகச் சாதாரணமானவையாக இருந்தாலும் திட்டமான சலனங்களை உண்டாக்கி நிறைவேற்றுகின்றதோ, அங்கெல்லாம் கரு உருவத்தில் திட்டமிட்ட செயல்முறை நிலை வாழ்கிறது. ஒரு நரம்பு அணு இருக்கிறதா என்பது ஒரு புறமிருக்க ஓர் அணு கூட இன்னும் இல்லாத இடத்தில் கூட இவ்வாறான எதிர்ச்செயல் நிகழ்கிறது. பூச்சிகளை உண்ணும் செடிகள் உளவிழிப்பின்றிச் செய்தாலும் கூட தங்களுடைய இரையைப் பிடிக்கும் முறையில் திட்டமிட்ட செயலின் ஏதோ ஒன்று இருக்கிறது. மிருகங்களில் உளவிழிப்புள்ள திட்டமிட்ட செயலுக்கான திறன் என்பது அவைகளின் நரம்பு மண்டல அபிவிருத்தியுடன் தகவுப் பொருத்தம் உடையதாகும்; பாலூட்டிகளில் அது இன்னும் கணிசமான உயர் மட்டத்தை அடைகிறது. இங்கிலாந்தில் நரி வேட்டையின் போது தன்னைத் துரத்து

கிறவர்களிடமிருந்து தப்பிக்க ஸ்தலத்தைப் பற்றிய தனது சிறந்த அறிவை நரி எவ்வாறு ஒரு பிழையுமின்றி உபயோகிக்கிறது என்பதையும் மோப்பத்தை இழக்கும்படிச் செய்ய நிலத்தில் உள்ள எல்லாச் சாதகமான அம்சங்களையும் அது எவ்வளவு நன்கு உணர்ந்து பயன்படுத்துகிறது என்பதையும் ஒருவன் தினசரி கவனிக்க முடியும். மனிதனுடன் உறவு பூண்டதின் புண்ணியத்தால் மிக ஓங்கிய வளர்ச்சி பெற்ற நமது வீட்டுப் பிராணிகளிடையே குழந்தைகளுக்குச் சரி ஈடாக உள்ள சூழ்ச்சித் திறமுள்ள செயல்களை ஒருவன் இடைவிடாமல் கவனிக்க முடியும். தாயின் கர்ப்பத்தில் உள்ள மனிதக் கருவின் வளர்ச்சி வரலாறு பல பத்து லட்சம் ஆண்டுகளாக நடந்தேறிய நமது மிருக மூதாதையர்களின் புழுவிலிருந்து தொடங்கிய உடல் பரிணாமத்தின் சுருங்கிய புனர் நிகழ்வேயாம்; இதைப் போலவே, மனிதக் குழந்தையின் உள வளர்ச்சி அதே மூதாதையர்களின்—குறைந்த பட்சம், பிற்காலத்தவருடைய—அறிவுத் துறை வளர்ச்சியின் இன்னும் கூடுதலான சுருங்கிய புனர்நிகழ்வு மட்டுமேயாகும். ஆனால் எல்லா மிருகங்களின் எல்லாத் திட்டமிட்ட செயல்கள் சேர்ந்தாலும் பூமியின் மீது அவைகளுடைய மனோசித்தத்தின் முத்திரையை இடுவதில் அவை வெற்றி பெறவில்லை. அது மனிதனுக்கே விடப்பட்டது.

சுருக்கத்தில், ஒரு மிருகம் தனது சுற்றுச் சார்பைச் சும்மா பயன்படுத்த மட்டுமே செய்கிறது; தனது வெறும் இருத்தலால் மட்டும் இதில் மாற்றங்களை உண்டாக்குகிறது; மனிதன் தனது மாற்றங்களால் தனது குறிக்கோள்களுக்கு அதை ஊழியம் புரியச் செய்கிறான், அதற்கு எசமானனாகிறான். மனிதனுக்கும் இதர மிருகங்கள் அனைத்திற்கும் உள்ள இறுதியான, சாராம்சமான வித்தியாசம் இதுவே; இந்த வித்தியாசத்தை நிகழ்த்துவது உழைப்பே என்பதை மீண்டும் ஒரு தடவை குறிப்பிட வேண்டும்.*

இருந்தபோதிலும் இயற்கையின் மீது நமது மனித வெற்றிகளை வைத்துக்கொண்டு நம்மை நாம் அளவு கடந்து

---

* கையெழுத்துப் பிரதியின் ஓரத்தில் ஒரு குறிப்பு உள்ளது: ''மேன்மைப்படுத்தல்''.—ப-ர்.

தற்புகழ்ச்சி செய்து கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் இப்படிப்பட்ட வெற்றி ஒவ்வொன்றுக்கும் இயற்கை நம்மைப் பழி வாங்குகிறது. ஒவ்வொரு வெற்றியும் முதலாவதாக நாம் எதிர்பார்க்கிற விளைவுகளை நிகழ்த்துகிறது என்பது உண்மையேயாயினும் இரண்டாவது, மூன்றாவது நிலைகளாக நாம் எதிர்பார்க்காத, முற்றிலும் வேறுபட்ட பலன்களையும் அளிக்கிறது; இவை பல தடவைகளிலும் முதலில் சொன்னதை ரத்து செய்து விடுகின்றன. மெசப்பொடேமியா, கிரீஸ், ஆசியா மைனர், இன்னும் இதர இடங்களிலும் சாகுபடி நிலங்களைப் பெறுவதற்காகக் காடுகளை அழித்த மக்கள் காடுகளை அழித்ததுடன் கூடவே நீர்த் தேக்கங்களையும் தண்ணீர் ஒருங்கு சேரும் இடங்களையும் ஒழித்ததினால் அவர்கள் அந்த நாடுகளின் தற்போதைய திக்கற்ற நிலைக்கு அடிகோலியதாகக் கனவும் கூடக் காணவில்லை. ஆல்ப்ஸ் மலைகளில் குடியேறிய இத்தாலியர்கள் வட புறச் சரிவுகளில் அவ்வளவு பரிவுடன் பேணிக் காக்கப்பட்ட பைன் மரக் காடுகளைத் தென் புறச் சரிவுகளில் பூரணமாக வெட்டிப் பயன்படுத்தி விட்ட பொழுது, அவ்விதம் செய்ததின் மூலம் அப்பிரதேசத்துப் பால்பண்ணைத் தொழிலின் அடிவேர்களையே வெட்டி விட்டதின் சூசகத்தையும் கூடக் காணவில்லை; அதன் மூலம் வருடத்தின் பெரும் பகுதியில் மலைச் சுனைகளுக்குத் தண்ணீர் இல்லாமல் செய்து விட்டதைப் பற்றியும் மழைக் காலங்களில் கூடுதலான வெள்ளப் பெருக்குடன் அவை சமவெளிகளில் பாய்வதற்கு வகை செய்யப் பட்டது என்பதைப் பற்றியுமோ, அந்த அளவு சூசகமும் கூடக் காணவில்லை. ஐரோப்பாவில் உருளைக் கிழங்கை யார் பரவ வைத்தனரோ, அவர்கள் அந்த மாச்சத்துள்ள கிழங்குகளுடன் அதே சமயத்தில் கண்டமாலை என்ற வியாதியையும் கூடப் பரப்ப ஏதுவாயினர் என்பதை அவர்கள் அறியவில்லை. இவ்வாறாக அயல்நாட்டு மக்கள் மீது வெற்றிவாகை சூடியவனைப் போல, இயற்கைக்குப் புறத்தில் நிற்கும் ஒருவனைப் போல, இயற்கையின் மீது எவ்விதத்திலும் நாம் ஆளுகை புரியவில்லை என்பதும் அதற்குப் பதிலாக நமது சதை, ரத்தம், மூளை இவற்றுடன் இயற்கை

யோடு சேர்ந்தவர்கள் நாம் அதன் நடுவில் வாழ்கிறோம் என்பதும் இயற்கையின் நியதிகளைக் கற்றுக் கொண்டு அவற்றைப் பொருந்தியவாறு கடைப்பிடிப்பதில் இதர எல்லாப் பிராணிகளைக் காட்டிலும் நமக்கு அனுகூலம் உள்ளது என்பதிலேயே அதன் மீது நமது ஆளுகை அடங்கியுள்ளது என்பதும் ஒவ்வொரு படியிலும் நமக்கு நினைவூட்டப்படுகிறது.

உள்ளபடியாகவே, கடந்து போகும் ஒவ்வொரு நாளும் நாம் இந்த நியதிகளை மேலும் நன்கு புரிந்து கொண்டும் இயற்கையின் பரம்பரையான செல்வழியில் நாம் குறுக்கிடும் போது உண்டாகும் உடனடி விளைவுகளையும் எதிர்காலத்தில் நிகழும் விளைவுகளையும் புலனாக்கிக் கொண்டும் வருகிறோம். குறிப்பாக, இந்த நூற்றாண்டில் இயற்கை விஞ்ஞானங்களில் ஏற்பட்டுள்ள மகத்தான முன்னேற்றங்களுக்குப் பிறகு குறைந்த பட்சம் நமது தினசரி உற்பத்திச் செயல்களின் இயற்கையான எதிர்கால விளைவுகளையும் கூட உணரவும் எனவே அவற்றைக் கட்டுப்படுத்தவும் கூடிய நிலையில் எப்பொழுதையும் விட இன்றுள்ளோம். இது முன்னேற்றம் அடைய அடைய மனிதர்கள் இயற்கையுடன் தங்களுக்குள்ள ஒருமைப்பாட்டை மேலும் மேலும் உணருவது மட்டுமின்றி அறிவதுடன் கூட, ஐரோப்பாவில் பண்டைய கிரேக்க-லத்தீன் நாகரிகம் க்ஷீணமடைந்த பிறகு தோன்றி கிறிஸ்துவ மதத்தில் மிக அதிக நுட்பம் பெற்ற, மனது—பருப்பொருள் என்பதையும் மனிதன்—இயற்கை என்பதையும் உடல்—ஆன்மா என்பதையும் வேறுபடுத்தி எதிர்நிலைப்படுத்துகிற பொருளற்ற, இயற்கைக்கு முரணான கருத்து மேலும் மேலும் சாத்தியமில்லாமல் போகும்.

உற்பத்தித் துறையில் நமது செயல்களின் கூடுதலான தொலைவிலுள்ள இயற்கையான பலன்களை எவ்வாறு கணக்கிடுவது என்பதில் ஒரு சிறிதைக் கற்றுக் கொள்ள நமக்குப் பல்லாயிரமாண்டுகள் உழைப்பு தேவைப்பட்டது; ஆனால் இந்தச் செயல்களின் கூடுதலான தொலைவிலுள்ள சமுதாய ரீதியான பலன்களைப் பற்றியது இன்னும் அதிகக் கடினமுள்ளதாக இருக்கிறது. உருளைக் கிழங்கைப் பற்றி

யும் அதன் பலனாக விளைந்து பரவிய கண்டமாலை வியா திியைப் பற்றியும் மேலே சொன்னோம். ஆனால் உருளைக் கிழங்கு உணவுடன் தொழிலாளிகள் கட்டுப்பட்டுப் போன தால் பல நாடுகளில் பாமர மக்கள் பகுதிகள் அனைத்தின் வாழ்க்கை நிலைமைகளில் நிகழ்ந்த விளைவுகளுடன் ஒப் பிட்டு நோக்கினாலும் அல்லது உருளைக் கிழங்கு ஒன்றை மட்டுமே அல்லது கிட்டத்தட்ட அதை மட்டுமே உணவாகக் கொண்ட ஐரிஷ் மக்களில் பத்து லட்சம் பேரைப் புதை குழிக்கு அனுப்பியும் அத்துடன் இருபது லட்சம் பேரைக் கடல் கடந்து குடிபெயரவும் செய்த, அயர்லாந்தில் 1847இன் உருளைக் கிழங்கு நோய் நிகழ்த்திய பஞ்சத்துடன் ஒப்பு நோக்கினாலும் கண்டமாலை என்பது எந்த மூலைக்கு? மது பானங்களை வடிக்க அராபியர்கள் கற்றுக் கொண்ட போது, அவ்விதம் செய்ததின் மூலம் அவர்கள் அப்பொழுது இன்னும் கண்டுபிடிக்கப்படாமல் இருந்த அமெரிக்கக் கண் டத்தின் பூர்வீகக் குடிகளைக் களைந்தெறிவதற்கான பிர தான கருவிகளில் ஒன்றைச் சிருஷ்டித்துக் கொண்டிருப்ப தாக அவர்கள் மூளையில் கிஞ்சிற்றும் தோன்றவில்லை. அதன் பின்னர் அந்த அமெரிக்காவை கொலம்பஸ் கண்டு பிடித்த பொழுது, அவ்வாறு செய்ததின் மூலம் ஐரோப்பா வில் என்றோ ஒழிக்கப்பட்டுப் போன அடிமைத்தனத்துக்குப் புத்துயிரளிப்பதாகவும் நீக்ரோ அடிமை வர்த்தகத்திற்கு அடிகோலுவதாகவும் அவர் அறியவே இல்லை. பதினேழா வது, பதினெட்டாவது நூற்றாண்டுகளில் நீராவி எஞ்சினைப் படைக்க உழைத்த மனிதர்களுக்கு, உலகம் முழுவதிலும் வேறு எதைக் காட்டிலும் சமூக உறவுகளைப் புரட்சிகர மாக்குகிற ஒரு சாதனத்தை அவர்கள் தயாராக்கிக் கொண் டிருக்கின்றனர் என்ற எண்ணமே இல்லை; விசேஷமாக ஐரோப்பாவில் ஒரு சிறுபான்மையோர் கையில் செல்வத் தைக் குவித்தும், பெரும்பான்மையோரின் உடைமைகளைப் பறித்தும் இந்தச் சாதனம் முதலில் முதலாளி வர்க்கத் திற்குச் சமூக, அரசியல் மேலாதிக்கத்தை அளிப்பதையும் ஆனால் பிற்பாடு முதலாளி வர்க்கம் தூக்கியெறியப்படுவதி லும் எல்லா வித வர்க்கப் பகைமைகளும் ஒழிக்கப்படு

வதிலும் மாத்திரமே முடிவு பெறக் கூடிய, முதலாளி, பாட்டாளி வர்க்கங்களிடையில் வர்க்கப் போராட்டத்தைத் தோற்றுவிப்பதையும் தனது விதியாகக் கொண்டிருந்தது. ஆனால் இந்தத் துறையிலும் கூட நீண்ட, அடிக்கடி குரூரத் தன்மை வாய்ந்த அனுபவத்தின் மூலமாகவும் வரலாற்று விஷயாதாரங்களை சேகரித்துப் பகுப்பாய்வு நடத்தியதின் மூலமாகவும் நமது உற்பத்திச் செயல்களின் மறைமுகமான, மேலும் தொலைவிலுள்ள சமூக விளைபயன்களைப் பற்றித் தெளிவானதொரு கண்ணோட்டம் பெற நாம் படிப்படியாகக் கற்று வருகிறோம்; எனவே இந்த விளைபயன்களையும் கட்டுப்படுத்தி முறைப்படுத்த ஒரு வாய்ப்பு நமக்குக் கிடைத்தது.

எனினும் இவ்வாறு முறைப்படுத்தல் என்பதற்கு வெறும் அறிவு மட்டும் போதாது; ஏதோ ஒன்று அதிகமாகவும் தேவையாகிறது. இன்று வரை நிலைப்பிலுள்ள நமது உற்பத்தி முறையில் ஒரு முழுப் புரட்சியும், அதே சமயத்தில் நமது இன்றைய சமூக அமைப்பு முழுவதிலும் ஒரு புரட்சியும் தேவைப்படுகின்றன.

இது வரை நிலைப்பிலிருந்து வரும் எல்லா உற்பத்தி முறைகளும் உழைப்பினுடைய மிக அடுத்த, நேரடியான பயன் அளிக்கிற விளைவைப் பெறுவதை மட்டுமே வெறும் குறிக்கோளாகக் கொண்டிருந்தன. பிற்பாடு மட்டுமே வெளிப்படுகிற, படிப்படியாகத் திரும்பத் திரும்பச் செய்யப் படுவதாலும் திரட்சி பெறுவதினாலும் மட்டுமே பயன் தருகின்ற மேலும் கூடி வரும் விளைவுகள் பூரணமாகவே உதாசீனம் செய்யப்பட்டன. முதலாக இருந்த நிலப் பொது உடைமை, ஒரு புறம், உடனடியாகக் கிட்டக் கூடியதுடன் மட்டுமே பொதுவாக வரையறுக்கப்பட்ட அறிவு வரம்பு பெற்ற மனிதகுல வளர்ச்சி மட்டத்துக்கு ஒத்திசைந்திருந்தது; மற்றொரு புறம், அது இந்தப் பூர்வீகத் தன்மை வாய்ந்த பொருளாதாரத்தின் சாத்தியப்பாடுள்ள தீய விளைவுகளை நேர் செய்ய இடமளிக்கிற நிலத்தின் ஓர் உபரியை முன்னூகம் செய்து கொண்டது. இந்த உபரி நிலம் தீர்ந்த பிறகு பொதுவான உடைமை என்பதும் நசித்தது. இருந்தாலும்

உற்பத்தியின் உயர் வடிவங்கள் அனைத்தும் மக்கள்தொகை பல்வேறு வர்க்கங்களாகப் பிரிக்கப்படுவதற்கும் அதன் மூலம் ஆளும் வர்க்கம், ஒடுக்கப்படுகிற வர்க்கம் இவற்றிடையே பகைமை தோன்றுவதற்கும் இட்டுச் சென்றன. இவ்வாறாக ஆளும் வர்க்கத்தின் நலன்களே உற்பத்தியை முன்னோக்கி நடத்திச் செல்லும் காரணியாக அமைந்தன; ஏனெனில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பண்டங்களை அளிப்பதுடன் உற்பத்தி கட்டுப்பட்டு விடவில்லை. மேற்கு ஐரோப்பாவில் ஓங்கிப் பரவியுள்ள முதலாளித்துவ உற்பத்தி முறையில் இது முழுக்க முழுக்க அமுலாக்கப்பட்டுள்ளது. உற்பத்தியிலும் பரிவர்த்தனையிலும் மேலாதிக்கம் கொண்டுள்ள தனிப்பட்ட முதலாளிகள் தங்களுடைய செயல்களின் மிக உடனடியான பிரயோசனமுள்ள பலன்களைப் பற்றி மட்டுமே கவலைப்பட முடிகிறவர்களாக உள்ளனர். உண்மையில் இந்தப் பிரயோசனமுள்ள பலன் என்பதும் கூட—உற்பத்தி செய்யப்படுகிற அல்லது பரிவர்த்தனைக்குட்படுகிற பண்டத்தின் பிரயோசனம் என்பதே பிரச்சினையாக இருப்பதால்—பின்னணிக்குள் வெகு தூரம் பின்வாங்கிப் போய், விற்பனையினால் கிடைக்கும் லாபம் மட்டும் ஒரே உந்தும் சக்தியாகி விடுகிறது.

---

முதலாளி வர்க்கத்தின் சமூகவியலான, மூலச்சிறப்புள்ள அரசியல் பொருளாதாரம் உற்பத்தி, பரிவர்த்தனை ஆகிய துறைகளில் உண்மையாகவே குறிக்கோள்களாகக் கொள்ளப்படுகின்ற மனிதச் செயல்களின் சமூக விளைவுகளை மட்டுமே பிரதானமாக ஆராய்கிறது. சமூக அமைப்பின் தத்துவார்த்த வெளியீடாக உள்ள அத்துடன் இது முழு ஒத்திசைவு உள்ளதாகவே இருக்கிறது. தனிப்பட்ட முதலாளிகள் உடனடியான லாபத்திற்காக உற்பத்தியிலும் பரிவர்த்தனையிலும் ஈடுபட்டிருப்பதால் முதலில் மிக நெருங்கிய, மிக அடுத்துள்ள விளைவுகள் மட்டுமே கணக்கிலெடுக்கப்பட வேண்டும். ஒரு தனிப்பட்ட உற்பத்தியாளன் அல்லது வியாபாரி உற்பத்தி செய்த அல்லது விலைக்கு வாங்கப்பட்ட

சரக்கை வழக்கமான பேராசைப்பட்ட லாபத்துடன் விற்கும் வரை அவன் அத்துடன் திருப்தியடைகிறான்; அதன் பிறகு அந்தச் சரக்கிற்கோ அல்லது அதை வாங்குபவர்களுக்கோ என்ன நேர்கிறது என்பதைப் பற்றி அவன் கவலை கொள் பவனாக இல்லை. அதே செயல்களின் இயற்கை விளைபயன் களுக்கும் இதுவே பொருத்தமாக உள்ளது. கியூபாவில் மலைச் சரிவுகளில் இருந்த காடுகளைத் தீயிட்டுக் கொளுத்தி மிகவும் உயர்ந்த லாபகரமான காப்பிச் செடிகளின் ஒரு தலைமுறைக்குப் போதுமான உரத்தை அந்தச் சாம்பலி லிருந்து பெற ஸ்பானிய காப்பித் தோட்ட முதலாளிகள் என்ன கவலைப்பட்டார்கள்—வெப்பப் பிரதேசத்துக் கன மழை பின்னால் பாதுகாப்பற்ற மேல்படிவ மண் முழுவதை யும் அடித்துக் கொண்டு போய் பாறைகளை மட்டும் மொட் டையாக விட்டுச் சென்றது என்பதைப் பற்றித்தான் அவர் கள் என்ன கவலைப்பட்டார்கள்! சமூகத்தைப் போலவே இயற்கை சம்பந்தமாகவும் கூட இக்காலத்திய உற்பத்தி முறை உடனடியான, மிக உருப்படியான விளைவுகளைப் பற்றி மட்டுமே பிரதானமாக அக்கறை கொண்டுள்ளது; பிறகு இந்த நோக்கத்தின் பால் திசைமுகம் திரும்பியுள்ள செயல்களின் எதிர்கால விளைவுகள் மிக வேறுபட்டவை யாக, இயல்பில் பெரும்பாலும் நேர் முரணானவையாக மாறி விடுகின்றன என்றும் தொழில்துறையின் பத்தாண்டு கால சக்கரவட்டச் செல்வழி காட்டியது போல அளிப்புக் கும் தேவைக்கும் இருந்த நல்லிணக்கம் நேர் எதிரான தாக—''வீழ்ச்சியில்''[49] ஜெர்மனியும் கூட சிறிது பூர்வாங்க அனுபவத்தை அதைக் குறித்து பெற்றது—மாறி விடுகிறது என்றும் தன் சொந்த உழைப்பை அடிப்படையாகக் கொண்டுள்ள தனி உடைமை அத்தியாவசியமாகவே உழைப் பாளிகளின் உடைமை கவரப்பட்டு வெளியேற்றப்படுவதாக வளர்ந்து உழைப்பாளிகளல்லாதவர் கைகளில் மேன்மேலும்

*செல்வம் குவிக்கப்படுகிறது என்றும் மேலும் ஆச்சரியம் வெளியிடப்படுகிறது[....]**

*1876இல் பி. எங்கெல்சினால் எழுதப்பட்டது*

*Die Neue Zeit*, Bd. 2,
*எண் 44, 1895—1896*
*என்ற சஞ்சிகையில்*
*முதலில் வெளியிடப்பட்டது*

*கையெழுத்துப் பிரதியின் படி அச்சிடப்பட்டது*

*மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது*

---

* இங்கு கையெழுத்துப் பிரதி துண்டாக நின்று விடுகிறது.—ப-ர்.

பி. எங்கெல்ஸ்

# கார்ல் மார்க்ஸ்

சோஷலிசத்துக்கும் நம் காலத் தொழிலாளர் இயக்கம் அனைத்துக்கும் விஞ்ஞான அடிப்படையைக் கொடுத்த முதல் மனிதரான கார்ல் மார்க்ஸ் டிரியர் நகரத்தில் 1818இல் பிறந்தார். அவர் பான் மற்றும் பெர்லின் நகரங்களில் கல்வி கற்றார், முதலில் சட்டவியலைப் படித்தார்; ஆனால் சீக்கிரத்திலேயே வரலாற்றையும் தத்துவஞானத்தையும் விசேஷமாகக் கற்பதில் முழு மூச்சுடன் ஈடுபட்டார்; 1842இல் தத்துவஞானத் துறையில் துணைப் பேராசிரியராக நியமிக்கப்படவிருந்த பொழுது மூன்றாவது பிரெடெரிக்-வில்ஹெல்மின் மரணத்துக்குப் பிறகு தோன்றிய அரசியல் இயக்கம் அவருடைய வாழ்க்கையை வேறு பாதையில் செலுத்தியது. ரைன் மிதவாத முதலாளி வர்க்கத்தின் தலைவர்களான திருவாளர்கள் காம்ப்ஹாவுஸன், ஹான்ஸெமான், இதரர்கள் அவருடைய ஒத்துழைப்புடன் கொலோன் நகரத்தில் *Rheinische Zeitung* என்ற பத்திரிகையை[60] ஆரம்பித்தார்கள். ரைன் நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளைப் பற்றி மார்க்ஸ் எழுதிய விமர்சனம் அதிகமான அக்கறையைத் தூண்டியது; அதனால் 1842ஆம் ஆண்டின் இலையுதிர்காலத்தில் மார்க்ஸ் அப்பத்திரிகையின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். *Rheinische Zeitung* தணிக்கை முறைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது இயற்கையே, ஆனால் தணிக்கை முறை அப்பத்திரிகைக்கு ஈடு கொடுக்க முடியவில்லை.* முக்கியமான கட்டுரை

---

* *Rheinische Zeitung*இன் முதல் தணிக்கை அதிகாரியாக போலீஸ் கவுன்சில்லர் டோலெஷால் இருந்தார்; இந்த

கள் தணிக்கை முறையை மீறி அநேகமாக எப்பொழுதும் *Rheinische Zeitung*இல் வெளியிடப்பட்டு வந்தன; அவர்கள் தணிக்கை அதிகாரியின் ஒப்புதலுக்கு முதலில் முக்கியத்துவம் இல்லாத குப்பை கூளங்களைக் குவிப்பார்கள்; அவர் அலுத்துப் போய் அனுமதி கொடுப்பார், அல்லது மறு நாள் பத்திரிகையை வெளியிட முடியாது என்ற பயமுறுத்தலின் மூலம் அவரை நிர்ப்பந்தித்து அனுமதி பெறுவார்கள். *Rheinische Zeitung*ஐப் போன்ற துணிவுடைய பத்திரிகைகள் பத்து இருந்திருந்தால்—இப்பத்திரிகைகளின் வெளியீட்டாளர்கள் அச்சுக்கோர்ப்பதற்குச் சில நூறு தாலர்கள் அதிகமாகச் செலவிட வேண்டியிருந்திருக்கும்—ஜெர்மனியில் மிகவும் முந்திய காலமான 1843ஆம் ஆண்டிலேயே தணிக்கை முறை என்பது இயலாததாகியிருக்கும். ஆனால், ஜெர்மன் பத்திரிகைகளின் உடைமையாளர்கள் சின்னப் புத்தி உள்ளவர்கள், பேடித்தனமான அற்பவாதிகள்; *Rheinische Zeitung* தன்னந்தனியாகப் போராடியது. அது தணிக்கை அதிகாரிகள் ஒவ்வொருவராகக் களைத்துப் போகும்படிச் செய்தது; கடைசியில் அது இரட்டைத் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டது; முதல் தணிக்கைக்குப் பிறகு Regierungspräsident* மீண்டும், கடைசித் தடவையாக அதைத் தணிக்கை செய்வார். அதுவும் பலனளிக்கவில்லை. அரசாங்கம் 1843ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்தப் பத்திரிகையைத் தணிக்கை செய்ய இயலாது என்று அறிவித்து விட்டு அதை நசுக்கி விட்டது.

இதற்கிடையில் மார்க்ஸ் வான் வெஸ்ட்ஃபாலன் (பிற்காலத்தில் பிற்போக்குவாத அரசாங்கத்தில் அமைச்சராக

---

நபர் ஒரு சமயத்தில் ஃபிலலேட் (பிற்காலத்தில் சாக்சன் அரசர் யோஹன்) மொழிபெயர்த்த தாந்தேயின் தெய்வீக நாடகம் என்ற நூலின் விளம்பரம் *Kölnische Zeitung* பத்திரிகையில்[51] வெளியிடப்பட்ட பொழுது ''தெய்வீக விவகாரங்களை நாடகமாக்கக் கூடாது'' என்று சொல்லி அதை நீக்கினார். (பி. எங்கெல்ஸ் எழுதிய குறிப்பு.)

* —பிரஷ்யாவில் மத்திய நிர்வாக அதிகாரத்தின் பிராந்தியப் பிரதிநிதி.—ப-ர்.

இருந்தவர்) என்பாருடைய சகோதரியைத் திருமணம் செய்து கொண்டார்; பிறகு பாரிசுக்குப் புறப்பட்டார். அங்கே அ. ரூகே என்பவருடன் சேர்ந்து *Deutsch-Französische Jahrbücher* சஞ்சிகையை[52] வெளியிட்டார்; அதில் ஹெகலின் சட்டவியலின் தத்துவஞானத்தைப் பற்றிய விமர்சனத்தை வெளியிட்டு சோஷலிஸ்டு நூல்களின் தொடர்வரிசையைத் தொடங்கினார். மேலும் பி. எங்கெல்சுடன், அக்காலத்தில் ஜெர்மன் தத்துவஞானக் கருத்துமுதல்வாதம் தவறாக மேற்கொண்டிருந்த மிகவும் சமீப வடிவங்களில் ஒன்றை அங்கத முறையில் விமர்சனம் செய்கின்ற **புனிதக் குடும்பம். புரூனோ பௌவர் மற்றும் அவர் குழுவுக்கு எதிராக** என்ற நூலை எழுதினார்.

மார்க்ஸ் அப்பொழுது அரசியல் பொருளாதாரத்தையும் மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியின் வரலாற்றையும் படித்துக் கொண்டிருந்த போதிலும் பிரஷ்ய அரசாங்கத்தின் மீது அவ்வப்பொழுது தாக்குதல்களைத் தொடுப்பதற்கு அவருக்குப் போதிய நேரமிருந்தது; 1845ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் மார்க்சை பிரான்சிலிருந்து வெளியேற்றும்படி கிஸோ அமைச்சகத்தைத் தூண்டியதன் மூலம்—ஹெர் அலெக்சாந்தர் வான் ஹூம்பால்ட் அதற்குத் தரகராக இருந்ததாகச் சொல்லப்படுகிறது—பிரஷ்ய அரசாங்கம் மார்க்சைப் பழிவாங்கியது.[53] மார்க்ஸ் பிரஸ்ஸல்சில் குடியேறினார்; அங்கே 1847இல் பிரெஞ்சு மொழியில் **மெய்யறிவின் வறுமை**, புரூதோன் எழுதிய **வறுமையின் மெய்யறிவின் விமர்சனம்** மற்றும் 1848இல் **சுதந்திர வர்த்தகம் பற்றிய உரையை** வெளியிட்டார். அதே சமயத்தில் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பிரஸ்ஸல்சில் ஜெர்மன் தொழிலாளர்கள் சங்கத்தை[54] நிறுவி அதன் மூலம் செய்முறைக் கிளர்ச்சியை ஆரம்பித்தார். 1847இல் அவரும் அவருடைய அரசியல் நண்பர்களும் ஏற்கெனவே பல ஆண்டுகளாக இருந்து வந்த இரகசியமான கம்யூனிஸ்டுகள் சங்கத்தில் சேர்ந்த பொழுது செய்முறைக் கிளர்ச்சி இன்னும் கூடுதலான முக்கியத்துவத்தைப் பெற்றது. அதன் மொத்தக் கட்டமைப்பும் இப்பொழுது தீவிரமாக மாற்றப்பட்டது.

முன்னர் அநேகமாக சதிகார அமைப்பாக இருந்த இச்சங்கம் கம்யூனிஸ்டுப் பிரசார சாதாரண ஸ்தாபனமாகவும்—அது இன்றியமையாத காரணங்களினால் மட்டுமே இரகசிய அமைப்பாக இருந்தது—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் முதல் அமைப்பாகவும் மாற்றப்பட்டது. ஜெர்மன் தொழிலாளர்கள் சங்கங்கள் இருந்த எல்லா இடங்களிலும் இச்சங்கம் இருந்தது; இங்கிலாந்து, பெல்ஜியம், பிரான்ஸ் மற்றும் ஸ்விட்சர்லாந்தில் அநேகமாக எல்லா சங்கங்களிலும் ஜெர்மனியில் மிகவும் அதிகமான சங்கங்களிலும் கம்யூனிஸ்டுகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தலைமையான உறுப்பினர்களாக இருந்தார்கள்; அப்பொழுது தோன்றிக் கொண்டிருந்த ஜெர்மன் தொழிலாளர்கள் இயக்கத்தில் இக்கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் பங்கு மிகவும் கணிசமாக இருந்தது. மேலும் தம்முடைய கம்யூனிஸ்டுகள் சங்கம்தான் மொத்த தொழிலாளர் இயக்கத்தின் சர்வதேசத் தன்மையை வலியுறுத்திய, அதை நடைமுறையில் நிறைவேற்றிய முதல் ஸ்தாபனம்; அதில் ஆங்கிலேயர்கள், பெல்ஜியர்கள், ஹங்கேரியர்கள், போலிஷ்காரர்கள், இதரர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள்; அது—விசேஷமாக, லண்டன் நகரத்தில்—சர்வதேசத் தொழிலாளர் கூட்டங்களை நடத்தியது.

கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உருமாற்றம் 1847இல் நடைபெற்ற இரண்டு காங்கிரசுகளில் நிறைவேறியது; இரண்டாவது காங்கிரஸ் கட்சியின் அடிப்படைக் கோட்பாடுகளை விரித்துரைக்கின்ற அறிக்கையை மார்க்சும் எங்கெல்சும் எழுதி வெளியிட வேண்டும் என்று முடிவு செய்தது. **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை*** பிறந்தது இப்படி; அது பிப்ரவரி புரட்சிக்கு[55] சிறிது முன்னர் 1848இல் முதன் முறையாக வெளியிடப்பட்டு அதன் பிறகு அநேகமாக எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

மார்க்ஸ் கட்டுரைகள் எழுதிய *Deutsche-Brüsseler-Zeitung*[56] தந்தையர் நாட்டின் போலீஸ் ஆட்சியின் பெருமைகளை ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்தியதனால் மார்க்சை மீண்டும் வெளியேற்றுவதற்கு பிரஷ்ய அரசாங்கம் முயற்சி

* இப்பதிப்பு, தொகுதி 1, பக்கங்கள் 170—249.—ப-ர்

களைச் செய்த போதிலும் வெற்றி பெறவில்லை. ஆனால் பிப்ரவரி புரட்சியின் விளைவாக பிரஸ்ஸல்சிலும் கூட பெருந் திரளான மக்கள் இயக்கங்கள் ஏற்பட்டு பெல்ஜியத்திலும் தீவிரமான மாற்றம் எந்நேரத்திலும் ஏற்படலாம் என்ற நிலை ஏற்பட்ட பொழுது பெல்ஜிய அரசாங்கம் சட்டென்று மார்க்சைக் கைது செய்து நாட்டை விட்டு வெளியேற்றியது. இதற்கிடையில் பிரான்சில் ஏற்பட்டிருந்த தற்காலிக அர சாங்கம் ஃபிலொக்கோன் மூலம் பாரிசுக்குத் திரும்புமாறு அவருக்கு அழைப்பை அனுப்பியது; மார்க்ஸ் அந்த வேண்டு கோளை ஏற்றுக் கொண்டார்.

ஜெர்மனிக்குள் புரட்சியையும் குடியரசையும் கொண்டு செல்வதற்கு பிரான்சிலிருந்த ஜெர்மன் தொழிலாளர்களை ஆயுதப் படைகளாக அமைக்கின்ற விருப்பம் அங்கிருந்த ஜெர்மானியர்கள் மத்தியில் பரவலாக இருந்தது; மார்க்ஸ் பாரிசில் தங்கியிருந்த பொழுது விசேஷமாக இந்த மோச டியை எதிர்த்தார். ஒரு பக்கத்தில் ஜெர்மனி தன்னுடைய புரட்சியைத் தானே நிறைவேற்ற வேண்டும்; மறு பக்கத் தில் பிரான்சில் அமைக்கப்பட்ட புரட்சிகர அந்நியப் படை ஒவ்வொன்றும் தற்காலிக அரசாங்கத்தில் இடம் பெற்றி ருந்த லமார்ட்டீன்களால் தூக்கியெறியப்பட வேண்டிய அர சாங்கத்திடம் முன்கூட்டியே காட்டிக் கொடுக்கப்பட்டது; பெல்ஜியத்திலும் பாடேனிலும் இப்படி நடைபெற்றது.

மார்ச் புரட்சிக்குப்[57] பிறகு மார்க்ஸ் கொலோனுக்குச் சென்று அங்கே *Neue Rheinische Zeitung* பத்திரிகையைத் துவக்கினார்;இப்பத்திரிகை 1848 ஜூன் 1 முதல் 1849 மே 19 முடிய வெளியிடப்பட்டது. அக்காலத்திய ஜனநாயக இயக் கத்துக்குள் பாட்டாளி வர்க்கத்தின் நிலையைப் பிரதிநிதித் துவம் செய்த ஒரே பத்திரிகையாக அது இருந்தது என்பதை பாரிசில் 1848 ஜூன் மாதத்தில் நடைபெற்ற புரட்சிகர எழுச்சியை[58] அது தயக்கமின்றி ஆதரவளித்தது எடுத்துக் காட்டும்; அதன் விளைவாக அதன் பங்குதாரர்கள் அநேக மாக எல்லோருமே விலகிக் கொண்டார்கள். *Neue Rheinische Zeitung* நாட்டின் அரசர் மற்றும் துணை ரீஜன்ட் முதல் சாதாரணப் போலீஸ்காரர் வரை நாட்டில் புனிதமான

எல்லாவற்றையும்—அதிலும் அப்போது 8,000 போர் வீரர்களைக் கொண்ட பிரஷ்யக் கோட்டைக்குள் இருந்து—தாக்கிக் கொண்டிருக்கின்ற ''அகந்தையைப்'' பற்றி *Kreuz-Zeitung*[59] வீணாகப் புலம்பியது; திடீரென்று பிற்போக்காளர்களாக மாறியிருந்த ரைன் மிதவாத அற்பவாதிகளின் சீற்றத்தினால் பலனில்லை; கொலோன் இராணுவச் சட்ட நிர்வாகம் 1848ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் அப்பத்திரிகையின் வெளியீட்டை நெடுங்காலத்திற்கு நிறுத்தி வைத்தும் பலனில்லை; பிராங்க்பர்ட்டிலிருந்த ரைஹ் நீதி அமைச்சகம் கொலோனிலிருக்கும் அரசாங்க வழக்குரைஞர் பத்திரிகை மீது குற்ற நடவடிக்கைகளைத் துவக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு கட்டுரையையும் கண்டனம் செய்தும் பலனில்லை; போலீஸ்காரர்களது கண்களுக்கு முன்பாகவே அப்பத்திரிகை தொடர்ந்து தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டது; அரசாங்கம் மற்றும் முதலாளி வர்க்கத்தின் மீது தீவிரமான தாக்குதல்களுக்குத் தகுந்தபடி அதன் விற்பனையும் புகழும் அதிகரித்தன. பிரஷ்யாவில் 1848 நவம்பர் மாதத்தில் திடீர்ப்புரட்சி நடைபெற்ற பொழுது *Neue Rheinische Zeitung* ஒவ்வொரு இதழின் ஆரம்பத்திலும் வரிகளைக் கட்டாதீர்கள், வன்முறைக்கு வன்முறையால் பதிலளியுங்கள் என்று மக்களை அறை கூவியது. 1849 ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் மேற்கூறியதற்காகவும் மற்றொரு கட்டுரைக்காகவும் அதன் மீது வழக்குத் தொடரப்பட்டது; ஆனால் இரண்டு சந்தர்ப்பங்களிலும் வழக்கு வெற்றிபெறவில்லை. இறுதியாக, 1849 மே மாதத்தில் டிரெஸ்டனிலும் ரைன் மாநிலத்திலும் புரட்சிகர எழுச்சிகள்[60] நசுக்கப்பட்ட பிறகு, பிரஷ்ய அரசாங்கம் பாடேன்-ப்ஃபால்ட்ஸ் புரட்சிகர எழுச்சிக்கு எதிராகக் கணிசமான எண்ணிக்கையில் துருப்புகளைக் குவித்தும் திரட்டியும் தன்னுடைய எதிர்நடவடிக்கையைத் துவக்கிய பிறகு *Neue Rheinische Zeitung* பத்திரிகையை பலாத்காரமாக நசுக்குவதற்குப் போதுமான பலம் இருப்பதாக அரசாங்கம் கருதியது. அதன் கடைசி இதழ் சிகப்பு மசியில் அச்சிடப்பட்டு மே 19ஆம் தேதியன்று வெளியாயிற்று.

மார்க்ஸ் மறுபடியும் பாரிசுக்குச் சென்றார்; ஆனால் 1849 ஜூன் 13 ஆர்ப்பாட்டத்துக்கு[61] சில வாரங்களுக்குப் பிறகு அவர் தன்னுடைய இருப்பிடத்தை பிரெட்டனுக்கு மாற்றிக் கொள்ள வேண்டும் அல்லது பிரான்சிலிருந்து வெளியேற வேண்டும் என்று பிரெஞ்சு அரசாங்கம் உத்தர விட்டது. அவர் பிரான்சை விட்டுப் போக முடிவு செய்து லண்டனுக்குச் சென்றார்; அன்று முதல் அவர் லண்டனில் வசித்து வருகிறார்.

*Neue Rheinische Zeitung* பத்திரிகையை ஒரு சஞ்சிகை யின் வடிவத்தில் தொடர்ந்து வெளியிடுவதற்குச் செய்யப் பட்ட முயற்சி (1850இல் ஹாம்பர்க்கில்)[62] பிற்போக்குவாதத் தின் வன்முறை மேன்மேலும் அதிகரித்ததன் காரணமாக சிறிது காலத்துக்குப் பிறகு கைவிடப்பட்டது. பிரான்சில் 1851 டிசம்பர் மாதத்தில் திடீர்ப்புரட்சி[63] ஏற்பட்ட உடனே மார்க்ஸ் **லுயீ போனப்பார்டின் பதினெட்டாம் புரூமேர்*** (நியூ யார்க், 1852; இரண்டாவது பதிப்பு, ஹாம்பர்க், 1869, யுத்தத்துக்குச் சிறிது முன்னர்) என்ற நூலை வெளியிட்டார். அவர் 1853இல் **கம்யூனிஸ்டுகள் மீது கொலோனில் நடந்த வழக்கின் உண்மை உருவம்** (முதலில் பாஸேலிலும் பிறகு போஸ்டனி லும் சமீபத்தில் மறுபடியும் லைப்சிக்கிலும் வெளியிடப்பட் டது) என்ற நூலை எழுதினார்.

கொலோனில் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர் கள் தண்டிக்கப்பட்ட பிறகு[64] மார்க்ஸ் அரசியல் கிளர்ச்சி களை நிறுத்தி விட்டு அடுத்த பத்து ஆண்டுகளை ஒரு பக்கத் தில் அரசியல் பொருளாதாரத் துறையில் பிரிட்டிஷ் அருங் காட்சியக நூலகத்தின் அரிய கருவூலங்களை ஆராய்வதற் கும் மறு பக்கத்தில் *New York Daily Tribune* பத்திரிகைக்குக்[65] கட்டுரைகள் எழுதுவதற்கும் அர்ப்பணித்தார். அமெரிக்கா வில் உள்நாட்டுப் போர்[66] ஆரம்பமாகின்ற வரை அந்தப் பத்திரிகை அவர் பெயரைத் தாங்கிய செய்திகளை மட்டு மன்றி, ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் உள்ள நிலைமை களைப் பற்றி அவர் எழுதிய ஏராளமான தலையங்கங்களை

---

* இப்பதிப்பு, தொகுதி 4, பக்கங்கள் 7—199.—ப-ர்.

யும் வெளியிட்டது. அவர் பிரிட்டிஷ் அரசாங்க ஆவணங்களை விரிவாக ஆராய்ந்து பால்மெர்ஸ்டன் பிரபுவைக் கண்டித்து எழுதியவை லண்டனில் பிரசுரமாக மறுபதிப்பு செய்யப்பட்டன.

அவர் பல்லாண்டுகளாக அரசியல் பொருளாதாரத்தை ஆராய்ச்சி செய்து வந்ததன் முதல் விளைவாக **அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை,** முதல் பகுதி (பெர்லின், டுங்கர்) என்னும் நூல் 1859இல் வெளியாயிற்று. பணத் தத்துவம் உள்பட மதிப்பைப் பற்றிய மார்க்சியத் தத்துவத்தைத் தெளிவாக விளக்கிய முதல் புத்தகமாக அது இருந்தது. இத்தாலியப் போர்[67] நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது மார்க்ஸ் லண்டனில் பிரசுரிக்கப்பட்ட *Das Volk* என்ற ஜெர்மன் பத்திரிகையில்[68] அன்று மிதவாதியாகவும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களை விடுதலை செய்வோனாகவும் நடித்த போனப்பார்டிசத்தையும் நடுநிலை என்ற பெயரில் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயற்சி செய்து கொண்டிருந்த அக்காலத்திய பிரஷ்யாவின் கொள்கையையும் தாக்கி எழுதினார். இதன் தொடர்பாக அந்தச் சமயத்தில் இளவரசர் நெப்போலியனது (ப்ளோன்-ப்ளோன்) ஆணைப்படியும் லுயீ நெப்போலியனிடம் கூலி பெற்றுக் கொண்டும் ஜெர்மனி நடுநிலை வகிக்க வேண்டும்—அனுதாபமும் கூட காட்ட வேண்டும்—என்று கிளர்ச்சி செய்து கொண்டிருந்த ஹெர் கார்ல் ஃபோக்ட்டைத் தாக்கி எழுதுவதும் அவசியமாக இருந்தது. ஃபோக்ட் அவர் மீது மிகவும் கேவலமான, திட்டமிட்ட முறையில் பொய்யான அவதூறுகளைச் சுமத்திய பொழுது மார்க்ஸ் அவருக்குப் பதிலளிக்கின்ற முறையில் **ஹெர் ஃபோக்ட்** (லண்டன், 1860) என்ற நூலை எழுதினார். அந்த நூல் ஹெர் ஃபோக்ட் மற்றும் போலி ஜனநாயகக் கும்பலைச் சேர்ந்த இதர கனவான்களை அம்பலப்படுத்தியது; ஃபோக்ட் டிசம்பர் பேரரசிலிருந்து லஞ்சம் பெற்றார் என்பது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுச் சான்றுகளைக் கொண்டு நிரூபிக்கப்பட்டது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அதற்கு ஆதாரம் அகப்பட்டது. செப்டெம்பர் மாத அரசாங்கம்[69] 1870இல் டியுயில்ரி அரண்மனை

யில்[70] கண்டெடுத்த போனப்பார்டிஸ்டுக் கைக்கூலிகளின் பட்டியலை வெளியிட்டது; அதில் ''ஃப'' என்னும் எழுத்தின் கீழ் பின்வரும் குறிப்பு எழுதப்பட்டிருந்தது: ''ஃபோக்ட்— 1859 ஆகஸ்டில் 40,000 பிராங்குகள் அனுப்பி வைக்கப் பட்டன.''

கடைசியில் 1867இல் ஹாம்பர்க்கில் மூலதனம். அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய விமர்சன ஆய்வுரை, தொகுதி 1 வெளியிடப்பட்டது. அது மார்க்ஸ் எழுதிய நூல்களில் தலை சிறந்தது. அந்த நூல் பொருளாதார-சோஷலிஸ்டுக் கருது கோள்களின் அடிப்படைகளை மற்றும் அன்றைக்கிருந்த சமூகம், முதலாளித்துவ உற்பத்தி முறை, அதன் விளைவு கள் ஆகியவை பற்றி மார்க்சினுடைய விமர்சனத்தின் முக் கியமான அம்சங்களை விளக்கியது. சகாப்தத்தை உருவாக்கு கின்ற இந்த நூலின் இரண்டாவது பதிப்பு 1872இல் வெளி யிடப்பட்டது. மார்க்ஸ் இந்த நூலின் இரண்டாவது தொகு தியை எழுதிக் கொண்டிருக்கிறார்.

இதற்கிடையில் ஐரோப்பாவிலுள்ள பல்வேறு நாடுகளில் தொழிலாளர் இயக்கம் தன் வலிமையை மீண்டும் பெற்றபடி யால் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் மிகவும் வளர்ச்சி யடைந்த நாடுகளின் தொழிலாளர் சங்கத்தை அமைத்தல் என்ற தன்னுடைய நீண்ட காலக் கருத்தை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை மார்க்சுக்கு ஏற்பட்டது. அந்த சங்கம் தொழிலாளர்களுக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் அரசாங்கங்களுக்கும் தன்னுடைய ஸ்தாபனத்தின் மூலம் சோஷலிஸ்டு இயக்கத்தின் சர்வதேசத் தன்மையை எடுத்துக் காட்டும், பாட்டாளி வர்க்கத்தை ஊக்குவித்து பலப்படுத் தும், தன்னுடைய எதிரிகளிடம் பீதியை ஏற்படுத்தும். ருஷ்யாவினால் அப்பொழுது மறுபடியும் நசுக்கப்பட்டிருந்த போலந்துக்கு[71] ஆதரவாக 1864 செப்டெம்பர் 28இல் லண் டனில், செயின்ட் மார்ட்டின் ஹாலில் நடைபெற்ற பொதுக் கூட்டம் இதைப் பற்றி விவாதிப்பதற்கு வாய்ப்பை அளித் தது. அங்கே அத்திட்டம் உற்சாகமாக ஆதரிக்கப்பட்டது. சர்வதேசத் தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டது. லண்ட னில் தலைமையகத்தைப் கொண்ட தற்காலிகப் பொதுக்

குழு அக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது. மார்க்ஸ் இப்பொதுக் குழுவுக்கும் ஹேக் காங்கிரஸ்[72] முடிய எல்லாப் பொதுக் குழுக்களுக்கும் உயிர் நாடியாகத் திகழ்ந்தார். அகிலத்தின் தொடக்க அறிக்கை (1864) முதல் பிரான்சில் உள்நாட்டுப் போர். சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் குழுவின் அறிக்கை (1871)* முடிய அகிலத்தின் பொதுக் குழு வெளியிட்ட அநேகமாக ஒவ்வொரு ஆவணத்தையும் மார்க்ஸ் எழுதினார். அகிலத்தின் நடவடிக்கையில் மார்க்சின் பங்கை வர்ணிப்பது இந்த சங்கத்தின் வரலாற்றை எழுதுவதற்கு ஒப்பாகும்; எப்படியிருப்பினும் அது ஐரோப்பாவின் தொழிலாளர்களின் நினைவில் இன்னும் வாழ்கிறது.

பாரிஸ் கம்யூனுடைய வீழ்ச்சி அகிலத்துக்கு நெருக்கடியான நிலையை ஏற்படுத்தியது. அது எங்குமே வெற்றிகரமான செய்முறை நடவடிக்கைக்குரிய எல்லா சாத்தியத்தையும் இழந்திருந்த தருணத்தில் ஐரோப்பிய வரலாற்றின் முன்னணிக்குத் தள்ளப்பட்டது. அகிலத்தை ஏழாவது வல்லரசின் நிலைக்கு உயர்த்திய சம்பவங்கள் அதே சமயத்தில் அது தன்னுடைய போராடும் அணிகளைத் திரட்டுவதையும் அவற்றைச் செயலில் ஈடுபடுத்துவதையும்—அப்படிச் செய்தால் தோல்வி தவிர்க்க முடியாதபடி ஏற்படும், தொழிலாளர் இயக்கம் சில பத்தாண்டுகளுக்குப் பின்னால் தள்ளப்படும் என்பதனால்—தடுத்தன. மேலும், அகிலத்துக்குத் திடீரென்று பெருகியிருந்த புகழைத் தங்களுடைய சொந்த அகந்தையை அல்லது தனிப்பட்ட ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்கு உபயோகிக்க முயன்ற சக்திகள் பல்வேறு திசைகளிலிருந்தும் முந்திக் கொண்டு வந்தன; இந்தச் சக்திகள் அகிலத்தின் உண்மையான நிலையைப் புரிந்து கொள்ளவில்லை அல்லது அதற்கு மரியாதை அளிக்கவில்லை. துணிகரமான முடிவை எடுக்க வேண்டியிருந்தது. மறுபடியும் மார்க்ஸ் அந்த முடிவை எடுத்தார்; ஹேக் காங்கிரசில் அதை வெற்றிகரமாக நிறைவேற்றினார். இந்தத் தகராறான,

* இப்பதிப்பு, தொகுதி 5, பக்கங்கள் 9—25 மற்றும் தொகுதி 7, பக்கங்கள் 49—133.—ப-ர்.

சீர்குலைவுச் சக்திகளின் மையமாக இருந்த பக்கூனின் வாதிகளின் நடவடிக்கைகளுக்கு எவ்விதத்திலும் அகிலம் பொறுப்பல்ல என்று கூறுகின்ற முக்கியமான தீர்மானத்தை அகிலம் நிறைவேற்றியது. பொதுவான பிற்போக்குவாதத் துக்கு முன்னால் தன் மீது சுமத்தப்படுகின்ற அதிகமான கோரிக்கைகளை நிறைவேற்ற இயலாது மற்றும் தன் னுடைய முழுச் செயல்திறனைத் தக்க வைத்துக் கொள்வ தென்றால் தொழிலாளர் இயக்கத்தின் குருதியைக் கொட்டி ஏராளமான தியாகங்களைச் செய்ய வேண்டும் என்பதனால் அகிலம் பொதுக் குழுவை அமெரிக்காவுக்கு மாற்றியது, அரங்கத்திலிருந்து தற்காலிகமாக ஒதுங்கிக் கொண்டது. இந்த முடிவு அந்த சமயத்திலும் அதன் பிறகும் பன்முறை கண்டனம் செய்யப்பட்டிருந்தாலும் அது சரியான முடிவு என்பதைப் பிற்கால சம்பவங்கள் நிரூபித்தன. ஒரு பக்கத் தில், அன்றும் அதன் பிறகும் அகிலத்தின் பெயரை உப யோகித்துக் கொண்டு பயனற்ற சதிகளை நடத்துகின்ற எல்லா முயற்சிகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்தது; மறு பக்கத்தில், பல்வேறு நாடுகளையும் சேர்ந்த சோஷலிஸ்டுத் தொழிலாளர்கள் கட்சிகளுக்கு இடையில் தொடர்கின்ற நெருக்கமான இடையுறவு அகிலத்தினால் எழுப்பப்பட்ட எல்லா நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தின் முற்றொருமை மற்றும் ஒருமைப்பாட்டைப் பற்றிய உணர்வு சம்பிரதாய மான சர்வதேச சங்கம் என்ற பிணைப்பு—அது அத்தருணத் தில் விலங்காக மாறி விட்டது—இல்லாமலே தன்னை நிறுவிக் கொள்ள முடியும் என்பதை நிரூபித்தது.

ஹேக் காங்கிரசுக்குப் பிறகு மார்க்ஸ் தன்னுடைய தத்துவப் பணியைத் தொடர்வதற்கு அமைதியும் ஓய்வும் கடைசியாக மறுபடியும் கிடைத்தது; அவர் சீக்கிரத்திலேயே **மூலதனத்தின்** இரண்டாவது தொகுதியை எழுதி முடிப்பார் என்று எதிர்பார்க்கிறோம்.

மார்க்ஸ் விஞ்ஞான வரலாற்றில் தன்னுடைய பெயரைப் பொறித்துள்ள பல முக்கியமான கண்டுபிடிப்புகளில் இரண் டைப் பற்றி மட்டுமே நாம் இங்கே எழுத முடியும்.

முதலாவதாக, உலக வரலாற்றைப் பற்றிய மொத்தக்

கருதுகோளிலும் அவர் உருவாக்கிய புரட்சி. வரலாற்று மாற்றங்கள் எல்லாவற்றுக்கும் முடிவான காரணங்களை மனிதர்களுடைய கருத்துக்களின் மாற்றங்களில் தேட வேண்டும் மற்றும் வரலாற்று மாற்றங்கள் அனைத்திலும் அரசியல் மாற்றங்களே மிகவும் முக்கியமானவை, அவை மொத்த வரலாற்றின் மீதும் ஆதிக்கம் செலுத்துகின்றன என்னும் கருதுகோளை வரலாற்றைப் பற்றிய முந்திய கருத்து அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால் மனிதர்களுடைய அறிவில் கருத்துக்கள் எப்படித் தோன்றுகின்றன, அரசியல் மாற்றங்கள் எக்காரணங்களால் ஏற்படுகின்றன என்ற வினா எழுப்பப்படவில்லை. பிரெஞ்சு வரலாற்றாசிரியர்களின் புதிய மரபும் பகுதியளவுக்கு ஆங்கில வரலாற்றாசிரியர்களின் மரபும் குறைந்த பட்சம் மத்திய காலத்துக்குப் பிறகு சமூக மற்றும் அரசியல் ஆதிக்கத்துக்காக வளர்ச்சியடைகின்ற முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவப் பிரபுக்களுடன் நடத்திய போராட்டமே ஐரோப்பிய வரலாற்றின் இயக்குச் சக்தி என்ற நம்பிக்கையை நிர்ப்பந்தவசமாகப் பெற்றன. முந்திய வரலாறு அனைத்துமே வர்க்கப் போராட்டங்களின் வரலாறு, பல்வகையான மற்றும் சிக்கலான அரசியல் போராட்டங்கள் அனைத்திலும் சமூக வர்க்கங்களின் சமூக மற்றும் அரசியல் ஆட்சி, மூப்படைந்த வர்க்கங்கள் தம்முடைய ஆதிக்கத்தைத் தக்கவைத்துக் கொள்வதும் புதிதாகத் தோன்றிய வர்க்கங்கள் ஆதிக்கத்தை வென்றெடுப்பதுமே முடிவு செய்யப்பட வேண்டிய ஒரே பிரச்சினையாக இருந்தது என்பதை மார்க்ஸ் நிரூபித்தார். ஆனால் இந்த வர்க்கங்கள் எக்காரணங்களால் தோன்றின, எக்காரணங்களால் தொடர்ந்து நீடிக்கின்றன? சமூகம் குறிப்பிட்ட காலகட்டத்தில் தன்னுடைய வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி மற்றும் பரிவர்த்தனை செய்கின்ற குறிப்பிட்ட பொருளாயத மற்றும் உடலியல் புலன்சார்ந்த நிலைமைகள் அவற்றுக்குக் காரணமாக இருக்கின்றன. மத்திய கால நிலப்பிரபுத்துவ ஆட்சி சிறு அளவான விவசாய சமூகங்களின் சுயபூர்த்தியுள்ள பொருளாதாரத்தை ஆதாரமாகக் கொண்டிருந்தது; அந்தச் சமூகங்கள் தாமே அநேகமாக மக்களின் நுகர்வுக்கு

அவசியமான எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்தன; அங்கே பரிவர்த்தனை அநேகமாக இல்லை; அங்கே ஆயுதமேந்திய உயர் குடியினர் அந்நிய எதிரிகளிடமிருந்து அவர்களைப் பாதுகாத்தார்கள், தேசிய ஒற்றுமையை அல்லது—குறைந்த பட்சம்—அரசியல் ஒற்றுமையை உருவாக்கினார்கள். நகரங்களும் அவற்றுடன் தனித்தனியான கைத்திறன் தொழில்துறையும் தோன்றி முதலில் உள்நாட்டிலும் பிறகு சர்வதேச அளவிலும் வர்த்தகம் வளர்ச்சியடைந்த பொழுது நகர முதலாளி வர்க்கம் வளர்ச்சியடைந்தது; அது மத்திய காலத்திலேயே உயர் குடியினருடன் நடத்திய போராட்டத்தில் தனிச் சலுகையுள்ள சமூகப் பிரிவு என்ற முறையில் தன்னையும் நிலப்பிரபுத்துவ அமைப்பில் சேர்த்துக் கொள்ளும்படிச் செய்வதில் வெற்றியடைந்தது. ஆனால் ஐரோப்பாவுக்கு அப்பால் இருந்த உலகம் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து, பதினைந்தாம் நூற்றாண்டின் நடுப் பகுதியிலிருந்து இந்த முதலாளி வர்க்கம் இன்னும் அதிக விரிவான விற்பனைக் களத்தைப் பெற்றதுடன் தன்னுடைய தொழில்துறையின் வளர்ச்சிக்குப் புதிய தூண்டுதலையும் பெற்றது; மிகவும் முக்கியமான பிரிவுகளில் கைத்தொழில்களுக்குப் பதிலாக இப்பொழுது பாக்டரி அளவில் நடைபெற்ற பட்டறை உற்பத்தி ஏற்பட்டது; முந்திய நூற்றாண்டின் கண்டுபிடிப்புகள், குறிப்பாக நீராவி எஞ்சின் கண்டுபிடிக்கப்பட்டதன் மூலம் ஏற்பட்ட பெரிய அளவுத் தொழில்துறை பட்டறை உற்பத்தி முறையை அகற்றியது. பெரிய அளவுத் தொழில்துறை அதன் பங்கில் பின்தங்கிய நாடுகளில் பழைய கர உழைப்பை ஒழித்தும் அதிக வளர்ச்சியடைந்த நாடுகளில் நீராவிக் கப்பல்கள், ரயில்வேக்கள், மின்சாரத் தந்தி ஆகிய இன்றைய புதிய தொடர்புச் சாதனங்களை உருவாக்கியும் வர்த்தகத்தின் மீது தாக்கம் செலுத்தியது. ஆகவே முதலாளி வர்க்கம் மேன்மேலும் அதிகமாக சமூகச் செல்வத்தையும் சமூக அதிகாரத்தையும் தன்னிடம் குவித்துக் கொண்டது. ஆனால் இன்னும் நெடுங்காலம் வரை அது பிரபுக்கள் மற்றும் பிரபுக்களினால் ஆதரிக்கப்பட்ட முடியரசர்களிடமிருந்த அரசியல் அதிகாரத்திலிருந்து தள்ளி

வைக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் —பிரான்சில் மாபெரும் புரட்சிக்குப் பிறகு—அந்த வர்க்கம் அரசியல் அதிகாரத்தையும் வென்றெடுத்து பாட்டாளி வர்க்கம் மற்றும் சிறு விவசாயிகளை ஆட்சி செய்கின்ற வர்க்கமாக மாறியது. இந்தக் கருத்தோட்டத்திலிருந்து எல்லா வரலாற்று நிகழ்வுகளையும் குறிப்பிட்ட சமூகத்தின் பொருளாதார நிலையைப் பற்றிப் போதுமான அறிவுடன்—இது நமது தொழில்முறை வரலாற்றாசிரியர்களிடம் முற்றிலும் இல்லை என்பது உண்மையே—மிகவும் சுலபமான முறையில் விளக்க முடியும்; அதைப் போலவே, ஒவ்வொரு வரலாற்றுக் காலகட்டத்தின் கருதுகோள்கள் மற்றும் கருத்துக்களை வாழ்க்கையின் பொருளாதார நிலைமைகள் மற்றும் அப்பொருளாதார நிலைமைகளினால் நிர்ணயிக்கப்படுகின்ற இக்காலகட்டத்தின் சமூக, அரசியல் உறவுகளைக் கொண்டு மிகவும் சுலபமான முறையில் விளக்க முடியும். வரலாறு முதல் தடவையாக தன் மெய்யான அடிப்படையில் அமைக்கப்பட்டது. மனிதர்கள் முதலில் உணவு அருந்த வேண்டும், குடிக்க வேண்டும், அவர்களுக்கு இருப்பிடம், உடை வேண்டும்; ஆகவே அவர்கள் ஆதிக்கத்துக்குப் போராடுவதற்கு, அரசியல், சமயம், தத்துவஞானம், இதரவற்றைப் பின்பற்றுவதற்கு முன்பாக உழைக்க வேண்டும் என்பது எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய, ஆனால் முன்னர் முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட உண்மை ஆகும்; இந்த எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய உண்மை கடைசியில் தன்னுடைய வரலாற்று உரிமையை அடைந்தது.

ஆனால் வரலாற்றைப் பற்றிய இந்த புதிய கருதுகோள் சோஷலிஸ்டுக் கண்ணோட்டத்துக்குத் தலைமையான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. முந்திய வரலாறு அனைத்துமே வர்க்கப் பகைமை மற்றும் வர்க்கப் போராட்டங்களின் மூலமாக வளர்ச்சியடைந்தது, ஆட்சி செய்பவர்களும் ஆட்சி செய்யப்பட்டவர்களும், சுரண்டுகின்ற மற்றும் சுரண்டப்படுகின்ற வர்க்கங்கள் எப்பொழுதுமே இருந்து வந்திருக்கின்றன, மனிதகுலத்தின் அதிகமான பெரும்பான்மையினர் எப்பொழுதுமே கடுகளவு மகிழ்ச்சியும் இல்லாமல்

கடுமையாக உழைக்கும்படி எப்பொழுதுமே விதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பவற்றை அது எடுத்துக் காட்டியது. இது ஏன்? ஏனெனில் மனித சமூகத்தின் முந்திய வளர்ச்சிக் கட்டங்கள் அனைத்திலும் உற்பத்தி முறை மிகவும் குறை வாக வளர்ச்சியடைந்திருந்தபடியால் வரலாற்று வளர்ச்சி இந்த முரணியல்பான வடிவத்தில் மட்டுமே முன்னேறிச் செல்ல முடிந்தது; மொத்தத்தில் வரலாற்று முன்னேற்றம் என்பது குறைந்த எண்ணிக்கையில் இருந்த, தனிச் சலுகை களைக் கொண்ட சிறுபான்மையினருடைய நடவடிக்கையாக இருந்தது; ஆனால் மாபெரும் மக்கள் திரளினரோ தம் முடைய உழைப்பின் மூலம் தமக்கு அவசியமான குறைந்த வாழ்க்கைச் சாதனங்களையும் சலுகை உள்ளவர்களுக்கு மேன்மேலும் அதிகமான அளவில் அவசியமாக இருந்த வசதிப் பொருள்களையும் உற்பத்தி செய்யுமாறு விதிக்கப் பட்டிருந்தார்கள். ஆனால் வரலாற்றைப் பற்றிய இந்த ஆய்வுமுறை முந்திய வர்க்க ஆதிக்கத்துக்கு இயற்கையான, புரியக் கூடிய விளக்கத்தை இப்படிக் கொடுத்தது—இல்லா விட்டால் அது மனிதனுடைய கொடுமையின் விளைவு என்று மட்டுமே விளக்க வேண்டியிருக்கும்—என்பது இக்காலத்தில் உற்பத்திச் சக்திகள் பேரளவில் அதிகரித்திருப்பதனால் மனித சமூகத்தை ஆள்பவர்கள், ஆளப்படுபவர்கள், சுரண்டு பவர்கள், சுரண்டப்படுபவர்கள் என்று பிரிக்கின்ற கடைசி யான போலிச் சாக்கு—குறைந்த பட்சம், வளர்ச்சியடைந்த நாடுகளிலாவது—மறைந்து விட்டது என்ற உணர்வுக்கு இட்டுச் செல்கிறது; ஆட்சி செய்கின்ற பெரிய முதலாளி வர்க்கம் தன்னுடைய வரலாற்றுக் கடமையை நிறை வேற்றி முடித்து விட்டது, அது இனிமேல் சமூகத்திற்குத் தலைமை தாங்க முடியாது; வர்த்தக நெருக்கடிகள், குறிப் பாக கடைசியாக ஏற்பட்ட மாபெரும் வீழ்ச்சியும்[73] எல்லா நாடுகளிலும் தொழில்துறையில் மந்தமான நிலைமையும் நிரூபிப்பதைப் போல அது உற்பத்தியின் வளர்ச்சிக்குத் தடையாக மாறி விட்டது; வரலாற்றுத் தலைமை இப்போது பாட்டாளி வர்க்கத்துக்கு மாறி விட்டது; சமூகத்தில் அந்த வர்க்கத்தின் மொத்த நிலைமை காரணமாக அது எல்லா

வர்க்க ஆட்சியையும் எல்லா அடிமைத்தனத்தையும் எல்லாச் சுரண்டலையும் முழுமையாக ஒழிப்பதன் மூலமாக மட்டுமே தன்னை விடுவித்துக் கொள்ள முடியும்; முதலாளி வர்க்கத்தின் கட்டுப்பாட்டை மீறி வளர்ச்சியடைந்து விட்ட சமூக உற்பத்திச் சக்திகள் சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் சமூகச் செல்வத்தின் உற்பத்தியில் மட்டுமன்றி, அதன் வினியோகத்திலும் நிர்வாகத்திலும் பங்கெடுப்பதற்கு உதவுகின்ற நிலைமையைக் கொண்டு வருவதற்கு ஒன்றிணைந்த பாட்டாளி வர்க்கம் அவற்றை எடுத்துக் கொள்வதற்குக் காத்திருக்கின்றன; அது மொத்த உற்பத்தியையும் திட்டமிட்ட முறையில் இயக்குவதன் மூலம் சமூக உற்பத்திச் சக்திகளையும் அவற்றின் உற்பத்திப் பொருள்களையும் மிகவும் அதிகப்படுத்துவதால் எல்லோருடைய நியாயமான தேவைகளும் மேன்மேலும் அதிகரிக்கின்ற முறையில் பூர்த்தி செய்யப்படும்.

மார்க்சின் இரண்டாவது முக்கியமான கண்டுபிடிப்பு மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையிலுள்ள உறவை முடிவாகத் தெளிவுபடுத்தியதாகும்; அதாவது, இன்றைய சமூகத்தில், அங்கேயுள்ள முதலாளித்துவ உற்பத்தி முறையின் கீழ் முதலாளி தொழிலாளியை எப்படிச் சுரண்டுகிறார் என்பதை எடுத்துக் காட்டியதாகும். எல்லா செல்வத்துக்கும் எல்லா மதிப்புக்கும் உழைப்புதான் தோற்றுவாய் என்ற கருதுகோளை அரசியல் பொருளாதாரம் முன்வைத்த காலமுதலாகப் பின்வரும் கேள்வி தவிர்க்க இயலாதபடி எழுந்தது: கூலித் தொழிலாளி தன்னுடைய உழைப்பினால் படைக்கின்ற மொத்த மதிப்பையும் பெறுவதில்லை, அதில் ஒரு பகுதியை முதலாளி எடுத்துக் கொள்கிறார் என்ற உண்மையுடன் இது எப்படிப் பொருந்துகிறது? இந்தக் கேள்விக்கு விஞ்ஞான ரீதியில் சரியான பதிலளிப்பதற்கு முதலாளி வர்க்கப் பொருளியலாளர்களும் சோஷலிஸ்டுகளும் மிகவும் பாடுபட்டார்கள்—எனினும் அவர்களால் முடியவில்லை. கடைசியில் மார்க்ஸ் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் கூறினார். அத்தீர்வு பின்வருமாறு: இன்றைய முதலாளித்துவ உற்பத்தி முறை இரண்டு சமூக வர்க்கங்கள்—

ஒரு பக்கத்தில் உற்பத்திச் சாதனங்களையும் வாழ்க்கைச் சாதனங்களையும் தம்மிடம் வைத்திருக்கின்ற முதலாளிகள், மறு பக்கத்தில் அவற்றை உடைமையாகக் கொண்டிராதபடியால் தம்முடைய உழைப்புச் சக்தி என்னும் ஒரே பண்டத்தை விற்பனை செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்ற பாட்டாளி வர்க்கத்தினர்—இருப்பதை முன்னூகிக்கிறது; ஆகவே பாட்டாளி வர்க்கம் வாழ்க்கைச் சாதனத்தைப் பெறுவதற்காகத் தன்னுடைய உழைப்புச் சக்தியை விற்பனை செய்ய வேண்டும். ஆனால் ஒரு பண்டத்தின் மதிப்பு அதன் உற்பத்தியில்—ஆகவே அதன் புனருற்பத்தியில்—அடங்கியுள்ள சமூக ரீதியில் அவசியமான உழைப்பின் அளவினால் நிர்ணயிக்கப்படுகிறது; ஆகவே ஒரு நாளில், மாதத்தில் அல்லது ஆண்டில் ஒரு சராசரி மனிதனுடைய உழைப்புச் சக்தியின் மதிப்பு இந்த உழைப்புச் சக்தியை ஒரு நாள், மாதம் அல்லது ஆண்டுக் காலம் தக்கவைப்பதற்கு அவசியமான வாழ்க்கைச் சாதனத்தின் அளவில் அடங்கியுள்ள உழைப்பின் அளவினால் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு தொழிலாளி தனக்கு ஒரு நாளுக்கு அவசியமான வாழ்க்கைச் சாதனத்தைப் பெறுவதற்கு ஆறு மணி நேரம் உழைக்க வேண்டும் அல்லது—இதையே வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால்—அவற்றில் அடங்கியிருக்கின்ற உழைப்பு ஆறு மணி நேர உழைப்பின் அளவைப் பிரதிநிதித்துவம் செய்கிறது என்று கருதுவோம்; அப்படியானால், ஒரு நாள் உழைப்புச் சக்தியின் மதிப்பு ஆறு மணி நேர உழைப்பைக் கொண்டிருக்கின்ற பணத்தின் அளவினால் எடுத்துரைக்கப்படுகிறது. மேலும், தொழிலாளியை வேலைக்கு வைத்திருக்கின்ற முதலாளி அவருக்கு இந்தத் தொகையைக் கூலியாகக் கொடுப்பதாக, ஆகவே அவருடைய உழைப்புச் சக்தியின் முழு மதிப்பைக் கொடுப்பதாக வைத்துக் கொள்வோம். தொழிலாளி ஒரு நாளில் முதலாளிக்காக ஆறு மணி நேரம் உழைத்தால் அவர் முதலாளியின் முதலீட்டுக்கு முழுவதுமாக உழைத்துவிட்டார்—ஆறு மணி உழைப்புக்கு ஆறு மணி உழைப்பு. ஆனால் அதில் முதலாளிக்கு மிஞ்சுவது ஒன்றுமில்லை;

ஆகவே அவர் பிரச்சினையை முற்றிலும் வேறு விதமாகப் பார்க்கிறார். நான் இந்தத் தொழிலாளியின் உழைப்புச் சக்தியை ஆறு மணி நேரத்துக்கு அல்ல, ஒரு நாள் முழுவதற்கும் வாங்கியிருக்கிறேன் என்று அவர் கூறுகிறார்; எனவே அவர் தொழிலாளியைச் சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தவாறு 8, 10, 12, 14 அல்லது இன்னும் கூடுதலான மணி நேரத்துக்கு உழைக்கும்படிச் செய்கிறார்; ஆகவே ஏழாவது, எட்டாவது மற்றும் கூடுதலான மணி நேரத்தில் செய்யப் படுகின்ற உற்பத்தி கூலி கொடுக்கப்படாத உழைப்பின் உற்பத்தி ஆகும்; அது முதலாளியின் பைக்குப் போய்ச் சேருகிறது. ஆகவே முதலாளியிடம் வேலை செய்கின்ற தொழிலாளி தன்னுடைய உழைப்புச் சக்தியின் மதிப்பைப் புனருற்பத்தி செய்வது (அதற்கு அவருக்குக் கூலி கொடுக்கப்படுகிறது) மட்டுமன்றி, அதற்கு மேலாக **உபரி மதிப்பையும்** உற்பத்தி செய்கிறார்; இது முதலில் முதலாளியினால் சுவீகரித்துக் கொள்ளப்பட்டு அதற்குப் பிறகு மொத்த முதலாளி வர்க்கத்தின் மத்தியிலும் திட்டவட்டமான பொருளாதார விதிகளின்படிப் பிரித்தளிக்கப்பட்டு நிலக் குத்தகை, லாபம், மூலதனத் திரட்சி ஆகியவை தோன்றுகின்ற அடிப்படையாக, சுருக்கமாகச் சொல்வதென்றால் உழைப்பில் ஈடுபடாத வர்க்கங்கள் நுகர்வு செய்கின்ற அல்லது திரட்டுகின்ற அனைத்துச் செல்வமாக இருக்கிறது. அதன் மூலம், இன்று முதலாளிகள் செல்வத்தைத் திரட்டுதல் என்பது அடிமை உடைமையாளர் அல்லது பண்ணையடிமையின் உழைப்பைச் சுரண்டுகின்ற நிலப்பிரபுத்துவ நிலக்கிழார் மற்றவர்களது கூலி கொடுக்கப்படாத உழைப்பை எப்படிச் சுவீகரித்துக் கொண்டார்களோ, அதைப் போன்றதே என்பதும் கூலி கொடுக்கப்படாத இந்த உழைப்பைச் சுவீகரிக்கின்ற வழியிலும் முறையிலும் உள்ள வேறுபாட்டின் மூலமாக மட்டுமே இச்சுரண்டல் வடிவங்கள் அனைத்தும் வகைபிரிக்கப்படுகின்றன என்பதும் நிரூபிக்கப்படுகின்றன. இன்றைய சமூக அமைப்பில் உரிமை மற்றும் நீதி, உரிமைகள் மற்றும் கடமைகளின் சமத்துவம், நலன்களின் பொதுவான ஒத்திசைவு ஆகியவை நிலவுகின்றன என்று வாதிடுகின்ற

உடைமை வர்க்கங்களின் போலியான சொற்றொடர்கள் எல்லாவற்றுக்கும் கடைசி நியாயப்படுத்தல் அகற்றப்பட்டது; முந்திய சமூகங்களுக்குச் சிறிதும் குறையாத அளவில் இன்றைய முதலாளித்துவ சமூகம் மக்களில் மிகவும் அதிகமான பெரும்பான்மையினரைச் சிறுபான்மையினர், மேன்மேலும் குறைந்து கொண்டிருக்கின்ற சிலர் சுரண்டுவதற்குப் பயன்படுத்துகின்ற பகட்டான நிறுவனமே என்பது அம்பலப் படுத்தப்பட்டு விட்டது.

நவீன விஞ்ஞான சோஷலிசம் இந்த இரண்டு முக்கியமான உண்மைகளையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. மூலதனம் நூலின் இரண்டாவது தொகுதியில் இவையும் முதலாளித்துவ சமூக அமைப்பைப் பற்றி இவற்றுக்குச் சிறிதும் குறையாத முக்கியத்துவத்தைக் கொண்ட விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் மேலும் வளர்த்துக் கூறப்படும்; ஆகவே முதல் தொகுதியில் விரித்துரைக்கப்படாத அரசியல் பொருளாதாரத்தின் இதர அம்சங்களும் புரட்சிமயமாக்கப் படும். மார்க்ஸ் அதை விரைவில் அச்சுக்குத் தயாரிப் பாராக.

1877 ஜூன் நடுப் பகுதியில்
பி. எங்கெல்சினால்
எழுதப்பட்டது

*Volks-Kalender*,
புருன்ஸ்விக், 1878
என்ற ஆண்டு மலரில்
வெளியிடப்பட்டது

ஆண்டு மலரின் வாசகப்படி
அச்சிடப்பட்டது

மூலம் ஜெர்மன்
மொழியில்
எழுதப்பட்டது

கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ்

# ஔ. பெபெல், வி. லீப்க்னெஹ்ட், வி. பிராக்கே மற்றும் இதரர்களுக்கு எழுதிய சுற்றறிக்கைக் கடிதம்

என்பதிலிருந்து[74]

## III. மூன்று ஜூரிஹ்காரர்களின் அறிக்கை

*இதற்கிடையில் ஹொஹ்பெர்க்கின் Jahrbuch இதழ்[75] எங்களுக்கு வந்திருக்கிறது; அதில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்ற* ஜெர்மனியில் சோஷலிஸ்டு இயக்கத்தைப் பற்றிய ஒரு கடந்த கால நோக்கு *என்னும் கட்டுரை துல்லியமாக ஜூரிஹ் கமிஷனைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களால்* எழுதப்பட்டிருக்கிறது என்று ஹொஹ்பெர்க் தான் என்னிடம் தெரிவிக்கிறார். இன்று வரையிலும் இயக்கத்தைப் பற்றி அவர்களுடைய அதிகார பூர்வமான விமர்சனமும் அவர்களைப் பொறுத்தமட்டில் புதிய இதழ்[76] பின்பற்றப் போகின்ற கொள்கையின் அதிகார பூர்வமான செயல்திட்டமும் இதில் வெளியிடப்பட்டிருக்கின்றன.*

*ஆரம்பத்திலேயே பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது:*

*''லஸ்ஸால் எதைத் தலைசிறந்த அரசியல் இயக்கம் என்று கருதினாரோ, தொழிலாளர்களை மட்டுமன்றி,*

---

**—கா. ஹொஹ்பெர்க், எ. பெர்ன்ஷ்டைன் மற்றும் கொ. ஷ்ராம்.—ப-ர்.*

எல்லா நேர்மையான ஜனநாயகவாதிகளையும்—விஞ்ஞானத் துறையின் சுதந்திரமான பிரதிநிதிகளும் மனிதகுலத்தை உண்மையாகவே நேசிக்கின்ற அனைத்து மனிதர்களும் அதன் முன்னணியில் அணி வகுத்துச் செல்ல வேண்டும்—எந்த இயக்கத்தில் சேரும்படி அழைக்கூவினாரோ, அது யோஹன் பப்தீஸ்த் ஷ்வைட்சருடைய தலைமையில், தொழில்துறைத் தொழிலாளர்கள் தங்களுடைய சொந்த நலன்களுக்காக நடத்துகின்ற ஒருதரப்பான போராட்டமாகக் குறுகி விட்டது.''

இது வரலாற்று ரீதியில் உண்மையா அல்லது அதில் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது என்பதை நான் ஆராயப் போவதில்லை. இங்கு ஷ்வைட்சரைப் பற்றிச் சொல்லப் படுகின்ற விசேஷமான குற்றச்சாட்டு அவர் லஸ்ஸால் வாதத்தை—அது ஒரு முதலாளித்துவ-ஜனநாயக-பரோபகார இயக்கம் என்று இங்கே அனுமானிக்கப்படுகிறது—முதலாளி வர்க்கத்துக்கு எதிரான தொழில்துறைத் தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டமாக அதன் தன்மையை ஆழப்படுத்தி தொழில்துறைத் தொழிலாளர்கள் தங்களுடைய சொந்த நலன்களுக்காக நடத்துகின்ற ஒருதரப்பான போராட்டமாகக் குறுக்கி விட்டார் என்பதாகும். மேலும் அவர் ''முதலாளித்துவ ஜனநாயகத்தை நிராகரித்து விட்டார்'' என்று குற்றம் சாட்டப்படுகிறது. எப்படி இருப்பினும் சமூக-ஜனநாயகக் கட்சிக்குள் முதலாளித்துவ ஜனநாயகத்துக்கு என்ன வேலை இருக்கிறது? அதில் ''நேர்மையான மனிதர்கள்'' இருக்கிறார்கள் என்றால் அது சேருவதற்கு விரும்ப முடியாது; எப்படியிருப்பினும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று அது விரும்பினால் சச்சரவைத் தொடங்குவதற்கு மட்டுமே அப்படி விரும்ப வேண்டும்.

லஸ்ஸால்வாதக் கட்சி ''தொழிலாளர்களின் கட்சி என்ற முறையில் மிகவும் ஒருதரப்பான முறையில் நடந்து கொண்டது''. இப்படி எழுதியுள்ள கனவான்கள் தொழிலாளர்களின் கட்சி என்ற முறையில் மிகவும் ஒரு தரப்பான முறையில் நடக்கின்ற கட்சியில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள், தற்பொழுது அந்தக் கட்சியில் பதவிகளையும் பொறுப்புகளையும் வகிக்கிறார்கள். இங்கே முழுமையான பொருந்

தாமையைப் பார்க்கிறோம். தாங்கள் எழுதியிருப்பதையே அவர்கள் குறிக்கிறார்கள் என்றால் அவர்கள் கட்சியிலிருந்து வெளியேற வேண்டும் அல்லது—குறைந்த பட்சம்—தங்கள் பதவிகளிலிருந்தும் பொறுப்புகளிலிருந்தும் விலக வேண்டும். அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்றால் கட்சியின் பாட்டாளி வர்க்கத் தன்மையை எதிர்ப்பதற்குத் தங்களுடைய பதவிகளைப் பயன்படுத்த உத்தேசிக்கிறார்கள் என்பதை அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். ஆகவே கட்சி அவர்களைப் பதவிகளிலும் பொறுப்புகளிலும் அப்படியே விட்டு வைத்திருக்குமானால், அது தனக்குத் தானே துரோகம் செய்வதாகும்.

ஆகவே சமூக-ஜனநாயகக் கட்சி தொழிலாளர்களின் ஒருதரப்பான கட்சியாக இருக்கக் கூடாது, அது ''மனித குலத்தை உண்மையாகவே நேசிக்கின்ற அனைத்து மனிதர்களையும்'' கொண்ட பலதரப்புக் கட்சியாக இருக்க வேண்டும் என்பது இந்தக் கனவான்களுடைய கருத்தாகும். இதை நிரூபிப்பதற்கு அக்கட்சி எல்லாவற்றுக்கும் மேலாக முரட்டுத்தனமான பாட்டாளி வர்க்க உணர்ச்சிகளை ஒதுக்கி வைத்து விட்டு ''நல்ல ரசனையை வளர்ப்பதற்கும்'' ''நல்ல பாவனையைக் கற்றுக் கொள்வதற்கும்'' (பக்கம் 85) கல்வியறிவில் சிறந்த, பரோபகார முதலாளிகளின் வழிகாட்டுதலுக்கு உட்பட வேண்டும். அப்பொழுது சில தலைவர்களுடைய ''அகௌரவமான நடத்தை'' மறைந்து முற்றிலும் கௌரவமான ''முதலாளித்துவ நடத்தை'' ஏற்படும். (இங்கே குறிப்பிடப்படுகின்ற நபர்களுடைய அகௌரவமான வெளித் தோற்றம் அவர்களைக் குறை சொல்வதற்குரிய கடைசிக் காரணமாக இல்லை போலும்!) அதற்குப் பிறகு

''கல்வி கற்ற மற்றும் உடைமையுள்ள வர்க்கத்தினரின் வட்டாரங்களிலிருந்து எண்ணற்ற ஆதரவாளர்கள்'' தோன்றுவார்கள். ''ஆனால் நம் கிளர்ச்சி புலப்படத்தக்க வெற்றிகளை அடைய வேண்டுமென்றால்... முதலில் இவர்களை வென்றெடுக்க வேண்டும்.'' ஜெர்மன் சோஷலிசம் ''பெருந்திரளான மக்களை வென்றெடுப்பதற்கு மிகவும் அதிகமான முக்கி

யத்துவத்தைக் கொடுத்திருக்கிறது; அப்படிச் செய்ததில் சமூகத்தின் உயர் வரிசை என்று சொல்லப்படுகின்றவர்கள் மத்தியில் சுறுசுறுப்பான(!) பிரசாரத்தைப் புறக்கணித்திருக்கிறது.'' ஏனென்றால் ''தன்னை ரைஹ்ஸ்டாகில் பிரதிநிதித்துவம் செய்வதற்குத் தகுதியுள்ள நபர்கள் இல்லாத நிலை கட்சியில் இன்னும் இருக்கிறது''. எனினும் ''சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் முற்றாகப் படிப்பதற்கு நேரமும் வாய்ப்பும் உள்ள நபர்களிடம் பொறுப்பை ஒப்படைப்பது விரும்பத்தக்கது, அவசியமானது. சாதாரணமான தொழிலாளி, சிறு அளவுக் கைவினைஞன் ஆகியோரில்... மிகவும் அபூர்வமான, அசாதாரணமான சிலருக்கு மட்டுமே அதற்கு அவசியமான ஓய்வு நேரம் கிடைக்கிறது.''

ஆகவே முதலாளிகளைத் தேர்ந்தெடுங்கள்!

சுருக்கமாக: தொழிலாளி வர்க்கத்தினால் தன்னுடைய சொந்த விடுதலையை நிறைவேற்ற இயலாது. அதற்கென்று அது ''கல்விகற்ற மற்றும் உடைமையுள்ள'' முதலாளிகளின் தலைமையை ஏற்றுக் கொள்ள வேண்டும்; தொழிலாளர்களுக்கு எது நன்மை அளிக்கும் என்பதைக் கண்டறிவதற்கு ''நேரமும் வாய்ப்பும்'' அவர்களுக்கு மட்டுமே உண்டு. இரண்டாவதாக, எக்காரணத்திற்காகவும் முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராடக் கூடாது—ஆனால் சுறுசுறுப்பான பிரசாரத்தின் மூலம் அதை வென்றெடுக்க வேண்டும்.

ஆனால் ஒருவர் சமூகத்தின் உயர் வரிசையை அல்லது அதிலுள்ள நல்ல சக்திகளை மட்டுமே வென்றெடுக்க விரும்பினால் அவர்களை எக்காரணத்திற்காகவும் பயமுறுத்தக் கூடாது. இங்கே மன நிறைவளிக்கின்ற ஒன்றைக் கண்டுபிடித்து விட்டதாக மூன்று ஜூரிஹ்காரர்களும் நினைக்கிறார்கள்:

''துல்லியமாக இந்தச் சமயத்தில், சோஷலிஸ்டு எதிர்ப்புச் சட்டத்தின் தாக்கத்தில் கட்சி பலாத்காரமான, இரத்தக்களறியான புரட்சிப் பாதையைப் பின்பற்ற விரும்பவில்லை,... சட்ட முறைமை, அதாவது சீர்திருத்தப் பாதையைப் பின்பற்றுவதற்கு உறுதி பூண்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.''

ஆகவே 5,00,000 முதல் 6,00,000 வரை சமூக-ஜன நாயக வாக்காளர்கள்—வாக்காளர்களின் மொத்த எண் ணிக்கையில் பத்தில் ஒரு பங்குக்கும் எட்டில் ஒரு பங்குக்கும் இடைப்பட்டது, மேலும் அவர்கள் நாடு முழுவதிலும் பர வலாக இருக்கிறார்கள்—கற்சுவர்களின் மீது தங்களுடைய தலைகளை மோதி உடைத்துக் கொள்ளாமல், ஒருவருக்கு எதிராகப் பத்து நபர்கள் என்றிருக்கின்ற நிலையில் ''இரத் தக்களறியான புரட்சிக்கு'' முயற்சி செய்யாமல் இருக்கின்ற அளவுக்கு அறிவுடையவர்கள் என்றால் ஏதாவதொரு மாபெரும் வெளிநாட்டுச் சம்பவத்தை, அதிலிருந்து திடீ ரென்று தோன்றுகின்ற புரட்சிகர எழுச்சியை அல்லது அதன் விளைவாக ஏற்பட்ட சண்டையில் மக்களுக்குக் கிடைத்த வெற்றியைக் கூட உபயோகித்துக் கொள்வதை நிரந்தர மாகக் கைவிடுவார்கள் என்பதை இது நிரூபிக்கிறது! பெர் லின் என்றாவது ஒரு நாள் மற்றொரு மார்ச் 18ஐ[77] நடத்து கின்ற அளவுக்கு மறுபடியும் முட்டாள்தனமாக நடந்து கொண்டால் சமூக-ஜனநாயகவாதிகள் ''தடையரண்களைப் பற்றி வெறி கொண்ட இழிந்தோராக'' (பக்கம் 88)போராட் டத்தில் பங்கெடுக்காமல் ''சட்ட முறைமைப் பாதையைப் பின்பற்ற'' வேண்டும், வேகத் தடைகளைப் போட வேண் டும், தடையரண்களை இடிக்க வேண்டும், அவசியமானால் ஒருதரப்பான, முரட்டுத்தனமான, கல்வியறிவற்ற பெருந் திரளான மக்களை எதிர்த்துப் புகழ்மிக்க இராணுவத்துடன் சேர்ந்து அணி வகுத்துச் செல்ல வேண்டும். நாங்கள் இதைக் குறிக்கவில்லை என்று இந்தக் கனவான்கள் வலியுறுத்துவார் கள் என்றால் அவர்கள் எழுதியதற்கு வேறு என்னதான் அர்த்தம்?

ஆனால் இன்னும் சிறப்பான பகுதி தொடர்கிறது.

''ஆகவே அது (கட்சி) இன்றைய நிலைமைகளைப் பற்றித் தன்னுடைய விமர்சனத்தையும் அதை மாற்றுவதற் குரிய ஆலோசனைகளையும் அதிகமான அளவுக்கு நிதான மாக, புறநிலையாக, திட்டவட்டமாகச் செய்தால் உணர்வு பூர்வமான பிற்போக்காளர்கள் சிவப்பு பூதத்தை எழுப்பி முதலாளி வர்க்கத்துக்குப் பீதியுண்டாக்கிய'' (சோஷலிஸ்டு

எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்பட்ட பொழுது) ''அந்த வெற்றிகரமான திட்டத்தைத் திரும்பச் செய்வதற்குரிய சாத்தியம் அந்த அளவுக்குக் குறைவானதே'' (பக்கம் 88).

முதலாளி வர்க்கத்திடமிருந்து அதன் கவலையின் கடைசிச் சுவட்டை அகற்ற வேண்டுமென்றால் சிவப்பு பூதம் என்பது வெறும் பூச்சாண்டியே தவிர உண்மையல்ல என்பதை அந்த வர்க்கத்திடம் தெளிவாகவும் நம்பும்படியாகவும் நிரூபிக்க வேண்டும். ஆனால் முதலாளி வர்க்கம் தனக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையில் தவிர்க்க முடியாமல் நடைபெறப் போகின்ற ஜீவ-மரணப் போராட்டத்தை நினைத்து பீதியடைகிறது என்பதைத் தவிர சிவப்பு பூதத்தில் வேறு என்ன இரகசியம் இருக்கிறது? நவீன வர்க்கப் போராட்டத்தின் தவிர்க்கவியலாத முடிவைப் பற்றிய பயமா? வர்க்கப் போராட்டத்தை ஒழித்து விடுங்கள்— முதலாளி வர்க்கமும் ''சுதந்திரமான மக்கள் அனைவரும்'' ''பாட்டாளி வர்க்கத்துடன் கைகோர்த்துச் செல்வதற்கு அஞ்ச மாட்டார்கள்''! ஏமாற்றப்படப் போகின்ற வர்க்கம் துல்லியமாகப் பாட்டாளி வர்க்கமே.

ஆகவே கட்சி சோஷலிஸ்டு எதிர்ப்புச் சட்டம் இயற்றப் படுவதற்குக் காரணமாக இருந்த ''தகாத செயல்களும் அத்துமீறல்களும்'' மறுபடியும் என்றுமே ஏற்பட முடியாதபடிக் கைவிட்டு விட்டதாகத் தன்னுடைய பணிவான மற்றும் கீழ்ப்படிகின்ற நடத்தையின் மூலம் நிரூபிக்கட்டும். அது இச்சட்டத்தின் வரம்புகளுக்குள்ளாக மட்டுமே செயலாற்றுவதற்கு உத்தேசிப்பதாகத் தானாகவே வாக்குறுதி அளிக்குமானால் பிஸ்மார்க்கும் முதலாளி வர்க்கமும் மனமுவந்து இச்சட்டத்தை நிச்சயமாக ரத்துச் செய்வார்கள்; ஏனென்றால் அப்பொழுது இச்சட்டம் அவசியமற்றதாகி விடும்!

''யாரும் எங்களைத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது''; நாங்கள் ''நமது கட்சியையும் நமது செயல் திட்டத்தையும் கைவிடுவதற்கு'' விரும்பவில்லை; ''ஆனால் சில உடனடியான நோக்கங்களை நிறைவேற்றுவதில் நம்முடைய முழு பலத்தையும் சக்தியையும் குவித்தால் இன்னும்

பல ஆண்டுகளுக்கு நமக்குப் போதுமான வேலை இருக்கும்; எப்படி இருப்பினும் நாம் இன்னும் அதிகத் தீவிரமான இலட்சியங்களைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன்னர் இந்த உடனடியான நோக்கங்களை நிறைவேற்றித் தீர வேண்டும்.''

''இப்பொழுது... நம்முடைய மிகவும் தீவிரமான கோரிக்கைகளால் பயமுறுத்தித் துரத்தப்படுகின்ற'' முதலாளி வர்க்கத்தினர், குட்டி முதலாளி வர்க்கத்தினர், மற்றும் தொழிலாளர்கள் அப்பொழுது நம்மிடம் பெருந்திரளாக வந்து சேருவார்கள்.

செயல்திட்டம் கைவிடப்படவில்லை—ஆனால் அது முடிவில்லாத காலத்துக்குத்... தள்ளி வைக்கப்படுகிறது. அதைத் தனக்கென்றோ அல்லது தன்னுடைய வாழ்க்கைக் காலத்துக்கு என்றோ இல்லாமல் தன்னுடைய மரணத்துக்குப் பிறகு குழந்தைகள், பேரர்களுக்கு விட்டுச் செல்லப்படுகின்ற பரம்பரைச் சொத்து என்ற முறையில் மட்டுமே ஒருவர் இச்செயல்திட்டத்தை ஏற்றுக் கொள்கிறார். இடைக்காலத்தில் அவர் தன்னுடைய ''முழு பலத்தையும் சக்தியையும்'' எல்லா விதமான அற்ப சமாசாரங்களுக்கும் முதலாளித்துவ சமூகத்தை ஒட்டுப் போட்டுச் சீராக்குவதற்கும்—அப்பொழுதுதான் குறைந்த பட்சம் ஏதாவது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்ற தோற்றத்தை, அதே சமயத்தில் முதலாளி வர்க்கத்தைப் பயமுறுத்தி விடாமல் ஏற்படுத்த முடியும்—அர்ப்பணிக்க வேண்டும். அப்படியானால் நான் ''கம்யூனிஸ்டான'' மிக்கேலை உண்மையாகவே பாராட்ட வேண்டும்; அவர் முழு மூச்சாக மோசடி செய்து அடுத்த சில நூறு ஆண்டுகளில் முதலாளித்துவ சமூகம் தவிர்க்க முடியாதபடி ஒழிக்கப்படும் என்பதில் தன்னுடைய உறுதியான நம்பிக்கையை நிரூபிக்கிறார்; அவர் 1873ஆம் ஆண்டின் முறிவுக்குத் தன்னுடைய மிகவும் சிறந்த பங்களிப்பைச் செய்திருக்கிறார்; ஆகவே இன்றைய அமைப்பு வீழ்ச்சியடைவதற்கு உண்மையாகவே ஏதோ ஒரு வகையில் உதவி செய்து கொண்டிருக்கிறார்.

''கம்பெனி அமைப்பாளர்களுக்கு எதிரான மிகைப்படுத்திச் செய்யப்பட்ட தாக்குதல்கள்'' நல்ல பாவனைக்கு

விரோதமான மற்றொரு குற்றமாகும்; எப்படிப் பார்த்தாலும் அவர்கள் ''தம்முடைய சம காலக் குழந்தைகளே''; ஆகவே ''ஷ்ட்ரூஸ்பெர்க் மற்றும் அவரைப் போன்றவர்களை அவதூறு செய்வதை... தவிர்த்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்''. துரதிர்ஷ்டவசமாக ஒவ்வொருவரும் ''தம்முடைய சம காலக் குழந்தையே''; இக்காரணத்தைப் போதுமானதாகக் கருதுவதாக இருந்தால் யாரையுமே இனி மேல் தாக்க முடியாது; நம்முடைய தரப்பில் எல்லா விவாதங்களும், எல்லாப் போராட்டங்களும் முடிந்து விடும்; நம்முடைய எதிரிகள் நமக்குத் தருகின்ற காலுதைகள் அனைத்தையும் நாம் அமைதியாக ஏற்றுக் கொள்கிறோம்; ஏனென்றால் இவர்கள் ''தம்முடைய சம காலக் குழந்தைகள்'' மட்டுமே, அவர்கள் வேறு விதமாக நடந்து கொள்ள முடியாது என்பது சிறந்த அறிவாளிகளான நமக்குத் தெரியும். அவர்களுடைய காலுதைகளை வட்டியுடன் சேர்த்துத் திருப்பித் தருவதற்குப் பதிலாக நாம் இந்த துரதிர்ஷ்டசாலிகள் மீது அனுதாபம் காட்ட வேண்டும்.

அத்துடன் கம்யூனுக்கு ஆதரவளித்ததும் பாதகமாக இருந்தது; ஏனென்றால்

''மற்றபடி நம்மைப் பற்றி நல்ல அபிப்பிராயத்தை வைத்திருந்தவர்கள் அந்நியமாகி விட்டார்கள், பொதுவாக நம் மீது முதலாளி வர்க்கத்தின் வெறுப்பு அதிகரித்தது.'' மேலும், ''அக்டோபர் சட்டம்[78] நிறைவேற்றப்பட்டதில்'' கட்சிக்கு ''எவ்விதத்திலும் பொறுப்பு இல்லை என்று கூற முடியாது; ஏனென்றால் கட்சி முற்றிலும் அவசியமற்ற முறையில் முதலாளி வர்க்கத்தின் வெறுப்பை அதிகப்படுத்தி விட்டது.''

இங்கே ஜூரிஹின் மூன்று கண்காணிப்பாளர்களின் செயல்திட்டத்தைப் பார்க்கிறோம். தெளிவைப் பொறுத்த மட்டில் யாரும் எவ்விதமான குறையும் சொல்ல முடியாது; குறைந்த பட்சம், 1848இலிருந்து இத்தகைய மொத்த வாசகத்துடனும் நன்கு பரிச்சயமுள்ள நாம் குறை சொல்ல முடியாது. பாட்டாளி வர்க்கம் தன்னுடைய புரட்சிகர நிலை

யில் ''அதிக தூரம் போய் விடக்'' கூடும் என்று அதிகமாகக் கவலைப்படுகின்ற குட்டி முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதி களை இங்கே சந்திக்கிறோம். உறுதியான அரசியல் எதிர்ப் புக்குப் பதிலாகப் பொது நிலையான மத்தியஸ்தம்; அரசாங் கத்தையும் முதலாளி வர்க்கத்தையும் எதிர்த்துப் போராடு வதற்குப் பதிலாக அவற்றைத் தம் தரப்புக்கு வென்றெடுப் பதற்கு, மன மாற்றத்துக்கு முயற்சி செய்தல்; மேலேயிருப்ப வர்களுடைய அதிகார நடவடிக்கையைக் கடுஞ்சீற்றத் துடன் எதிர்ப்பதற்குப் பதிலாக அவர்களிடம் பணிவாகக் கீழ்ப்படிதல் மற்றும் தண்டனை நியாயமானதே என்று ஒத்துக் கொள்ளுதல். வரலாற்று ரீதியில் அரசியமான மோதல்கள் அனைத்துமே தப்பெண்ணம் என்று விளக்கப் படுகின்றன; மற்றவை எப்படி இருந்தாலும் முக்கியமான விஷயங்களில் நமக்குள் ஒற்றுமை இருக்கிறது என்னும் உறுதி மொழியுடன் எல்லா விவாதமும் முடிவடைகிறது. 1848இல் முதலாளி வர்க்க ஜனநாயகவாதிகளாக முன்வந்த நபர்கள் இப்பொழுது தங்களைச் சமூக-ஜனநாயகவாதிகள் என்று சொல்லிக் கொள்ள முடியும். முந்தியவர்களுக்கு ஜன நாயகக் குடியரசு என்பது நிறைவேற முடியாத தொலை தூர இலட்சியமாக இருந்ததைப் போல பிந்தியவர்களுக்கு முதலாளித்துவ அமைப்பை ஒழிப்பது இருக்கிறது; ஆகவே அதற்கு இன்றைய அரசியலில் எந்த முக்கியத்துவமும் சிறிது கூட இல்லை; ஒருவர் தான் விரும்புகின்ற முழு அளவுக்கு மத்தியஸ்தம், சமரசம், பரோபகாரத்தைச் செய்யலாம். பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடை யிலான வர்க்கப் போராட்டத்திலும் அப்படியே நடந்து கொள்ளலாம். அது காகித அளவில் அங்கீகரிக்கப்படுகிறது; ஏனென்றால் அது இருப்பதை இனியும் மறுக்க முடியாது; ஆனால் செயலில் அது மறைக்கப்படுகிறது, நீராளமாக்கப் படுகிறது, வலிமையற்றதாக்கப்படுகிறது. சமூக-ஜனநாயகக் கட்சி தொழிலாளர்களுடைய கட்சியாக இருக்கக் கூடாது; முதலாளி வர்க்கத்தின் அல்லது வேறு எவருடைய பழிக்கும் ஆளாகக் கூடாது; எல்லாவற்றுக்கும் மேலாக அக்கட்சி முத லாளி வர்க்கத்தினர் மத்தியில் சுறுசுறுப்பான பிரசாரத்தை

நடத்த வேண்டும்; முதலாளி வர்க்கத்துக்குப் பீதியுண்டாக்குகின்ற தீவிரமான நோக்கங்களை—எப்படி இருந்தாலும் இவை நம்முடைய தலைமுறையில் நிறைவேறப் போவதில்லை—வலியுறுத்தாமல் அது குட்டி முதலாளி வர்க்க ஒட்டுவேலைச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதற்கு அதன் முழு பலத்துடனும் சக்தியுடனும் பாடுபட வேண்டும்; அவை பழைய சமூக அமைப்புக்குப் புதிய முட்டுக்கம்பங்களை அமைத்து கடைசியில் ஏற்படப் போகின்ற பேராபத்தை படிப்படியான, அரைகுறையான மற்றும் இயன்ற அளவுக்குச் சமாதான பூர்வமான மாற்ற நிகழ்வுப் போக்காகச் செய்வது ஒருவேளை சாத்தியமாகலாம். வெளித் தோற்றத்தில் தளர்ச்சியில்லாமல் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகக் கருதப்படுகின்ற இந்த நபர்கள் தாங்களும் எதுவும் செய்யாமல் இருப்பது மட்டுமல்ல, வம்பளப்பதைப் தவிர வேறு எதுவும் நடப்பதைத் தடுப்பதற்கு முயல்கிறார்கள்; இந்த நபர்கள் 1848 மற்றும் 1849இல் நடவடிக்கையின் எந்தவொரு வடிவத்தையும் கண்டு அச்சமடைந்து இயக்கத்தை ஒவ்வொரு காலடியிலும் தடுத்தார்கள், கடைசியில் இயக்கம் வீழ்ச்சி அடையுமாறு செய்தார்கள்; இந்த நபர்கள் பிற்போக்குவாதத்தை ஒருபோதும் பார்ப்பதில்லை, கடைசியில் எதிர்த்துப் போராடுவதற்கோ அல்லது தப்பியோடுவதற்கோ எந்த வழியும் இல்லாத முட்டுச் சந்தில் தாங்கள் சிக்கி விட்டதைக் கண்டு வியப்படைவார்கள்; இந்த நபர்கள் வரலாற்றைத் தங்களுடைய குறுகிய, அற்பவாத எல்லைக்குள் கட்டுப்படுத்துவதற்கு விரும்புவார்கள், ஆனால் வரலாறு அன்றைய கடமையை நிறைவேற்றுவதற்கென்று அவர்களுடைய தலைகளுக்கு மேலே தவறாமல் செல்லும்.

அவர்களுடைய சோஷலிஸ்டு நம்பிக்கைகளைப் பொறுத்தமட்டில் நாம் அவற்றை ஏற்கெனவே **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில்,** ''ஜெர்மானிய, அல்லது 'மெய்யான' சோஷலிசம்'' என்ற பகுதியில்* பொதுப்படையாக விமர்சனம் செய்திருக்கிறோம். வர்க்கப் போராட்டம் விரும்பத்தகாத

* இப்பதிப்பு, தொகுதி 1, பக்கங்கள் 234—239.—**ப-ர்.**

''முரட்டுத்தனமான'' நடவடிக்கை என்று ஒதுக்கப்படுகின்ற இடத்தில் சோஷலிசத்துக்கு அடிப்படையாக ''மனிதகுலத்தின் மீது உண்மையான நேசம்'' மற்றும் ''நீதியைப்'' பற்றிய வெற்றுச் சொற்றொடர்களைத் தவிர வேறு எதுவும் இருக்காது.

இது வரை ஆட்சி செய்த வர்க்கங்களைச் சேர்ந்த நபர்கள் போராடுகின்ற பாட்டாளி வர்க்கத்துடன் சேர்ந்து கொள்வதும் அதற்குக் கல்வியறிவு பூர்வமான அம்சங்களைத் தருவதும் வளர்ச்சியில் வேரூன்றியுள்ள தவிர்க்க முடியாத நிகழ்வு ஆகும். நாம் அறிக்கையில் இதைத் தெளிவாக எழுதியிருக்கிறோம். எனினும் இரண்டு அம்சங்களை இங்கே குறிப்பிடுவோம்.

முதலாவது, இந்த நபர்கள் பாட்டாளி வர்க்க இயக்கத்துக்கு உபயோகமாக இருக்க வேண்டுமென்றால் அவர்கள் மெய்யாகவே கல்வியறிவு பூர்வமான அம்சங்களை அதற்குள் கொண்டு வர வேண்டும்; ஆனால் ஜெர்மனியில் முதலாளி வர்க்கத்திலிருந்து வந்திருப்பவர்களில் மிகவும் பெரும்பாலானவர்களைப் பொறுத்தமட்டில் இப்படி நடைபெறவில்லை. *Zukunft* அல்லது *Neue Gesellschaft*[79] இயக்கத்தை ஒரு காலடி அளவு முன்னேற்றக் கூடிய எவ்விதமான பங்களிப்பையும் செய்யவில்லை. இங்கே விவர ரீதியான அல்லது தத்துவ ரீதியான மெய்யான கல்விப் பொருள் முற்றிலும் இல்லாதிருப்பதைப் பார்க்கிறோம். அதற்குப் பதிலாக மேற்போக்காகக் கற்றுக் கொள்ளப்பட்ட சோஷலிஸ்டுக் கருத்துக்களை இந்தக் கனவான்கள் பல்கலைக்கழகத்திலிருந்தோ அல்லது வேறு எங்கிருந்தோ தம்முடன் கொண்டு வந்த மிகவும் பல்வேறு விதமான தத்துவ நிலைகளுடன் ஒத்திசைவிப்பதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன; எஞ்சிய ஜெர்மன் தத்துவஞானம் இன்று சீர்குலைந்து கொண்டிருப்பதால் ஒன்றைக் காட்டிலும் அடுத்தது அதிகமான குழப்பத்தை ஏற்படுத்துகிறது. முதலில் தாங்கள் புதிய விஞ்ஞானத்தை நன்கு கற்றுக் கொள்வதற்குப் பதிலாக அவர்கள் ஒவ்வொருவருமே தம்முடன் ஏற்கெனவே கொண்டு வந்திருக்கின்ற கருத்து நிலையுடன் அதைச் சரிப்படுத்துவதற்கு முயற்சி

செய்தார்கள், உடனே தங்களுக்கென்று சொந்த விஞ்ஞானத்தைத் தயாரித்துக் கொண்டார்கள், உடனே அதை மற்றவர்களுக்குக் கற்பிக்க விரும்புகின்ற போலிப் பகட்டுடன் முன்வந்தார்கள். அதனால் இந்தக் கனவான்கள் கும்பலில் எத்தனை தலைகள் இருக்கின்றனவோ, அத்தனை கருத்துக்கள் இருக்கின்றன. ஏதாவது ஒரு விஷயத்திலாவது தெளிவை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அவர்கள் தீவிரமான குழப்பத்தை மட்டுமே ஏற்படுத்தியிருக்கிறார்கள்; அநேகமாகத் தங்களுக்கு மத்தியில் மட்டுமே அப்படிக் குழப்பத்தை ஏற்படுத்தியது அதிர்ஷ்டவசமே. தாங்கள் கற்றுக் கொள்ளாத ஒன்றைப் பிறருக்குக் கற்பிப்பதை முதல் கோட்பாடாகக் கொண்டுள்ள கல்வியறிவுடைய சக்திகளைக் கட்சி வெளியேற்றுவது மிகவும் பொருத்தமானதே.

இரண்டாவது, மற்ற வர்க்கங்களைச் சேர்ந்த இப்படிப்பட்ட நபர்கள் பாட்டாளி வர்க்க இயக்கத்தில் சேருவார்களேயானால், அவர்கள் முதலாளி வர்க்க, குட்டி முதலாளி வர்க்க, இதர தப்பெண்ணங்களின் எச்சங்களைத் தங்களுடன் கொண்டு வரக் கூடாது—அவர்கள் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தை முழு மனதுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது முதல் நிபந்தனையாக இருக்க வேண்டும். ஆனால் இந்தக் கனவான்கள் முதலாளி வர்க்க மற்றும் குட்டி முதலாளி வர்க்கத் தப்பெண்ணங்களினால் முட்ட நிரம்பியிருக்கிறார்கள் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மனியைப் போன்ற இத்தகைய குட்டி முதலாளி வர்க்க நாட்டில் இப்படிப்பட்ட கருத்துக்களுக்கு நியாயம் இருக்கிறது என்பது நிச்சயம்; ஆனால் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சிக்கு வெளியே மட்டும்தான் அந்த நியாயம். இந்தக் கனவான்கள் தங்களை சமூக-ஜனநாயகக் குட்டி முதலாளி வர்க்கக் கட்சியாக அமைத்துக் கொண்டால் அப்படிச் செய்வதற்கு அவர்களுக்கு முழு உரிமை இருக்கிறது; அப்பொழுது அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம், சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தபடிக் கூட்டுச் சேரலாம், இத்தியாதி. ஆனால் ஒரு தொழிலாளர் கட்சியில் அவர்கள் ஓர் அன்னியப் பகுதியே. அவர்களை இந்தத் தருணத்தில்

சகித்துக் கொள்வதற்குக் காரணங்கள் இருக்கின்றன என்றால், அவர்களைச் சகித்துக் கொள்வது மட்டுமே நம்முடைய கடமையாக இருக்க வேண்டும், கட்சித் தலைமையில் அவர்கள் செல்வாக்குப் பெறுவதற்கு நாம் இடமளிக்காதிருப்பதும் சீக்கிரத்தில் அவர்களிடம் முறித்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்திருப்பதும் நம்முடைய கடமையாகும். மேலும், அந்த நேரம் வந்து விட்டதாகத் தோன்றுகிறது. இந்தக் கட்டுரையின் ஆசிரியர்களைக் கட்சி இனியும் எப்படித் தன்னிடம் வைத்துக் கொண்டிருக்க முடியும் என்பது எங்களுக்குப் புரியவில்லை. ஆனால் கட்சித் தலைமையும் கூட இப்படிப்பட்ட நபர்களிடம் அநேகமாகச் சிக்கி விட்டால் கட்சி எளிமையாக ஆண்மையிழந்து விடும், பாட்டாளி வர்க்க முனைப்பு முடிந்து விடும்.

நம்மைப் பொறுத்தமட்டில் நம்முடைய மொத்தக் கடந்த காலப் பின்னணியில் பார்க்கும் பொழுது நமக்கு முன்னால் ஒரே பாதைதான் இருக்கிறது. வர்க்கப் போராட்டமே வரலாற்றின் உடனடியான இயக்குச் சக்தி, குறிப்பாக முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான வர்க்கப் போராட்டமே நவீன சமூகப் புரட்சியின் மாபெரும் நெம்புகோல் என்று சுமார் நாற்பது ஆண்டுகளாக நாம் வலியுறுத்தி வருகிறோம்; ஆகவே இந்த வர்க்கப் போராட்டத்தை இயக்கத்திலிருந்து அகற்ற விரும்புகின்ற நபர்களுடன் நாம் ஒத்துழைக்க இயலாது. அகிலம் நிறுவப்பட்ட பொழுது நாம் அதன் யுத்த கோஷத்தைத் தெளிவாக வகுத்தளித்தோம்: தொழிலாளி வர்க்கத்தினரின் விடுதலையைத் தொழிலாளி வர்க்கத்தினரே வென்றெடுத்துக் கொள்ள வேண்டும். அதனால் தொழிலாளர்கள் தங்களை விடுவித்துக் கொள்கின்ற அளவுக்குக் கல்வியறிவு இல்லாதவர்கள், ஆகவே பரோபகார உணர்ச்சியுள்ள பெரிய முதலாளி வர்க்கம் மற்றும் குட்டி முதலாளி வர்க்கம் மேலேயிருந்து அவர்களை விடுவிக்க வேண்டும் என்று பகிரங்கமாகக் கூறுகின்ற நபர்களுடன் நாம் ஒத்துழைக்க முடியாது. கட்சியின் புதிய இதழ் இந்தக் கனவான்களின் கருத்துக்களுக்கு ஏற்ற நிலையை, பாட்டாளி வர்க்கம் அல்லாத முதலாளி வர்க்க நிலையை

மேற்கொள்ளுமானால் நாம் அதற்கு எங்களுடைய எதிர்ப்பைப் பகிரங்கமாக அறிவிப்பதையும் ஜெர்மன் கட்சியை இன்று வரை வெளிநாட்டில் பிரதிநிதித்துவம் செய்த எங்கள் ஒருமைப்பாட்டைக் கைவிடுவதையும் தவிர—இது எங்களுக்கு அதிகமான வேதனையைத் தரும் என்ற போதிலும்—நாங்கள் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. ஆனால் அந்த நிலைமை ஏற்பட வேண்டியிராது என்று நம்புகிறோம்....

*1879 செப்டெம்பர் 17—18இல்*
*கா. மார்க்சினாலும்*
*பி. எங்கெல்சினாலும் எழுதப்பட்டது*

*Die Kommunistische Internationale,*
XII. Jahrg., Heft 23,
*ஜூன் 15, 1931*
*என்ற சஞ்சிகையில்*
*முதலில் வெளியிடப்பட்டது*

*கையெழுத்துப் பிரதியின்*
*படி அச்சிடப்பட்டது*

*மூலம் ஜெர்மன் மொழியில்*
*எழுதப்பட்டது*

பி. எங்கெல்ஸ்

# லண்டனிலிருந்த பி. லா. லவ்ரோவுக்கு எழுதிய கடிதம்

*லண்டன், நவம்பர் 12—17, 1875*

...1) டார்வினுடைய போதனையில் பரிணாமத் தத்துவத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்; ஆனால் டார்வினுடைய நிரூபண முறை(பிழைப்புப் போராட்டம், இயற்கைத் தேர்வு முறை) புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள உண்மையைப் பற்றி முதல், தற்காலிகமான, அரைகுறையான வெளியீடு மட்டுமே என்று கருதுகிறேன். டார்வின் காலம் வரை இப்பொழுது எங்கும் பிழைப்புப் போராட்டத்தை மட்டுமே பார்க்கும் அதே நபர்கள் (ஃபோக்ட், பியூஹ்னர், மொலிஷோட், இதரர்கள்) உயிர்ப்புள்ள இயற்கையில் துல்லியமாக ஒத்துழைப்பையே வலியுறுத்தினார்கள், தாவரங்கள் பிராணவாயுவையும் ஊட்டப் பொருளையும் பிராணிகளுக்குக் கொடுக்கின்றன என்பதையும் பிராணிகள் கரி அமிலத்தையும் உரத்தையும் தாவரங்களுக்குத் தருகின்றன என்பதையும்—லீபிஹ் இதைக் குறிப்பாக வலியுறுத்துவார்—சுட்டிக் காட்டினார்கள். இந்த இரண்டு கருத்துக்களும் குறிப்பிட்ட வரையறைகளுக்குள் நியாயமானவையே; ஆனால் ஒன்றைப் போலவே அடுத்ததும் ஒருதரப்பாகவும் குறுகிய பார்வையுள்ளதாகவும் இருக்கிறது. இயற்கையில் (உயிரில்லாததைப் போலவே உயிருள்ளதிலும்) பொருள்களின் இடைச்செயலில் ஒத்திசைவும் மோதலும், போராட்டமும் ஒத்துழைப்பும் இருக்கின்றன. ஆகவே சுயமாகப் பட்டம் சூட்டிக் கொண்ட ஒரு இயற்கை விஞ்ஞானி வரலாற்று

ரீதியான வளர்ச்சி முழுவதையும் அதன் வளத்தையும் பல்வகைத் தன்மையையும் ''பிழைப்புப் போராட்டம்'' என்னும் ஒருதரப்பான மற்றும் குறுகிய சொற்றொடரில்—இயற்கைத் துறையிலும் கூட இச்சொற்றொடரை cum grano salis * என்ற முறையில் மட்டுமே ஏற்றுக் கொள்ள முடியும்—அடைக்கின்ற உரிமையை எடுத்துக் கொள்கின்ற பொழுது அத்தகைய முறையில் அதன் சொந்தக் கண்டனமும் உண்மையிலேயே அடங்கியிருக்கிறது.

2) ''உறுதியான டார்வின்வாதிகள்''** என்று நீங்கள் குறிப்பிட்டுள்ள மூவரில் ஹெல்வால்ட் மட்டுமே அப்படிக் குறிப்பிடப்படுவதற்குத் தகுதி உடையவர் என்று தோன்றுகிறது. எவ்வளவு உயர்வாகப் பார்த்தாலும் ஸேய்ட்லிட்ஸ் சிறு தரமான பிரமுகர் மட்டுமே; ராபர்ட் பிர் ஒரு நாவலாசிரியர்; அவர் எழுதிய நாவல் மும்முறை தற்பொழுது *Über Land und Meer* என்னும் சஞ்சிகையில்[80] பிரசுரிக்கப்பட்டு வருகிறது. அவருடைய மொத்த வீறாப்புக்கு அதுதான் பொருத்தமான இடம்.

3) உங்களுடைய விமர்சனத் தாக்குதல் முறையின் சாதகங்களை நான் மறுக்கவில்லை; அதை உளவியல் முறை என்று நான் கூறுவேன்; ஆனால் நான் வேறு முறையைத் தேர்ந்தெடுத்திருப்பேன். நம்மில் ஒவ்வொருவர் மீதும் அவர் அதிகமாகப் பங்கெடுக்கின்ற அறிவுச் சூழல் அநேகமாகத் தாக்கம் செலுத்துகிறது. ருஷ்யாவில்—அந்த நாட்டு மக்களை என்னைக் காட்டிலும் நீங்களே நன்றாக அறிவீர்கள்—''அடக்கமான பாதிப்புக்கு''***, தார்மிக உணர்ச்சிக்குப் பாடுபடுகின்ற ஒரு பிரசாரச் சஞ்சிகைக்கு உங்களுடைய முறை ஒருவேளை சிறப்பானதாக இருக்கக் கூடும். ஆனால் போலியான உணர்ச்சி நயம் அதிகமான தீமையைச் செய்

---

* —நேர்பொருளில்: சிட்டிகை உப்புடன், அதாவது சிறிதளவு அவநம்பிக்கையுடன்.—ப-ர்.

** பி. லா. லவ்ரோவின் கட்டுரையிலிருந்து மேற்கோள் காட்டப்படுகின்ற சொற்கள்.—ப-ர்.

*** பி. லா. லவ்ரோவின் கட்டுரையிலிருந்து மேற்கோள் காட்டப்படுகின்ற சொற்கள்.—ப-ர்.

திருக்கின்ற, இன்னும் செய்து கொண்டிருக்கின்ற ஜெர்மனிக்கு அந்த முறை பொருந்தாது; அதைத் தவறாகப் புரிந்து கொள்வார்கள், உணர்ச்சிகரமாகக் கெடுத்து விடுவார்கள். எங்களுடைய நாட்டுக்கு—குறைந்த பட்சம், உடனடியான எதிர்காலத்துக்கு—அன்பைக் காட்டிலும் வெறுப்பு, மற்றவற்றைக் காட்டிலும் ஜெர்மன் கருத்துமுதல்வாதத்தின் கடைசி எச்சங்களை உதறியெறிதல், பொருளாயத விவரங்களை அவற்றின் வரலாற்று உரிமைகளின் மீது நிறுவுதல் அவசியமாக இருக்கின்றன. ஆகவே நான் இந்த முதலாளித்துவ டார்வின்வாதிகளைப் பின்வருமாறு தாக்குவதற்கு விரும்புகிறேன்; உரிய சமயத்தில் அநேகமாக அதைச் செய்வேன்:

பிழைப்புப் போராட்டத்தைப் பற்றி டார்வினுடைய மொத்த போதனையுமே ஹாப்சினுடைய bellum omnium contra omnes * கோட்பாடு மற்றும் போட்டி என்னும் முதலாளித்துவப் பொருளாதாரக் கோட்பாட்டுடன் மால்தசின் மக்கள் தொகைத் தத்துவத்தையும்[81] சேர்த்து சமூகத்திலிருந்து உயிருள்ள இயற்கைக்கு மாற்றுதல் மட்டுமே. இந்த மந்திரவாதி வித்தையைச் செய்து முடித்தவுடன் (குறிப்பாக மால்தசின் தத்துவத்தைப் பொறுத்தும் பொதுவாகவும் இது முற்றிலும் அனுமதிக்கப்படக் கூடியதல்ல என்று நான் ஆட்சேபிக்கிறேன்; இதை முதலாவது பாராவில் சுட்டிக் காட்டியிருக்கிறேன்) அதே தத்துவங்கள் உயிருள்ள இயற்கையிலிருந்து வரலாற்றுக்கு மீண்டும் மாற்றப்பட்டு மனித சமூகத்துக்கு நித்தியமான விதிகள் என்ற முறையில் அவற்றின் செல்தகைமை நிரூபிக்கப்பட்டு விட்டது என்று இப்பொழுது சொல்லப்படுகிறது. இந்த முறை சிறு தரமானது என்பது வெளிப்படையாகத் தெரிவதால் அதைப் பற்றி இங்கே ஒரு வார்த்தை எழுதுவது கூட அவசியமல்ல. ஆனால் இந்த விவகாரத்துக்குள் இன்னும் ஆழமாகப் போவதற்கு நான் விரும்பினால் அவர்களை முதலில் மோசமான பொருளியலாளர்கள் என்றும் இரண்டாவதாக மட்டுமே மோசமான இயற்கை

---

*—எல்லோருக்கும் எதிராக எல்லோரும் நடத்துகின்ற போராட்டம்.—ப-ர்.

விஞ்ஞானிகள் மற்றும் தத்துவஞானிகள் என்றும் சித்திரிப்பதன் மூலம் அதைச் செய்ய வேண்டும்.

4) மனித சமூகத்துக்கும் பிராணி சமூகத்துக்கும் இடையில் இன்றியமையாத வேறுபாடு, பிராணிகளில் மிகச் சிறந்தவையும் சேகரிக்கின்றன, ஆனால் மனிதர்கள் உற்பத்தி செய்கிறார்கள் என்பதாகும். பிராணிகள் சமூகங்களின் விதிகளை மனித சமூகத்துக்கு வெறுமனே மாற்ற முடியாது என்பதை இந்த ஒரே, ஆனால் கேந்திரமான வேறுபாடு மட்டுமே எடுத்துக் காட்டும். அது

''மனிதன் தன்னுடைய பிழைப்புக்கு மட்டுமில்லாமல், மகிழ்ச்சிக்கும் **தன்னுடைய மகிழ்ச்சியை அதிகப்படுத்துவதற்கும்***... போராடுவதை, மிகச் சிறந்த மகிழ்ச்சியை அடைவதற்காகத் தன்னுடைய சிறு தரமான மகிழ்ச்சியைக் கைவிடுவதற்குத் தயாராயிருப்பதைச்''**

சாத்தியமாக்குகிறது என்று நீங்கள் பொருத்தமாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

இதைப் பற்றி உங்களுடைய இதர முடிவுகளை மறுக்காமல் என்னுடைய முற்கோள்களிலிருந்து பின்வரும் முடிவுகளைச் செய்கிறேன். மனிதனுடைய உற்பத்திச் செயல் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் மிகவும் உயர்ந்த மட்டத்தை அடைவதால் தேவைப் பொருள்கள் மட்டுமன்றி, சொகுசுப் பொருள்களும்—அவை முதலில் சிறுபான்மையினருக்கு மட்டுமே என்பது உண்மையே—உற்பத்தி செய்யப்படுகின்றன. பிழைப்புப் போராட்டம்—இந்த ரகம் இங்கு சரியானது என்று நாம் கண நேரம் அங்கீகரித்தால்—மகிழ்ச்சிக்கான போராட்டமாக, இனியும் வெறும் **வாழ்க்கைச்** சாதனங்களுக்காக இல்லாமல் **வளர்ச்சிச்** சாதனங்களுக்காக, **சமூக ரீதியில் உற்பத்தி செய்யப்பட்ட** வளர்ச்சிச் சாதனங்களுக்கான போராட்டமாக மாறுகிறது; இந்தக் கட்டத்தில் பிராணிகள் உலகத்திலிருந்து பெறப்பட்ட கருத்தினங்கள் இனிமேல்

---

* அழுத்தம் கொடுத்திருப்பது பி. எங்கெல்ஸ்.—ப-ர்.

** பி. லா. லவ்ரோவின் கட்டுரையிலிருந்து மேற்கோள் காட்டப்படுகின்ற பகுதி.—ப-ர்.

பொருந்த மாட்டா. ஆனால் தற்பொழுது நடைபெற்றிருப்பதைப் போல, முதலாளித்துவ வடிவத்தில் உற்பத்தி முதலாளித்துவ சமூகம் நுகர்வு செய்வதைக் காட்டிலும் அதிகமான வாழ்க்கை மற்றும் வளர்ச்சிச் சாதனங்களை உற்பத்தி செய்கிறதென்றால்—ஏனென்றால் அந்த சமூகம் இந்தப் பெருந்திரளான உண்மையான உற்பத்தியாளர்களை இந்த வாழ்க்கை மற்றும் வளர்ச்சிச் சாதனங்களிலிருந்து செயற்கையான முறையில் தள்ளி வைத்திருக்கிறது—இந்தச் சமூகம் அதற்கே உரிய வாழ்க்கை விதியின் மூலம் ஏற்கெனவே தனக்கு மிகப் பெரியதாகி விட்ட உற்பத்தியைத் தொடர்ச்சியாக அதிகரிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டால், ஆகவே குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை, பத்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை பேரளவில் உற்பத்திப் பொருள்களை மட்டுமன்றி உற்பத்திச் சக்திகளையும் கூட அழிக்க வேண்டிய நிலையை அடைகிறது என்றால்—''பிழைப்புப் போராட்டம்'' என்ற இப்படிப்பட்ட பேச்சுக்கு ஏதாவது அர்த்தம் உண்டா? அப்பொழுது பிழைப்புப் போராட்டம் என்பது பின்வரும் விதத்தில்தான் இருக்க முடியும்: உற்பத்தி செய்கின்ற வர்க்கம் உற்பத்தி நிர்வாகத்தையும் வினியோகத்தையும் இது வரையிலும் அவற்றைச் செய்து கொண்டிருந்த, ஆனால் தற்பொழுது அதற்குத் தகுதியற்றதாகி விட்ட வர்க்கத்திடமிருந்து தானே எடுத்துக் கொள்கிறது; இது தான் சோஷலிஸ்டுப் புரட்சி.

இதன் தொடர்பாக, கடந்த கால வரலாற்றை வர்க்கப் போராட்டங்களின் தொடர் வரிசை என்று வெறுமளவில் கருதுவது கூட இந்த வரலாறு என்பது''பிழைப்புப் போராட்டத்தின்'' பலவீனமான ரகம் என்னும் இக்கருதுகோள் முற்றிலும் ஆழமில்லாதது என்பதைத் தெளிவுபடுத்துவதற்குப் போதுமானது. ஆகவே இந்தப் போலி இயற்கை விஞ்ஞானிகளுக்கு நான் இந்தச் சலுகையை ஒருபோதும் அளிக்க மாட்டேன்.

5) உங்களுடைய பின்வரும் கருதுகோள் சாராம்சத்தில் முற்றிலும் சரியானது என்ற போதிலும் மேற்கூறிய காரணத்துக்காக நான் அதைத் தக்கபடி மாற்றியிருப்பேன்:

''போராட்டத்துக்கு உதவியளிப்பதற்காக ஒருமைப்பாடு என்னும் கருத்து முடிவில்... அனைத்து மனிதகுலத்தையும் தழுவி ஒருமைப்பாட்டில் வாழ்கின்ற சகோதரர்களின் சமூகம் என்ற முறையில் எஞ்சிய உலகத்தை—தனிமப் பொருள்கள், தாவரங்கள் மற்றும் பிராணிகளின் உலகத்தை—எதிர்த்து நிற்கின்ற நிலைக்கு வளர்ச்சி அடைய முடியும்.''*

6) மறு பக்கத்தில், ''எல்லோருக்கும் எதிராக எல்லோரும் நடத்துகின்ற போராட்டம்''** மனித வளர்ச்சியின் முதல் கட்டம் என்று நீங்கள் கூறுவதை நான் ஒத்துக் கொள்ள முடியாது. மனிதக் குரங்கிலிருந்து மனிதனுடைய பரிணாமத்தில் சமூக இயல்புணர்ச்சி மிகவும் முக்கியமான தூண்டுதல்களில் ஒன்று என்பது என்னுடைய கருத்தாகும். முதல் மனிதர்கள் கூட்டங்கூட்டங்களாக வாழ்ந்திருக்க வேண்டும்; நாம் கடந்த காலத்துக்குள் உற்று நோக்கக் கூடிய அளவுக்கு இது உண்மை என்பதைக் காண்கிறோம்.

---

நவம்பர் 17

மறுபடியும் வேலை குறுக்கிட்டு விட்டது; இன்று அனுப்பிவிட வேண்டும் என்னும் எண்ணத்துடன் இப்பொழுது கடிதத்தைத் தொடர்கிறேன். என்னுடைய விமர்சனம் உங்களுடைய தாக்குதலின் வடிவத்தை, முறையைப் பற்றியதே தவிர சாரப் பொருளைப் பற்றியது அல்ல என்பதைக் காண்பீர்கள். அது போதிய அளவுக்குத் தெளிவாக இருக்கும் என்று நம்புகிறேன். நான் இதை அவசரமாக எழுதினேன்; மறுபடியும் படித்த பொழுது அதிகமான வார்த்தைகளை மாற்ற விரும்பினேன். ஆனால் அவற்றை அடித்து எழுதினால் கடிதத்தைப் படிக்க இயலாது போய் விடும் என்று அஞ்சுகிறேன்....

**மார்க்சியத்தின் நாளாகமம்** சஞ்சிகை, புத்தகம் V, 1928இல் ருஷ்ய மொழியில் முதலில் வெளியிடப்பட்டது

கையெழுத்துப் பிரதியின் படி அச்சிடப்பட்டது

மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது

---

* பி. லா. லவ்ரோவின் கட்டுரையிலிருந்து மேற்கோள் காட்டப்படுகின்ற பகுதி.—ப-ர்.

** பி. லா. லவ்ரோவின் கட்டுரையிலிருந்து மேற்கோள் காட்டப்படுகின்ற சொற்கள்.—ப-ர்.

கா. மார்க்ஸ்

# ஹாம்பர்க்கிலிருந்த வி. பிலோசுக்கு எழுதிய கடிதம்

*லண்டன், நவம்பர் 10, 1877*

*...(ஹேய்னெ எழுதியிருப்பதைப் போல) நான் ''கோபப் படவில்லை'';* எங்கெல்சும் அப்படியே.[82] எங்களில் ஒரு வரும் புகழ்ச்சியை விரும்பவில்லை. இதற்குச் சான்று தரு கிறேன்: உதாரணமாக, நான் தனிநபர் வழிபாட்டை வெறுத்தபடியால் அகிலம் இருந்த காலத்தில் பல நாடுகளி லிருந்தும் எனக்கு வந்த எண்ணற்ற பாராட்டுக் கடிதங்களை ஒருபோதும் விளம்பரம் செய்யவில்லை, அவற்றுக்கு ஒருபோ தும் பதிலளிக்கவில்லை—எப்பொழுதாவது அதைக் கண் டித்து எழுதியதைத் தவிர. நானும் எங்கெல்சும் இரகசிய மான கம்யூனிஸ்டுகள் சங்கத்தில் முதன்முதலாகச் சேர்ந்த பொழுது தலைமை மீது குருட்டுத் தனமான நம்பிக் கையை ஊக்குவிக்கின்ற அனைத்தும் விதிமுறைகளிலிருந்து[83] அகற்றப்பட வேண்டும் என்பதை நிபந்தனையாக்கினோம். (பிற்காலத்தில் லஸ்ஸால் இதற்கு எதிர்த்திசையில் தம் முடைய செல்வாக்கைப் பயன்படுத்தினார்.)*

*Der wahre Jacob, எண் 565 (5), மார்ச் 17, 1908 என்ற சஞ்சிகையில் முதலில் வெளியிடப்பட்டது*

*கையெழுத்துப் பிரதியின் படி அச்சிடப்பட்டது*

*மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது*

---

* ஹேய்னெ, லிரிக் இந்தெர்மேட்ஸோ, *18*ஆம் பனுவல். —ப-ர்.

பி. எங்கெல்ஸ்

# வியென்னாவிலிருந்த கா. காவுத்ஸ்கிக்கு எழுதிய கடிதம்

*லண்டன், செப்டெம்பர் 12, 1882*

*...காலனியாதிக்கக் கொள்கையைப் பற்றி ஆங்கிலத் தொழிலாளர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். பொதுவாக அரசியலைப் பற்றி என்னவோ, அதைத்தான் துல்லியமாக நினைக்கிறார்கள்: முதலாளி வர்க்கம் என்ன கருதுகிறதோ, அதையேதான் நினைக்கிறார்கள். இங்கே தொழிலாளர்கள் கட்சி எதுவும் இல்லை; கன்சர்வேட்டிவ்களும் லிபரல்-தீவிரவாதிகளும் தான் இருக்கிறார்கள்; உலகச் சந்தையிலும் காலனிகளிலும் இங்கிலாந்தின் ஏகபோகத்தில் தங்களுடைய பங்கைத் தொழிலாளர்கள் உற்சாகமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய கருத்தின்படி முறையான காலனிகள், அதாவது ஐரோப்பியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள்—கானடா, கேப், ஆஸ்திரேலியா—அனைத்தும் சுதந்திரமடையும்; மறு பக்கத்தில், சுதேசிகள் வசித்துக் கொண்டிருந்து அடிமையாக்கப்பட்ட நாடுகளை—இந்தியா, அல்ஜீரியா, டச்சு, போர்த்துகீசிய மற்றும் ஸ்பானியக் காலனிகள்—பாட்டாளி வர்க்கம் இப்போதைக்கு எடுத்துக் கொண்டு இயன்ற அளவுக்கு வேகமாக சுதந்திரத்தை நோக்கி இட்டுச் செல்ல வேண்டும். இந்த நிகழ்வுப் போக்கு எப்படி வளர்ச்சி அடையும் என்று சொல்வது கடினம். இந்தியா அநேகமாக—உண்மையில் மிகவும் நிச்சயமாகக் கூட—புரட்சி செய்யும்; சுய விடுதலைக்குப் போராடிக் கொண்டிருக்கின்ற*

பாட்டாளி வர்க்கம் எவ்விதமான காலனியாதிக்க யுத்தங்களையும் நடத்த முடியாதபடியால், இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டியிருக்கும்; இது பல்வகையான அழிவு இல்லாமல் நடைபெறப் போவதில்லை என்பது நிச்சயம்; ஆனால் அது எல்லாப் புரட்சிகளிலிருந்தும் பிரிக்க முடியாததாகும். இதே செயல்முறை மற்ற இடங்களிலும், உதாரணமாக, அல்ஜீரியாவிலும் எகிப்திலும் நடைபெறலாம்; அது நமக்கு நிச்சயமாகச் சிறந்ததே. உள்நாட்டில் நமக்குப் போதுமான வேலை இருக்கும். சீரமைக்கப்பட்ட ஐரோப்பாவும் வட அமெரிக்காவும் பிரம்மாண்டமான பலத்தைக் கொண்டிருப்பதுடன் மாபெரும் உதாரணமாகவும் விளங்குமாதலால் அரை நாகரிகமடைந்த நாடுகள் தாமாகவே அவற்றின் வழியைப் பின்பற்றும்; பொருளாதாரத் தேவைகள் மட்டுமே அத்திசையில் அந்த நாடுகளைச் செலுத்தும். இந்த நாடுகள் சோஷலிஸ்டு அமைப்புக்குள் வருவதற்கு முன்னர் எத்தகைய சமூக மற்றும் அரசியல் கட்டங்களைக் கடக்க வேண்டியிருக்கும் என்பதைப் பற்றி நாம் வீண் கருதுகோள்களை மட்டுமே முன்வைக்க முடியும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஒன்று மட்டும் நிச்சயம்: வெற்றியடைந்த பாட்டாளி வர்க்கம் தன்னுடைய சொந்த வெற்றியை அரித்தழிக்காமல் எந்த அந்நிய நாட்டுக்கும் எவ்விதமான ஆசியும் கட்டாயமாக வழங்க முடியாது. இது பல்விதமான தற்காப்பு யுத்தங்களை ஒதுக்கவில்லை என்பது உண்மையே....

| | |
|---|---|
| **மார்க்ஸ்-எங்கெல்ஸ் ஆவணங்கள்,** *நூல் I (VI), 1932இல் முழுமையாக ருஷ்ய மொழியில் முதலில் வெளியிடப்பட்டது* | *கையெழுத்துப் பிரதியின் படி அச்சிடப்பட்டது* <br> *மூலம் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது* |

## பதிப்பாளர் குறிப்புகள்

1 *கார்ல் மார்க்ஸ் கோத்தா செயல்திட்டத்தின் விமர்சனத்தை 1875இல் எழுதினார்; அது வருங்கால ஜெர்மன் தொழிலாளர்கள் ஒற்றுமை கட்சியின் நகல் செயல்திட்டத்தைப் பற்றிய விமர்சனக் குறிப்புகள் அடங்கியது. அந்த நகலில் ஆபத்தான தவறுகளும் கொள்கையளவில் லஸ்ஸால்வாதத்துக்குச் சலுகைகளும் இருந்தன. மார்க்சும் எங்கெல்சும் ஜெர்மன் ஒற்றுமை சோஷலிஸ்டுக் கட்சியை அமைக்கின்ற கருத்தை ஆதரித்தார்கள்; ஆனால் லஸ்ஸால்வாதிகளுடன் சித்தாந்தத் துறையில் சமரசங்களை எதிர்த்தார்கள்; எனவே அவர்கள் நகல் செயல்திட்டத்தைத் தீவிரமான விமர்சனத்துக்கு உட்படுத்தினார்கள். மேலும், மார்க்ஸ் இந்த நூலில் விஞ்ஞான கம்யூனிசத்தின் முக்கியமான கருத்துக்களான சோஷலிஸ்டுப் புரட்சி, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறும் காலகட்டம், கம்யூனிச சமூகத்தின் இரண்டு கட்டங்கள், சோஷலிச அமைப்பில் சமூக உற்பத்திப் பொருளின் உற்பத்தியும் வினியோகமும், கம்யூனிசத்தின் முக்கியமான அம்சங்கள், பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதம் மற்றும் தொழிலாளி வர்க்கக் கட்சி ஆகியவற்றை வகுத்தளித்தார்.*

*மார்க்ஸ் அரசு மற்றும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைப் பற்றிய தன்னுடைய கருத்தை இங்கே மேலும் விரிவுபடுத்தி எழுதியிருக்கிறார். முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறுகின்ற பொழுது ஒரு விசேஷ*

மான கட்டமும் அதற்குரிய அரசு வடிவமும் வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாதவை என்ற முக்கியமான கருது கோளை மார்க்ஸ் வெளியிட்டார்; மாறும் கட்டத்தின் அரசு வடிவத்தை ''பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரச் சர்வாதிகாரம்'' என்று குறிப்பிட்டார் (இத்தொகுதி, பக்கம் 38 பார்க்க).—7.

2 மார்க்சின் ''கோத்தா செயல்திட்டத்தின் விமர்சனத்தை'' எங்கெல்ஸ் 1891இல் வெளியிட்ட பொழுது இந்த முன்னுரையை எழுதினார். ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தில் சுறுசுறுப்பாக இருந்த சந்தர்ப்பவாதச் சக்திகளைத் தாக்குவதற்காக எங்கெல்ஸ் இந்த முக்கியமான கொள்கை ஆவணத்தை வெளியிட்டார்; கட்சி எர்ஃபுர்ட் காங்கிரசில் கோத்தா செயல்திட்டத்துக்குப் பதிலாக ஒரு புதிய செயல்திட்டத்தை விவாதித்து அங்கீகரிக்கப் போகின்ற சூழ்நிலையில் மார்க்சின் விமர்சனத்தை வெளியிடுவது அவசியமாக இருந்தது. எங்கெல்ஸ் ''கோத்தா செயல் திட்டத்தின் விமர்சனத்தை'' அச்சுக்குத் தயாரித்த பொழுது ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் தலைவர்களும் *Die Neue Zeit*இன் வெளியிடுபவருமான டீத்சும் இச்சஞ்சிகையின் ஆசிரியருமான கா. காவுத்ஸ்கியும் அதில் திருத்தங்களைச் செய்ய வேண்டும், சில பகுதிகளை வெளியிடக் கூடாது என்று எதிர்த்தார்கள்; எங்கெல்ஸ் அதற்கு ஒத்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஜெர்மன் கட்சியின் உறுப்பினர்களில் பெரும்பாலாரும் மற்ற நாடுகளைச் சேர்ந்த சோஷலிஸ்டுகளும் மார்க்சின் விமர்சன நூலை வரவேற்றார்கள்; அது சர்வதேச சோஷலிஸ்டு இயக்கத்தின் கொள்கை ஆவணம் என்று கருதினார்கள். எங்கெல்ஸ் ''கோத்தா செயல்திட்டத்தின் விமர்சனத்துடன்'' அந்த நூலுடன் நேரடியாக இணைந்திருக்கின்ற, மார்க்ஸ் 1875 மே 5இல் வி. பிராக்கேயுக்கு எழுதிய கடிதத்தையும் வெளியிட்டார்.—7.

3 1875 மே 22—27 தேதிகளில் நடைபெற்ற கோத்தா காங்கிரசில் ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தில்

இருந்த இரண்டு போக்குகள்—ஔ. பெபெல் மற்றும் வி. லீப்க்னெஹ்டின் தலைமையிலிருந்த சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சியும் (எய்ஸெனாஹர்கள்) லஸ்ஸால்வாத ஜெர்மன் தொழிலாளர்களின் பொதுச் சங்கமும்—ஒன்றுசேர்ந்தன. ஒற்றுமைக் கட்சி ஜெர்மன் தொழிலாளர்கள் சோஷலிஸ்டுக் கட்சி என்ற பெயர் பெற்றது. அதன் மூலம் ஜெர்மன் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலிருந்த பிளவு முடிவடைந்தது. ஆனால் மார்க்சும் எங்கெல்சும் கடுமையாக விமர்சனம் செய்த ஒற்றுமைக் கட்சியின் நகல் செயல்திட்டம் கோத்தா காங்கிரசில் மிகவும் அற்பமான திருத்தங்களுடன் மட்டுமே நிறைவேற்றப்பட்டது.—7.

4 ஜெர்மன் சமூக-ஜனநாயகக் காங்கிரஸ் ஹாலெயில் 1890 அக்டோபர் 12—18 தேதிகளில் நடைபெற்றது; எர்ஃபுர்ட்டில் நடைபெறப் போகின்ற அடுத்த கட்சிக் காங்கிரசுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பாக ஒரு புதிய நகல் செயல்திட்டத்தை வெளியிட வேண்டும், அது முதலில் ஸ்தல கட்சி அமைப்புகளிலும் பத்திரிகைகளிலும் விவாதிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்தது.—7.

5 சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் ஹேக் காங்கிரஸ் 1872 செப்டெம்பர் 2—7 தேதிகளில் நடைபெற்றது. 15 தேசிய அமைப்புகளைச் சேர்ந்த 65 பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டார்கள். மார்க்சும் எங்கெல்சும் காங்கிரசின் பணியை இயக்கினார்கள். தொழிலாளி வர்க்க இயக்கத்தில் எல்லா வகையான குட்டி முதலாளி வர்க்கக் குறுங்குழுவாதப் போக்குகளையும் எதிர்த்து மார்க்சும் எங்கெல்சும் அவர்களது ஆதரவாளர்களும் பல ஆண்டுகளாக நடத்தி வந்த போராட்டம் அங்கே வெற்றிகரமாக முடிவடைந்தது. அராஜகவாதிகளின் பிளவுறுத்தும் செயல்கள் கண்டிக்கப்பட்டு அவர்களது தலைவர்கள் அகிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். ஹேக் காங்கிரசின் முடிவுகள் பல்வேறு நாடுகளிலும் தொழிலாளி

வர்க்கத்தின் சுயேச்சையான அரசியல் கட்சிகள் வருங் காலத்தில் அமைக்கப்படுவதற்கு வழி வகுத்தன.—*8*.

6 ஜெர்மனி, ஆஸ்திரியா மற்றும் ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த சமூக-ஜனநாயகவாதிகள் *1869* ஆகஸ்ட் *7—9* தேதிகளில் எய்ஸெனாஹில் நடைபெற்ற பொது ஜெர்மன் காங்கிரசில் ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கள் கட்சியை அமைத்தார்கள்; அதன் உறுப்பினர்கள் ''எய்ஸெனாஹர்கள்'' என்று அழைக்கப்பட்டார்கள். அந்தக் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட செயல்திட்டம் பிரதானமாக அகிலத்தின் கோட்பாடுகளுடன் பொருந்தி யிருந்தது.—*10*.

7 மி. பக்கூனின் எழுதி ஸ்விட்சர்லாந்தில் *1873*இல் வெளி யிடப்பட்ட ''அரசும் அராஜகவாதமும்'' என்னும் புத் தகம் இங்கே குறிப்பிடப்படுகிறது.—*11*.

8 ஜெர்மன் மக்கள் கட்சி *1865*இல் அமைக்கப்பட்டது; அக் கட்சியில் குறிப்பாக தெற்கு ஜெர்மனியின் அரசுகளின் குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகச் சக்திகளும் முதலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியினரும் இருந்தார்கள். ஜெர்மனி யில் பிரஷ்யாவின் மேலாதிக்கத்தையும் ஜெர்மனியை மையப்படுத்தப்பட்ட ஐக்கிய ஜனநாயகக் குடியரசாக ஒன்றுசேர்ப்பதையும் இக்கட்சி எதிர்த்தது; கூட்டாட்சி ஜெர்மன் அரசு, பிரஷ்யா மற்றும் ஆஸ்திரியா உள்ளிட்ட ''பெரிய ஜெர்மனி'' என்று சொல்லப்பட்ட கருத்தை ஆதரித்தது.—*11*.

9 சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சியின் பதிப்ப கம் இங்கே குறிப்பிடப்படுகிறது; அது Volksstaat பத்திரிகை மற்றும் சமூக-ஜனநாயக நூல்களை வெளியிட்டது. ஔ. பெபெல் அதன் தலைமைப் பொறுப்பிலிருந்தார்.

*Der Volksstaat* (''மக்கள் அரசு'')—ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சியின் (எய்ஸெனாஹர் கள்) மத்தியப் பத்திரிகை; வி. லீப்க்னெஹ்டை ஆசிரி

யராகக் கொண்டு லைப்சிக்கிலிருந்து *1869* அக்டோபர் *2* முதல் *1876* செப்டெம்பர் *29* முடிய வெளியிடப்பட்டது. மார்க்ஸ், எங்கெல்ஸ் பத்திரிகையில் எழுதியதுடன் அதன் தயாரிப்பிலும் பங்கெடுத்தார்கள்.—*12*.

10 **சமாதானம் மற்றும் விடுதலை லீக்**—ஸ்விட்சர்லாந்தில் குட்டி முதலாளி வர்க்கக் குடியரசுவாதிகளும் மிதவாதிகளும் *1867*இல் நிறுவிய பூர்ஷ்வா-அமைதிவாத நிறுவனம். சமாதானம் மற்றும் விடுதலை லீக் ''ஐரோப்பாவின் ஐக்கிய நாடுகளை'' அமைப்பதன் மூலம் யுத்தத்தைத் தடுக்க முடியும் என்று கூறியதன் மூலம் பெருந்திரளான மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைப் பரப்பியது, பாட்டாளி வர்க்கத்தை வர்க்கப் போராட்டத்திலிருந்து திசைதிருப்பியது.—*30*.

11 *Norddeutsche Allgemeine Zeitung* (''வட ஜெர்மன் பொதுப் பத்திரிகை'')—பெர்லினிலிருந்து *1861* முதல் *1918* முடிய வெளியிடப்பட்ட பிற்போக்குத் தினசரிப் பத்திரிகை; *1860*—*1880*க்களில் பிஸ்மார்க் அரசாங்கத்தின் அதிகார பூர்வமான இதழாக இருந்தது; இப்பத்திரிகையின் *1875* மார்ச் *20*ந் தேதி இதழில் வெளியிடப்பட்ட கட்டுரையை மார்க்ஸ் இங்கே குறிப்பிடுகிறார்.—*31*.

12 **மால்தசின் மக்கள் தொகைத் தத்துவம்**—முதலாளித்துவ அமைப்பின் கீழ் பெருந்திரளான உழைக்கும் மக்களின் வறுமை மக்கள் தொகைப் பெருக்கத்தினால் ''இயற்கையாக'' ஏற்படுகிறது என்று திரித்துக் கூறுகின்ற பிற்போக்கான தத்துவம். தா. ரா. மால்தஸ் என்னும் முதலாளி வர்க்கப் பொருளியலாளர் *1798*இல் எழுதிய *An Essay on the Principle of Population* (''மக்கள் தொகை விதியைப் பற்றிய ஆராய்ச்சி'') என்ற நூலில் வாழ்க்கைச் சாதனங்கள் கூட்டல் விகிதத்தில் வளர்ச்சியடைகின்ற பொழுது மக்கள் தொகை பெருக்கல் விகிதத்தில் வளர்ச்சியடைகிறது என்று நிரூபிப்பதற்கு முயன்றார்.

மால்தஸ்வாதத்தை ஆதரிப்பவர்கள் மக்கள் குழந்தைகள் பெறுவதைக் குறைக்க வேண்டும் என்று வாதிட்டார்கள்; போர்கள், கொள்ளை நோய்கள் மற்றும் இயற்கையான ஆபத்துக்கள் உபயோகமானவை, ஏனென்றால் அவை மக்கள் தொகையைக் குறைத்து மக்கள் தொகைக்கும் வாழ்க்கைச் சாதனங்களின் அளவுக்கும் இடையில் சமநிலையை ஏற்படுத்துகின்றன என்று அவர்கள் கருதினார்கள்.

கார்ல் மார்க்ஸ் மால்தஸ்வாதத்தின் ஆதாரமற்ற பிற்போக்குத் தன்மையை எடுத்துக் காட்டினார். மனித சமூகத்தின் எல்லா வளர்ச்சிக் கட்டங்களுக்கும் பொருந்தக் கூடிய இயற்கையான, பொதுவான மக்கள் தொகை விதி என்பது கிடையாது; ஒவ்வொரு சமூக-பொருளாதார அமைப்பும் தனக்குரிய மக்கள் தொகை விதியைக் கொண்டிருக்கிறது; முதலாளித்துவ அமைப்பில் உழைக்கும் மக்களின் வறுமை மேன்மேலும் அதிகரிப்பதற்கு முதலாளித்துவ உற்பத்தி முறையே காரணம்; அது பேரளவில் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் மற்ற சமூகப் பேராபத்துக்களையும் ஏற்படுத்துகிறது; கம்யூனிச உற்பத்தி முறைக்கு மாறுகின்ற பொழுது உழைப்பின் உற்பத்தித் திறனும் நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியும் பேரளவில் அதிகரித்து ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய இயலும் என்று மார்க்ஸ் நிரூபித்தார்.—*32*.

13 *L'Atelier* (''பட்டறை'')—பாரிசிலிருந்து *1840* முதல் *1850* முடிய வெளியிடப்பட்ட பிரெஞ்சு மாத இதழ்; கிறிஸ்துவ சோஷலிசத்தின் அனுதாபங்களைக் கொண்ட கைவினைஞர்கள் மற்றும் தொழிலாளர்களின் சஞ்சிகையாக இருந்தது.—*35*.

14 குறிப்பு 8ஐப் பார்க்க.—*39*.

15 *Kulturkampf* (''கலாச்சாரத்துக்கான போராட்டம்'')—*1870*க்களில் பிஸ்மார்க் அரசாங்கம் மதச் சார்பற்ற

கலாச்சாரம் என்ற பெயரில் நிறைவேற்றிய சீர்திருத்தங்களுக்கு முதலாளி வர்க்க மிதவாதிகள் கொடுத்த பெயர்; எனினும் 1880க்களில் பிஸ்மார்க் பிற்போக்குச் சக்திகளை வலுப்படுத்துவதற்காக இச்சீர்திருத்தங்களில் பெரும் பகுதியை ரத்துச் செய்தார்.—43.

16 பி. எங்கெல்ஸ் 1875 மார்ச் 18—28 தேதிகளுக்கு இடையில் ஔ. பெபெலுக்கு எழுதிய கடிதம் கா. மார்க்ஸ் எழுதிய ''கோத்தா செயல்திட்டத்தின் விமர்சனம்'' என்ற நூலுடன் நெருக்கமாக இணைந்திருக்கிறது; அது புதிதாக அமைக்கப்படவிருந்த ஜெர்மன் தொழிலாளர்கள் சமூக-ஜனநாயக ஒற்றுமைக் கட்சியின் நகல் செயல் திட்டத்தைப் பற்றி மார்க்ஸ் மற்றும் எங்கெல்சின் கூட்டுக் கருத்தை வெளியிட்டது. இக்கடிதத்தில் எங்கெல்ஸ் சமரசச் செயல்திட்ட நகலை, லஸ்ஸால்வாத வறட்டுக் கோட்பாடுகளைக் கொண்ட அதன் மொத்த அமைப்பை, அரசைப் பற்றிய அதன் சர்தர்ப்பவாத நிலைகளை, பாட்டாளி வர்க்கச் சர்வதேசியவாதக் கோட்பாடுகளை அது நிராகரிப்பதைக் கடுமையாக விமர்சனம் செய்தார்.—46.

17 *Frankfurter Zeitung und Handelsblatt* (''பிராங்க்பர்ட் பத்திரிகை மற்றும் வர்த்தகச் செய்தித்தாள்'')—குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகத் தினசரிப் பத்திரிகை; 1856 முதல் (மேற்கூறிய பெயரில் 1866 முதல்) 1943 முடிய வெளியிடப்பட்டது.—48.

18 இங்கே கோத்தா செயல்திட்ட நகலின் பின்வரும் ஷரத்துகள் குறிப்பிடப்படுகின்றன:

''ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி அரசின் சுதந்திரமான அடிப்படையாகப் பின்வருபவை இருக்க வேண்டும் என்று கோருகிறது:

''1. தேசிய அளவிலும் ஸ்தல அளவிலும் நடைபெறுகின்ற எல்லாத் தேர்தல்களிலும் 21 வயதை அடைந்த எல்லா ஆண்களும் பங்கெடுக்கின்ற சர்வப்பொதுவான,

சமத்துவமான, நேரடியான வாக்குரிமை மற்றும் இரகசிய வாக்குமுறை. 2. மசோதாக்களை முன்மொழிவதற்கும் நிராகரிப்பதற்கும் உரிமை உள்பட மக்கள் நேரடியாகச் சட்டமியற்றுதல். 3. வயது வந்த எல்லோருக்கும் இராணுவப் பயிற்சி. நிரந்தர இராணுவத்துக்குப் பதிலாக மக்கள் சேனையை அமைத்தல். மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபை யுத்தம், சமாதானம் ஆகியவற்றை முடிவு செய்தல். 4. எல்லா அசாதாரணச் சட்டங்களையும்—குறிப்பாக பத்திரிகை, சங்கம் அமைத்தல், பொதுக் கூட்டம் நடத்துதல் ஆகியவை பற்றிய சட்டங்களை—ரத்துச் செய்தல். 5. மக்கள் நீதிமன்றம். கட்டணம் இல்லாமல் நீதி வழங்குதல்.

''அரசின் அறிவு மற்றும் அறவியல் அடிப்படையாகப் பின்வருவன இருக்க வேண்டுமென்று ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி கோருகிறது:

''1. அரசின் மூலம் நடைபெறுகின்ற பொது மற்றும் சமத்துவ ஆரம்பக் கல்வி. அனைவருக்கும் பள்ளி வருகை கட்டாயமாக்கப்படுதல். இலவசக் கல்வி. 2. விஞ்ஞான ஆராய்ச்சிக்குச் சுதந்திரம். மனச்சாட்சிச் சுதந்திரம்.''—48.

19 பிரெஞ்சு-பிரஷ்ய யுத்தம் (1870—1871) இங்கே குறிப்பிடப்படுகிறது.—49.

20 *Demokratisches Wochenblatt* (''ஜனநாயக வார இதழ்'')—ஜெர்மன் தொழிலாளர்கள் பத்திரிகை; இப்பெயரில் லைப்சிக்கிலிருந்து 1868 ஜனவரி முதல் 1869 செப்டெம்பர் முடிய வெளியிடப்பட்டது; வி. லீப்க்னெஹ்ட் இதன் ஆசிரியராக இருந்தார். ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சியின் அமைப்பில் இப்பத்திரிகை முக்கியமான பங்கு வகித்தது. 1869இல் எய்ஸெனாஹ் காங்கிரசில் இப்பத்திரிகை *Volksstaat* என்ற பெயரில் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சியின் மத்திய இதழாயிற்று (குறிப்பு 9ஐப் பார்க்க). மார்க்சும் எங்கெல்சும் எழுதிய கட்டுரைகளை வெளியிட்டது.—55.

21 ஷைலக்—ஷேக்ஸ்பியர் எழுதிய ''வெனிஸ் நகரத்து வர்த்தகன்'' என்ற நாடகத்தில் ஒரு கதாபாத்திரம்; பேராசை மிக்க லேவாதேவிக்காரர்; கடன்வாங்கியவர் தவணைக் காலத்துக்குள் கடனைத் திருப்பிக் கொடுக்காவிட்டால், அவர் உடலிலிருந்து ஒரு பவுண்டு தசையை அரிந்து கொள்வதாக நிபந்தனை விதித்தவர்.—56.

22 மார்க்சின் ''கோத்தா செயல்திட்டத்தின் விமர்சனத்தை'' வெளியிட்டதைப் பாராட்டிக் கடிதங்கள் வெளியான (1891 பிப்ரவரி) சமூக-ஜனநாயகப் பத்திரிகைகளை எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார்.

*Arbeiter-Zeitung* (''தொழிலாளர்கள் பத்திரிகை'')—ஆஸ்திரிய சமூக-ஜனநாயகத்தின் பத்திரிகை; வியென்னாவிலிருந்து 1889 முதல் வெளியாயிற்று.

*Sächsische Arbeiter-Zeitung* (''சாக்சன் தொழிலாளர்கள் பத்திரிகை'')—ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தினசரிப் பத்திரிகை; டிரெஸ்டனிலிருந்து 1890 முதல் 1908 வரை வெளியாயிற்று; 1890க்களின் தொடக்கத்தில் ''இளைஞர்'' என்ற எதிர்க்கட்சி, அரை அராஜகவாதக் குழுவின் இதழாக இருந்தது.

*Züricher Post* (''ஜூரிஹ் பத்திரிகை'')—ஜூரிஹிலிருந்து 1879 முதல் 1936 வரை வெளியிடப்பட்ட ஜனநாயகவாதப் பத்திரிகை.—60.

23 *Die Neue Zeit* (''புதிய காலம்'')—ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் தத்துவார்த்த இதழ்; 1883 முதல் 1923 வரை ஷ்டுட்கார்ட்டிலிருந்து வெளியாயிற்று.—60.

24 ஹாலெயில் நடைபெற்ற காங்கிரசில் (குறிப்பு 4ஐப் பார்க்க) லீப்க்னெஹ்ட் கட்சியின் செயல்திட்டத்தைப் பற்றி அறிக்கை அளித்தார்.—60.

25 சோஷலிஸ்டு எதிர்ப்புச் சட்டம் 1878 அக்டோபர் 21இல் ஜெர்மனியில் அமுலாக்கப்பட்டது. இச்சட்டம் சமூக-ஜனநாயகக் கட்சியின் எல்லா ஸ்தாபனங்களையும் வெகுஜன தொழிலாளர்கள் ஸ்தாபனங்களையும் தொழிலாளர் பத்

திரிகைகளையும் தடை செய்தது; இச்சட்டத்தின்படி சோஷலிஸ்டுப் புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டன; சமூக-ஜனநாயகவாதிகள் ஒடுக்கப்பட்டார்கள். தொழிலாளர்களுடைய வெகுஜன இயக்கத்தின் நிர்ப்பந்தத்தினால் இச்சட்டம் 1890 அக்டோபர் முதல் தேதியன்று ரத்தாயிற்று.—61.

26 லஸ்ஸால் 1846—1856இல் நடத்திய சீமாட்டி ஸோஃபியா ஹாட்ஸ்ஃபெல்ட்டின் விவாகரத்து வழக்கு இங்கே குறிப்பிடப்படுகிறது. பழமையான பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு உதவியளித்த இந்த வழக்கின் முக்கியத்துவத்தை அவர் மிகைப்படுத்தி ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்கான போராட்டத்துடன் ஒப்பிட்டுப் பேசினார்.—62.

27 *Vorwärts. Berliner Volksblatt* (''முன்னோக்கி. பெர்லின் மக்கள் பத்திரிகை'')—ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தினசரிப் பத்திரிகை; 1884இல் நிறுவப்பட்டது; 1891 முதல் இந்தப் பெயரில் வெளியிடப்பட்டது; 1891 முதல் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் மத்தியப் பத்திரிகையாக இருந்தது.

இப்பத்திரிகையின் 1891 பிப்ரவரி 13ந் தேதிய இதழில் வெளியான தலையங்கம் கோத்தா செயல்திட்டத்தைப் பற்றிய மார்க்சின் விமர்சனத்தையும் லஸ்ஸாலின் பாத்திரத்தைப் பற்றி அவருடைய மதிப்பீட்டையும் பற்றி ரைஹ்ஸ்டாக் சமூக-ஜனநாயகக் குழுவின் அதிருப்தியை வெளியிட்டிருந்தது இங்கே குறிப்பிடப்படுகிறது. —63.

28 ஃபிஷர் 1891 பிப்ரவரி 20இல் எங்கெல்சுக்கு எழுதிய கடிதத்தில் மார்க்சின் ''பிரான்சில் உள்நாட்டுப் போர்'', ''கூலியுழைப்பும் மூலதனமும்'', எங்கெல்சின் ''கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞானத்திற்கான சோஷலிசத்தின் வளர்ச்சி'' ஆகிய நூல்களை மறுபடியும் வெளியிடுவதென்று கட்சியின் செயற்குழு முடிவு செய்திருப்பதைத்

தெரிவித்து விட்டு இவற்றுக்கு எங்கெல்ஸ் முன்னுரைகளை எழுத வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.—*64*.

29 பி.எங்கெல்ஸ் எழுதிய முக்கியமான நூல்களில் ஒன்று **இயற்கையின் இயக்க இயல்**; இதில் அவர் 19ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இயற்கை விஞ்ஞானத்தின் மிக முக்கியமான கண்டுபிடிப்புகளை இயக்கவியல்-பொருள்முதல்வாதப் பகுப்பாய்வுக்கு உட்படுத்துகின்றார்; இந்நூல் பொருள்முதல்வாத இயக்க இயலை விரித்துரைத்து இயற்கை விஞ்ஞானத்தின் இயக்க மறுப்பியல் மற்றும் கருத்துமுதல்வாதக் கருதுகோள்களை விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்கிறது.—*65*.

30 **மதச்சீர்திருத்த இயக்கம்**—16ஆம் நூற்றாண்டில் ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் இதர நாடுகளில் விரிவாகப் பரவிய கத்தோலிக்க மதச்சீர்திருத்த இயக்கம். இந்த இயக்கம் வெற்றியடைந்த நாடுகளில் (இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, நெதர்லாந்து, ஜெர்மனியின் ஒரு பகுதி மற்றும் ஸ்காண்டிநேவிய நாடுகள்) புரோட்டஸ்டென்டு திருச்சபைகள் அமைக்கப்பட்டன.—*65*.

31 **அவுகியஸ் குதிரை இலாயங்கள்**—அரசர் அவுகியசின் மாபெரும் குதிரை இலாயங்கள் பல ஆண்டுகளாக சுத்தம் செய்யப்படாமல் இருந்ததாகவும் அவை இறுதியில் ஹெர்க்குலிசினால் சுத்தம் செய்யப்பட்டதாகவும் கிரேக்கத் தொல்கதை கூறுகிறது; அருவருப்பான, பல ஆண்டுகளாகப் புறக்கணிக்கப்பட்ட ஒன்றை இச்சொல் குறிப்பிடுகிறது.—*68*.

32 எங்கெல்ஸ் லூதரின் ''கடவுளே நம்முடைய உண்மையான கோட்டை'' என்னும் வேத கீதத்தைக் குறிக்கிறார். இது ''மதச்சீர்திருத்த கால 'மர்செல்யேஸ்' கீதம்'' என்று ஹெ. ஹேய்னெ வர்ணிக்கிறார் (''ஜெர்மனியில் மதம்

மற்றும் தத்துவஞானத்தின் வரலாற்றைப் பற்றி'', புத்தகம் II).—68.

33 காப்பேர்னிக்கஸ் மரணமடைந்த நாள் (1543 மே 24) ''வான் மண்டலப் பொருள்களின் சுழற்சியைப் பற்றி'' என்னும் தலைப்பில் அவர் எழுதிய நூலின் பிரதி அவருக்குக் கிடைத்தது; அந்நூலில் பிரபஞ்சத்தின் சூரிய மையத் தத்துவத்தை அவர் வெளியிட்டிருந்தார்.—69.

34 18ஆம் நூற்றாண்டில் இரசாயனத்தில் நிலவிய கருத்துக்களின்படி பொருள்கள் தீப்பற்றி எரிவதற்கு புளோஜிஸ்டன் என்னும் பொருள் காரணம் என்று கருதப்பட்டது. தலைசிறந்த பிரெஞ்சு இரசாயன விஞ்ஞானியான லவுவஸியே இக்கருத்து தவறு என்பதை நிரூபித்தார்; எரியக்கூடிய பொருள்கள் பிராணவாயுவுடன் இரசாயன ரீதியில் சேர்கின்ற பொழுது தீப்பிடிக்கின்றன என்று அவர் சரியான முறையில் விளக்கமளித்தார்.—71.

35 கான்ட் எழுதிய ''வானத்தின் பொதுவான இயற்கை வரலாறு மற்றும் தத்துவம்'' என்னும் நூல் இங்கே குறிப்பிடப்படுகிறது; இது 1755இல் ஆசிரியர் பெயரில்லாமல் வெளியிடப்பட்டது. கான்ட் அந்த நூலில் அண்டத் தோற்றம் பற்றித் தன்னுடைய கருதுகோளை விளக்கியிருந்தார்; அதன்படி ஆதித் தொடக்க நெபுலாவிலிருந்து சூரிய மண்டலம் தோன்றியது. லாப்லாஸ் சூரிய மண்டல அமைப்புத் தத்துவத்தைப் பற்றித் தன்னுடைய கருதுகோளை ''பிரபஞ்சத்தின் விளக்கம்'' என்ற நூலின்கடைசி அத்தியாயத்தில் முதலில் வெளியிட்டார் (தொகுதிகள் I—II, பாரிஸ், 1796).—74.

36 ஐசக் நியூட்டன் தன்னுடைய ''இயற்கை பற்றிய தத்துவவியலின் கணிதக் கோட்பாடுகள்''(புத்தகம் III,''பொதுத் தத்துவம்'') என்னும் நூலில் வெளியிட்ட கருத்து இங்கே குறிப்பிடப்படுகிறது. ஹெகல் தன்னுடைய ''தத்துவஞான விஞ்ஞானங்களின் கலைக்களஞ்சியம்'' (பாரா 98, பிற்சேர்க்கை I) என்னும் நூலில் நியூட்டனுடைய இக்

கருத்தை மேற்கோள் காட்டிப் பின்வருமாறு எழுதினார்: ''பௌதிகவியலே, இயக்க மறுப்பியலைப் பற்றி உஷாராக இரு... என்று நியூட்டன் நேரடியாக எச்சரித்தார்.''—75.

[37] Amphioxus—மீன் போன்ற அமைப்புள்ள சிறு மிருகம்; முதுகெலும்பு இல்லாதவற்றுக்கும் முதுகெலும்பு உள்ளவற்றுக்கும் இடைப்பட்ட வடிவம்; சில கடல்களிலும் சமுத்திரங்களிலும் வளர்கிறது.

Lepidosiren—நுரையீரல்களும் செவுள்களும் உள்ள மீன்களின் வகையைச் சேர்ந்த மிருகம்; தென் அமெரிக்காவில் காணப்படுகிறது.—81.

[38] Ceratodus—செவுள்களும் நுரையீரல்களும் உள்ள மீன் வகை; ஆஸ்திரேலியாவில் வளர்கிறது.

Archaeopteryx—முதுகெலும்பு உள்ள பாசில் மிருகம்; ஊர்வனவற்றின் சில அம்சங்களைக் கொண்டிருந்த பறவையினத்தின் மிகப் பழமையான பிரதிநிதிகளில் ஒன்று.—81.

[39] அரியாத்னா—கிரேக்கத் தொல்கதையின்படி கிரீட்டின் அரசரான மீனோசின் மகள்; திஸியஸ் பாதி காளையாகவும் பாதி மனிதனாகவும் இருந்த பயங்கரமான மிருகத்தைக் கொன்ற பிறகு தப்புவதற்கு சரடு மூலம் உதவி செய்தாள்.—82.

[40] புரோடிஸ்டா (protista)—ஹேக்கெலின் வகைப்பிரிவு முறைப்படி ஓர் அணு மற்றும் அணு இல்லாத நுண்ணிய உயிர்ப் பிரிவின் பெருந்தொகுதி; உயிருள்ள இயற்கையின் மூன்றாவது மாபெரும் பிரிவு; பல அணுக்களைக் கொண்ட பிராணிகளும் தாவரங்களும் மற்ற இரண்டு மாபெரும் பிரிவுகளாகும்.—82.

[41] Eozoon canadense—மிகவும் தொல் உயிரிகள் என்று சொல்லப்படுவனவற்றின் புதைபடிவ எச்சங்கள்; கானடாவில் கண்டுபிடிக்கப்பட்டவை. 1878இல் ஜெர்மன் பிராணி

இயல் விஞ்ஞானியான போபியுஸ் இவற்றின் உயிரியல் தோற்றம் பற்றிய கருதுகோளை மறுத்தார்.—*86.*

42 *Vorwärts* (''முன்னோக்கி'')—ஜெர்மன் தொழிலாளர்கள் சோஷலிஸ்டுக் கட்சியின் மத்திய பத்திரிகை; லைப்சிக்கிலிருந்து 1876 அக்டோபர் முதல் 1878 அக்டோபர் முடிய வெளியிடப்பட்டது. பி. எங்கெல்சின் ''டூரிங்குக்கு மறுப்பு'' இப்பத்திரிகையில் 1877 ஜனவரி முதல் 1878 ஜூலை வரை பிரசுரிக்கப்பட்டது.—*98.*

43 அமெரிக்காவில் உள்ள ஃபிலடெல்ஃபியாவில் 1870 மே 10இல் தொடங்கிய ஆறாவது சர்வதேசத் தொழில் துறைப் பொருட்காட்சி இங்கே குறிப்பிடப்படுகிறது. ஜெர்மனி உள்பட நாற்பது நாடுகள் அதில் பங்கெடுத்தன. ஜெர்மனியின் தொழில்துறை பின்தங்கியிருக்கிறது, அதன் தயாரிப்புகள் ''மலிவாக ஆனால் மோசமாக'' இருக்கின்றன என்பவற்றை இப்பொருட்காட்சி எடுத்துக் காட்டியது.—*100.*

44 1877 செப்டெம்பரில் நடைபெற்ற ஜெர்மன் இயற்கை விஞ்ஞானிகள் மற்றும் டாக்டர்கள் காங்கிரசில் நேகெலி மற்றும் வீர்ஹவ் நிகழ்த்திய சொற்பொழிவுகளும்—இக் காங்கிரசின் விவரங்கள் *Tageblatt der 50. Versammlung deutscher Naturforscher und Aerzte in München 1877* (''1877இல் மியூனிக்கில் நடைபெற்ற ஜெர்மன் இயற்கை விஞ்ஞானிகள் மற்றும் டாக்டர்கள் 50வது காங்கிரசின் விவரங்கள்'') என்னும் வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்டன—வீர்ஹவ் எழுதிய *Die Freiheit der Wissenschaft im modernen Staat*, Berlin, 1877, S. 13 (''நவீன அரசில் விஞ்ஞான சுதந்திரம்'', பெர்லின், 1877, பக்கம் 13) என்னும் நூலில் அடங்கிய கருதுகோள்களும் இங்கே குறிப்பிடப்படுகின்றன.—*101.*

45 ப்ரொக்ரூஸ்ட்டினுடைய படுக்கை—கிரேக்கத் தொல்கதையின்படி ப்ரொக்ருஸ்ட் என்ற பெயருள்ள திருடன் பிரயாணிகளைத் தன்னுடைய வீட்டுக்கு வஞ்சகமாக

அழைத்துக் கொண்டு வந்து தன்னுடைய படுக்கையில் படுக்குமாறு செய்வான்; அவர்களுடைய கால்கள் படுக்கையைக் காட்டிலும் நீளமாக இருந்தால், அவன் கால்களை வெட்டி விடுவான்; கால்கள் படுக்கையைக் காட்டிலும் குட்டையாக இருந்தால், கால்களை நீட்டி விடுவான். தொல்கதைகளில் பிரபலமான வீரனாகிய திஸியஸ் ப்ரொக்ரூஸ்ட்டைக் கொன்றான்.—106.

46 குறிப்பு 34ஐப் பார்க்க.—112.

47 இக்கட்டுரை முதலில் ''அடிமைப்படுத்தலின் மூன்று முக்கியமான வடிவங்கள்'' என்னும் விரிவான நூலுக்கு ஒரு முன்னுரையாகத் திட்டமிடப்பட்டது. ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை; ஆகையால் முடிவில் எங்கெல்ஸ், அவர் எழுதிய முன்னுரைக்கு ''மனிதக் குரங்கு மனிதனாக மாறிய இடைநிலைப் படியில் உழைப்பின் பாத்திரம்'' என்னும் தலைப்பைக் கொடுத்தார். மனித உடலமைப்பின் உருவாக்கத்தில் உழைப்பு மற்றும் கருவிகளின் உற்பத்தி வகித்த ஜீவாதாரமான பாத்திரத்தை எங்கெல்ஸ் ஆராய்கிறார்; நீண்ட வரலாற்றுப் போக்கின் விளைவாகக் குரங்கு குண ரீதியில் புதிய பிறவியாக, மனிதனாக எப்படி மாறியது என்பதை அவர் எடுத்துக் காட்டுகிறார். இக்கட்டுரை அநேகமாக 1876 ஜூனில் எழுதப் பட்டிருக்க வேண்டும்.—114.

48 டார்வின் எழுதிய ''மனிதனின் தோற்றமும் பால் வகைப் பட்ட தேர்வும்'' (லண்டன், 1871) என்னும் புத்தகத்தைப் பார்க்க.—115.

49 இங்கே 1873இல் ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடி குறிப்பிடப்படுகிறது. அது ஜெர்மனியில் 1873 மே மாதத்தில் ''மாபெரும் வீழ்ச்சியுடன்'' தொடங்கியது; அதன் பிறகு வந்த நெருக்கடி 1870க்களின் முடிவு வரை நீடித்தது.

குருன்டியிசம் என்று சொல்லப்படுகின்ற காலகட்டம் 1873 வீழ்ச்சியுடன் முடிவடைந்தது; பிரெஞ்சு-பிரஷ்ய

யுத்தம் (1870—1871) முடிவடைந்த பிறகு வந்த இக் காலகட்டத்தில் லாப வேட்டையும் பங்குச் சந்தைச் சூதாட்டமும் உச்சத்தை அடைந்தன.—136.

50 *Rheinische Zeitung für Politik, Handel und Gewerbe* ("அரசியல், வர்த்தகம் மற்றும் தொழில்துறைப் பிரச்சினைகளைப் பற்றிய ரைன் பத்திரிகை")—கொலோனிலிருந்து 1842 ஜனவரி முதல் 1843 மார்ச் வரை வெளியிடப்பட்ட தினசரிப் பத்திரிகை. மார்க்ஸ் 1842 ஏப்ரல் முதல் இப்பத்திரிகையில் கட்டுரை எழுதினார்; 1842 அக்டோபரில் அதன் ஆசிரியர்களில் ஒருவரானார்; எங்கெல்சும் இதில் கட்டுரை எழுதினார்.—138.

51 *Kölnische Zeitung* ("கொலோன் பத்திரிகை")—கொலோனில் 1802 முதல் வெளியிடப்பட்ட ஜெர்மன் தினசரிப் பத்திரிகை; இப்பத்திரிகை 1848—1849 புரட்சியின் போதும் அதற்குப் பின்னர் வந்த பிற்போக்குவாதக் காலகட்டத்தின் போதும் பிரஷ்ய மிதவாத முதலாளி வர்க்கத்தின் கோழைத்தனமான, துரோகக் கொள்கையைப் பின்பற்றியது; 19ஆம் நூற்றாண்டின் கடைசியில் தேசிய-மிதவாதக் கட்சியுடன் தொடர்பு வைத்திருந்தது.—139.

52 *Deutsch-Französische Jahrbücher* ("ஜெர்மன்-பிரெஞ்சு ஆண்டு மலர்") என்னும் ஒரு சஞ்சிகைக்கு கா. மார்க்ஸ் மற்றும் அ. ரூகே ஆசிரியர்களாக இருந்தார்கள்; இது ஜெர்மன் மொழியில் பாரிசிலிருந்து வெளியிடப்பட்டது. 1844 பிப்ரவரியில் இதன் முதல் இதழ் மட்டுமே இரட்டை இதழாக வெளிவந்தது. மார்க்சுக்கும் முதலாளித்துவ வகைப்பட்ட தீவிரவாதியான ரூகேக்கும் இடையில் அடிப்படையான கருத்து வேறுபாடுகள் காரணமாக பிரதானமாயும் இந்தச் சஞ்சிகையின் வெளியீடு நிறுத்தப்பட்டது.—140.

53 பிரெஞ்சு அரசாங்கம் மார்க்சை பிரான்சிலிருந்து வெளியேற்றும் உத்தரவை பிரஷ்ய அரசாங்கத்தின் நிர்ப்பந்

தத்தின் காரணமாக 1845 ஜனவரி 16இல் வெளியிட்டது. —140.

54 மார்க்சும் எங்கெல்சும் பெல்ஜியத்தில் வசித்த ஜெர்மன் தொழிலாளர்களின் அரசியல் வளர்ச்சிக்கும் அவர்கள் மத்தியில் விஞ்ஞான கம்யூனிசக் கருத்துக்களைப் பரப்புவதற்கும் 1847 ஆகஸ்ட் கடைசியில் பிரஸ்ஸல்சில் ஜெர்மன் தொழிலாளர்கள் சங்கத்தை நிறுவினார்கள். இச்சங்கம் மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் அவர்களுடைய சக தோழர்களின் வழிகாட்டுதலின் கீழ் பெல்ஜியத்தில் வசித்த ஜெர்மன் புரட்சிகரத் தொழிலாளர்களின் சட்டபூர்வமான கேந்திரமாயிற்று. அதிலிருந்த மிகவும் முற்போக்கான உறுப்பினர்கள் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் பிரஸ்ஸல்ஸ் கிளையின் உறுப்பினர்களாகவும் இருந்தார்கள். பிரான்சில் 1848 பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளிவர்க்கப் புரட்சிக்குச் சிறிது காலத்துக்குப் பிறகு பெல்ஜியப் போலீசார் இச்சங்கத்தின் உறுப்பினர்களைக் கைது செய்து நாடுகடத்தியதன் விளைவாக பிரஸ்ஸல்சிலிருந்த ஜெர்மன் தொழிலாளர்கள் சங்கத்தின் நடவடிக்கைகள் முடிவடைந்தன.—54.

55 1848 பிப்ரவரி 24இல் பாரிசில் நடைபெற்ற மக்கள் பேரெழுச்சி இங்கே குறிப்பிடப்படுகிறது; அதன் விளைவாக லுயீ ஃபிலீப் முடி துறந்தார். பிப்ரவரி 25இல் பிரான்சில் ''இரண்டாவது குடியரசு'' பிரகடனம் செய்யப்பட்டது.—141.

56 *Deutsche-Brüsseler-Zeitung* (''ஜெர்மன் பிரஸ்ஸல்ஸ் பத்திரிகை'')—பிரஸ்ஸல்சிலிருந்த ஜெர்மன் அரசியல் குடியேறியவர்கள் நிறுவிய பத்திரிகை; 1847 ஜனவரி முதல் 1848 பிப்ரவரி வரை வெளியிடப்பட்டது; 1847 செப்டெம்பர் முதல் மார்க்சும் எங்கெல்சும் இப்பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதியதுடன் அதன் அரசியல் நிலையிலும் வலிமையான தாக்கத்தைச் செலுத்தினார்

கள். அவர்களுடைய வழிகாட்டுதலில் அது கம்யூனிஸ்டு கள் சங்கத்தின் பத்திரிகையாயிற்று.—141.

57 1848 மார்ச் 18இல் பெர்லினில் நடைபெற்ற தொழி லாளர்கள், கைவினைஞர்கள் மற்றும் மாணவர்களுடைய எழுச்சி இங்கே குறிப்பிடப்படுகிறது. இந்த எழுச்சி 1848—1849ஆம் ஆண்டுகளின் ஜெர்மன் புரட்சியின் தொடக் கமாக இருந்தது. எங்கெல்ஸ் இந்த எழுச்சியை "மார்ச் புரட்சி" என்று குறிப்பிட்டார்.—142.

58 பாரிஸ் தொழிலாளர்கள் 1848 ஜூன் 23—26 தேதிகளில் நடத்திய புரட்சிகர எழுச்சி இங்கே குறிப்பிடப்படுகிறது; இதை பிரெஞ்சு முதலாளி வர்க்கம் குரூரமாக ஒடுக்கியது. இந்த எழுச்சி பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க் கத்துக்கும் இடையில் பேரளவிலான முதல் உள்நாட்டுப் போராக இருந்தது.—142.

59 *Kreuz-Zeitung* ("சிலுவைப் பத்திரிகை")—*Neue Preußische Zeitung* ("புதிய பிரஷ்ய பத்திரிகை") என்னும் ஜெர்மன் தினசரிப் புத்திரிகைக்குத் தரப்பட்ட பெயர்; அதன் தலைப்பில் Landwehrஇன் சின்னமாகிய சிலுவையை வெளியிட்டதனால் இப்பெயர் ஏற்பட்டது; பெர்லினி லிருந்து 1848 ஜூன் முதல் 1939 வரை வெளியிடப் பட்ட இப்பத்திரிகை எதிர்ப்புரட்சி அரண்மனை கோஷ்டி மற்றும் பிரஷ்ய ஜங்கர்களின் வெளியீடாக இருந்தது.—143.

60 பிராங்க்பர்ட் சட்டமன்றம் 1849 மார்ச் 28இல் பேரரசு அரசியலமைப்புச்சட்டத்தை நிறைவேற்றியது; ஆனால் சில ஜெர்மன் அரசுகள் அதை நிராகரித்தன. பேரரசு அரசியலமைப்புச்சட்டத்தை ஆதரித்து டிரெஸ்டனில் 1849 மே 3—8 தேதிகளிலும் தெற்கு மற்றும் மேற்கு ஜெர்மனியில் 1849 மே—ஜூலை மாதங்களிலும் நடை பெற்ற ஆயுதம் தாங்கிய எழுச்சிகள் இங்கே குறிப்பிடப் படுகின்றன. இந்த எழுச்சிகள் தன்னியல்பான, தனித்

தனியான முறையில் தோன்றின; எனவே அவை 1849 ஜூலை மாதத்தின் மத்தியில் நசுக்கப்பட்டன.—143.

[61] பிரெஞ்சுத் துருப்புகளைப் புரட்சியை நசுக்குவதற்காக இத்தாலிக்கு அனுப்பியதை ஆட்சேபித்து பிரான்சின் குட்டி முதலாளி வர்க்க மலைக் கட்சி 1849 ஜூன் 13இல் பாரிசில் சமாதான பூர்வமாக ஆர்ப்பாட்டம் செய்தது. துருப்புகள் ஆர்ப்பாட்டத்தைக் கலைத்தன. மலைக் கட்சியின் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டார்கள், நாடு கடத்தப்பட்டார்கள் அல்லது பிரான்சிலிருந்து வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.—144.

[62] *Neue Rheinische Zeitung. Politisch-ökonomische Revue* (''புதிய ரைன் பத்திரிகை. அரசியல்-பொருளாதாரச் சஞ்சிகை'')—மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸ் ஸ்தாபித்த கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் தத்துவார்த்த இதழ்; 1849 டிசம்பர் முதல் 1850 நவம்பர் வரை வெளியிடப்பட்டது; மொத்தம் ஆறு இதழ்கள் வெளியிடப்பட்டன.—144.

[63] லுயீ போனப்பார்ட்டின் திடீர்ப்புரட்சியை இது குறிப்பிடுகிறது; அவர் 1851 டிசம்பர் 2இல் நெப்போலியன் மூன்றாவது என்ற பெயரில் தன்னை பிரான்சின் சக்கரவர்த்தி என்று பிரகடனம் செய்தார்.—144.

[64] கொலோனில் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் 11 உறுப்பினர்கள் மீது பிரஷ்ய அரசாங்கம் தொடுத்த பொய் வழக்கு (1852 அக்டோபர் 4—நவம்பர் 12) இங்கே குறிப்பிடப்படுகிறது; அவர்கள் மீது நாட்டுத் துரோகக் குற்றம் சாட்டப் பொய்யான ஆவணங்களும் சாட்சியங்களும் பயன்படுத்தப்பட்டன; குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஏழு நபர்கள் 3—6 ஆண்டுகள் தண்டிக்கப்பட்டு ஒரு கோட்டையில் சிறை வைக்கப்பட்டார்கள்.—144.

[65] *New York Daily Tribune* (''நியூயார்க் தினசரி டிரிப்யூன்'')—முற்போக்கான முதலாளி வர்க்கப் பத்திரிகை; 1841 முதல் 1924 வரை வெளியிடப்பட்டது. மார்க்சும் எங்

கெல்சும் எழுதிய கட்டுரைகள் 1851 ஆகஸ்ட் முதல் 1862 மார்ச் வரை அதில் வெளிவந்தன.—144.

66 அமெரிக்க உள்நாட்டுப் போர் (1861—1865)—அமெரிக்காவில் தொழில்துறை வட மாநிலங்களுக்கும் அடிமை உடைமைத் தென் மாநிலங்களுக்கும்—அவை 1861இல் பிரிந்து விடுவதற்கு முடிவு செய்தன—இடையில் நடைபெற்ற உள்நாட்டுப் போர்; அந்தப் போர் அடிமை முறை, கூலியுழைப்பு என்னும் இரண்டு சமூக அமைப்புகளுக்கு இடையில் நடைபெற்ற போராட்டமாகும்.—144.

67 இத்தாலியப் போர் —1859இல் ஆஸ்திரியாவை எதிர்த்து பிரான்சும் பியேமொன்டும் நடத்திய போர்; நெப்போலியன் மூன்றாவது இத்தாலியின் விடுதலைக்கு உதவி செய்வதாகக் கூறி இப்போரை ஆரம்பித்தார்; ஆனால் பிரதேசங்களைப் பிடிப்பதும் பிரான்சில் போனப்பார்ட்டிஸ்டு ஆட்சிமுறையை வலுப்படுத்துவதும் அவருடைய உண்மையான நோக்கங்களாகும். எனினும் இத்தாலியின் தேசிய விடுதலை இயக்கப் பேரெழுச்சியைக் கண்டு அஞ்சிய நெப்போலியன் மூன்றாவது இத்தாலியின் அரசியல் பிளவு நீடிக்க வேண்டும் என்பதற்காக ஆஸ்திரியாவுடன் தனியாக சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். இந்த உடன்படிக்கையின்படி பிரான்ஸ் சவோய்யா மற்றும் நிட்ஸாவைச் சேர்த்துக் கொண்டது, லம்பார்டியா சர்டினியாவுக்குத் தரப்பட்டது, வேனிசை ஆஸ்திரியா தொடர்ந்து ஆட்சி செய்தது.—145.

68 *Das Volk* ("மக்கள்") —1859 மே முதல் ஆகஸ்ட் வரை லண்டனில் வெளியிடப்பட்ட ஜெர்மன் மொழி வாரப் பத்திரிகை; மார்க்ஸ் பத்திரிகையை நடத்துவதில் பங்கெடுத்தார்; ஜூலை ஆரம்பத்தில் அதன் உண்மையான ஆசிரியரானார்.—145.

69 1870 செப்டெம்பர் 4ந் தேதியன்று நடைபெற்ற பெருந்திரளான மக்களின் புரட்சிகர எழுச்சியினால் பிரான்சில் இரண்டாவது பேரரசு வீழ்ச்சியடைந்தது; குடியரசு பிர

கடனம் செய்யப்பட்டு தற்காலிக அரசாங்கம் என்று சொல்லப்படுவது அமைக்கப்பட்டது; அதில் மிதவாதக் குடியரசுவாதிகளும் முடியாட்சிவாதிகளும் இடம் பெற்றிருந்தார்கள். பாரிசின் இராணுவ கவர்னரான த்ரொஷு அரசாங்கத்துக்குத் தலைமை தாங்கிய போதிலும் தியேர் அதை இயக்கினார்; இந்த அரசாங்கம் தேசிய நலன்களுக்குத் துரோகம் செய்வதையும் எதிரியுடன் துரோகத்தனமான ஒப்பந்தங்கள் செய்வதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.—145.

70 **டியுயிலிரி அரண்மனை**—பாரிசில் நெப்போலியன் மூன்றாவது வசித்த அரண்மனை.—146.

71 ஜாரிச ருஷ்யாவுக்குச் சொந்தமான போலிஷ் பிரதேசத்தில் 1863—1864இல் ஏற்பட்ட தேசிய விடுதலை எழுச்சி இங்கே குறிப்பிடப்படுகிறது. போலிஷ் கலகக்காரர்கள் 1863 ஜனவரியில் போலந்தின் தேசிய விடுதலைப் போராட்ட செயல்திட்டத்தையும் ஜனநாயக-விவசாய சீர்திருத்தக் கோரிக்கைகள் சிலவற்றையும் வெளியிட்டனர். எனினும் கலகக்கார அரசாங்கம் பெரிய நிலக்கிழார்களின் உடைமைகள், உரிமைகளை ஒழிப்பதற்குத் தயங்கியபடியால் பெரும்பான்மையான விவசாயிகள் எழுச்சியில் பங்கெடுக்கவில்லை, இக்கலகம் தோல்வியடைந்தது.—146.

72 குறிப்பு 5ஐப் பார்க்க.—147.

73 குறிப்பு 49ஐப் பார்க்க.—152.

74 1879 செப்டெம்பர் 17—18 தேதிகளில் ஔ. பெபெலுக்கு எழுதப்பட்ட **சுற்றறிக்கைக் கடிதம்** கட்சி ஆவணம் என்ற முறையில் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் மொத்தத் தலைமையும் படிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது; கடிதத்தின் மூன்றாவது பகுதி மட்டும் இத்தொகுதியில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது; இப்பகுதி 1879இல் பகிரங்கமாகச் சந்தர்ப்பவாதத்தைப் போதித்த கட்சியின் வலதுசாரித் தலைவர்களான ஹொஹ்பெர்க்,

பெர்ன்ஷ்டைன், ஷ்ராம் ஆகியோரை அம்பலப்படுத்துகிறது.

மார்க்சும் எங்கெல்சும் தங்களுடைய கடிதத்தில் சந்தர்ப்பவாதத்தின் வர்க்க-அரசியல் மற்றும் சித்தாந்த மூலவேர்களை அம்பலப்படுத்தியதுடன் கட்சியின் தலைவர்கள் அதன் பால் கடைப்பிடித்த சமரசமான அணுகுமுறையை ஆட்சேபித்தார்கள். ஜெர்மனியில் சோஷலிஸ்டு எதிர்ப்புச் சட்டம் அமுலாக்கப்பட்ட பிறகு கட்சியில் ஏற்பட்ட சந்தர்ப்பவாத ஊசலாட்டங்களை அவர்கள் தீவிரமாக விமர்சித்தார்கள். மார்க்சும் எங்கெல்சும் பாட்டாளி வர்க்கக் கட்சியின் வர்க்கத் தன்மையை வலியுறுத்தி கட்சியிலும் கட்சியின் பத்திரிகையிலும் சந்தர்ப்பவாதச் சக்திகள் செல்வாக்குப் பெறக் கூடாது என்று வற்புறுத்தினார்கள். ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர்கள் ஜெர்மன் கட்சியிலிருந்த நிலையை அபிவிருத்தி செய்வதற்கு இந்த விமர்சனம் உதவியளித்தது; சோஷலிஸ்டு எதிர்ப்புச் சட்டம் அமுலாக்கப்பட்ட காலத்தில், கட்சி பல்விதமான ஒடுக்குமுறைகளுக்கு உட்படுத்தப்பட்ட பொழுது, இது தன் அணிகளை ஒன்றுதிரட்டி, கட்சியின் ஸ்தாபனத்தைப் புனரமைத்துக் கொண்டு, சட்ட பூர்வமான முறைகளையும் சட்ட விரோதமான முறைகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு மக்கள் சேவைக்குச் சரியான பாதையைக் கண்டுபிடிக்க முடிந்தது.—157.

75 *Jahrbuch für Sozialwissenschaft und Sozialpolitik* ("சமூக விஞ்ஞான மற்றும் சமூக அரசியல் ஆண்டு மலர்") இங்கே குறிப்பிடப்படுகிறது; கா. ஹொஹ்பெர்க் (லூத்விக் ரிஹ்டெர் என்ற புனைபெயரில்) இந்தச் சமூக-சீர்திருத்தவாதச் சஞ்சிகையை 1879—1881ஆம் ஆண்டுகளில் ஜூரிஹிலிருந்து வெளியிட்டார்; மொத்தம் மூன்று இதழ்கள் வெளியிடப்பட்டன.—157.

76 ஜூரிஹிலிருந்து வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்ட கட்சி இதழ் இங்கே குறிப்பிடப்படுகிறது.—157.

77 1848 மார்ச் 18இல் பெர்லினில் ஆரம்பமான தடையரண் சண்டை இங்கே குறிப்பிடப்படுகிறது (குறிப்பு 57ஐப் பார்க்க).—161.

78 ஜெர்மன் ரைஹ்ஸ்டாக் 1878 அக்டோபரில் நிறைவேற்றிய சோஷலிஸ்டு எதிர்ப்புச் சட்டம் இங்கே குறிப்பிடப்படுகிறது (குறிப்பு 25ஐப் பார்க்க).—164.

79 *Die Zukunft* (''எதிர்காலம்'')—கார்ல் ஹொஹ்பெர்க் பெர்லினிலிருந்து 1877 முதல் 1878 வரை வெளியிட்ட சமூக-சீர்திருத்தவாதச் சஞ்சிகை இங்கே குறிப்பிடப்படுகிறது; கட்சியைச் சீர்திருத்தவாதப் பாதையில் செலுத்துவதற்கு இச்சஞ்சிகை செய்த முயற்சிகளை மார்க்சும் எங்கெல்சும் தீவிரமாக விமர்சனம் செய்தார்கள்.

*Die Neue Gesellschaft* (''புதிய சமூகம்'')—ஜூரிஹிலிருந்து 1877—1880க்கு இடையில் வெளியிடப்பட்ட சமூக-சீர்திருத்தவாதச் சஞ்சிகை.—167.

80 *Über Land und Meer* (''நிலம் மற்றும் கடல் வழிப் பிரயாணம்'')—ஜெர்மன் மொழி வாரச் சஞ்சிகை; சித்திரச் சஞ்சிகை; ஷ்டுட்கார்ட்டிலிருந்து 1858 முதல் 1928வரை வெளியாயிற்று.—172.

81 குறிப்பு 12ஐப் பார்க்க.—173.

82 1877இல் நடைபெற்ற கோத்தா காங்கிரசில் டூரிங்கின் ஆதரவாளர்களின் திடீர்வெடிப்பைக் குறிப்பிட்டு பிலோஸ் மார்க்சுக்கு 1877 அக்டோபர் 30—நவம்பர் 6இல் எழுதிய கடிதத்தில் ஜெர்மனியிலுள்ள கட்சித் தோழர்களைப் பற்றி மார்க்சும் எங்கெல்சும் கோபமடைந்திருக்கிறார்களா என்று கேட்கிறார். ஜெர்மன் தொழிலாளர்கள் முன்னெப்போதையும் காட்டிலும் அதிகமான அக்கறையுடன் மார்க்ஸ், எங்செல்சினுடைய கட்டுரைகளைப் படிக்கிறார்கள், சமூக-ஜனநாயகவாதிகளின் பிரசாரம் மற்றும் கிளர்ச்சிகளின் விளைவாக மார்க்சும் எங்கெல்சும் தாங்கள் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு மிக

*வும் பிரபலமடைந்திருக்கிறார்கள் என்று பிலோஸ் எழுதினார்.—177.*

83 *கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் விதிமுறைகள் இங்கே குறிப்பிடப்படுகின்றன. சங்கத்தின் முதல் காங்கிரஸ் 1847 ஜூனில் நடைபெற்ற பொழுது மார்க்சும் எங்கெல்சும் அதன் விதிமுறைகளைத் தயாரிப்பதில் சுறுசுறுப்பாகப் பங்கெடுத்தார்கள். இவ்விதிமுறைகளைச் சங்கத்தின் கிளைகள் விவாதித்த பிறகு இவை இரண்டாவது காங்கிரசில் மறுபடியும் ஆராயப்பட்டு முடிவில் 1847 டிசம்பர் 8இல் நிறைவேற்றப்பட்டன.—177.*

# பெயர்க் குறிப்பகராதி


அரிஸ்டாட்டில் *(கி.மு. 384—322)—பண்டைக் காலத்தின் தலைசிறந்த சிந்தனையாளர்.—***103.**

ஆவுயெர் [Auer], இக்னாஸ் *(1846—1907)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர்களில் ஒருவர், ரைஹ்ஸ்டாகில் உறுப்பினராக இருந்தார், பிற்காலத்தில் சீர்திருத்தவாதக் கருத்துக்களை மேற்கொண்டார்.—***7, 10.**

எங்கெல்ஸ் [Engels], பிரெடெரிக் *(1820—1895)—***10, 140, 141, 178, 179.**

எபிகூரஸ் *(கி.மு. சுமார் 341—சுமார் 270)—பண்டைக்கால கிரேக்க மாபெரும் பொருள்முதல்வாதத் தத்துவஞானி, நாத்திகவாதி.—***104.**

ஓகென் [Oken], லோரென்ட்ஸ் *(1779—1851) — ஜெர்மன் இயற்கை விஞ்ஞானி மற்றும் இயற்கைத் தத்துவஞானி.—***82.**

ஃபாயர்பாக் [Feuerbach], லூத்விக் *(1804—1872)—மார்க்சுக்கு முந்திய காலகட்டத்தைச் சேர்ந்த பொருள்முதல் வாதத் தத்துவஞானி.—***109.**

ஃபிலலேட்*—யோஹன் பார்க்க.*

ஃபிலோக்கோன் [Flocon], ஃபெர்டினாண்டு *(1800—1866)—பிரெஞ்சு அரசியல்வாதி, கட்டுரையாளர், குட்டி*

முதலாளி வர்க்க ஜனநாயகவாதி, *Réforme* என்னும் பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவர், *1848*இல் தற்காலிக அரசாங்கத்தில் உறுப்பினர்.—*142.*

ஃபிஷர் [Fischer], ரீஹார்டு *(1855—1926)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் நிர்வாகக் கமிட்டியின் செயலாளர் *(1890—1893)*, கட்சியின் புத்தக வெளியீட்டகப் பொறுப்பாளர் *(1893—1903)*.—*64.*

ஃபூரியே [Fourier], ஷார்ல் *(1772—1837)*—பிரெஞ்சு கற்பனாவாத சோஷலிஸ்ட்.—*112.*

ஃபோக்ட் [Vogt], கார்ல் *(1817—1895)*—ஜெர்மன் இயற்கை விஞ்ஞானி, கொச்சையான பொருள்முதல்வாதி, குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி; ஜெர்மனியில் *1848—1849*இன் புரட்சியில் பங்கெடுத்தவர்; *1850—1860*க்களில் நாடு துறந்தவராக இருந்த பொழுது லுயீ போனபார்ட்டிடம் கைக்கூலி பெற்றவர்.—*105, 145, 171.*

கர்னோ [Carnot], நிக்கொலா லியனார் சாடி *(1796—1832)*—பிரெஞ்சு எஞ்சினீயர் மற்றும் பௌதிக விஞ்ஞானி, வெப்ப இயக்கவியலின் ஸ்தாபகர்களில் ஒருவர்.—*112.*

காப்பேர்னிக்கஸ் [Kopernik], நிக்கலாய் *(1473—1543)*—போலந்து நாட்டைச் சேர்ந்த வானியல் விஞ்ஞானி, பிரபஞ்சத்தின் சூரிய மையத் தத்துவத்தின் ஸ்தாபகர்.—*69, 73.*

காம்ப்ஹாவுஸன் [Camphausen], லுடோல்ப் *(1803—1890)*—ஜெர்மன் வங்கி முதலாளி, ரைன் மிதவாத முதலாளி வர்க்கத்தின் தலைவர்களில் ஒருவர், *1848* மார்ச்—ஜூனில் பிரஷ்யாவின் பிரதம மந்திரி.—*138.*

கார்ட்மன் [Hartmann], எடுவார்டு *(1842—1906)*—ஜெர்மன் கருத்துமுதல்வாதத் தத்துவஞானி.—*105.*

கால்வின் [Calvin], ழூான் *(1509—1564)—மதச் சீர்திருத்த இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர்; புரோட்டஸ்டென்டிசத்தின் ஒரு பிரிவாகிய கால்வினிசத்தின் ஸ்தாபகர்; அது மூலதனத்தின் ஆதித் திரட்சிச் சகாப்தத்தில் முதலாளி வர்க்கத்தின் நலன்களை வெளியிட்டது.—69.*

காவுத்ஸ்கி [Kautsky], கார்ல் *(1854—1938)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, கட்டுரையாளர், Die Neue Zeit இதழின் ஆசிரியர் (1883—1917), 1880க்களில் மார்க்சியத்தைப் பின்பற்றியவர்; பிற்காலத்தில் சந்தர்ப்பவாத நிலையைக் கடைப்பிடித்தார், ஜெர்மன் சமூக-ஜனநாயகத்திலும் இரண்டாவது அகிலத்திலும் மையவாதத்தின் சித்தாந்தியானார்.—59—64, 178.*

கான்ட் [Kant], இம்மனுயேல் *(1724—1804)—ஜெர்மன் மூலச் சிறப்பான தத்துவஞான மரபின் ஸ்தாபகர், கருத்து முதல்வாதி.—74, 75—77, 80, 82, 106, 108—109.*

கிளாட்ஸ்தன் [Gladstone], ராபர்ட் *(1811—1872)—இங்கிலாந்தைச் சேர்ந்த வர்த்தகர், முதலாளி வர்க்கப் பரோபகாரி, வில்லியம் கிளாட்ஸ்தனின் உறவினர்.—41.*

கிளாட்ஸ்தன் [Gladstone], வில்லியம் யூவர்த் *(1809—1898)—ஆங்கில அரசியல் பிரமுகர், லிபரல் கட்சியின் தலைவர்களில் ஒருவர், பிரதம மந்திரி (1868-74, 1880-85, 1886, 1892-94).—41.*

கிஸோ [Guizot], பிரான்சுவா பியேர் கிய்யோம் *(1787—1874)—பிரெஞ்சு வரலாற்றாசிரியர், அரசியல் பிரமுகர், 1840 முதல் 1848 வரை பிரான்சின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையை இயக்கியவர்.—140.*

குரோவ் [Grove], வில்லியம் ராபர்ட் *(1811—1896)—இங்கிலாந்தைச் சேர்ந்த பௌதிக விஞ்ஞானி மற்றும் வழக்குரைஞர்.—79.*

குவியே [Cuvier], ஜோர்ழ் *(1769—1832)*—*பிரெஞ்சு இயற்கை விஞ்ஞானி, பிரளயம் என்ற விஞ்ஞான விரோத, கருத்து முதல்வாதத் தத்துவத்தின் ஆசிரியர்.—78.*

கெக்கூலே [Kekulé], பிரெடெரிக் ஔகுஸ்ட் *(1829—1896)*—*ஜெர்மன் இரசாயன விஞ்ஞானி.—104.*

கேதே [Goethe], யோஹன் வோல்ஃப்கான்க் *(1749—1832)*—*ஜெர்மன் எழுத்தாளர், சிந்தனையாளர்.—32, 90.*

கேப்ளர் [Kepler], யோஹன் *(1571—1630)*—*ஜெர்மன் வானியல் விஞ்ஞானி, கிரகங்களின் இயக்கத்தைப் பற்றிய விதிகளைக் கண்டுபிடித்தவர்.—70.*

கேய்ப் [Geib], ஔகுஸ்ட் *(1842—1879)*—*ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, ஹாம்பர்க் நகரத்தில் புத்தக விற்பனையாளர், ஜெர்மன் தொழிலாளர்களின் பொதுச் சங்கத்தின் உறுப்பினர், சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர்.—7, 10.*

கொலம்பஸ் [Colombo], கிரிஸ்தஃபோர் *(1451—1506)*—*கப்பல் தலைவர், கடற் பிரயாணி, அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர்.—133.*

கோக் [Gögg], அமான்ட் *(1820—1897)*—*ஜெர்மன் பத்திரிகையாளர், குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி, 1849இல் பாடேன் தற்காலிக அரசாங்கத்தின் உறுப்பினர், புரட்சி தோல்வியடைந்த பிறகு வெளிநாட்டுக்குச் சென்றார், 1870க்களில் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளுடன் இணைந்தார்.—51.*

சான்-சிமோன் [Saint-Simon], அன்ரி *(1760—1825)*—*பிரெஞ்சு கற்பனாவாத சோஷலிஸ்ட்.—75.*

செக்கி [Secchi], ஆஞ்ஜெலோ *(1818—1878)*—*இத்தாலிய வானியல் விஞ்ஞானி, சூரியன் மற்றும் நட்சத்திரங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்தவர், ஏசு சங்கத்தைச் சேர்ந்தவர்.—84, 91, 93.*

டார்வின் [Darwin], சார்ல்ஸ் ராபர்ட் *(1809—1882)*—*இங்கிலாந்தைச் சேர்ந்த இயற்கை விஞ்ஞானி, விஞ்ஞான உயிரியலில் பரிணாமத் தத்துவத்தை நிறுவியவர்.—82, 90, 114, 117, 171, 173.*

டால்டன் [Dalton], ஜான் *(1766—1844)*—*இங்கிலாந்தைச் சேர்ந்த இரசாயன மற்றும் பௌதிக விஞ்ஞானி, இரசாயனத்தில் அணு பற்றிய கருத்துக்களை வளர்த்துக் கூறியவர்.—80, 104.*

டியுரேர் [Dührer], அல்பிரேஹ்ட் *(1471—1528)*—*ஜெர்மன் ஓவியர், மறுமலர்ச்சிக் காலத்தைச் சேர்ந்தவர்.—67.*

டியோஜெனிஸ் லயெர்தியஸ் *(3ஆம் நூற்றாண்டு)*—*பண்டைக் கால கிரேக்க வரலாற்றுத் தத்துவாசிரியர், பண்டைக் காலத் தத்துவஞானிகளின் கட்டுரைகளடங்கிய மாபெரும் நூலைத் தொகுத்தவர்.—104.*

டிரேபர் [Draper], ஜான் வில்லியம் *(1811—1882)*—*அமெரிக்க இயற்கை விஞ்ஞானி மற்றும் வரலாற்றாசிரியர்.—96.*

டீத்ஸ் [Dietz], யோஹன் *(1843—1922) ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, சமூக-ஜனநாயகப் புத்தக வெளியீட்டகத்தின் ஸ்தாபகர்.—60, 64.*

டுங்கர் [Duncker], பிரான்ஸ் *(1822—1888)*—*ஜெர்மன் அரசியல்வாதி, புத்தக வெளியீட்டாளர்.—145.*

டூரிங் [Dühring], ஒய்கேன் கார்ல் *(1833—1921)*—*ஜெர்மன் கதம்பவாதத் தத்துவஞானி மற்றும் கொச்சையான பொருளியலாளர், பிற்போக்குத்தனமான குட்டி முதலாளி வர்க்க சோஷலிசத்தின் பிரதிநிதி; கருத்துமுதல்வாதம், கொச்சையான பொருள்முதல்வாதம், நேர்க்காட்சிவாதம் ஆகியவற்றைக் கலந்து உபயோகித்த இயக்க மறுப்பியல் தத்துவஞானி; 1863—1877இல்*

பெர்லின் பல்கலைக்கழகத்தில் privatdozentஆகப் பணியாற்றியவர்.—98—101, 109.

டெக்கார்ட் [Descartes], ரெனே (1596—1650)—பிரெஞ்சு இருமைவாதத் தத்துவஞானி, கணித அறிஞர் மற்றும் இயற்கை விஞ்ஞானி.—70, 79, 104.

டெமாக்கிரீடஸ் (கி.மு. சுமார் 460— சுமார் 370)—பண்டைக் கால கிரேக்க நாட்டின் பொருள்முதல்வாதத் தத்துவஞானி, அணுத் தத்துவத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர்.—104.

டொரிச்சேல்லி [Torricelli], எவான்ஜெலிஸ்டா (1608—1647)—இத்தாலிய பௌதிக விஞ்ஞானி, கணித அறிஞர்.—71.

டோலெஷால் [Dolleschall], லோரென்ட்ஸ் (பிறப்பு: 1790)—கொலோனில் போலீஸ் அதிகாரியாக இருந்தவர் (1819—1847), Rheinische Zeitung இதழைத் தணிக்கை செய்தவர்.—138.

டோல்கே [Tölcke], கார்ல் வில்ஹெல்ம் (1817—1893)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, லஸ்ஸால்வாத ஜெர்மன் தொழிலாளர்களின் பொதுச் சங்கத்தின் தலைவர்களில் ஒருவர்.—46, 56.

தாந்தே அலிகியேரி [Dante Aleghieri] (1265—1321)—இத்தாலியக் கவிஞர்.—139.

தாம்ஸன் [Thomson], வில்லியம் (1824—1907)—ஆங்கில பௌதிக விஞ்ஞானி; வெப்ப இயக்கவியல், மின்சாரத் தொழில்நுட்ப இயல் மற்றும் கணிதவியல் பௌதிகத் துறைகளில் ஆராய்ச்சி செய்தவர்; 1852இல் ''பிரபஞ்சம் வெப்பத்தின் மூலம் அழிந்து விடும்'' என்னும் கருத்துமுதல்வாதக் கருதுகோளை வெளியிட்டார்.—122.

தொர்வால்ட்ஸன் [Thorvaldsen], பெர்ட்டெல் *(1768—1844)*—*பிரபலமான டென்மார்க் நாட்டுச் சிற்பி.—117.*

நியூட்டன் [Newton], ஐசக் *(1642—1727)—ஆங்கில பௌதிக விஞ்ஞானி, வானியல் மற்றும் கணித விஞ்ஞானி, மூலச் சிறப்புள்ள இயந்திரவியலை நிறுவியவர்.—70, 71, 73, 76.*

நெப்போலியன், *இளவரசர்—போனப்பார்ட், நெப்போலியன் ஜோசப் ஷார்ல் போல் பார்க்க.*

நெப்போலியன் மூன்றாவது (லூயீ நெப்போலியன் போனப்பார்ட்) *(1808—1873)—முதலாம் நெப்போலியனின் மருமகன், இரண்டாவது குடியரசின் தலைவர் (1848—1851), பிரான்சின் சக்கரவர்த்தி (1852—1870).—39, 144, 145.*

நேகெலி [Nägeli], கார்ல் வில்ஹெல்ம் *(1817—1891)—ஜெர்மன் தாவரவியல் விஞ்ஞானி, டார்வினுடைய போதனையை மறுத்தவர், அறியொணாவாதி மற்றும் இயக்க மறுப்பியல்வாதி.—101.*

நேப்பெர் [Napier], ஜான் *(1550—1617)—ஸ்காட்லாந்தைச் சேர்ந்த கணித அறிஞர், லாகரித முறையைக் கண்டுபிடித்தவர்.—70.*

பகனீனி [Paganini], நிக்கொலோ *(1782—1840)—இத்தாலிய வயலின் மேதை, இசைப்பாடல் ஆசிரியர்.—117.*

பக்கூனின், மிஹயீல் அலெக்சாந்தரவிச் *(1814—1876)—ருஷ்ய புரட்சிக்காரக் கட்டுரையாளர், அராஜகவாதத்தின் சித்தாந்தி, ஜெர்மனியில் 1848—1849 புரட்சியில் பங்கெடுத்தவர்; முதலாவது அகிலத்தில் மார்க்சியத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டார்; 1872இல் ஹேக் காங்கிரசில் பிளவு நடவடிக்கைகளுக்காக முதலாவது அகிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.—8, 11, 55, 148.*

**பாயர்** [Baer], கார்ல் எர்னெஸ்ட் (கார்ல் மாக்சிமவிச்) *(1792—1876)—ருஷ்ய இயற்கை விஞ்ஞானி, கருவியலின் ஸ்தாபகர்; ஜெர்மனியிலும் ருஷ்யாவிலும் ஆராய்ச்சிகளைச் செய்தார்.—82.*

**பால்மெர்ஸ்டன்** [Palmerston], ஹென்ரி ஜான் தெம்பல் *(1784—1865)—ஆங்கில அரசுப் பிரமுகர் விக் கட்சியின் தலைவர்களில் ஒருவர், சில தடவைகளில் நாட்டின் பிரதம மந்திரி.—145.*

**பியுஷே** [Buchez], ஃபிலீப் *(1796—1865)—பிரெஞ்சு அரசியல்வாதி, வரலாற்றாசிரியர், குடியரசுவாதி, கிறிஸ்துவ சோஷலிசத்தின் சித்தாந்தி.—35. 51.*

**பியூஹ்னர்** [Büchner], லூத்விக் *(1824—1899)—ஜெர்மன் உடலியல் விஞ்ஞானி, தத்துவஞானி, கொச்சையான பொருள்முதல்வாதத்தின் பிரதிநிதி.—105, 171.*

**பிராக்கே** [Bracke], வில்ஹெல்ம் *(1842—1880)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சியின் (எய்ஸெனாஹர்கள்) ஸ்தாபகர்களிலும் (1869) தலைவர்களிலும் ஒருவர்; மார்க்ஸ், எங்கெல்சின் சகா; லஸ்ஸால்வாதத்தை எதிர்த்துப் போராடியவர்.—7, 10, 51, 57, 157.*

**பிரிஸ்ட்லி** [Priestley], ஜோசப் *(1733—1804)—ஆங்கில இரசாயன விஞ்ஞானி, பொருள்முதல்வாதத் தத்துவஞானி, முற்போக்கான பொது வாழ்க்கைப் பிரமுகர்.—112.*

**பிரெடெரிக்-வில்ஹெல்ம் மூன்றாவது** *(1770—1840)—பிரஷ்யாவின் அரசர் (1797—1840).—138.*

**பிர்** [Byr], ராபர்ட் (பாயேர், கார்ல் ராபர்ட் என்பவருடைய *இலக்கியப் புனைபெயர்) (1835—1902)—ஜெர்மன் நாவலாசிரியர்.—172.*

**பிஸ்மார்க்** [Bismarck], **ஓட்டோ** *(1815—1898)—பிரஷ்யா மற்றும் ஜெர்மனியில் அரசுப் பிரமுகர், ராஜியவாதி, பிரஷ்ய ஜங்கர்களின் பிரதிநிதி, பிரஷ்யாவின் பிரதம மந்திரி (1862—1871), ஜெர்மன் சம்ராஜ்யத்தின் சான்சலர் (1871—1890).—29, 30, 31, 57, 62, 162.*

**புரூதோன்** [Proudhon], **பியேர் ஜோசப்** *(1809—1865)—பிரெஞ்சுக் கட்டுரையாளர், பொருளியலாளர், சமூகவியலாளர், குட்டி முதலாளி வர்க்கத்தின் சித்தாந்தி, அராஜக வாதத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர்.—53, 140.*

**புரூனோ** [Bruno], **ஜோர்தானோ** *(1548—1600)—இத்தாலியின் பொருள்முதல்வாதச் சிந்தனையாளர் மற்றும் தத்துவஞானி, நாத்திகவாதி; தன்னுடைய கருத்துக்களைக் கைவிடுவதற்கு மறுத்தபடியால் இன்க்விஸிஷனால் தண்டிக்கப்பட்டவர்.—69.*

**பெக்கெர்** [Becker], **பெர்ன்ஹார்டு** *(1826—1891)—ஜெர்மன் கட்டுரையாளர், வரலாற்றாசிரியர், லஸ்ஸாலை ஆதரித்தவர், பின்னர் எய்ஸெனாஹர்களுடன் சேர்ந்து கொண்டார்.—12.*

**பெபெல்** [Bebel], **ஔகுஸ்ட்** *(1840—1913)—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் பிரமுகர், 1867 முதல் ஜெர்மன் தொழிலாளி சங்கங்களின் தலைவர், முதலாவது அகிலத்தின் உறுப்பினர், 1867 முதல் ரைஹ்ஸ்டாக் உறுப்பினர், ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தை நிறுவியவர்கள் மற்றும் தலைவர்களில் ஒருவர், இரண்டாவது அகிலத்தின் உறுப்பினர்; மார்க்ஸ், எங்கெல்சின் நண்பராக, சகாவாக இருந்தவர்.—7, 10, 46, 61, 157.*

**பேக்கன்** [Bacon], **பிரென்சிஸ்** *(1561—1626)—தத்துவஞானி, ஆங்கில பொருள்முதல்வாதத்தை நிறுவியவர்.—107, 108.*

**போனப்பார்ட்** [Bonaparte], **நெப்போலியன் ஜோசப் ஷார்ல்**

போல் (ப்ளோன்-ப்ளோன்) *(1822—1891)—லுயீ போனப் பார்ட்டின் மருமகன்; இரண்டாவது குடியரசின் போது (1848—1851) சட்ட சபை மற்றும் அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்.—***145.**

பௌவர் [Bauer], புரூனோ *(1809—1882)—ஜெர்மன் கருத்து முதல்வாதத் தத்துவஞானி, பிரபலமான இளம் ஹெகலியவாதி, முதலாளி வர்க்கத் தீவிரவாதி, 1866க்குப் பிறகு தேசிய-மிதவாதி.—140.*

ப்தாலமி, கிளாடியஸ் *(2ஆம் நூற்றாண்டு)—பண்டைக் கால கிரேக்க கணித மேதை, வானியல் விஞ்ஞானி, பூகோள வியலாளர், பிரபஞ்சத்தின் புவி மையத் தத்துவத்தின் ஸ்தாபகர்.—70.*

மக்கியவேலி [Machiavelli], நிக்கொலோ *(1469—1527)—இத்தாலிய அரசியல்வாதி, வரலாற்றாசிரியர், எழுத்தாளர்.—67.*

மராத் [Marat], ஜான் போல் *(1743—1793)—பிரெஞ்சுக் கட்டுரையாளர், 18ஆம் நூற்றாண்டின் கடைசியில் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியில் தலைசிறந்த பங்கெடுத்தவர், ஜாக்கொபின்வாதி.—29.*

மாயர் [Mayer], யூலியாஸ் ராபர்ட் *(1814—1878)—ஜெர்மன் இயற்கை விஞ்ஞானி, சக்தியின் அழியாமை மற்றும் உருமாற்றம் பற்றிய விதியைக் கண்டுபிடித்தவர்.—79.*

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818—1883)—7, 8, 50, 53, 54, 58, 59, 60, 61—63, 111, 138—156.*

மார்க்ஸ் [Marx], ஜென்னி *(திருமணத்திற்கு முன் வான் வெஸ்ட்ஃபாலன்) (1814—1881)—கார்ல் மார்க்சின் மனைவி, அவருடைய விசுவாசமான நண்பராகவும் சகாவாகவும் இருந்தார்.—140.*

**மால்தஸ்** [Malthus], **தாமஸ் ராபர்ட்** *(1766—1834)—ஆங்கிலப் பாதிரியார், பொருளியலாளர்; மக்கள் தொகைப் பெருக்கத்தைப் பற்றிய மனித விரோதத் தத்துவத்தைக் கூறியவர்.—**32, 50, 173.***

**மிக்கேல்** [Miquel], **யோஹன்** *(1828—1901)—ஜெர்மன் அரசியல்வாதி, 1840க்களில் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் உறுப்பினர், பின்னர் தேசிய-மிதவாதி, 1890க்களில் பிரஷ்யாவின் நிதி அமைச்சர்.—**163.***

**மேட்லர்** [Mädler], **யோஹன் ஹென்ரிஹ்** *(1794—1874)—ஜெர்மன் வானியல் விஞ்ஞானி.—**76, 84, 93.***

**மொலிஷோட்** [Moleschott], **யாக்கப்** *(1822—1893)—உடலியல் விஞ்ஞானி, தத்துவஞானி, கொச்சையான பொருள்முதல்வாதத்தின் பிரதிநிதி; ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.—**171.***

**மொன்டலம்பேர்** [Montalembert], **மார்க் ரெனே** *(1714—1800)—பிரெஞ்சு ஜெனரல், இராணுவ எஞ்சினீயர், அவர் உருவாக்கிய கோட்டை அமைப்பு முறை 19ஆம் நூற்றாண்டில் விரிவாகப் பின்பற்றப்பட்டது.—**67.***

**யூக்லிட்** *(கி.மு. 4ஆம் நூற்றாண்டின் முடிவு—3ஆம் நூற்றாண்டின் தொடக்கம்)—பண்டைக் கால கிரேக்க கணித அறிஞர்.—**70.***

**யோஹன்** *(இலக்கியப் புனைபெயர்: ஃபிலலேட்) (1801—1873)—சாக்சன் அரசர் (1854—1873), தாந்தேயின் கவிதைகளை மொழிபெயர்த்தவர்.—**139.***

**ரஃபயேல் சான்டி** [Raffaello Santi] *(1483—1520)—மறுமலர்ச்சிக் காலத்தைச் சேர்ந்த இத்தாலிய ஓவியர்.—**117.***

**ராம்** [Ramm], **ஹெர்மன்**—*ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி,*

*1875இல் Volksstaat ஆசிரியர் குழுவில் உறுப்பினர்.—57.*

**ரிக்கார்டோ** [Ricardo], **டேவிட்** *(1772—1823)—ஆங்கிலப் பொருளியலாளர், மூலச்சிறப்புடைய அரசியல் பொருளாதாரத்தின் தலைசிறந்த பிரதிநிதி.—50.*

**ரூகே** [Ruge], **அர்னோல்டு** *(1802—1880)—ஜெர்மன் கட்டுரையாளர், இளம் ஹெகலியவாதி, முதலாளி வர்க்கத் தீவிரவாதி; 1848இல் பிராங்க்பர்ட் தேசிய சபையில் இடதுசாரி அணியைச் சேர்ந்த பிரதிநிதி; 1850க்களில் இங்கிலாந்தில் ஜெர்மனியிலிருந்து நாடு துறந்து வந்த குட்டி முதலாளி வர்க்க அகதிகளின் தலைவர்களில் ஒருவர்.—140.*

**ரூஸோ** [Rousseau], **மூான் மூாக்** *(1712—1778)—பிரெஞ்சு அறிவியக்கவாதி, ஜனநாயகவாதி, குட்டி முதலாளி வர்க்கத்தின் சித்தாந்தி, டெயிஸ்ட் தத்துவஞானி.—15.*

**லமர்ட்டீன்** [Lamartine], **அல்போன்ஸ்** *(1790—1869)—பிரெஞ்சுக் கவிஞர், வரலாற்றாசிரியர் மற்றும் அரசியல்வாதி; 1848இல் வெளிநாட்டு அமைச்சர், பெயரில்லா விட்டாலும் உண்மையில் தற்காலிக அரசாங்கத்தின் தலைவராக இருந்தவர்.—142.*

**லவுவஸியே** [Lavoisier], **அன்டுவான் லொரான்** *(1743—1794)—பிரெஞ்சு இரசாயன விஞ்ஞானி, புளோஜிஸ்டன் தத்துவத்தை மறுத்தவர், அரசியல் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவர இயல் பிரச்சினைகளையும் ஆராய்ந்தவர்.—80, 112, 113.*

**லவ்ரோவ், பியோத்தர் லாவ்ரவிச்** *(1823—1900)—ருஷ்ய சமூகவியலாளர் மற்றும் கட்டுரையாளர், நரோதியவாதத்தின் சித்தாந்தி, கதம்பவாதத் தத்துவஞானி, அகிலத்தின் உறுப்பினர், பாரிஸ் கம்யூனில் பங்கெடுத்*

தவர், நரோதியவாத இதழ்கள் சிலவற்றின் ஆசிரியர்.—171.

லஸ்ஸால் [Lassalle], ஃபெர்டினாண்டு *(1825—1864)*—*ஜெர்மன் குட்டி முதலாளி வர்க்கக் கட்டுரையாளர், வழக்குரைஞர், 1848—1849இல் ரைன் மாநிலத்தின் ஜனநாயக இயக்கத்தில் பங்கெடுத்தவர், 1860க்களின் தொடக்கத்தில் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் சேர்ந்தார், ஜெர்மன் தொழிலாளர்களின் பொதுச் சங்கத்தை (1863) நிறுவியவர்களில் ஒருவர், பிரஷ்யாவின் தலைமையில் ஜெர்மனியை ''மேலேயிருந்து'' ஒன்றுபடுத்துவதை ஆதரித்தவர், ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் சந்தர்ப்பவாதப் போக்கைத் தொடக்கியவர்.—7, 11, 17, 18, 21, 28—35, 42, 46—52, 55, 56, 61—63, 157—158, 177.*

லாங்கே [Lange], பிரெடெரிக் அல்பெர்ட் *(1823—1875)—ஜெர்மன் தத்துவஞானி, புதிய காண்ட்டியவாதி, பொருள்முதல்வாதம் மற்றும் சோஷலிசத்தை எதிர்த்தார்.—32.*

லாப்லாஸ் [Laplace], பியேர் சிமோன் *(1749—1827)—பிரெஞ்சு வானியல் விஞ்ஞானி, கணித அறிஞர், பௌதிக விஞ்ஞானி, காண்ட்டிடமிருந்து சுயேச்சையான முறையில் வாயு வடிவுள்ள நெபுலாவிலிருந்து சூரிய மண்டலம் தோன்றியது என்ற கருதுகோளைக் கூறி அதைக் கணித முறைப்படி நிரூபித்தவர்.—74, 76, 84, 109.*

லாமார்க் [Lamarck], ழான் படீஸ்ட் பியேர் அன்டுவான் *(1744—1829)—பிரெஞ்சு இயற்கை விஞ்ஞானி, உயிரியலில் ஒருங்கிணைந்த பரிணாமத் தத்துவத்தை முதலில் வெளியிட்டவர், டார்வினுக்கு முன்னோடி.—82.*

லாயெல் [Lyell], சார்ல்ஸ் *(1797—1875)—இங்கிலாந்தைச் சேர்ந்த விஞ்ஞானி, புவியியல் விஞ்ஞானி.—78.*

**லியனார்டோ டா வின்சி** [Leonardo da Vinci] *(1452—1519)—இத்தாலிய ஓவியர், மறுமலர்ச்சிக் காலத்தின் கலைக் களஞ்சியவாதி, எஞ்சினீயர்.—67.*

**லின்னேயஸ்** [Linné], **கார்ல்** *(1707—1778)—ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த இயற்கை விஞ்ஞானி; தாவரங்கள், பிராணிகளை வகைப்படுத்துகின்ற முறையின் ஸ்தாபகர்.—70, 71, 72.*

**லீபிஹ்** [Liebig], **யூஸ்துஸ்** *(1803—1873)—ஜெர்மன் விஞ்ஞானி, விவசாய இரசாயனத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர்.—171.*

**லீப்க்னெஹ்ட்** [Liebknecht], **வில்ஹெல்ம்** *(1826—1900)—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் முக்கியமானவர், 1848—1849இன் புரட்சியில் பங்கெடுத்தவர், கம்யூனிஸ்டுகள் சங்கம் மற்றும் முதலாவது அகிலத்தின் உறுப்பினர், ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தை நிறுவியவர்களில் ஒருவர்.—7, 10, 46, 55, 57, 60, 63, 98, 157.*

**லுயீ ஃபிலீப்** *(1773—1850) ஆர்லியான் கோமகன், பிரெஞ்சு அரசர் (1830—1848).—35, 39.*

**லுயீ நெப்போலியன்**—*நெப்போலியன் மூன்றாவது பார்க்க.*

**லூதர்** [Luther], **மார்ட்டின்** *(1483—1546)—மதச்சீர்திருத்த இயக்கத்தின் முக்கியமான தலைவர், ஜெர்மனியில் புரோட்டஸ்டென்டிசத்தை (லூதரனிசத்தை) நிறுவியவர், ஜெர்மன் பியூர்கெர்களின் சித்தாந்தி.—68.*

**லெவ்க்கிப்பஸ்** *(கி.மு. 5ஆம் நூற்றாண்டு)—பண்டைக் கால கிரேக்க பொருள்முதல்வாதத் தத்துவஞானி, அணுவியல் தத்துவத்தின் ஸ்தாபகர்.—104.*

**லேய்ப்னிட்ஸ்** [Liebniz], **கோத்ஃபிரிட் வில்ஹெல்ம்** *(1646—1716)—ஜெர்மன் கணித அறிஞர், கருத்துமுதல்வாதத் தத்துவஞானி.—70.*

லோக் [Locke], ஜான் *(1632—1704)—இங்கிலாந்தைச் சேர்ந்த இருமைவாதத் தத்துவஞானி புலனறிவுவாதி.—107.*

வீர்ஹவ் [Virchow], ருடோல்ப் *(1821—1902)—ஜெர்மன் இயற்கை விஞ்ஞானி, அரசியல்வாதி, டார்வின் வாதத்தை மறுத்தவர்.—101.*

வெஸ்ட்ஃபாலன் [Westphalen], ஃபெர்டினாண்டு *(1799—1876)—பிரஷ்யாவின் அரசியல்வாதி, உள்நாட்டு அமைச்சர் (1850—1858), பிற்போக்காளர்; ஜென்னி மார்க்சின் உறவினர்.—139.*

வோல்ஃப் [Wolff], கஸ்பார் பிரெடெரிக் *(1733—1794)—இயற்கை விஞ்ஞானி, உயிரிகளின் வளர்ச்சித் தத்துவத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர், ஜெர்மனியிலும் ருஷ்யாவிலும் வேலை செய்தவர்.—82.*

வோல்ஃப் [Wolff], கிரிஸ்தியன் *(1679—1754)—ஜெர்மன் இயக்க மறுப்பியல் தத்துவஞானி, கருத்துமுதல்வாதி.—74, 107.*

ஜோவுல் [Joule], ஜேம்ஸ் பிரெஸ்காட் *(1818—1889)—இங்கிலாந்தைச் சேர்ந்த பௌதிக விஞ்ஞானி, மின்காந்த இயலையும் வெப்ப இயலையும் ஆராய்ந்தவர்.—79.*

ஷோபன்ஹவர் [Schopenhauer], ஆர்த்தூர் *(1788—1860)—ஜெர்மன் கருத்துமுதல்வாதத் தத்துவஞானி; தன் விருப்பவாதம், பகுத்தறிவற்றவாதம் மற்றும் அவநம்பிக்கைவாதத்தைப் போதித்தவர்; பிரஷ்ய ஜங்கர்களின் சித்தாந்தி.—105.*

ஷ்ட்ருஸ்பெர்க் [Stroußberg], பெட்டெல் ஹென்ரி *(1823—1884)—ஜெர்மன் பெரிய ரயில்வே ஒப்பந்தக்காரர், 1873இல் திவாலானார்.—164.*

**ஷ்வைட்சர்** [Schweitzer], **யோஹன் பப்தீஸ்த்** *(1833—1875)—ஜெர்மனியில் லஸ்ஸால்வாதத்தின் முக்கியமான பிரதிநிதி, ஜெர்மன் தொழிலாளர்களின் பொதுச் சங்கத்தின் தலைவர் (1867—1871), ஜெர்மன் தொழிலாளர்கள் முதலாவது அகிலத்துடன் சேருவதற்குத் தடைகள் உண்டாக்கியவர், சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கட்சியை எதிர்த்துப் போராடியவர், 1872இல் பிரஷ்ய அரசு அதிகாரிகளுடன் அவருடைய தொடர்புகள் வெளியானதும் சங்கத்திலிருந்து வெளியேற்றப் பட்டார்.—63, 158.*

**ஸெர்வேட்** [Servet], **மிகேல்** *(1511—1553)—மறுமலர்ச்சிக் காலத்தில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த அறிஞர் மற்றும் டாக்டர், இரத்த ஓட்டத்தைப் பற்றி முக்கியமான கண்டுபிடிப்புகளைச் செய்தவர்.—69.*

**ஸ்பினோஸா** [Spinoza], **பாருஹ் (பெனெடிக்ட்)** *(1632—1677)—ஹாலந்து நாட்டின் பொருள்முதல்வாதத் தத்துவ ஞானி, நாத்திகவாதி.—74.*

**ஹாட்ஸ்ஃபெல்ட்** [Hatzfeldt], **ஸோஃபியா** *(1805—1881)—லஸ்ஸாலின் நண்பர் மற்றும் ஆதரவாளர்.—62.*

**ஹாப்ஸ்** [Hobbes], **தாமஸ்** *(1588—1679)—இங்கிலாந்தைச் சேர்ந்த தத்துவஞானி, யாந்திரிகப் பொருள்முதல்வாதி.—173.*

**ஹான்ஸெமான்** [Hansemann], **டேவிட்** *(1790—1864)—ஜெர்மனியைச் சேர்ந்த முதலாளி, ரைன் மிதவாத முதலாளி வர்க்கத்தின் தலைவர்களில் ஒருவர், 1848 மார்ச்—செப்டெம்பரில் பிரஷ்யாவின் நிதி அமைச்சர்.—138.*

**ஹாஸெல்மன்** [Hasselmann], **வில்ஹெல்ம்** *(பிறப்பு: 1844)—லஸ்ஸால்வாதத்தைப் பின்பற்றிய ஜெர்மன் தொழிலாளர்களின் பொதுச் சங்கத்தின் தலைவர்களில் ஒருவர், 1875 முதல் 1880 வரை ஜெர்மன் சமூக-ஜன*

*நாயகக் கட்சியின் உறுப்பினர், 1880இல் அராஜகவாதி என்று வெளியேற்றப்பட்டவர்.—29, 46, 56.*

**ஹாஸென்கிளெவெர்** [Hasenclever], **வில்ஹெல்ம்** *(1837—1889)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, லஸ்ஸால்வாதி, ஜெர்மன் தொழிலாளர்களின் பொதுச் சங்கத்தின் தலைவர் (1871—1875).—46, 56.*

**ஹம்பால்ட்** [Humboldt], **அலெக்சாந்தர்** *(1769—1859)—ஜெர்மன் இயற்கை விஞ்ஞானி மற்றும் பிரயாணி.—140.*

**ஹெகல்** [Hegel], **கியோர்கு வில்ஹெல்ம் பிரெடெரிக்** *(1770—1831)—ஜெர்மன் மூலச்சிறப்பான மரபின் மாபெரும் தத்துவஞானி, புறநிலைக் கருத்துமுதல்வாதி.—75, 103, 108—111, 113.*

**ஹெர்ஷெல்** [Herschel], **வில்லியம்** *(1738—1822)—இங்கிலாந்தைச் சேர்ந்த வானியல் விஞ்ஞானி.—76.*

**ஹெல்வால்ட்** [Hellwald], **பிரெடெரிக் அன்டோன் ஹெல்லெர்** *(1842—1892)—ஆஸ்திரியாவைச் சேர்ந்த மக்கள் இனநூல் ஆராய்ச்சியாளர், பூகோள இயல் அறிஞர், வரலாற்றாசிரியர்.—172.*

**ஹேய்னெ** [Heine], **ஹென்ரிஹ்** *(1797—1856)—ஜெர்மன் கவிஞர்.—177.*

**ஹொஹ்பெர்க்** [Höchberg], **கார்ல்** *(1853—1885)—ஜெர்மன் சமூக-சீர்திருத்தவாதி, 1876இல் சமூக-ஜனநாயகக் கட்சியில் சேர்ந்தார், சீர்திருத்தவாதத்தைப் பிரசாரம் செய்த சில பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் தொடங்கி நடத்தினார்.— 157.*

## வாசகர்களுக்கு

*இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும் அடுத்து வரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும்* முன்னேற்றப் பதிப்பகம் *மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.*

*தங்கள் கடிதங்களை* "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" *என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.*

**விற்பனையாளர்கள்**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**தலைமை அலுவலகம்**

*41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,*
*சென்னை—600098*

**ஷோ-ரூம்**

*136, அண்ணாசாலை, சென்னை—600002*

**கிளைகள்**

*80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001*
*3—4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர்—641018*
*42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008*
*செர்ரி ரோடு, சேலம்—636001*

**விற்பனை நிலையங்கள்**

*3—22—75—D, மதுரை சாலை;*
*திருநெல்வேலி ஜங்ஷன்—627001*
*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்*
*சேரிங் கிராஸ், உதகமண்டலம்—643001*
*நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல்—624001*

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

ISBN 5-01-000864-5 (т. 9)